
இறக்கை: 13 இறகு: 2

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

காக்கை கரவா கரைந்துண்ணும்

பிப்ரவரி 2024 | விலை ₹50



**தமிழகத்தில் காலந்தோறும் பலி**

– ஆ.சிவசுப்பிரமணியன்

**மயிலாப்பூர் சிங்காரவேலர் எனும் சமூக அறிவியலாளர்**

– வீ.அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாஞ்சில்நாடன் கவிதைகள்

**ஆதார் விலங்கினம்**
விமான இரயில் பயணங்களில்
இந்தியும் ஆங்கிலமும்
அறியாத மானுடர்
இந்தியர் ஆயினும்
ஆதார் எண் பெற்ற
விலங்குகள் தாமோ?

**கலவி முகமன்**
விமான நிலையக் காத்திருப்பில்
நகைக்கடை விளம்பரக் காணொளி
கந்தர்வக் கன்னிகை திறந்து வைத்தது
திரை நிறைத்து
விளம்பர அழகியின் அபிநயம்
நகை வாங்க அழைப்பா
அல்லால்
கலவிக்கான முன்விளையாட்டு முகமனா
எனும் மயக்கம் நமக்கு

**வரமில்லை, சாபமுண்டு**
வரமென ஏதுண்டு எமக்கு
வானின்று இழிந்த தேவரையொத்த
அரசியல் ஆன்மீக சமூகப் பண்பாட்டு
வழி நடத்துனர் என்னும்
சாபங்களே ஏராளம்
சாகப்போகிற நாய் காட்டும்
வீரம் எம் வாழ்க்கை ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை: 13
இறகு: 2

திருவள்ளுவராண்டு 2054

தை - மாசி
பிப்ரவரி 2024

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

ஆசிரியர் குழு
முகிலன்
இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

உலகளாவிய தொடர்பாளர்:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:
வான்கோ
நன்றி:
யூமா வாசுகி

அட்டை வடிவமைப்பு:
ஐசக்

உள் ஓவியங்கள்:
லெசி

தொடர்பு முகவரி:

காக்கை, 22, MJB தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்: kaakkaicirakinile@gmail.com
இணைய முகவரி: kaakkai.in
www.facebook.com/kaakkai.cirakinile


## மதச்சார்பின்மையை இறுகப்பற்றுவோம்!

இந்திய அரசியலமைப்பைத் தாங்கி நிற்கும் அடித்தளங்களாக இருந்துவந்த, மதச்சார்பற்ற மக்களாட்சி; பொருளாதார இறையாண்மை; கூட்டாட்சி; சமூக நீதி ஆகியன கடந்த பத்தாண்டுகால வலதுசாரிகளின் ஆட்சிக்காலத்தில், அதன் ஒட்டுமொத்தத்தோற்றத்தையே மாற்றியமைக்கும் விதமாக முயற்சிகள் முழுவீச்சில் அரங்கேறி வருவதைக்காணமுடிகிறது. வலதுசாரிகளின் இத்தகைய நடவடிக்கைகளானது ஒருபக்கம் நாட்டின் பன்முகத் தன்மையை மறுத்து, சிறுபான்மையினர்களுக்கு எதிராகச் சட்டங்கள்; கருத்துச்சுதந்திரத்தினை பறித்தல்; சிவில் சமூகத்தை ஒடுக்குவது; ஊடக சுதந்திரம் பறிப்பு; கல்வி மற்றும் ஊடகங்களின் வழியாக கலாச்சார ஊடுருவல்; அதீத தேசியவாதம் பேசுவதாக இருக்கிறது. இன்னொருபக்கம் இந்துமதம், ஆரிய இனம், சனாதனப் பண்பாடு, சமஸ்கிருத மேன்மை ஆகிய நான்கு அம்சங்களை சமூகப்பரப்பில் படுவேகமாகப் பரவலாக்குகிறது. அதாவது, இந்து மதத்தினை அது தனது அரசியல் அணிதிரட்டலுக்காகப் பயன்படுத்திக்கொள்கிறது; பிற சிறுபான்மை மதங்களின் மீதான வெறுப்பை அடிப்படையாகக் கொண்டு மத உணர்வைக் கட்டமைக்கிறது; ஆரிய இனத்தை மேன்மைக்குரியதாக முன்வைப்பது மட்டுமல்லாது அதனுடன் கூடிய சனாதன மற்றும் சாதி ஆதிக்கத்தையும் திணிக்கிறது; சமஸ்கிருத மொழியை அனைத்து மொழிகளுக்கும் மேம்பட்டதாக முன்வைத்துச் செயல்படுவதாக இருக்கிறது.

நாடு சுதந்திரம் பெற்று 75 ஆண்டு காலமாகிவிட்டது. இச்சுதந்திரத்திற்காக, நாட்டின் அனைத்துத்தரப்பு மக்களும் தங்களது மத அடையாளங்களையெல்லாம் மறந்து ஒன்றுகூடி போராடிப்பெற்றிருக்கின்றனர். அப்படியிருக்கையில், பல்வேறு இனங்கள்- மொழிகள் - பண்பாடு - வழிபாட்டுமுறைகள் கொண்ட ஒரு தேசத்தின் பன்முகத்தன்மையைச் சிதைத்து ஒரே மதம் - ஒரே தேசம் - ஒரே பண்பாடு என்கிற ரீதியில் ஒற்றைத் தேசத்தைக் கட்டமைக்க முயலுவதென்பது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தினையே வலுவிழக்கச்செய்வதாகும்.

மதமும் அரசியலும் வெவ்வேறானது. அரசியலில் மதம் கலக்கும்போது அது பாசிசத்திற்கே வழிவகுக்கிறது. அரசியலில் மதசார்பற்றத்தன்மை நிலவும் போதுதான் ஜனநாயகத்தினையும் பன்முகத்தன்மையினையும் காக்க முடியும்.

இந்திய மக்களாட்சியின் சாரத்திலிருந்து பிரிக்கமுடியாத அங்கமாக இருப்பது மதச்சார்பின்மையாகும். கணக்கற்ற சாதிகளும், ஏராளமான மொழிகளும், இனக்குழு சமூகங்களும், பழங்குடியினர்களும் கொண்டு உருவான நாட்டில், மதச்சார்பின்மை இல்லாது போனால் அரசியல் அமைப்புச்சட்டம் முன்வைக்கிற எல்லா சிறப்பு அம்சங்களும் பொருளற்றதாகிப்போய்விடும். எனவே, பல்வேறு மதப்பிரிவினர்களுக்கிடையே நல்லிணக்கத்தினைப் பேணுவதென்பதுதான் மதச்சார்பின்மைக்கு அடிப்படையாகும். ஆட்சியிலும் அரசியலிலும் இருந்து மத அரசியலை விலக்கி வைப்பதென்பது இந்தியாவிற்கு மிகவும் அவசியமானதாகும்.

இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம்; அரசியல் அமைப்புச்சட்டம் ஆகியன நமக்கு கட்டமைத்துத்தந்திருக்கிற ஜனநாயகத்தினைப் பாதுகாப்பது இன்றைய சூழலில், தலையாய கடமையாக இருக்கவேண்டும். இல்லையெனில் அனைவருக்கும் சம உரிமை - சமவாய்ப்பு; ஒருவாக்கு - ஒருமதிப்பு; சமூக நீதி என்பதெல்லாம் இனி கேள்விக்குறியாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை.......... ரூ. 50.00
ஆண்டு சந்தா.............. ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா...... ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா......... ரூ. 2000.00

வெளிநாடு

ஆண்டு சந்தா.............. $ 50.00

வங்கி விவரம்

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:

A/C Name: kaakkai
A/C No: 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE: CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்

பின் அட்டை வண்ணம்..........ரூ.15000
உள் அட்டை வண்ணம்..........ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளை.. ரூ.5000



காக்கையில் வெளியாகும்
கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின்
கருத்துகள், எழுத்தாளர்களின்
கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.


சிறகுக்குள்ளே...


மயிலாப்பூர் சிங்காரவேலர் எனும் சமூக அறிவியலாளர்
▸ வீ.அரசு ........ 05

இந்தியா கூட்டணி.. இணக்கம் வருமா?
▸ காக்கையார் ........ 13

விஜயகாந்த்.. 20 ஆண்டுகால தமிழ்நாட்டு அரசியல்
▸ தி.சிகாமணி ........ 15

இராமர் எனும் மத அரசியல் குறி (Sign)
▸ ஜமாலன் ........ 19

பெரியார் காய்ச்சல்!
▸ இரா.மோகன்ராஜன் ........ 24

எறும்பைக் கொல்ல துப்பாக்கியைத் தூக்கும் பண்பாட்டை வளர விடலாமா?
▸ செல்லப்பா ........ 28

உயர்ஜாதியினருக்கு 10% EWS இட ஒதுக்கீடு சரியா? தவறா?
▸ ந.முருகேசபாண்டியன் ........ 33

தமிழகத்தில் காலந்தோறும் பலி
▸ ஆ. சிவசுப்பிரமணியன் ........ 37

காக்கை கரைந்தால், காதலன் வருவான்? நம்பிக்கைகள் – அன்றும், இன்றும்
▸ சு.இராமசுப்பிரமணியன் ........ 42

நாற்காலிகளும் நாலாம் தூணும்
▸ வல்லபாய் ........ 46

அன்பற்று இருத்தல் குற்றம்
▸ இரா. எட்வின் ........ 50

சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா எல் 1
▸ துருவன் ........ 53

உன்மத்தத்தின் சூரியகாந்திகள்
▸ யூமா வாசுகி ........ 55

வானவில்லின் வானவில்
▸ லோகேஷ் ரகுராமன் ........ 61

வஜேசிங் பார்கி குஜராத்தி பழங்குடி கவிஞர்
▸ நிழல்வண்ணன் ........ 63

வேதாகமத்தை ஆயுதமாக்குதல்
▸ சச்சிதானந்தன் சுகிர்தராஜா ........ 69

'மெல்லக் கனவாய் பழங்கதையாய்' நாவல்
▸ ஆ. நளினி சுந்தரி ........ 74

நீ துய்சென்னுக்கு அருகில்
▸ சை.கிங்ஸ்லி கோமஸ் ........ 78






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | வீ.அரசு

# மயிலாப்பூர் சிங்காரவேலர் எனும் சமூக அறிவியலாளர்



"நான் தீங்கற்ற சுத்தமான கல்வியை உடைய ஒரு புரொபஸர். ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களிடையே நன்கு மதிக்கப்பட்டவன். மரியாதையுடன் வரவேற்கப்படுபவன். தூங்கும் மனங்களைத் தட்டி எழுப்புபவன். அசட்டுத் துணிவையும், அறியாமையையும் அகற்றுபவன். நான் எல்லா வகையிலும் மக்களைப் பொதுவாக நேசிக்கிறேன். எந்த மனிதனாயினும் சரி, எந்த நாடாயினும் சரி, இத்தாலியும் பிரிட்டனும் எனக்குச் சமந்தான். ஆணும் பெண்ணும் எனக்குச் சமந்தான். அரசனும் சரி ஆண்டியும் சரி; கந்தலும் சரி, பொன் ஆடையும் சரி. கவலையில்லை. எவர் பழகுவதற்குத் தகுந்தவராகவும் உபயோகம் உள்ளவராகவும் சிநேக பாவமும் மரியாதையும் அன்பும் காட்டுபவரோ அவரையே நான் பெரிதும் மதிக்கிறேன். அவரையே நான் நேசிக்கிறேன். பொய்யும் புனைவுச் சொல்லையும் பிரச்சாரம் செய்யும் பித்தலாட்டக்காரர்களால் வெறுக்கப்படுபவன். நான் அறிவு ஆராய்ச்சிப் பிரியர்களாலும், யோக்கியர்களாலும் உதாரண குணமுடைய எதார்த்தவாதிகளாலும் போற்றப்படுபவன்" என்று ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியில் புரூனோ தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் முறையில் கூறியிருப்பதைக் கொண்டு, ஒருவாறு அவரது மனோபாவத்தையும் துணிவையும் நாம் உணரலாம்" (புது உலகம்: அக்.1935).

புரூனோ குறித்துச் சிங்காரவேலர் செய்துள்ள பதிவே மேலே உள்ளது. புரூனோவை அவர் கொண்டாடுவதன் மூலம் தமது கருத்துநிலையை உணர்த்துகிறார். இன்றைய வைதீகம் சார்ந்த மயிலாப்பூரில், அன்று அவைதீக மரபை முன்னெடுத்த சமூக அறிவியலாளராக சிங்காரவேலர் (1860-1946) வாழ்ந்தார். அவரின் கால் நூற்றாண்டு (1917 -1946) வாழ்க்கை குறித்தப் பதிவாக இப்பகுதி அமைகிறது.

மனிதர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைத்தான் மேற்கொள்கிறார்கள். இயற்கை நிகழ்வுகளைத் தொல்பழங்காலம் முதல் மனிதர்கள் எதிர்கொண்டு வருகிறார்கள். இயற்கை குறித்து ஒவ்வொரு காலத்திலும் மனிதர்கள் புதிது புதிதாக அறிந்து கொள்கிறார்கள். இயற்கை நிகழ்வுகளுக்கான காரணங்களை ஊகப்படுத்திக் கொண்டார்கள். ஊகங்கள் காலப்போக்கில் தர்க்க ரீதியான காரணங்களால் விவதிக்கப்பட்டன. காலந்தோறும் மனிதர்களின் பட்டறிவும் ஊகங்களும் இணைந்தே இருந்தன. இவை பின்னர் தர்க்க அடிப்படையில் விளக்கம் பெறும் போது, அதனை அறிவியல் முறை என்று புரிந்து கொண்டோம். பிரபஞ்ச நிகழ்வுகளைத் தர்க்கரீதியான புரிதல் இன்றி, வெறும் நம்பிக்கை மற்றும் ஊகம் சார்ந்து அணுகும் நடைமுறை இன்றும் முழுதாக மாறிவிடவில்லை. ஆனால், இதனை அறிவியல் முறை என்று ஏற்றுக்கொள்வதில்லை. எகிப்து, கிரேக்கம் போன்ற பண்டைய சமூகங்களில் சொல்லப்பட்ட அறிதல் முறை என்பது படிப்படியாக பி.பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டு தொடங்கி மாறத் தொடங்கியது. பி.பொ.ஆ. 15 ஆம் நூற்றாண்டு அளவில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் அறிவிக்கப்பட்டன. கோப்பர்நிக்கஸ் (1473 - 1543) பூமியின் இயக்கத்தைக் கண்டறிந்தார். கெப்ளர் (1571 - 1630), கலிலியோ (1564 -1642) ஆகியோர் அக்கருத்தை வலுப்படுத்தும் வகையில் மேலும் பல புதிய கண்டுபிடிப்புகளைச் செய்தனர். புரூனோ (1548 - 1600) மேற்குறித்த பூமியின் இயக்கத்தை விரிவான பரப்புரை மூலம் உலகம் முழுவதும் அறியச் செய்தார். இவரைக் கத்தோலிக்க மதம் நெருப்பில் தள்ளிக் கொன்றது.

இவ்வகையில் சிங்காரவேலர் எனும் மனிதர் எத்தகைய ஆளுமையாக வாழ்ந்தார் என்பது குறித்த உரையாடலை மேற்கொள்வது நமது நோக்கம். இதனைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்வோம்.

- உலகில் 1840 முதல் மார்க்சியம் எனும் தத்துவம் இதுவரை பேசிய தத்துவங்களுக்கெல்லாம் மாற்றாக அமைந்தது. அத்தத்துவ முறையை ஏற்று, வாழ்நாள் முழுதும் அது குறித்த பரப்புரை மேற்கொள்பவராக வாழ்ந்தார். இதன் மூலம் சமூகம் குறித்த புதிய பார்வையை உள்வாங்கியவராக இருந்தார். சமூகம் பற்றிய தர்க்கம் சார்ந்த, சமூக விஞ்ஞானத்தை ஏற்றுக் கொண்டார். இவ்வகையான இவரது ஆளுமை குறித்து உரையாடுவது அவசியம்.

- உலகில் நிகழ்ந்த புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் குறித்த புரிதலை உள்வாங்கியவராக வாழ்ந்தார். அவ்வகையான கண்டுபிடிப்புகள், சமூகம் குறித்த புதிய கண்ணோட்டத்தை எவ்வகையில் தருகிறது என்பது தொடர்பான விரிவான உரையாடல்களைத் தமது எழுத்துக்கள் வழி மேற்கொண்டார். இத்தன்மை சார்ந்த இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை குறித்துப் பேசுவதும் இன்றைய தேவை.

■ சமூகத்தில் உருவான புதிய தன்மைகளை உள்வாங்கி புதிய சமூகச் செயல்பாடுகளை முன்னெடுப்பது என்பது அவசியமாகும். இவ்வகையான சமூகச் செயல்பாடுகளை எந்தெந்தப் பாங்கில் சிங்காரவேலர் முன்னெடுத்தார் என்பது குறித்த புரிதல் அவசியமாகும். அந்தப் பின்புலத்தில் சிங்காரவேலர் ஆளுமை குறித்து உரையாடும் தேவையுண்டு.

அறிவியல் மனப்பாங்கு என்பது, தன்னைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் குறித்த தர்க்கப் பாங்கிலான புரிதல் ஆகும். காலம் காலமாக சமூகம் கற்பித்து வைத்துள்ள நம்பிக்கைகளைக் கேள்வியின்றி ஏற்றுக்கொள்ளும் மனநிலை அறிவியல் பாங்கான மனநிலைக்கு எதிரானது. சிங்காரவேலர் சட்டம் பயில்வதற்காக இலண்டன் சென்றார். அக்காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம். பதினைந்தாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியச் சமூகத்தில் நிகழ்ந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் என்பவை மனித சமூகத்தில் புதிய தொழில்நுட்ப அறிவை உருவாக்கியது. அநுபவம் சார்ந்த அறிவு என்பது நடைமுறை நிகழ்வுகள் சார்ந்த அறிவாக வடிவம் பெற்றது. புவி ஈர்ப்பு விசை, சக்கரம் வழி பயணித்தல், நீண்ட தொலைவு செய்தித் தொடர்பு, பூமியின் இயக்கம் குறித்த புதிய புரிதல், கோள்கள் பற்றிய அறிவு, மின்விசை கண்டுபிடிப்பு ஆகிய பல நிகழ்வுகள் மனித சமூகத்தின் உற்பத்தி முறையையே மாற்றியது. இயற்கையின் மீது தமது உடல் உழைப்பை செலுத்தி, பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அவன் பயன்படுத்திய கருவிகள் மாறின. புதிய எந்திரங்கள் கருவிகளாக உருப்பெற்றன. புதிய கருவி, புதுவகையான உற்பத்தி ஆகியவற்றால் தவிர்க்க இயலாமல் மனித சமூகம் புதுவகையான நுகர்தல் சார்ந்த வாழ்முறைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டது. இத்தன்மையின் உடன் விளைவாகத்தான் தொழில்புரட்சி உருவானது. ஐரோப்பிய சமூகத்தில் உருவான இவ்வகையான மாற்றத்தை நேரடியாகக் காணும் வாய்ப்பு சிங்காரவேலருக்குக் கிடைத்தது. தமது சட்டப் படிப்போடு உலகில் நிகழும் மாற்றங்களை உள்வாங்கியவராகச் செயல்பட இலண்டன் வாழ்க்கை அவருக்கு உதவியது என்பதை அவரது பிற்கால வாழ்க்கை உறுதிப்படுத்துகிறது.

சிங்காரவேலர் 1917 ஆம் ஆண்டு தொடக்கம் 1946 ஆம் ஆண்டு முடிய தமிழ்ச் சமூகத்தில் செயல்பட்ட முறைமை என்பது, அவரை ஒரு சமூக அறிவியலாளர் (*Social Scientist*) என்பதை உறுதிபடுத்துகிறது. இதனைப் புரிந்து கொள்வதற்குக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக்கொள்ளலாம்.

■ காங்கிரஸ் இயக்கத்தில் அவருக்குத் தொடர்பு இருந்த காலங்களிலேயே விவசாயி - தொழிலாளி தொடர்பான உரையாடல்களை அவ்வியக்கத்தில் முன்னெடுக்கும் பணியை மேற்கொள்ளுதல்.

■ காங்கிரஸ் அமைப்பில் இருந்து கொண்டே விவசாயி - தொழிலாளர்களுக்கான அமைப்பை உருவாக்கி, அதற்கென இதழ்களை நடத்தத் தொடங்கியமை.

■ இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கம் உருப்பெற்ற தொடக்கத்திலேயே, அவ்வமைப்போடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். கம்யூனிஸ்டு இயக்கத்தின் முதல் மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்தியவர். இந்தியாவில் முதன் முதல் மே தினக் கொண்டாட்டத்தை அறிமுகப்படுத்தியவர். இவை இவரது ஈடுபாட்டைப் புரிந்து கொள்ள உதவும்.

■ சுயராஜ்ஜியம் என்னும் கருத்துநிலை பொதுவெளியில் உரையாடலுக்கு வந்தபோது, யாருக்கு சுயராஜ்ஜியம்? எனும் உரையாடல் மூலம் இந்தியாவில் வாழும் உழைக்கும் மக்கள் பக்கம் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்.

இந்தப் பின்புலத்தில், மார்க்சியம் எனும் சமூக அறிவியல் சார்ந்த தத்துவத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதனை அவரது கூற்று உறுதிப்படுத்துகிறது.

"மக்களது வாழ்க்கையைக் குறித்து உத்தேசித்து வரும் தத்துவங்கள் யாவும் இதுகாறும், சித்து ஒன்று இருக்கின்றது. அந்த சித்திலிருந்தே பிரபஞ்சம் தோன்றியது; மக்கள் வாழ்க்கைக்கு அந்த சித்தே அடிப்படை என்று வாதித்து வருகின்றன. ஆனால், சமூகத் தத்துவமோவெனில், அந்தந்தக் காலத்து மக்கள் வாழ்க்கை, அந்தந்தக் காலத்துப் பொருளாதார நிலைமையிலிருந்தே பெறப்பட்டது. அந்த வாழ்க்கை, நாகரீக வாழ்க்கையாயினும், அநாகரீக வாழ்க்கையாயினும் மற்றெந்த அந்த வாழ்க்கை, நாகரீக வாழ்க்கையாயினும் அந்தந்த சமூகத்தின் பொருளாதார வாழ்க்கையின்படியே ஏற்பட்டவை" (*புது உலகம். நவம்பர். 1935: 1975:126*).

பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் உரையாடலுக்கு வந்த சமூக அறிவியல் சார்ந்த தத்துவச் சிந்தனை மரபுதான் மேற்கண்டவாறு சிங்காரவேலர் சமூகத்தைப் புரிந்து கொண்ட மரபாகும். இத்தத்துவத்தை நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்த செயல்பாடுகளை மேற்கொண்டவர் தான் சிங்காரவேலர். இவ்வகையான நடைமுறைச் செயல்பாடுகளே அவரது வாழ்க்கையாக அமைந்து போனது.

1917இல், காலனியத்திலிருந்து விடுதலைபெறும் போராட்டத்தில் புதிய முறைமைகள் உருப்பெற்றன. இதில் 'ஹோம் ரூல்' கிளர்ச்சி குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில்தான் வட்டாரப் பண்புகளை மதித்து, ஒற்றைப் பரிமாணத்தைக் கைவிட்டு, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. இதன் தொடர்ச்சியே இரட்டை ஆட்சிமுறை. இக்காலங்களில் காந்தி சத்தியாகிரகப் போராட்டத்தை முன்னெடுத்தார். ஒத்துழையாமை மரபு சார்ந்த இந்த இயக்கத்தில் சிங்காரவேலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு கொண்டார். இவ்வகையில் இடதுசாரி மனநிலை உடைய காங்கிரஸ்காரராக இருந்தார். ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடந்த ஜாலியன் வாலாபாக் கிளர்ச்சி என்பது ஜாலியன் வாலாபாக் படுகொலையாக முடிந்தது. இதனால் 1917 - 1922 காலங்களில் இந்தியா கொந்தளிப்பான சூழலைக் கொண்டிருந்த காலம். இந்தியாவிற்கு வந்த வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்புப் போராட்டம் நடந்தது. அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு இயக்கம் நிகழ்ந்தது. இந்த இயக்கங்களில் சிங்காரவேலர் என்ன பங்கு ஆற்றினார்? என்பதை, அவரது வரலாற்றாசிரியர்களான கே.முருகேசன் மற்றும் சி.எஸ்.சுப்பிரமணியம் பின்வரும் வகையில் பதிவு செய்துள்ளார்கள்.

"இக்காலத்தில் சென்னை நகரில் மிக சுறுசுறுப்பாக பணியாற்றிய ஒருவராக சிங்காரவேலர் திகழ்ந்தார். அவர் ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்தினார். தம் வழக்கறிஞர் தொழிலைத் துறந்தார். தனது வழக்கறிஞர் அங்கியைப் பொது மக்கள் முன்னிலையில் கொளுத்தினார். காங்கிரஸ் தொண்டர்களை ஒன்று திரட்டினார். சென்னை மாநகரின் பல பகுதியில் ஊர்வலங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தினார். ஜனவரி 1922இல் சென்னைக்கு வந்த வேல்ஸ் இளவரசரைப் புறக்கணிக்க முனைப்பாக மக்களைத் திரட்டினார். காங்கிரசுக்கு ஆதரவாகத் தொழிலாளரைத் திரட்டினார். தொழிலாளர் பிரச்சினைகளை ஊக்கத்துடன் எடுத்துக் கொண்டு பணியாற்றும் ஸ்தாபனமாக காங்கிரஸை ஆக்க காங்கிரஸ் கமிட்டிகளுக்குள் போராடினார். தீவிர இடதுசாரிக் கருத்துக்களை மேடைப் பேச்சுக்களிலும் தன் கட்டுரைகளிலும் முன்வைத்தர் (1991:47).

காலனிய ஆதிக்கத்திற்கு உட்பட்ட இந்திய நிலப்பகுதியில் ஒரு பகுதியான மெட்ராஸ் இராஜதானியில் செயல்பட்ட காங்கிரஸ்காரர்களில் ஒருவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். அதில் காங்கிரஸ் கோட்பாடுகளுக்கு ஒத்துவராத பல்வேறு கருத்துநிலைகளையும் நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொண்டார். இவ்வகையில் அன்றைய சூழலில் நடந்த போராட்டங்களில் பங்கு கொண்ட அதே வேளையில், அதற்குள் விவசாயி - தொழிலாளி சார்ந்த சமூக எதார்த்தத்தை வெளிப்படுத்திய முறைமையைப் புரிந்து கொள்ள முடிகிறது. காங்கிரஸ் இயக்கம் இவரது கோட்பாடுகளை உள்வாங்கும் அமைப்பாக இல்லை. எனவே 1.5.1923 இந்தியாவில் முதன் முதலாக கொண்டாடப்பட்ட மே தினக் கூட்டத்தில் தொழிலாளி - விவசாயி கட்சி அமைக்கப்பட்டிருப்பதை அறிவித்தார். அவ்வியக்கத்திற்காக 'லேபர் கிஷான் கெஜட்' என்ற ஆங்கில ஏட்டையும் 'தொழிலாளன்' என்னும் தமிழ் ஏட்டையும் வெளியிடும் திட்டம் குறித்தும் அக்கூட்டத்தில் அறிவித்தார். காங்கிரஸ் இயக்கத்தை இடதுசாரி காங்கிரஸ் அமைப்பாகக் கட்டமைக்கும் முயற்சிகளாக இவை அமைந்தன. சிங்காரவேலர் 1917 - 1922 காலங்களில் மக்கள் வெகுதிரள் அமைப்பாக இருந்த காங்கிரஸ் இயக்கத்திற்குள் செயல்பட்ட முறைமை என்பது அவரது சமூகம் குறித்த பார்வையைப் புரிந்து கொள்ள உதவுகிறது. 1917இல் நிகழ்ந்த சோவியத் புரட்சி போன்ற பல்வேறு நிகழ்வுகளை உள்வாங்கி இருந்தார். அதே நேரத்தில் காங்கிரஸ் நடத்திய போராட்டங்களிலும் தம்மை இணைத்துக் கொண்டார். அன்றைய சூழலில் இவரது நடவடிக்கை தனித்த பார்வை உடையதாக இருந்தது. இதன் மூலம் அவர் வேறுபட்ட சமூக அறிவியலை முன்னெடுத்த போராளியாகவே இருந்தார்.

"உலகிலே மானிடவர்க்கத்தில் இந்நாட்டவரைப் போல் துயரக் கடலில் மூழ்கியிருப்போர் எவருமில்லை எனக் கூறலாம். வாழ்வுக்கு அவசியமான உணவு, குடியிருப்பு வசதிகள் நமக்கு இல்லை. உயர்ந்த அறிவு வாழ்வுக்கு அவசியமான சுதந்திரம், சமத்துவம், கல்வி இல்லை. நம்மில் பெரும்பான்மையோர் உலகில் உள்ள மற்ற தேசத்துக்குஎல்லா வகையிலும் கீழ்ப்பட்டிருக்கிறோம். முப்பது கோடி ஜனங்களில் நான்கு கோடி ஜனங்கள் அரை வயிறு உண்டு; அரை ஆடை உடுத்து துன்புற்றிருக்கின்றனர். பதினைந்து கோடிப் பேர் தகுந்த குடியிருப்பு வசதியின்றி மனிதர்கள் வசிக்கத் தகாத இடங்களில் வசிக்கின்றனர். நூற்றுக்கு எண்பது பேருக்கு மேல் எழுதப்படிக்க தெரியாதவர்கள். முப்பது கோடியில் கால் பகுதிக்கு மேல் தீண்டத்தகாதவர்கள். இவர்களுக்கு மற்ற வகுப்பாருக்கு ஊழியம் செய்வதைத் தவிர வேறு வகை சம்பந்தமும் கிடையாது. அவர்கள் கோயிலுக்குப் போகக் கூடாது.... நமது தாய்நாட்டில் நமது சகோதரர்கள் படும் துன்பங்களை நீக்கும் பொருட்டுகிளர்ச்சிசெய்வது ஆட்சேபிக்கப்படுகிறது" (1985: 12).

மேலே கண்டவை, சிங்காரவேலர் 1925இல் கான்பூரில் நடந்த கம்யூனிஸ்டு கட்சியின் முதல் மாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரை. இப்போது, அவர் காங்கிரஸ் கட்சி என்ற அடையாளத்தைத் துறந்து 'கம்யூனிஸ்டு' எனும் அடையாளத்தை வரித்துக் கொள்வதைக் காண்கிறோம். சமூக வரலாற்றில், சமூகம் குறித்த அக்கறையும், அச்சமூக இயங்குநிலை குறித்த தேடலும் உள்ள மனிதர்களே சமூக அறிவியல் சார்ந்த ஆளுமைகளாக உருப்பெற முடியும். இந்தப் பின்புலத்தில் சிங்காரவேலரின் சமூகம் பற்றிய புரிதல் என்பது தன்னை ஒரு கம்யூனிஸ்டாக வரித்துக் கொள்வதில்தான் நாம் அவரைப் புரிந்து கொள்கிறோம். இத்தன்மையுடைய ஆளுமைகள்தான் சமூக அறிவியலாளராக வடிவம் பெறுகிறார்கள். இத்தன்மை சார்ந்து தமிழ்ச் சமூகத்தின் முதல் சமூக அறிவியலாளர் மயிலாப்பூர் சிங்காரவேலர் என்று பதிவு செய்ய முடிகிறது. இந்த வரிசையில் தமிழகத்தைச் சேர்ந்த வேறு எவரையும் அன்றைய கட்டத்தில் மதிப்பீடு செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாது. காங்கிரஸ் இயக்கத்திற்குள்ளிருந்து இடதுசாரி கருத்துநிலைகளை உரையாடியதைப் போல் காங்கிரஸ் இயக்கத்தின் முதல் நிலைத் தலைவராக விளங்கிய காந்தி அவர்களோடும் உரையாடல்களை நிகழ்த்தினார். இந்திய மக்களுக்கான 'சுயராஜ்ஜியம்' குறித்த் கருத்துப் பிரச்சாரத்தைக் காந்தி பேசினார். அவரது கருத்தை, ஒரு சமூக அறிவியல் பார்வையோடு சிங்காரவேலர் எதிர்கொண்டார். காந்திக்கு அவர் எழுதிய பகிரங்கக் கடிதம் அதனை உறுதிப்படுத்துகிறது. அக்கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

"முதலாளித்துவத் தன்னாதிக்கத்தை எதிர்த்துப் போரா்டாமல் அரசியல் தனிஆதிக்கத்தை எதிர்த்துப் போராட முடியாது. அரசியலில் விடுதலைக்கு இன்றியமையாதவைகள், தொழில் துறையில் சுதந்திரம் ஆகியவைகளை பொருத்தவரை நாம் சுயராஜ்ஜிய அரசியல், விட்டுக்கொடுத்தலை எவ்வுருவத்திலும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆகையால் நமக்கு வரவிருக்கும் சுயராஜ்ஜியத்தில் நிலமும் இன்றியமையாத தொழிற்சாலைகளும் நாட்டின் நன்மைக்காக பொதுமையாக்கல் படுமென்றும், நாம் பயிரிடாத எந்தத் துக்காணி நிலத்தையும், நாம் வேலை செய்யாத எத்தொழிற்சாலையையும், நாம் வசிக்காத எந்த வீட்டையும் நம்மில் ஒருவரும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எளிய மொழியில் எவ்வகை ஐயத்துக்கிடமின்றி அறிவிக்க வேண்டுமெனத் தங்கள் முன் தாழ்ந்து பணிந்து வேண்டுகிறேன்" *(1991: 273).*

மேற்குறித்தப் பகுதியில் இந்திய மக்களுக்கான சுயஉரிமையுடன் கூடிய நன்மைக்காக ராஜ்ஜியம் எவ்வாறெல்லாம் அடைய வேண்டுமென்பதைச் சிங்காரவேலரின் கருத்துநிலை தெளிபடுத்துகிறது. உலகில் உள்ள இயற்கைப் பொருள்களான நிலம் போன்றவற்றை அனைவருக்குமான பொருளாக வடிவமைப்பது எப்படி? அவ்வகையான செயல்பாடுகள்தான் உண்மையான சுயராஜ்ஜியமாக அமைய முடியும். அவ்வாறில்லாதவை மக்களுக்கான சுயராஜ்ஜியமாக அமையாது. மாறாக யாருக்கான சுயராஜ்ஜியமாக அமையும் என்பது குறித்த விரிவான உரையாடலை மேற்கொண்டார். இக்கருத்துக்களைக் காந்தியார் எவ்வகையில் எதிர்கொண்டார். அதற்கான மறுமொழியை அவர் வெளிப்படுத்தினாரா? என்பதற்கான தரவுகள் இல்லை; ஆனால் இவ்வாறான சுயராஜ்ஜியம் அமையாவிடில், காந்தியம் கூறும் சுயராஜ்ஜியம் யாருக்கானதாக இருக்கும் என்பதையும் பதிவு செய்துள்ளார். அப்பகுதி வருமாறு:

"பின் யாருக்குத்தான் சுயராஜ்ஜியம்? நமது லாயர்களுக்கும் ஜட்சுகளுக்கும், மந்திரிகளுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும், மடாதிபதிகளுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும், வீடு சொந்தக்காரர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், தொழிற்சாலை, ரயில் மற்றும் கப்பல் உரிமையாளர்களுக்கும், ராணுவம் மற்றும் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும், பண்டிதர்களுக்கும் *(University Professor)*, பட்டவர்த்தனர், மகுடவர்த்தனருக்கும், இவர்கள் சந்ததியருக்கும்தான் நமது தேசிய காங்கிரஸ் கோரும் சுயராஜ்ஜியமெனவும் அறிக" *(2006: I: 59).*

சிங்காரவேலர் எனும் சமூக அறிவியலாளர் *1917-1925* இடைப்பட்ட காலங்களில், இந்திய சமூக இயக்கம் குறித்துக் கொண்டிருந்த கண்ணோட்டங்களை மேலே நாம் பதிவு செய்தோம். இக்காலங்களில் காங்கிரஸ் இயக்கம் சார்ந்த செயல்கள்; காந்தியாரின் செயல்கள் ஆகியவற்றில், ஒரு சமூக அறிவியலாளனாக அவர் முன்வைத்தகருத்துநிலைகளாகப்பின்கண்டவற்றைத் தொகுக்கலாம்.

■ இயற்கையில் உள்ள பொருட்கள், மனித சமூகம் அனைத்திற்கும் பொதுவானது. அதனை வெகுசிலர் உரிமை கொண்டாடுவதை நாம் ஏற்க இயலாது.

■ தொழிலாளர் - விவசாயி ஆகிய இரு தரப்பு உழைப்பாளிகள் தாம் நம் சமூகத்தின் ஆணி வேர்; அவர்களைச் சுரண்டுவோரை நாம் அனுமதிக்க முடியாது. அவர்களுடைய விடுதலையின் குறியீடாக மே தினக் கொண்டாட்டம் அமைகிறது.

■ சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை எனும் பண்புகள் சார்ந்த சுயராஜ்ஜியமே நமக்குத் தேவை. அதற்கு மாற்றான எதுவும் சுயராஜ்ஜியமாக அமைய முடியாது.

மயிலாப்பூரில் பிறந்த இத்தமிழ்மகன், இந்திய அரசியலுக்கே வழிகாட்டும் கோட்பாட்டை முன்மொழிந்த சமூக அறிவியலாளன். இதனைத் தான் சார்ந்த அமைப்பின் மூலம் நடைமுறைப் படுத்த முயன்ற மனிதன். இவை எவ்வாறெல்லாம் அன்றைய சமூகத்தில் எதிர் கொள்ளப்பட்டது என்பது குறித்து அறிவதற்கான தரவுகளைத் தேடவேண்டும். ஆனால், இவரைப் போல் சமூகம் குறித்து அந்தக் கால இந்தியச் சமூகத்தில், தமிழ்ச் சமூகத்தில் பேசிய வேறொருவர் உண்டா? என்ற உரையாடலையும் நிகழ்த்த வேண்டும். இவ்வகையில் அன்றைக்கு உலகில் நடைமுறைக்கு வந்த மார்க்சியத் தத்துவத்தைத் தமது நிலைப்பாடாகக் கொண்ட சமூக அறிவியல் அறிஞர் மயிலாப்பூர் சிங்காரவேலர் என்ற பதிவை முன்னெடுப்பது நமது கடமை.

மார்க்சியம் எனும் சமூக அறிவியல் சார்ந்த தத்துவத்தின் மீது அவருக்கிருந்த ஈடுபாட்டை நாம் அறிவோம். இத்தத்துவம் இயற்கை நிகழ்வுகளின் இயங்கியலை முதன்முதல் தர்க்கப்பூர்வமாக உரையாடலுக்குட்படுத்தியது. மனிதனின் உழைப்பு என்றால் என்ன? அது சமூக மாற்றத்தில் பெறும் இடம் எத்தகையது? உலகத்தில் நிகழ்ந்த / நிகழ்ந்து கொண்டிருக்கும் தொழில்புரட்சி எத்தகைய சமூக நிகழ்வுகளுக்கு அடிப்படையாக அமைகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பல்வேறு கேள்விகளுக்கு விடை கண்டது மார்க்சியம். இத்தன்மைகளை உள்வாங்கி, மார்க்சியம் முன்னெடுக்கும் சமூக இயங்கியல் சார்ந்து தமிழ்ச் சூழலில், சிங்காரவேலர் தமது எழுத்துக்களின் மூலம் பதிவு செய்தார். இவ்வகையில் மார்க்சிய சமூக இயங்கியல் குறித்த விரிவான பதிவைத் தமிழில் செய்த முதல் சமூக அறிவியலாளர் அவர் தான் என்று கூற முடியும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் அவரால் எழுதப்பட்டவை நமக்குச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

'கடவுளும் பிரபஞ்சமும்' (1932), 'மனித உற்பவம்' (1934), 'விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்' (1934), 'தத்துவ விஞ்ஞானக் குறிப்புகள்' (புதிய உலகம் - 1935 - 1936) ஆகியவற்றையும் மேலும் பல கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். அவரது 'கடவுளும் பிரபஞ்சமும்' எனும் நூல் கடவுள் என்ற பொருள் உலகில் இல்லை. அது மனிதனால் கற்பிக்கப்பட்டது என்று கருத்தாக்கத்தை முதன்மைபடுத்திய நூலாகும். ஐரோப்பிய சமூகத்தில் அறிவொளி இயக்கம் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் பல பரிமாணங்களில் வளர்ச்சியுற்றது. கிருத்தவ நிறுவனங்களுக்கு எதிரான கலகங்கள் உருவாயின. இவ்வகையில் தோன்றியதே இலண்டன் இலௌகிக சங்கம் (*London Secular Society- 1860*). இவ்வமைப்பின் கிளை சென்னை நகரத்தில் 1878 ஆம் ஆண்டு உருவானது. இவர்கள் 1882இல் சென்னை இலௌகிக சங்கத்தை உருவாக்கினர். (*Madras Secular Society*). இவ்வமைப்புகள் கடவுளின் இருப்பு குறித்த கேள்விகளை முன்வைத்தது. ஐரோப்பிய நாடுகளில் உருவான இவ்வமைப்புகள் குறித்து சிங்காரவேலர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். ஆனால் சென்னையில் 1878 - 1886ஆம் ஆண்டுகளில் செயல்பட்ட 'சென்னை இலௌகிக சங்கம்' குறித்த பதிவுகளை அவரது எழுத்துகளில் காண முடியவில்லை. இந்தப் பின்புலத்தில் மார்க்சியம் கூறும் பொருள்முதல்வாதக் கருத்துக்களைப் பரப்புரை செய்யும் நோக்கில் செயல்பட்டார். இதனை அவரது 'கடவுளும் பிரபஞ்சமும்' எனும் நூல் வழி வெளிப்படுத்தியிருப்பதைக் காண முடிகிறது.

"தத்துவஞானிகள் கூறும் பிரம்மமும் (*Brahmam*), சந்ததும் (*Sat*), சர்வமும் (*Absolute*), தெரியப்படாததும் (*Unknowable*), எண்ணமும் (*Idea*), இச்சையும் (*Will*) யாவும் கற்பனைகளென அறிக" (2006: I: 256).

மேலே கூறியுள்ள செய்திகள் மூலம் கடவுள் மனிதனால் உண்டாக்கப்பட்டது தான் என்பதை வலியுறுத்துகிறார். இவ்வகையான கடவுளை மனிதன் ஏன் உண்டாக்கிக் கொண்டான்? அதனை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது என்பது குறித்தும் மிக விரிவாக பேசியுள்ளார். பிரபஞ்ச நிகழ்வுகளுக்கும் கடவுளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை எண்ணற்ற அறிவியல் சார்ந்த தர்க்க உரையாடல்கள் வழி பேசுகிறார். இதில் மனிதன் எவ்வாறு செயல்படுகிறான் என்பதையும் பதிவு செய்கிறார்.

"பிரபஞ்சத்தில் நமக்குத் தெரிந்தவரை, இருக்கும் பிராணிகளில் மனிதனைப் போன்ற மூடப்பிராணி இல்லை என்றே சொல்லலாம். இல்லாத தெய்வங்களையும் பிசாசுகளையும் தானே சிருஷ்டி செய்து கொண்டு, அந்த சொற்களுக்குத் தானே நற்குணங்களையோ, துர்குணங்களையோ காட்டி, தான் கொடுத்த குணத்திற்குப் பயந்து அந்த பயத்தைப் போக்க, பிரார்த்தனையும் பூசையும் காவையும் பலியையும் செய்து, அவைகளால் தன்னையும், பிறரையும் இம்சித்துக் கொண்டு. இவ்வுலகில் உயிர் வாழும் சம்பவம் பிரபஞ்சத்தில் வேறு எங்கும் இருக்காது என்று தீர்க்கமாக எண்ணலாம்" (2006:1: 290).

இவ்வகையில் மார்க்சியம் சார்ந்த பொருள்முதல்வாதக் கருத்துக்களை பொது வெளியில் முன்னெடுத்த சமூக அறிவியலாளராகப் புரிந்து கொள்ள முடிகிறது. இக்கருத்தியலை மேலும் வலுப்படுத்த டார்வின் கோட்பாடுகளை மிக விரிவாக அறிமுகப்படுத்தி எழுதியுள்ளார். உயிர்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி சார்ந்த பரிணாமக் கோட்பாடுகளை 'மனித உற்பவம்' எனும் நூலில் வெளிப்படுத்துகிறார். பிரபஞ்ச நிகழ்வுகள், அதில் கடவுள் எனும் சொல் பெறும் இடம், மனித இன உற்பத்தி ஆகியவற்றைக் குறித்துப் பேசிய சிங்கரவேலர் அவரது செயல்பாடுகள் குறித்து 'விஞ்ஞானமுறையும் மூடநம்பிக்கையும்' எனும் தொகுப்பு நூலைப் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் 'குடியரசு' பதிப்பகம் மூலம் 1934இல் வெளியிட்டார். இந்நூல் குறித்துப் பெரியாரின் பதிவு பின்வருமாறு.

'விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்' என்னும் இப்புத்தகமானது சென்னை தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி.எல்., அவர்களால் எழுதப்பட்டதாகும். இது எழுத நேர்ந்ததின் அவசியம் என்னவென்றால், தோழர் சிங்காரவேலு அவர்களால் முன் எழுதப்பட்ட 'கடவுளும் பிரபஞ்சமும்' என்னும் புத்தகமானது மக்களிடையில் ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்டதுடன், பொது ஜனங்கள் பல மூலைகளிலிருந்தும் தோழர் சிங்காரவேலு அவர்களைச் சரமாரியாகக் கேள்விகள் கேட்க ஆரம்பித்து சுமார் ஆறு மாத காலம் அநேக விசயங்களைப் பற்றிக் கேட்டுவந்தார்கள். அக்கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் தோழர் சிங்காரவேலு அவர்கள் தக்க பதிலளிக்கும் முறையில் எழுதியதாகும்" (2016: முகவுரை).

மேலே பெரியார் பதிவு செய்துள்ள செய்திகளின் அடிப்படையில் சிங்காரவேலர் செயல்பாடுகளை நாம் புரிந்து கொள்ள இயலும். கடவுள், மந்திரம், பில்லி சூனியம், குறிபார்த்தல், தெய்வமாடல், புத்த மதம், கிறித்தவ மதம் ஆகியவற்றின் மூடநம்பிக்கைகள், போலி விஞ்ஞானம், ஆஸ்திகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி உருவாக்கம், நாஸ்திகம் ஆகிய பல்வேறு செய்திகள் குறித்த உரையாடலை இந்நூலில் மேற்கொண்டுள்ளார். உலகில் புதிதாகக் கண்டுபிடித்தவைகளைக் கொண்டு, மேற்குறித்தவற்றை மறுக்கிறார். விஞ்ஞானம் என்பது குறித்து தவறான நம்பிக்கைகளை மதம், நிறுவனங்கள் எவ்வாறெல்லாம் பொய் சார்ந்த பரப்புரைகளைச் செய்கின்றன என்பதை விரிவாகப் பதிவு செய்துள்ளார். பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவ்வியக்கக் கோட்பாடுகளைப் பரப்ப 'குடியரசு' இதழையும் நடத்தத் தொடங்கினார். இவ்விதழில் மேற்குறித்த கருத்துப் பரப்புகளைச் சிங்காரவேலர் மேற்கொண்டார். தமிழக அரசியல் வரலாற்றில் இச்செயல்பாடுகள் மிக முக்கியமான நிகழ்வுகள். மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளும் கடவுள் சார்ந்த மூடநம்பிக்கைகளும் மக்களைச் சிந்திக்க விடாது அடிமைபடுத்திய காலங்களில், அவற்றை உடைத்தெறிய, ஐரோப்பியப் பின்புலத்தில் உருவான புத்தொளி மரபு மற்றும் மார்க்சிய பொருள்முதல்வாதக் கருத்துநிலை ஆகியவற்றை உள்வாங்கிச் செயல்பட்டவர் சிங்காரவேலர். இதற்குப் பெரியார் தமது முழு ஆதரவையும் வழங்கினார். தமது பத்திரிக்கை மற்றும் வெளியீட்டு நிறுவனம் மூலம் சிங்காரவேலர் எழுத்துக்களை வெளியிட்டார். சமூகச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்ட பெரியாரும் சமூக அறிவியல் கண்ணோட்டமுடைய சிங்காரவேலரும் இணைந்து தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிய பணிகளை நன்றியுடன் பதிவு செய்வது நமது கடமை.

பெரியாரின் 'குடியரசு' இதழில் தொடர்ந்து எழுதும் வாய்ப்பு நேராத போது, தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு 1935 - 1936ஆம் ஆண்டுகளில் 'புது உலகம்' எனும் இதழைப் பயன்படுத்திக் கொண்டார். அக்கட்டுரைகள் கே.முருகேசன் மற்றும் சி.எஸ்.சுப்ரமணியம் ஆகிய இருவரால் 'தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்' எனும் தலைப்பில் தொகுக்கப்பட்டு வெளிவந்தது. இத்தொகுப்பின் முன்னுரையில், தொகுப்பாசிரியர்கள் செய்துள்ள பதிவு என்பது, சிங்காரவேலர் எனும் சமூக அறிவியல் ஆளுமையை அறிந்து கொள்ள உதவும்.

"மார்க்சியம் என்பது விஞ்ஞான் சோஷலிஸம். நமது விருப்பு வெறுப்பை அடிப்படையாகக் கொண்டதல்ல; விஞ்ஞான முறையில், விஞ்ஞானத்தின் அடிப்படையில் சமூக மாற்றத்தைப் பற்றி எடுத்துரைத்து சோஷலிசத்திற்கு வழிவகுக்கின்றது. எது விஞ்ஞானம், விஞ்ஞான வழிவகை என்றால் என்ன என்பவற்றை எடுத்து விளக்க உலகத்தின் இயல்பு என்ன, பிரபஞ்ச அமைப்பு எப்படி, பரிணாம வாதம் என்றால் என்ன, என்பன போன்ற விசயங்களை உருப்படியான வகையில், தெளிவான முறையில் விளக்கியுள்ளார். தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்டான இந்தப் பெரியார் (1975: முன்னுரை).

சமூக அறிவியலாளன் என்பவன் தத்துவம் என்பதை விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாகவே புரிந்து கொள்வான். இந்தப் பின்புலத்தில் 'புது உலகம்' இதழில் எழுதிய தொடர் கட்டுரைகளுக்குத் 'தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்' என்று பெயரிட்டார். அப்பெயரில் அக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டன. தத்துவம் என்பதை சமயப் பின்புலத்தில் உரையாடலுக்கு உட்படுத்தியோர் மிகுதியாக வாழ்ந்த காலச்சூழலில் வாழ்ந்தவர் சிங்காரவேலர். மதத்திற்கும் தத்துவத்திற்கும் தொடர்பில்லை. தொடர்பு இருப்பதாகப் பேசப்படும் சொல்லாட்சிகள் பொருள்முதல்வாதக் கருத்துநிலையை ஏற்பதில்லை. மிகச் சிக்கலான இந்த உரையாடலை நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் சார்ந்து, தத்துவ மரபுகளை உரையாடலுக்கு உட்படுத்தினார் சிங்காரவேலர். அந்த வகையில் அமைந்தவை 'புது உலகம்' கட்டுரைகள். 1925-1936 இடைப்பட்ட காலங்களில் அவரது செயல்பாடுகள், தாம் புரிந்து கொண்ட பொருள்முதல்வாதத் தத்துவமரபை எந்தெந்த வகையிலெல்லாம் பரப்புரை செய்ய இயலும்? சமூக நடைமுறையில் உள்ள நிகழ்வுகளோடு அதனை எவ்வாறு இணைப்பது? ஆகிய கண்ணோட்டத்தில் செயல்பட்டவர் சிங்காரவேலர். அதனைத்தான் 'தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்' என்று அழைக்கிறார். சமூக அறிவியலாளன் அல்லது சமூக விஞ்ஞானி என்பவருக்கான அனைத்துப் பண்புகளையும் கொண்டிருந்தவராக, மேற்குறித்த செய்திகள் மூலம் சிங்காரவேலரைப் புரிந்து கொள்ளலாம்.

• •

சமூக அறிவியலாளர் என்பவர் சமகால வாழ்க்கை குறித்த புரிதலும் அக்கரையும் கொள்வது அவசியம். அந்தப் புரிதலை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிதலும் அவசியம். அந்த வகையில் தொழிலாளர், விவசாயிகளைப் புரிந்து கொண்டதன் மூலம்,தான் வாழ்ந்தகாலத்தை முதன்மைபடுத்தினார் சிங்காரவேலர். அதனை நடைமுறைப்படுத்த, அச்சு ஊடகம் சார்ந்த பரப்புரை மேற்கொள்ள இதழ்களை நடத்தினார். தொழிலாளி, விவசாயிகளுக்கான அமைப்புகளைக் கட்டி எழுப்பினார். அவ்வமைப்பு கைக்கொள்ள வேண்டிய தத்துவார்த்த நடைமுறை குறித்த் புரிதலைப் பெற்றவராக இருந்தார். இத்தன்மைகளை 1917 - 1924 உட்பட்ட காலங்களில் அவரிடம் நாம் காண முடிகிறது. 1925 - 1936 காலங்களில் சமூகத்தில் இருந்த மூடநம்பிக்கைகளை விஞ்ஞான கருத்தியல் சார்ந்த தத்துவப் பின்புலத்தில் எதிர்கொண்டார். அதனைப் புலப்படுத்துவதாக 'புது உலகம்' இதழ் கட்டுரைகள் உள்ளன. இவ்வகையான செயல்பாடுகளை மேற்கொண்ட காலங்களில் அவர் வாசித்த தத்துவத்துறை சார்ந்த நூல்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரபஞ்சத்தில் நமக்குத் தெரிந்தவரை, இருக்கும் பிராணிகளில் மனிதனைப் போன்ற மூடப்பிராணி இல்லை என்றே சொல்லலாம். இல்லாத தெய்வங்களையும் பிசாசுகளையும் தானே சிருஷ்டி செய்து கொண்டு, அந்த சொற்களுக்குத் தானே நற்குணங்களையோ, துர்குணங்களையோ காட்டி, தான் கொடுத்த குணத்திற்குப் பயந்து அந்த பயத்தைப் போக்க, பிரார்த்தனையும் பூசையும் காவையும் பலியையும் செய்து, அவைகளால் தன்னையும், பிறரையும் இம்சித்துக் கொண்டு. இவ்வுலகில் உயிர் வாழும் சம்பவம் பிரபஞ்சத்தில் வேறு எங்கும் இருக்காது என்று தீர்க்கமாக எண்ணலாம்"

அறிவியல் துறை சார்ந்த நூல்கள் ஆகியவற்றையும் அவர் பதிவு செய்துள்ளார். சமகாலப் புரிதல் நோக்கி அவர் வாசித்த அறிவியல் நூல்கள் சார்ந்து, அவரை நாம் சமூக அறிவியலாளராகப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வகையான உரையாடல்களை மேற்கொள்ள கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ளலாம்.

- சமூக அறிவியலாளராகச் செயல்பட, சமூக வரலாற்றில் இதுவரை பேசப்பட்ட / பேசப்படும் தத்துவச் சொல்லாடல்கள் குறித்த அக்கறையுடையவராக இருத்தல் அவசியம். தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு எவ்வகையான வாசிப்பு மரபைக் கொண்டிருக்க வேண்டும் என்பதும் முக்கியமாகும். சிங்காரவேலர் மேற்குறித்தவாறு எவ்வாறு செயல்பட்டார் என்ற உரையாடல் நிகழ்த்தும் தேவை நமக்குண்டு.

- தாம் வாழும் காலத்தில், எந்தெந்த முறைமைகளில் புதிய பார்வைகள் உருப்பெற்றுள்ளன; எந்தெந்த வகையில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன; அக்கண்டுபிடிப்புகள் சார்ந்து சமூகம் குறித்த தேடுதலில் என்னென்ன புதிய தன்மைகள் உருவாகியுள்ளன ஆகிய பல புரிதல்களை சமூக அறிவியலாளன் தன்னுள் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பின்புலத்தில் சிங்காரவேலரை எவ்வாறு மதிப்பீடு செய்ய இயலும் என்ற உரையாடலும் அவசியமாகும்.

- தொழில்புரட்சிக்குப் பிந்தைய சமூகத்தில் பல்வேறு ஊடகங்கள் உருப்பெற்றுள்ளன. இவ்வூடகங்கள் சமூக வாழ்க்கை குறித்த பதிவுகளைச் செய்த வண்ணமே உள்ளன. இதில் அச்சு ஊடகம் என்பது பெரும் பண்பாடாகவே உருப்பெற்றுள்ளது. அச்சு வழி நாள்தோறும் வெளிவரும் இதழ்கள் மற்றும் பிரசுரங்களை நாம் தொடர்ந்து வாசிக்க வேண்டியுள்ளது. அதைப் போல புத்தகங்களை வாசிக்கும் பழக்கமும் தொடர்தல் அவசியம். சிங்காரவேலர், எந்தெந்த வகையான புத்தகங்களோடு உறவு கொண்டிருந்தார். குறிப்பாக நவீன அறிவியல்துறை சார்ந்த வாசிப்பை அவர் எவ்வகையில் கைக்கொண்டிருந்தார் என்ற அறிதலும் அவசியம். இந்தப் பின்புலத்திலும் சிங்காரவேலர் ஆளுமையை நாம் அறிய இயலும்.

சிங்காரவேலரின் 1917-1946 இடைப்பட்ட கால வாழ்க்கையில், தம்மை ஒரு பொருள்முதல்வாதத் தத்துவ மரபை ஏற்றுக் கொண்டவராகவும், அதனைப் பரப்புரை செய்பவராகவும் இருந்தார். இதனைப் புரிந்து கொள்ள அவரது எழுத்துக்களில் பல்வேறு தத்துவ ஞானிகளின் கருதுகோள்களை உள்வாங்கியதைக் காண்கிறோம். தொடக்ககால கிரேக்க - ரோமானிய தத்துவ அறிஞர்களான அரிஸ்டாட்டில் (கி.மு.384-322), பிளாட்டோ (கி.மு. 427-347), சாக்ரட்டீஸ் (கி.மு.469-399) ஆகியோரின் கருத்துநிலைகள் குறித்த உரையாடலை மேற்கொள்கிறார். அவை சமகாலத்தில் எவ்வகையில் அணுகுதல் வேண்டும் என்பதைப் பேசுகிறார். ஜெர்மன் தத்துவ அறிஞர்களான ஜார்ஜ் வில்லியம் ஹெகல் (1770 1831), ஆர்தர் கோபன்ஹார் (1788-1860), ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (1820 - 1903), இம்மானுவேல் கான்ட் (1724 - 1804) ஆகிய பலரின் தத்துவம் சார்ந்த உரையாடல்களை மேற்கோள்காட்டி, அதிலிருந்து மார்க்சியம் எவ்வாறு உருப்பெற்றது என்பதைப் பேசுகிறார். மார்க்சும் எங்கல்சும் உருவாக்கிய பல்வேறு தத்துவ உரையாடல்களை விரிவாக முன்வைக்கிறார். 'கம்யூனிஸ்டு அறிக்கை' தொடங்கி, அவர் வாழ்ந்த காலம் வரையிலான மார்க்சிய உரையாடல்கள் குறித்த பதிவை மிக விரிவாகவே செய்துள்ளார். அவ்வகையான அணுகுமுறை சார்ந்தே இயங்குகிறார். அதனையே தம்து அடையாளமாகவும் கருதுகிறார். இவ்வகையில் மார்க்சிய தத்துவ மரபை ஏற்றுக் கொண்ட முதல் சமூக அறிவியலாளராக சிங்காரவேலர் தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்தார். இதற்கான பதிவுகளை அவரது ஆக்கங்கள் அனைத்திலும் நாம் காண்கிறோம். சிங்காரவேலர் முன்னெடுத்த சமூக அறிவியல் கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்தவை. அவரது காலத்தில் அறியப்பட்ட அறிவியல் அறிஞர்களின் செயல்பாடுகள் ஆகும். கோபர்நீக்கஸ் (1473-1543), கெப்ளர் (1571-1630), ஆல்பர்ட் ஈன்ஸ்டின் (1879-1955), கலிலியோ (1564-1642), பிளமிங் (1849-1945), புருனோ (1548-1600), சி. வி. இராமன் (1888-1970) ஆகிய பல அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகள் தொடர்பாக விரிவான பதிவுகளைச் சிங்காரவேலர் செய்துள்ளார். இவ்வறிஞர்களின் கண்டுபிடிப்புகள் என்பவை, பூமியின் இயக்கம், உயிர்களின் தோற்றம், உயிர்களின் வளர்ச்சி வரலாறு ஆகிய பல அடிப்படையான உரையாடல்களுக்கு வழி கண்டது. பொருள்முதல்வாத தத்துவ உரையாடல்களை வலுப்படுத்த இக்கண்டுபிடிப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை ஆதாரங்களாக அமைந்தன. சிங்காரவேலர், புதிய கண்டுபிடிப்புகள் குறித்த விரிவான பதிவுகளைத் 'தத்துவ விஞ்ஞானக் குறிப்புகள்' எனும் தொடரில் 'புது உலகம்' இதழில் விரிவாகப் பதிவு செய்தார். உலகத்தில் உருப்பெற்றுள்ள புதிய பார்வைகள் என்பவை, இதுவரை இருந்த நம்பிக்கை சார்ந்த கருத்துமுதல்வாத உரையாடல்களைத் தகர்த்தது. பொருள்முதல்வாதமே அறிவியல் பூர்வமானது என்பதற்கான விரிவான சான்றாதாரங்களைப் பரப்புரை செய்யும் பணியைத் தம் வாழ்க்கைப் பணியாகக் கொண்டார். இதுவே சிங்காரவேலர் எனும் முதல் சமூக அறிவியலாளர் தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்ததற்கான அடையாளமாக நம்முன் உள்ளது. இதனைப் பல பரிமாணங்களிலும் கொண்டாடும் அவசியம் நமக்குண்டு.

சிங்காரவேலர் என்ற மனிதரின் வாசிப்பு மரபு சார்ந்து, அவரின் வரலாற்று ஆசிரியர்களான கே.முருகேசன் மற்றும் சி.எஸ்.சுப்ரமணியன் ஆகியோர் செய்துள்ள பதிவு முக்கியமானது. அது வருமாறு:

"மேலை நாட்டு விஞ்ஞானிகளும் தத்துவ ஆசிரியர்களும் இயற்கையின் குண விசேஷங்களை 'மெட்டீரியலிஸ்டு' (பொருள்முதல்வாது) முறையில் அணுகி ஆராய்ந்ததைப் பற்றி தான் தெரிந்து கொண்ட பரந்த அறிவின் அடிப்படையில் எழுதப்பட்டவை சிங்காரவேலு கட்டுரைகள். அவரிடம் இந்த விஷயங்களைப் பற்றி ஏராளமான நூல்கள் இருந்தன. அவர் இது பற்றி படித்த விஷயங்களை ஆதாரமாக கொண்ட நூல்களில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

*"1. நட்சத்திரங்களும் அணுக்களும் (Stars and Atoms) எட்டிங்கடன் எழுதியது. 1927; (2) குழப்பத்திலிருந்து ஓட்டம் - ஷேப்பி (1931, Fight from Chaos), (3). நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சம் (The Universe around us), ஜீன்ஸ் எழுதியது - 1930. (4).கடவுளும் பிரபஞ்சமும் (God and the Universe) - 1931. (5) பிரபஞ்சத்தின் ஜீவன் (Life of the Universe) - 1909. (6) எலக்ட்ரான்களும் மூலப்பொருள்களும் (Elements and Electrons) ராம்ஸே - 1912. (7) அணுவுக்கு அப்பால் (Beyond the Atom) காக்ஸ் 1913. (8) ஆந்தரபாலஜி (Anthropology) டைய்லர். (9) தங்கக் கிளை (The Golden Bough) பிரேசர். (10) மனிதனும் கடவுளும் சாகமையும் (Man God and immorality) பிரேசர். (11) பிஹேவியரிசம் (Behaviorism) வாட்சன்" (1991: 134 - 135).*

மேலே குறித்துள்ள நூல்கள் பலவற்றிலிருந்தும் மேற்கோள் தந்து சிங்காரவேலர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவரது நூல்கள் மற்றும் கட்டுரைகள் என்பவை நாம் வாழும் பூமி, அதிலுள்ள உயிரினங்கள், அவற்றின் இயக்கங்கள், இயக்கங்கள் சார்ந்து உருவான சமூக வாழ்க்கை என்ற மரபை உள்வாங்கியே எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவரைப் போன்று தமிழ்ச் சூழலில் சமூக வரலாற்றை எழுதியவர்கள் மிகக் குறைவு. அவர் மறைந்து சுமார் அறுபது ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவரது எழுத்துக்கள் இன்றும் புதிய புதிய வாசிப்பு அனுபவத்தைத் தருகின்றன. சமூக அறிவியலாளரின் எழுத்துக்கள் வேறெப்படி இருக்க முடியும்?

**இப்பதிவை உருவாக்க அடிப்படையாக இருந்த நூல்கள்:**

I. ம.சிங்காரவேலர் எழுதிய நூல்கள்:

1931, 1932, 1934 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த சுயராஜ்ஜியம் யாருக்கு? மூன்று பாகங்கள்

1934 - மெய்ஞான முறையும் மூடநம்பிக்கையும் இந்நூலை ஈரோடு குடியரசு பதிப்பகம் வெளியிட்டது. இரண்டு பாகங்கள். இவை இப்போது இரண்டு பாகங்களும் இணைந்த வகையில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடாக வந்துள்ளது. பதிமூன்றாம் அச்சு. 2016. விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பெரியார் முன்னுரை எழுதியுள்ளார்.

1974 - ம.சிங்காரவேலரின் சொற்பொழிவுகள்; 1931 - 1934

ஆம் ஆண்டுகளில் சிங்காரவேலர் நிகழ்த்திய பேச்சுக்கள். 1974இல் தான் முதன் முதல் அச்சு வடிவம் பெற்றது. என்.சி.பி.எச் மூலம் மூன்றாம் அச்சு 1984இல் வந்துள்ளது. தொகுப்பாசிரியர்கள் கே.முருகேசன் மற்றும் சி.எஸ். சுப்பிரமணியன்.

1974 - ம.சிங்காரவேலரின் பொதுவுடைமை விளக்கம்

இதில் உள்ள கட்டுரைகள் 1924 - 1928இல் ஒரு பகுதியும் 1931 - 1932இல் இன்னொரு பகுதியும் எழுதப்பட்டவை. எழுத்துப் பிரதி அச்சானது 1974இல்தான். இதன் மூன்றாம் அச்சு என்.சி.பி.எச் நிறுவனம் வெளியிட்டுள்ளது. 1985.

1975 - தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்

'புது உலகம்' இதழில் 1935 - 1936 ஆண்டுகளில் எழுதப்பட்டவை. கே.முருகேசன் அவர்களும் சி.எஸ். சுப்பிரமணியன் அவர்களும் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். இதனை என்.சி.பி.எச். வெளியிட்டுள்ளது.

1975 - அரசியல் நிலைமை, மே, 1935 - ஏப்ரல் 1936

1935 - 1936ஆம் ஆண்டுகளில் சிங்காரவேலர் 'புது உலகம்' இதழில் எழுதிய கட்டுரைகள். தொகுப்பாசிரியர்கள். கே. முருகேசன் மற்றும் சி.எஸ்.சுப்பிரமணியன். என்.சி.பி.எச். வெளியிட்டுள்ளது.

2006 - ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம்

மூன்று தொகுதிகள், தொகுப்பாசிரியர்கள்: முத்து குணசேகரன், பா.வீரமணி, தென்னக ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

**பிற ஆக்கங்கள்**

1991 - சிங்காரவேலு - தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு ஆசிரியர்கள் கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம். நி.செ.பு நிறுவனம் வெளியீடு.

1970 - 1990 - ம.சிங்காரவேலரின் பிறப்பு மற்றும் நினைவு நாட்களில், தோழர் கே.முருகேசன் அச்சிட்டுக் கொடுத்த பதினாறு பக்க சிறுவெளியீடுகள். வெளியிட்டவர்கள் 'நடமாடும் முற்போக்கு வெளியீட்டுக் கழகம்' மதராஸ் ஹார்பர் தொழிலாளர் சங்கம். பகத்சிங் இல்லம் - ஜீவா ஹால். சென்னை -1 ●

*கட்டுரையாளர்: பேராசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | காக்கையார்

# இந்தியா கூட்டணி.. இணக்கம் வருமா?




**இ**ன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ள பதினெட்டாவது மக்களவைத் தேர்தல் அரசியல் கட்சிகளின் எதிர்காலத்தை விட இந்த நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கிற தேர்தலாக இருக்கிறது. பிரதமர் மோடியின் 10 ஆண்டுகால அலங்கோல ஆட்சி முடிவடைய இருக்கிறது. மீண்டும் மோடியே ஆட்சியைப் பிடிப்பார் என்ற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டு வருகிறது. எதிர்க்கட்சிகள் இடையே ஒற்றுமை வராது என்ற நம்பிக்கையில் பாரதிய ஜனதா கட்சி மகிழ்ச்சியுடன் உள்ளது.

2014 மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியை பிடித்த போது அதன் வாக்கு சதவீதம் 31 தான் . தேசிய ஜனநாயக கூட்டணி மொத்தத்தில் 38.5 சதவீத வாக்குகளைத் தான் பெற்றது. எதிர்க்கட்சிகள் தொடர்ந்து பிரிந்து கிடந்து பாரதிய ஜனதாவின் வெற்றி விருப்பத்தை நிறைவேற்றப் போகிறதா? கட்சி நலன், தனிப்பட்ட தலைவர் நலன் இவற்றுக்கெல்லாம் மேலாக இந்த நாடு, சமூகம், மக்கள், ஜனநாயகம், மதச்சார்பின்மை, பன்மைத்துவம் ஆகியவை முக்கியமானது என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு நிற்கப் போகிறார்களா?

குறிப்பாக மேற்கு வங்கம், பஞ்சாப் மற்றும் சில மாநிலங்களில் இருந்து வரும் செய்திகள் கவலையைத் தருகின்றன. மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு இடங்கள்தான் தர முடியும் என்று மம்தா பானர்ஜி பிடிவாதம் காட்டுகிறார். இந்தியா கூட்டணியின் தேசிய அமைப்புக்குழுவை சேர்ந்த ஐந்து பேரை சந்திக்க மம்தா மறுக்கிறார். அசாம், மேகாலயாவில் திரிணமுல் காங்கிரஸ் கட்சிக்கு சில இடங்கள் ஒதுக்க வேண்டும் என்று மம்தா கேட்கிறார். பஞ்சாப், ஹரியானா, டெல்லியில் செல்வாக்கு மிக்கதாக உள்ள ஆம் ஆத்மி கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. உள்ளூரில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் நாட்டைச் சூழ்ந்துள்ள ஆபத்தை உணராமல் செயல்படுகின்றனர். மம்தா பானர்ஜியுடன் கூட்டணி வைப்பது தற்கொலை முயற்சி என்று மேற்குவங்க காங்கிரஸ்காரர்கள் கூறி வருகிறார்கள். அது மட்டுமின்றி அமலாக்கத் துறையினர் மீது தாக்குதல் நடந்ததை வைத்து மேற்குவங்கத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி பேசுகிறார். இது போன்ற உள்ளூர் காங்கிரஸ் தலைவர்கள் கூட்டணி அமைவதற்கு எதிராக செயல்பட்டு வருகிறார்கள். இதைத் தடுக்க வேண்டிய வேலையில் இப்போதுதான் தாமதமாக ராகுல் காந்தி இறங்கி இருக்கிறார்.para கேரளாவில் வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுவது ஏன் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் எம்பி கேள்வி எழுப்புகிறார். அதேபோல் பஞ்சாபில் காங்கிரஸ் தலைவர்கள் ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி வைக்க விரும்பவில்லை. பஞ்சாப் மாநில முதல்வர் பகவன்த் மான் பஞ்சாபில் உள்ள 13 மக்களவை இடங்களிலும் போட்டியிட்டு வெல்வோம் என்று பேசுகிறார் .இதன் மூலம் கூட்டணிக்கு தயாரில்லை என்பதையும் மறைமுகமாக சொல்லி உள்ளார் . ஆளுக்கொரு பாதையில் எதிர்க்கட்சிகள் செல்ல எத்தனிக்கின்றன. ராகுல் காந்தி நடத்துகின்ற பாரத ஒற்றுமை யாத்திரையில் சமாஜ்வாதி கட்சி பங்கேற்காது என்று தெரிகிறது. இந்த யாத்திரைக்கு அழைப்பு விடுப்பதாக காங்கிரஸ் தலைவர்கள் கூறுகின்றனர். ஆனால் சமீபத்தில் நடந்த மத்திய பிரதேச தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி சமாஜ்வாதி கட்சிக்கு இடங்களை ஒதுக்கவில்லை. அந்த சமயத்தில் இந்தியா கூட்டணி ஒற்றுமை இல்லாமல்... மோதலுடன் நீடித்தால் குழப்பம் இருந்தால் அது பாதிப்பைத் தரும். அமைப்பு ரீதியாக வலிமையாக உள்ள பாஜகவின் வெற்றிக்கு வழிவகுத்து விடும் என்று அகிலேஷ் எச்சரிக்கை செய்திருந்தார். ராகுல் காந்தி நடத்துகின்ற யாத்திரையை இந்தியா கூட்டணி யாத்திரையாக மாற்றியிருக்க வேண்டும். ஆனால் காங்கிரஸ் யாத்திரையாக நடத்திக் கொண்டிருக்கிறார். உத்தரபிரதேசத்தில் தனியாக அகிலேஷ் யாதவ் ஒரு யாத்திரையை நடத்துகிறார். உத்தரப் பிரதேசத்தில் ஜனவரி மூன்றாவது வாரம் வரை கூட்டணி பேச்சு வார்த்தையை துாங்கவில்லை.

ராமர் கோயில் திறந்தவுடன் திடீர் தேர்தல் அறிவித்தால் என்ன ஆவது? தொகுதிப் பங்கீட்டில் சிக்கல் இருப்பது சரியா? இந்த மாதத்திற்குள் தொகுதி பங்கீடு முடிவடைந்து விடும் என்ற இலக்கை அடைய முடியுமா? இத்தகைய சூழ்நிலையில் மாநிலங்களில் உள்ள சக்தி வாய்ந்த கட்சிகளுடன் கூட்டணி வைக்கும் காங்கிரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர் யாரென்று எத்தனை பேருக்குத் தெரியும்?



**ச**ரி,தெரிந்து கொள்வதற்கு முன்பு இவருக்கு உங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் நீங்கள் இன்று வாழ்வதற்கு முக்கிய காரணமே இவர்தான் DR. JONAS SALK, இவர்தான் போலியோவிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்தவர். சரி எத்தனையோ நோய்களுக்கு மருந்து கண்டுபிடித்த பல அறிவியலாளர்கள் இருக்கும்போது இவருக்கு மட்டும் ஏன் இவ்வளவு சிறப்பு இவர் போலியோ தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்த பிறகு Patented Right வாங்க மறுத்துவிட்டார் (அதாவது கண்டுபிடிப்பு உரிமம் சினிமாப்படம் Copy rights வாங்குவது போல) அவர் அவ்வாறு செய்திருந்தால் உலகிலே மிகப்பெரிய பணக்காரர் ஆகியிருப்பார். ஆனால் அப்படிச்செய்திருந்தால் பல கோடி ஏழைஎளிய மக்கள் அந்த மருந்தை வாங்கமுடியாமல் நோய்வாய்ப்பட்டு இறந்திருப்பார்கள். பேட்டியொன்றில் "நீங்கள் ஏன் உரிமம் பெறவில்லை" எனக்கேட்டதற்கு "சூரியனுக்கு யாராவது உரிமை கொண்டாட முடியுமா" என்று கேட்டார் அந்த மாமனிதர். பில்கேட்ஸ்,ஸ்டீவ் ஜாப்ஸ் போன்றவர்களைப்போற்றும் இந்த உலகம் இவரை யாரென்று கூடத்தெரிந்து கொள்ளாதது கசப்பான உண்மை.

தகவல்: **மோகனகிருஷ்ணன்**

கட்சி எதார்த்த நிலையை புரிந்து கொஞ்சம் விட்டுக் கொடுத்து பெரிய மனதுடன் நடந்து கொள்ள வேண்டும். உதாரணமாக மேற்குவங்கம் மட்டுமின்றி டெல்லி,உத்தர பிரதேசம், பீகார், ஜார்கண்ட் ,தமிழ்நாடு பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் காங்கிரசுக்கு உரிய இடங்கள் கிடைப்பதில் சிக்கல் உள்ளது. கர்நாடகம், குஜராத் மத்திய பிரதேசம் , ராஜஸ்தான் ஆந்திர பிரதேசம் தெலுங்கானா, அசாம் ஹரியான்னா ஹிமாச்சலப் பிரதேசம், உத்தர காண்ட் ஆகிய மாநிலங்களில் காங்கிரசுக்கு செல்வாக்கு அதிகம் என்பதால் அங்கு அதிக எண்ணிக்கையில் காங்கிரஸ் போட்டியிடலாம். ஆனால் அங்கும் சிறிய கட்சிகளுக்கு இடம் கொடுத்து காங்கிரஸ் கூட்டணியை விரிவாக அமைக்க வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்படுகிறதுஒற்றுமை யாத்திரையில் இருக்கும் ராகுல் காந்தியிடம் நிருபர்கள் கேட்டபோது கூட்டணி பேச்சு வார்த்தை குறித்த தொடர் சந்திப்புகள் நடக்கின்றன. சிறு சிறு வேறுபாடுகள் தான் உள்ளன. அவை தீர்க்கப்பட்டு விடும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

2019 தேர்தலில் 534 தொகுதிகளில் 421 இடங்களில் காங்கிரஸ் போட்டியிட்டது. இந்த எண்ணிக்கையை வெகுவாக குறைத்து சுமார் 310 இடங்களில் போட்டியிட்டால் போதும் என்ற மனநிலையில் காங்கிரஸ் உள்ளது. எதிர்க்கட்சிகள் ஓட்டு பிரியக்கூடாது. பாரதிய ஜனதாவின் வேட்பாளருக்கு எதிராக ஒரே ஒரு எதிர்க்கட்சி வேட்பாளர் போட்டியிட வேண்டும் என்ற வியூகம் சாத்தியமாக வேண்டும். காங்கிரஸ் 150 இடங்களிலும் எதிர்க்கட்சிகள் 130 இடங்களிலும் வென்றால் ஆட்சியைப் பிடித்து விடலாம் ..ராமர் கோயில் திறப்பை முன்வைத்து பாரதிய ஜனதா ஓட்டுகளை அறுவடை செய்ய முயற்சி செய்யும் அதற்கு மாற்றாக கருத்துக்களை காங்கிரஸ் கூட்டணி முன் வைக்க வேண்டும் உதாரணமாக சாதிவாரிக் கணக்கீடு குறித்த பரப்புரையை வலிமையாக கொண்டு செல்லவில்லை.. அதேபோல் கூட்டணியின் அமைப்பாளர் யார் என்று முடிவு செய்வதில் தாமதம் நிலவுகிறது. பிகார் முதல்வர் நிதிஷ் குமார் அமைப்பாளராக வரவேண்டும் என்று விரும்புவது போல் தெரிகிறது. ஆனால் அந்தப் பதவியை அவருக்குத் தரும் முடிவு எடுப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அமைப்பாளர் பதவி போன்ற எந்த பதவியும் நிதிஷ்குமார் விரும்பவில்லை என்று கட்சி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. பீகாரில் கூட்டணி பேச்சு வார்த்தையை துவக்காமல் முதலில் ராஷ்ட்ரிய ஜனதா தளத்துடன் காங்கிரஸ் பேச்சு வார்த்தையை நடத்தட்டும் என்று ஐக்கிய ஜனதாளம் கூறிக் கொண்டிருக்கிறது. பாட்னாவில் தொடங்கி பெங்களூர், மும்பை, டெல்லி என இந்தியா கூட்டணி கூட்டம் நடந்து முடிந்துள்ளது. ஐந்தாவது கூட்டம் இணைய வழியில் நடந்தது. இதில் மம்தா கெஜ்ரிவால், பங்கேற்கவில்லை. இப்போதைக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூட்டணியின் தலைவர் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக கார்கேயை நிறுத்த வேண்டும் என்று மம்தா பானர்ஜி டெல்லி கூட்டத்தில் முன் மொழிந்தார். அதை ஆம் ஆத்மி சிவசேனா ஆதரித்தது. இப்போதைக்கு கூட்டணி அமைவது முக்கியம். வெற்றி பெறுவது முக்கியம். பிரதமர் யார் என்பதை பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் என்று கார்கே பதில் தெரிவித்துள்ளார். இது போன்ற விஷயங்களில் ஒருமித்த கருத்து ஏற்பட வேண்டும். சர்ச்சைக்குரிய விஷயங்களை பின்னுக்கு தள்ளிவிட்டு ஒற்றுமைப்படுத்தும் விஷயங்களில் கட்சிகள் கவனத்தை செலுத்த வேண்டும். கட்சிகளின் இணக்கத்தை விரைவில் ஏற்படுத்த வேண்டும். ஒரே குரலில் பேசினால் தான் மக்களின் ஆதரவைத் திரட்ட முடியும்.

●

**கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | தி.சிகாமணி

# விஜயகாந்த்..
# 20 ஆண்டுகால தமிழ்நாட்டு அரசியல்



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் நடிகர் விஜயகாந்த் 2023 டிசம்பர் இறுதியில் மரணம் அடைந்தபோது அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, கூடிய பெரும் கூட்டம் ஆச்சரியத்தை வரவழைத்தது. இந்தக் கூட்டத்தில் அவரது ரசிகர்கள் எவ்வளவு பேர் பொதுமக்கள் எவ்வளவு பேர் மாற்றுக் கட்சியினர் எவ்வளவு பேர் என்று அளவிட முடியாது. விஜயகாந்த் உடல் எங்கு வைக்கப்பட வேண்டும் என்ற விஷயத்தில் அண்ணாமலை முதல் நிர்மலா ஜெயராமன் வரை காட்டிய ஆர்வம்.. எதிலும் அரசியல் லாபம்.. அனுதாப வாக்கு தேடும் அதன் வெட்கம் கெட்ட செயலை வெளிப்படுத்தியது. திருச்சி வந்த பிரதமரும் விஜயகாந்தை புகழ்ந்து தள்ளினார். எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற போக்கில் பார்வையாளர்களைக் கவர காட்சி ஊடகங்கள் இந்த அஞ்சலி நிகழ்ச்சியை இரண்டு நாட்கள் இடைவிடாது காட்டிய விதம் தலைகுனிவானது.

எந்தச் செயல் என்ன விளைவைத் தரும் என்பது பற்றி ஊடகங்களுக்கு கவலை இல்லை. ஏழைகளின் உரிமைக்காக சினிமாவில் குரல் கொடுத்தவர் எனத் தெரிவித்து அவர் பேசிய வசனக் காட்சிகளை ஊடகங்கள் ஒளிபரப்பின. "அந்த வானத்தைப்போல மனம் படைச்ச மன்னவனே".. என்ற பாடல் பின்னணியில் ஒலித்துக் கொண்டே இருந்தது . தீவுத் திடலில் வைக்கப்பட்டிருந்த விஜயகாந்த் உடல் அருகே அழுது ஒப்பாரி வைத்தவர்களை மீண்டும் மீண்டும் காட்டிக்கொண்டிருந்தனர். அவர் உதவி செய்தார்..கொடை வள்ளல் ..சாப்பாடு போட்டார் என்று அஞ்சலி செலுத்திய ஒவ்வொருவரும் சொல்வதை ஒளிபரப்பிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் இறந்து விட்டால் அவர் மீது எந்த விமர்சனமும் இல்லாமல் முழுக்க முழுக்கப் போற்றுவது என்பது தமிழ்நாட்டைப் பீடித்துள்ள நோய்களில் ஒன்றாகிப் போனது. விஜயகாந்தின் சினிமா செல்வாக்கு இன்னும் விலை போகக்கூடிய ஒன்றா? விஜயகாந்தின் உடல் அடக்கம் முடிந்தும் முடியாமல் பிரேமலதா பேசிய அரசியல் அறுவடை நோக்கம் கொண்ட பேச்சு பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கேப்டன் விஜயகாந்த் துடிப்புடன் இருந்த காலத்திலேயே தேமுதிக செல்வாக்கு சரிய ஆரம்பித்து விட்டது. இனி அதன் எதிர்காலம் என்ன? இந்தக் கட்டத்தில் திமுக, அதிமுகவின் இருதுருவ அரசியலுக்கு மாற்று என பேசும் தேமுதிக, பாட்டாளி மக்கள் கட்சி, சீமானின் நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட சிறு கட்சிகளின் அரசியல் நிலைப்பாடு குறித்தும் பேச வேண்டி உள்ளது .பொத்தம் பொதுவாக சிறு கட்சிகள் மாறி மாறி கூட்டணி வைக்கின்றன அவற்றுக்கு சுயமரியாதை இல்லை. சந்தர்ப்பவாதம் செய்கின்றன என்ற விமர்சனத்தை அரசியல் ஆய்வாளர்கள் கூட அடிக்கடி முன்வைக்கிறார்கள். பெரிய கட்சிகளுடன் கூட்டணி வைக்காவிட்டால் சிறிய கட்சியினர் எம்எல்ஏ, எம்.பி பதவியைப் பெற முடியாது என்ற கருத்தையும் பரப்புகின்றனர். இது சரியான கணிப்பா? கூட்டணி அரசியல் என்பது 1967 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா மூலம் வெற்றி தரும் சூத்திரமாக மாறியது. இந்தக் கூட்டணி அரசியலை கலைஞர் கருணாநிதி, எம் ஜி ஆர் பின்பற்றினர். விதிவிலக்காக ஜெயலலிதா 2014 2016 தேர்தலில் கூட்டணி அரசியலுக்கு முக்கியத்துவம் தரவில்லை. 1967 ஆட்சியை இழந்த காங்கிரஸ் 1989இல் தனித்துப் போட்டியிட்டு சுமார் இருபது சதவீத வாக்குகளைப் பெற்றது. அதன்பின்னர் மாற்று அரசியல் எனப் பேசிய பாட்டாளி மக்கள் கட்சி வைகோவின் மதிமுக உள்ளிட்ட கட்சிகளால் அதிக சதவீத வாக்குகளைப் பெற முடியவில்லை. 1993-ல் திமுக பிளவு பட்ட போது வைகோவுக்கு கூடிய கூட்டமும் பிரமிப்பை ஏற்படுத்தியது. ஆனால் தேர்தலில் அது எதிரொலிக்கவில்லை. திமுகவின் கொள்கைகளில் இருந்து ம.தி.மு.க. வேறுபடவில்லை. 1996 தேர்தலில் ஊழல் கட்சியான அதிமுகவுடன் கூட்டணியா என்று கேள்வி எழுப்பி அந்த முடிவுக்கு எதிராக காங்கிரஸில் இருந்து பிரிந்து தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை துவக்கிய கருப்பையா மூப்பனார் கட்சி 2001 இல் எந்த அதிமுக்வை சில ஆண்டுகளுக்கு முன்பு எதிர்த்தாரோ அந்த அதிமுகவுடன் மீண்டும் கூட்டணி வைக்க நேரிட்டது. 1999-ல் தி.மு. கழகம் பாரதிய ஜனதா கட்சி கூட்டணியில் சேர்ந்ததால் திமுக கழகத்தின் கூட்டணியை தா.மா.க முறித்தது. 1999 மக்களவைத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் கட்சிகளுடன் மூப்பனார் அமைத்த கூட்டணி வரவேற்பைப் பெறவில்லை. வட மாவட்டங்களில் ஆறு சதவீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு வாக்குகள் பெற முடிந்த பாட்டாளி மக்கள் கட்சி வன்னியர் சாதிப் பிரிவினரை மையமாக கொண்டு செயல்படும் கட்சி என்று பார்க்கப்பட்டது. சீமானின் கட்சியும் 2021 தேர்தலில் ஏழு சதவீதம் அளவுக்கு வாக்குகள் பெற்று முன்னேற்றம் கண்டது. ஆனால் இவர்களை எல்லாம் மிஞ்சுகின்ற ஒரு சக்தியாக விஜயகாந்த் உருவானார்.

### ஆரம்பமே குழப்பம்

1996 முதலே அரசியல் ஈடுபாட்டை காட்டிய ரஜினிகாந்த் இறுதிவரை துணிச்சலாக அரசியல் களத்தில் குதிக்கவில்லை. இதற்கு மாறாக கலைஞர், ஜெயலலிதா இரண்டு பேரையும் எதிர்க்கின்ற வகையில் விஜயகாந்த் 2005 செப்டம்பர் 14-ல் மதுரையில் கட்சியை துவக்கிய போது பெரும் எதிர்பார்ப்பு உருவானது. புரட்சிக் கலைஞர், கருப்பு எம்ஜிஆர், கருப்புத் தங்கம்.. கேப்டன் என்றெல்லாம் விஜயகாந்த் அழைக்கப்பட்டார். அவரது கட்சியின் பெயரே அவரது குழப்பமான கொள்கையை பறை சாற்றியது. எம்ஜிஆர் அகில இந்திய அதிமுக என்று பெயர் வைத்தது போல் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிட கழகம் எனப் பெயர்வைத்தார். தேசியமும் திராவிடமும் விஜயகாந்த் கட்சியின் பெயரில் இருந்தது வேடிக்கையாக இருந்தது. துவக்கத்தில் மக்களுடனும் தெய்வத்துடனும் தான் கூட்டணி என்றார். 234 தொகுதிகளிலும் போட்டியிட்டு 8.3% வாக்குகளை தேமுதிக பெற்றது விஜயகாந்த் போட்டியிட்ட விருத்தாச்சலம் தொகுதியில் மட்டும் கட்சி வெற்றி பெற்றது. இதன் தொடர்ச்சியாக 2009 மக்களவைத் தேர்தலிலும் தேமுதிக தனித்துப் போட்டியிட்டு 10.3 சதவீத வாக்குகளைப் பெற்றது. மாநிலக் கட்சி என்ற அந்தஸ்தும் பெற்றது. தொடர்ந்து முன்னேறுவார் என்று எதிர்பார்த்த நிலையில் 2011 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்தார்.

### பொறுமை இல்லை

புதிதாக கட்சி துவங்குபவர்கள் அல்லது மூன்றாவது அணி அமைக்க முயற்சிப்பவர்கள் சிறிது காலம் காத்திருப்பதில்லை. பொறுமையைக் கடைப்பிடிப்பதில்லை. கட்சியினருக்கு எம்.எல்.ஏ ,எம்.பி. பதவிகளை வாங்கித் தந்தால் தான் கட்சியில் தொடர்வார்கள் என்ற நிலை இருக்கிறது. அந்த காரணத்தைச் சொல்லி கூட்டணிக்குப் போகிறார்கள். அல்லது சொந்த லாபத்திற்காக.. விரோதங்களுக்காக கூட்டணியை முடிவு செய்கிறார்கள் இப்படி விஜயகாந்த் கூட்டணி வைத்து 41 இடங்களில் போட்டியிட்டு 29 இடங்களில் வென்று எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலைக்கு உயர்ந்தார். யாரால் யாருக்கு வெற்றி என்று அதிமுகவுக்கும் தேமுதிகவுக்கும் காரசார விவாதம் எழுந்தது. சட்டசபையில் ஜெயலலிதா முன்னிலையில் கையை நீட்டி நாக்கைத் துறுத்தி துணிச்சலாக விஜயகாந்த் பேசினார் .அந்தத் துணிச்சல் எந்த அரசியல்வாதிக்கும் வராது என்று அவர் ஆதரவாளர்கள் இன்றும் பெருமை பேசுகின்றனர் அதிமுகவுடன் மோதல் தொடங்கியவுடன் தேமுதிக எம்.எல்.ஏக்களை ஜெயலலிதா தன் பக்கம் எளிதில் இழுத்தார். தேமுதிக அப்போது திணறியது. கட்சிக்கு கொள்கை அடிப்படை இல்லாதது இந்த நிலைமைக்கு காரணம் என்பதை விஜயகாந்த் உணரவில்லை. 2011 தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி வைத்திருக்காவிட்டால் விஜயகாந்த் வளர்ந்திருப்பார் என்றும் சொல்வதற்கு இல்லை. அதிமுகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தையின் போது விஜயகாந்தை 'கருப்பு எம்ஜிஆர்' என்று அழைக்கக்கூடாது என்று ஜெயலலிதா நிபந்தனை போட்டார் என்று பண்ருட்டி ராமச்சந்திரன் தகவல் தெரிவித்துள்ளார். விஜயகாந்தின் ஞானத் தந்தை போல் செயல்பட்ட பண்ருட்டி ராமச்சந்திரன் தே.மு.தி.க எம்எல்ஏவாகவும் இருந்தார். அ.தி.மு. கவை கண்மூடித்தனமாக எதிர்க்காமல் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக விஜயகாந்த் செயல்பட்டிருந்தால் ஜெயலலிதா மரணத்திற்கு பின் எம்ஜிஆர் ஆதரவாளர்கள் விஜயகாந்த் பக்கம் வந்திருப்பார் என்று கணிப்பு, ஆரூடம் வெளியிடுகிறார். 2011-ல் கூட்டணிக்கு ஜெயலலிதா அழைப் பார் என்று கடைசி வரை எதிர்பார்த்து காத்திருந்த வைகோ அத்தேர்தலில் போட்டியிடுவதையே கை விட்டார். சிறிய கட்சிகள் அவ மரியாதை செய்யப்படுவது.. அவர்களின் சுயமரியாதையைச் சீண்டுவது என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. பெரிய கட்சிகள் சிறிய கட்சிகளை தேர்தல் கூட்டணிக்காக விலை பேசும் போக்கை.. அவமானப்படுத்தும் போக்கை ஊடகங்கள் அதிகமாகப் பேசாமல் சிறிய கட்சிகளை மட்டும் விமர்சிக்கின்றன. 2014இல் விஜயகாந்த் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்தார். ஆனால் அந்தக் கூட்டணி மூலம் அவர் பலனைப் பெற முடியவில்லை. பொன். ராதாகிருஷ்ணன் நாகர்கோவிலிலும் பாமகவின் அன்புமணி தர்மபுரியிலும் வெற்றி பெற்றனர். திமுக, அதிமுக ஊழல் கட்சிகள் என்று சொன்ன விஜயகாந்த் அதிமுகவுடன் கூட்டணி வைத்தார். பின்னர் பாரதிய ஜனதா கட்சியுடனும் கூட்டணி வைத்தார்.

### நொறுங்கிய பிம்பம்

மாற்று அரசியலுக்கு சொந்தக்காரர் என்ற பிம்பம் நொறுங்க ஆரம்பித்தது. 1998 தொடங்கி ஜெயலலிதா, கலைஞர், விஜயகாந்த் எனத் தொடர்ந்து பாரதிய ஜனதா கட்சிக்கு அங்கீகாரம் தந்தனர். 2016 சட்டசபை தேர்தலின் போது விஜயகாந்த் மீண்டும் ஊசலாட்டத்திற்கு ஆளானார். திமுகவுடன் தே.மு.தி.க பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரிகிறது. எனவே "பழம் நழுவி பாலில் விழும் "என்று கலைஞர் கருணாநிதி கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியலுக்கு வராமல் இருந்து ரஜினிகாந்த் தமிழ்நாட்டு அரசியலுக்கு நன்மை செய்துள்ளார். எந்தக் கொள்கை நிலையையும் தெளிவுபடுத்தாமல் ரஜினிகாந்த் அரசியலுக்கு வர ரஜினிகாந்த் திட்டம் போட்டார். கொள்கை வழி முக்கியமில்லை. தனிநபர் செல்வாக்கு முக்கியம் என்ற கருத்தை விதைக்கப் பார்த்தார். அவரைப்போல் கொள்கை இல்லாமல் சினிமாப் புகழ் மட்டும் போதும் என்ற நம்பிக்கையில் இனியும் அரசியலுக்கு வர நினைப்பவர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நடிகர்கள் உட்பட யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம் என்று பேசுவது மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மை அல்ல. சினிமா அரசியல் தமிழ்நாட்டின் கொள்கை அரசியலை நீர்த்துப் போகச் செய்யும் ஆபத்து உள்ளது.**

விஜயகாந்த் வருகையை சூசகமாக கோடிட்டுக் காட்டினார். ஆனால் புதிய முயற்சியாக மக்கள் நலக் கூட்டணி என்ற கூட்டணி உருவானது. அதில் முதல்வர் வேட்பாளராக விஜயகாந்த் அங்கீகரிக்கப்பட்டு 104 இடங்களில் தே.மு.தி.க போட்டியிட்டது. ஆனால் ஒரு இடத்தில் கூட தேமுதிகவோ மக்கள் நலக் கூட்டணியோ வெற்றி பெறவில்லை. இந்தக் கூட்டணி வைகோ முயற்சியில் உருவான கூட்டணி. இது ஜெயலலிதாவின் பி. டீம் என்று விமர்சனத்தை எதிர்கொண்டது. உளுந்தூர்பேட்டையில் போட்டியிட்ட விஜயகாந்த் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டு டெபாசிட் இழந்தார். அந்தத் தேர்தலில் ஆட்சியைப் பிடித்த அதிமுக ஒரு சதவீத வாக்கு வித்தியாசத்தில் திமுகவை தோற்கடித்தது. மக்கள் நலக் கூட்டணி சுமார் 6 சதவீத வாக்குகளைப் பெற்றது. சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா சில வாரங்கள் சிறைக்குச் சென்று திரும்பிய நிலையில் கருணாநிதியின் முதுமையையும் முன்வைத்து தமிழ்நாடு அரசியலில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று தப்புக் கணக்கு போடப்பட்டது. 2011 மட்டுமின்றி 2016 ல் விஜயகாந்த் எடுத்த முடிவு நேரடியாகவோ மறைமுகமாகவோ அ.தி.மு.க வெற்றிக்கு உதவியுள்ளது .2001 மட்டுமின்றி 2016 தேர்தலிலும் ஊழல் கறையை மீறி மீண்டெழுந்தார் ஜெயலலிதா. இதற்கு மாறாக ஊழல் எதிர்ப்பு என்ற ஒற்றைப் புள்ளியில் களமாட விரும்பிய விஜயகாந்த் களைப்படைந்துவிட்டார். இந்தச் சூழ்நிலையில்தான் மூன்றாவது அணி அல்லது மூன்றாவது சக்தி என்பது உள்நோக்கம் கொண்ட ஒரு முயற்சி. யாருடைய வெற்றியையாவது தடுக்க சில கட்சிகளை உருவாக்குகிறார்கள். கொட்டிக் கவிழ்க்கும் வேலையைத்தான் இவை செய்கின்றன என சந்தேக விதை வீசப்படுகிறது. தேமுதிக வில் குடும்ப ஆதிக்கம் தலையெடுத்து பிரேமலதாவும் அவரது தம்பி சதீஷும் கூட்டணி பேரம் பேசும் நிலைக்கு உயர்ந்தனர். இந்த இடத்தில் வாரிசு அரசியல் தேமுதிகவின் வீழ்ச்சிக்கு காரணமா என்று கேட்டால் அதை பண்ருட்டி ராமச்சந்திரன் மறுக்கிறார். குடும்ப அரசியல் ஒரு பிரச்சனை இல்லை. ஆனால் அப்படி வருபவர்கள் மக்களுக்காக இருக்கிறார்களா என்பதே அடிப்படைக் கேள்வி என்கிறார் .யார் அதிக இடங்கள் தருகிறார்களோ அவர்களுடன் கூட்டணி என்று தேமுதிக தன்னைத் தானே ஏலம் போட்டுக் கொண்டது. கூட்டணிக்கு நிபந்தனையாக பணபேரத்தையும் தேமுதிக,பாமக கட்சிகள் நடத்துகின்றன என்று பேசப்பட்டது. கூட்டணி அமைத்து ஆட்சியைப் பிடித்தால் ஆட்சியில் அமரும் கட்சி சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் கூட்டணிக் கட்சிக்கு பங்கு கிடைக்கவா போகிறது என்று அப்பட்டமாக வியாக்கியானம் தரப்பட்டது.

**பணபல அரசியல்**

ஜனநாயகம் பணநாயகமாக மாறிய நிலையில் ஆட்சியைப் பிடித்து கொள்ளையடிக்கும் கட்சிகள் ஐந்து ஆண்டுகளுக்கு பின்பு தான் வாக்காளர்களைச் சந்திக்க வருவார்கள். அதனால் அவர்கள் ஓட்டு கேட்க வரும்போதே வாக்குக்கு பணத்தை பெற்று விட வேண்டும் என்று மக்கள் விருப்பப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வாக்குக்கு பல வழிகளில் லஞ்சம் கொடுத்து மக்களை பழக்கி விட்டு மக்கள் லஞ்சம் கேட்கிறார்கள் என்று மக்களைக் கொச்சைப்படுத்தும் போக்கில் கட்சிகள் செயல்படுகின்றன. தேர்தல் முறையே ஊழல் மயமாகி ஜனநாயகம் சாகடிக்கப்பட்டுக் கொண்டுள்ளது.

பணபல அரசியல் காரணமாக தேர்தல் செலவுக்கு மார்க்சிஸ்ட் ,இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் திமுகவிடம் பணம் பெற்றது பெரிய இழுக்கை ஏற்படுத்தி உள்ளது. பெறப்பட்ட இந்தப் பணத்திற்கான செலவு விவரங்களை தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பித்து விட்டதாக இடதுசாரி கட்சிகள் விளக்கம் தந்தனர். இதன் காரணமாக குறிப்பாக மார்க்சிஸ்ட் கட்சிக்குள் பெரும் விமர்சனம் எழுந்தது. இனிமேல் இதுபோன்று மற்ற கட்சிகளிடம் தேர்தல் நிதி பெறுவதில்லை என்ற முடிவை அந்தக் கட்சி எடுத்துள்ளது.

ஆட்சியில் இருக்கும் காலத்தில் திமுகவும் அதிமுகவும் மக்கள் நல திட்டங்களை நிறைவேற்றி மக்கள் மனதில் இடம் பிடித்து விட்டன. தமிழ்நாட்டு அரசியல் ஒன்றிய அரசுக்கும் மாநில உரிமைக்குமான போராட்டமாக தொடர்ந்து இருந்து வருகிறது. ஒன்றியத்தில் அதிகாரக் குவிப்பு காரணமாக மாநில கட்சிகளின் இருப்பு கேள்விக்குள்ளாகி வருகிறது. பாட்டாளி மக்கள் கட்சியோ தேமுதிகவோ சீமான் கட்சியோ ஒன்றிய அரசை எதிர்ப்பதை விட திமுகவை எதிர்க்கும் நோக்கம் கொண்டவையாக உள்ளன. உதாரணமாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை | க.வெள்ளிங்கிரி

## வயிறும் வாழ்க்கையும்

வேகங்கள் விஸ்வரூபமெடுக்கும்
குறுக்கீடுகளற்ற சாலைகளில்
கானல் நீரில் தானே நனையும்
அச்சாலை விளிம்புகளில்
விழிகள் காண முடியாக் காட்சிகளை
செவிவழி ஒலியில் சித்திரம் செதுக்கி
இசைக் குரல் கொண்டு உழைப்பவன்
அவனின் துளை வழி விழும்
உண்டியல் காசுகளால்
நிரம்புகிறதோ இல்லையோ
உணவால் ஓர் அளவேனும்
நிரம்பக் காத்திருக்கும்
வயிறும் அவன் வாழ்க்கையும்...!



2011ல் "இலை மலர்ந்தால் ஈழம் மலரும்" என்று சொல்லி ஜெயலலிதாவை சீமான் ஆதரித்தார். 2001- ல் பாட்டாளி மக்கள் கட்சி, திமுகவுடன் சேர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்த போதும் அந்த ஆண்டில் நடந்த சட்டசபைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் சேர்ந்தது. அதேபோல் வைகோ தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்த போதும் தனித்துப் போட்டியிட்டார். 2006 ல் திமுக கூட்டணி கட்சிகள் நடத்திய பொதுக்கூட்ட மாநாட்டில் பங்கேற்க ஒப்புக் கொண்டிருந்த நிலையில் அதிமுக கூட்டணிக்கு திடீரென வைகோ மாறினார்.

சிறிய கட்சிகளை விட மாநில உரிமை, மொழி உரிமை ஆகிய விஷயங்களில் திமுக, அதிமுக மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளன. மக்களின் அந்த நம்பிக்கையை அசைப்பது பெரிய சவால். மோடியா அல்லது இந்த லேடியா என்று சவால் விட்ட ஜெயலலிதா கட்சி அவர் மரணத்திற்கு பின்பு பாரதிய ஜனதாவிடம் சரணாகதி அடைந்தது. மதவெறி உச்சத்தை அடைந்துள்ள காலகட்டத்தில் பாஜகவுடன் அதிமுக கூட்டணியில் இருந்தது. அதன் மதச்சார்பின்மை பிம்பத்திற்கு கேடாக அமைந்தது. எந்த அரசியல் கட்சியும் சரி இல்லை என்று அவ நம்பிக்கையுடன் பேசும் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர்.. தூய்மை வாதம் பேசும் சிலர் எல்லா காலத்திலும் இருந்து கொண்டேதான் உள்ளனர். அவர்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராகவே வாக்களிப்பார்கள். எந்தக் கட்சி பெரிய தீமையுடைய.. மக்களைப் பிளவு படுத்துகின்ற கட்சி என்பது பற்றி எல்லாம் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை. தேர்தல் முறையிலேயே உள்ள ஊழல் ..சமமற்ற போட்டி பற்றி எல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை. அதனால் புதிதாகத் தோன்றும் கட்சிகளை அவர்கள் ஆதரிப்பார்கள். அதுவும் விஜயகாந்த்துக்கு சினிமா புகழ் இருந்ததால் அவர் கூடுதல் வாக்குகளைப் பெற்றார். அதனால் அவர் மாற்று அரசியல் சக்தி என்று மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று கருத இடமில்லை. தமிழ்நாட்டின் 20 ஆண்டு கால தந்திர அரசியலில்.. தேர்தல் திருவிழாவில் காணாமல் போனவர் தான் விஜயகாந்த். 2021 தேர்தலில் அதிமுக அணியில் இடம் பெற முடியாமல் போனது தேமுதிகவின் வீழ்ச்சியை உறுதி செய்தது.

அரசியலுக்கு வராமல் இருந்து ரஜினிகாந்த் தமிழ்நாட்டு அரசியலுக்கு நன்மை செய்துள்ளார். எந்தக் கொள்கை நிலையையும் தெளிவுபடுத்தாமல் ரஜினிகாந்த் அரசியலுக்கு வர ரஜினிகாந்த் திட்டம் போட்டார். கொள்கை வழி முக்கியமில்லை. தனிநபர் செல்வாக்கு முக்கியம் என்ற கருத்தை விதைக்கப் பார்த்தார். அவரைப்போல் கொள்கை இல்லாமல் சினிமாப் புகழ் மட்டும் போதும் என்ற நம்பிக்கையில் இனியும் அரசியலுக்கு வர நினைப்பவர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நடிகர்கள் உட்பட யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம் என்று பேசுவது மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மை அல்ல. சினிமா அரசியல் தமிழ்நாட்டின் கொள்கை அரசியலை நீர்த்துப் போகச் செய்யும் ஆபத்து உள்ளது.

●

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஜமாலன்



# இராமர் எனும் மத அரசியல் குறி (Sign)

**1.** இந்திய ஒன்றியத்தின் நூற்றாண்டைக் கண்டுவிட்ட இந்துத்துவ அமைப்பான தேசிய சுய சேவகர்கள் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) தனது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அடிப்படைகளில் ஒன்றாகக் கண்டுபிடித்த "ராம் ஜென்மஸ்தான் மந்திர்" எனப்படும் பால இராமருக்கான (ராம் லல்லா) கோவில் 22, ஜனவரி 2024 அன்று அவசர அவசரமாக திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு உள்ளது (இந்தக் கட்டுரை வெளியாகும்போது இராமர் ஆலயத் திறப்புவிழா முடிந்திருக்கும்). கட்டி முடிக்காத ஒரு கோவிலை ஆகம முறைக்கு எதிராக அரசியல் இலாபத்திற்காகத் திறக்க முனைகிறது ஒன்றிய அரசு என்ற விமர்சனங்களை இந்து மதத் தலைமையாக அங்கீகரிக்கப்பட்ட நான்கு சங்கர மடங்கள் மற்றும் சில மத பீடாதிபதிகள் முன்வைக்கின்றனர்.

**2.** காணாபத்யம் (கணபதி வழிபாடு), கௌமாரம் (முருக வழிபாடு), சைவம் (சிவ வழிபாடு), வைணவம் (விஷ்ணு வழிபாடு), சாக்தம் (சக்தி வழிபாடு), சௌரம் (சூரிய வழிபாடு) இந்த அறுவகை வெவ்வேறு சமய வழிபாட்டு முறைகளை ஒருங்கிணைத்து ஆதி சங்கரர் சுமார் 8ஆம் நூற்றாண்டில் உருவாக்கிய 'ஷன்மதமே' இன்று இந்து மதமாகக் கூறப்படுவதின் அடிப்படை. இவை அனைத்தும் பார்ப்பனிய சனாதன தருமத்தை ஏற்றுக் கொண்டவை. அதனை வழி நடத்தும் ஒரு சைவத் தலைமை மத நிறுவனமே இந்த நான்கு சங்கர மடங்கள். புத்தமதம் உருவாக்கிய சங்கம் என்கிற கருத்தாக்கத்தைக் கவனித்து ஆதிசங்கரர், தனது மதக் கருத்தியலைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பதற்கான ஓர் அதிகார நிறுவனமாக ஒன்றியத்தின் நான்கு திசைகளிலும் திட்டமிட்டு உருவாக்கிய நான்கு பீடங்களே இந்த மடங்கள். புத்தமே வரலாற்றில் முதன்முதலாக நிறுவனமயப்பட்ட மதம். அதனைப் பார்த்து நிரந்தரமாக மதப்பணி ஆற்றக் கூடிய துறவிகளைத் தலைமையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே இந்தப் பீடங்கள் எனப்படும் சைவ மடங்கள்.

**3.** இச் சைவ மடங்கள்தான் இன்று இந்து மதமாக அறியப்படும் ஒன்றை வழிநடத்தும் அங்கீகரிக்கப்பட்ட மடங்களாகும். ஆனால், இம்மடங்களே இம்மதத்தை வழி நடத்துகிறது என்பது ஒன்றியத்தின் எண்ணற்ற, தங்களது குலம் சார்ந்த வழிபாடுகளைக் கொண்ட பெரும்பான்மை பாமர மக்களுக்குத் தெரியாது என்பதே யதார்த்தம். அவரவர் எந்த தெய்வத்தை வேண்டுமானாலும் வழிபடலாம். ஆனால், பார்ப்பனிய வேதமதத்தின் சனாதன தருமத்தை இவை ஏற்றுக் கொள்வதன் மூலம், பார்ப்பனியத் தலைமையை ஏற்றுக் கொள்வதாக் அமைக்கப்பட்டுள்ளதே இன்றைய இந்து மதம். இவை இந்திய ஒன்றியத்தின் வேற்றுமையில் ஒற்றுமை என்கிற அமைப்பைத் தொடாமல், அந்த வேற்றுமைகளைப் பல்வேறு சாதிய வித்தியாசங்களாக் மாற்றி, ஒரே பார்ப்பனிய சனாதன தருமக் குடைக்குள் கொண்டு வந்துவிட்டன.

**4.** இந்திய ஒன்றியத்தில் பல்வேறு மதங்களும், ஒவ்வொரு மதத்திற்குள்ளும் பல்வேறு இனங்களும், ஒவ்வொரு இனத்திலும் பல்வேறு குலங்களும் ஒவ்வொரு குலத்திற்குள்ளும் பல்வேறு குடிகளும் சாதிகளாக ஒன்றிணைந்து நேரு கூறியதைப்போல "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால் இன்றைய பாஜக சங்பரிவார் அமைப்புகளோ "ஒற்றுமையில் வேற்றுமை" (ஒரே மதம், ஒரே நாடு) என்று நேருவிற்கு எதிரான கோட்பாட்டைக் கொண்டு வெறுப்பு அரசியலை முன்வைத்து இயங்குகின்றன. அதனால் மக்களைக் குடியேற்ற ஆங்கிலேய ஆட்சியின் ஆளுகைத் தொழில்நுட்பமான பிரித்தாளும் சூழ்ச்சியை அவை பின்பற்றுகின்றன. பிரித்தானிய ஏகாதிபத்தியம் வரையறுத்த பெருவாரி மக்களைக் குறிப்பதற்கான "இந்து" என்ற சொல்லாடலைப் பயன்படுத்துகின்றன.

**5.** "இந்து" என்ற அரேபியர்கள் இந்திய ஒன்றியத்தைக் குறிக்கப் பயன்படுத்திய சொல்லை ஒரு வரலாற்றுச் சொல்லாடலாகக் கட்டமைக்க பரத கண்டம் என்ற ஒரு புதிய புராண வரலாற்றைக் கண்டுபிடித்தது இந்துமகா சபா மற்றும் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு. தங்கள் வரலாற்றைப் பழைய சமஸ்கிருத புராணங்களில் இருந்து இவை கட்டமைத்துக் கொண்டன. அதற்கான அடிப்படைகளை மௌரிய, மகத, நந்த, சுங்க வம்சம் துவங்கி முகலாய, பிரித்தானிய அரசுவரை அரசர்களிடமும், அதிகாரத்திடமும் அணுக்கமாக இருந்து பதவிகளில் பங்குபெற்றவர்களாகப் பிராமணர்கள் இருந்ததால் அவர்களது வரலாறே இந்திய ஒன்றிய வரலாறாகப் பதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிரித்தானியக் குடியேற்ற அரசின் ஆதரவு பெற்ற ஓர் அறிவுஜீவி வர்க்கம் 'ஆசியாட்டிக் சொஸைட்டி' என்ற பெயரில் உழைத்தது. அது ஆங்கிலம், ஜெர்மன் போன்ற உலகளாவிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அதுவே உலகின் அங்கீகரிகப்பட்ட இந்திய வரலாறாகவும், அதன் தொடக்கமாகவும் உருவானது.

**6.** இந்திய வரலாற்றிற்கான "சிந்தனைப் படிமம்" வடமொழி சார்ந்த ஆரிய பிராமண வேதமதமே ஆரம்ப எல்லை என்பதாகவும், இது "சாதுக்களின் நாடு" என்பதாகவும் கட்டமைக்கப்பட்டது. ஏற்கனவே வட இந்திய புத்த எழுச்சியால் பரவலாக இந்தியாவெங்கும் குடியேறிய பிராமணர்கள் பரப்பிய மகாபாரதம், இராமயண இதிகாசங்கள், புராணக் கதைகள், அப்பாலைக் கடவுள்கள் ஆகியவற்றால் இந்திய ஒன்றிய முழுமைக்குமான கதையாடல்களாக சமஸ்கிருத மொழி வழிப்பட்ட பிராமண ஆதிக்கக் கதையாடல்களாக அவை அமைந்தன.

**7.** இக்கதையாடல்கள் வழியாக, பிராமணர்கள் தாங்கள் ஒரு தெய்வீகப் பிறப்பு என்றும், இறையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றும், சில வேளைகளில் இறையைவிட மேலானவர்கள் என்பதாகவும் ஓர் உள்ளார்ந்த இந்திய உளவியலைக் கட்டமைத்துள்ளனர். அவர்களது அடிப்படையான பிரித்தாளும் கோட்பாடான சனாதனத்தைப் பரப்ப இராமயணத்தின் வழியாக இராமனும், மகாபாரதத்தின் வழியாக கிருஷ்ணனும் முழுமுதற் கடவுள் அவதாரமாகப் பரவலாக்கம் செய்தனர். இறைவன் மனிதராக அவதரித்து மனதர்களோடு வாழ்ந்து நன்மை புரிபவன் என்கிற அவதாரம் வைணவ நெறியாகவும், இறைவன் மனிதராகத் தோன்றி ஒரு விளையாட்டை நிகழ்த்தி மறைவான் என்கிற திருவிளையாடல்கள் சைவ நெறியாகவும் உள்ளன. இப்படியான, இதிகாச நாயகர்களான இராமரையும், கிருஷ்ணரையும் இந்துப் பெருமதக் கடவுள்களாக மாற்றுவதற்கான களத்தை அமைக்க முயன்றது பிராமண மேலாதிக்க அரசியல். சீதாராமனாக இருந்த சத்திரிய இராமனை, அரக்கரை (இராவணனை) வதம் செய்த வீரத் திருமகனாகக் கட்டமைத்தது பிராமணக் கதையாடல். இதற்கான பான் இந்தியப் பின்னணியாக அமைந்தது, 1987 ஆம் ஆண்டு இராமனந்த சாகரால் ஒளிபரப்பப்பட்ட இராமயணம் என்ற அரசுத் தொலைக்காட்சித் தொடர். இது பரவலாக இந்தியாவெங்கும் பார்க்கப்பட்டது. அதன்பின் மகாபாரதம் ஒளிபரப்பப்பட்டது. தொலைக்காட்சிகள் வழியாகப் பாமர இந்தியக் குடிமகனின் உளவியலில் இவ்விரண்டு பிம்பங்களும் வலுவானதாகக் கட்டமைக்கப்பட்டன.

**8.** இராமர் என்ற இதிகாசக் கடவுள் ஒரு நிகழ்கால மத அரசியலின் வரலாற்று நாயகன் என்ற குறியாக (*Sign*) மாற்றப்படுகிறார். அமைதியே உருவான ஏகபத்தினி விரதராக, பிராமண தவ முனிவர்களுக்குத் தொல்லை தரும் அரக்கர்களை வதம் செய்து தவத்தைப் பாதுகாக்கும் கடவுள் அவதாரமாக இருந்த இராமரை, இந்துத்துவ அமைப்புகள், குறிப்பாக வி.எச்.பி. என்கிற அமைப்பு வில்லேந்தி எதிரிகளை அழித்தொழிக்கும் உக்கிரமான இராமராக, வீரத்தின் புஜபல பராக்கிரமம் கொண்ட ஓர் உருவப்படத்தைத் தங்களது குறியாக முன்வைத்தனர். அத்வானி இரத யாத்திரையில் பயன்படுத்தியது இந்த இராமனைதான். ஷன்மதத்தின் வைணவ வழிபாட்டுக் கடவுளான இராமரை, ஒரு யுத்தக் கடவுளாக வடிவமைத்தனர். அந்த யுத்தக் கடவுளைப் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கி, இஸ்லாமிய எதிர்ப்புக் கடவுள் என்பதற்கான குறிப்பீடாக மாற்றினர். ஒரு குறி என்பது குறித்தல் என்ற செயல்பாட்டைக் கொண்டது. அது எதைக் குறிப்பீடு செய்கிறது என்பது, அந்தக் குறியை எதற்காகப் பயன்படுத்துகிறார்களோ அதற்கான கருத்தியல், அரசியல் சார்ந்து அது வெளிப்படும். இராமர் என்ற குறி, இந்துத்துவ அரசியலின் ஒரு குறியாக மாற்றப்பட்டதால், அது இறைவனாக மட்டுமின்றி, அதைக் கையாள்பவரின் அரசியல் அதிகாரத்திற்கான கருவியாகவும் மாறிவிடுகிறது. இராமர் பலரின் வழிபாட்டுக்குரிய நம்பிக்கைக்கு உகந்த கடவுள் என்பதிலிருந்து ஒரு மதவாத அரசியலின் குறியாக மாற்றப்பட்டுள்ளார் என்பதையே இராம ஜென்ம பூமிக்கான இயக்கமும் அதை எடுத்து அதிகாரத்தைப் பிடித்தவர்களின் அரசியலும் உணர்த்துவதாக உள்ளது. இந்தியாவில் ஒரு பெருமதக் கதையாடலாகக் கட்டமைக்கப்பட்ட முஸ்லிம் வெறுப்பு என்பதே இந்துத்துவக் குறியாக மாற்றப்பட்ட வீர புருஷரான இராமர். அவதாரப் புருஷரான இராமர் அன்று பார்ப்பன முனிவர்களின் தவத்தைக் காத்ததைப்போல, இன்று பார்ப்பனர்களின் நலத்தைக் காப்பவராக மாறியுள்ளார்.

**9.** இந்துத்துவக் கருத்தியல் பார்ப்பனிய அரசியல் வடிவம் என்பதால், அது இந்து மதத்தின் பெரும்பான்மை மக்களைப் பார்ப்பனிய மேலாண்மைக்குள் வைத்துக் கொள்வதற்கான அனைத்துத் தந்திரங்களையும் செய்கிறது. 1915 முதல் அரசியல் இயக்கமாக இருந்த, இந்து மக்கள் நலன் காக்க உருவாக்கப்பட்ட இந்துமகா சபையிலிருந்து வெளியேறிய ஹெட்கேவர் ஆர். எஸ்.எஸ். என்கிற அரசியலற்ற பண்பாட்டு இயக்கத்தைத் துவக்குகிறார். அதிலும் மராட்டிய நாக்பூரில். 1924ல் ஏன் தனியாக ஆர்.எஸ்.எஸ். என்கிற அமைப்பு துவங்கப்பட்டது? காரணம் மராட்டியத்தில் ஜோதிராவ் பூலே துவங்கி உருவாகிவந்த பார்ப்பன எதிர்ப்பு அரசியல் அம்பேத்கரிடம் தீவிரப் படுகிறது. இனி பார்ப்பனர்களைக் காக்க ஓர் தனி இயக்கம் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவாக, பார்ப்பனியம் மூன்று நிலைகளில் செயல்படுகிறது: 1. பண்பாடு 2. மதம் 3. அரசியல். பண்பாடாக இந்துப் பண்பாடு என்று புராண, இதிகாசப் பண்பாட்டை முன்வைப்பது. மதம் என்று சனாதன வருண தருமத்தை முன்வைப்பது. அரசியல் என்று மனுதர்மத்தை முன்வைப்பது. ஆனால், அரசியல் அதிகாரத்தைப் பெற அனைத்து வழிகளிலும் தனது சுயநலம் மட்டுமே முக்கியம் என்று இயங்குவது.**

என்றே ஆர்.எஸ்.எஸ். உருவாக்கப்படுகிறது (விரிவிற்குப் பார்க்க "காக்கி சட்டையும் காவிக்கொடியும்" என்ற நூல்). அதன் நோக்கமே பெருகிவரும் பார்ப்பனிய எதிர்ப்பு அரசியலுக்கு எதிராக பார்ப்பனிய நலம் காக்கவென உருவாக்கப்பட்டதே. உண்மையில் அது பெரும்பான்மை இந்துப் பெருமதத் தொகுப்பிற்கான நலனை முன்வைத்து துவக்கப்பட்டதில்லை. இதுவரை அந் நிறுவனம் இந்துப் பெருமதத் தொகுப்பிற்கு என்ன நன்மைகளைச் செய்துள்ளது? அது உண்மையில் தலித் மக்கள் எழுச்சி (அம்பேத்கர்) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலன் (மண்டல் குழு அறிக்கை சட்டமானது) ஆகியவற்றிற்கு எதிராக மட்டுமே இயங்கியுள்ளது. அவ்வியக்கம் முழுக்க இந்து என்பதை ஒரு பெருங்கதையாடலாகக் கட்டமைத்து அதற்குள் பல்வேறு குறி விளையாட்டுகளை நிகழ்த்தி வருகிறது. அப்படியாக உருவாக்கப்பட்ட ஒரு குறியே இராமர்.

**10.** இந்துப் பெருமதம் என்பதை முன்வைத்து இந்துத்துவம் நிகழ்த்தும் ஒரு மத அரசியல் விளையாட்டுதான் இன்றைய அயோத்தி இராமர் கோவில். அக்கோவிலை அது "ராஷ்டிரிய" கோவில் என்கிறது. அதாவது தேசத்திற்கான கோவில் என்கிறது. அதோடுகூட 500 ஆண்டுக்கால வரலாற்றின் போராட்டம் என்று மற்றுமொரு பொய்யைக் கட்டவிழ்த்து விடுகிறது. உண்மையில் அதன் உட்பொருள் இஸ்லாமிய எதிர்ப்பு என்பதே. 500 ஆண்டு அவமானம் என்பதெல்லாம் அயோத்தித் தீர்ப்பில் இல்லாத ஒன்று. முழுக்க பார்ப்பனியத்தால் வரலாறு நெடுகிலும் மற்றமையாக்கப்பட்ட தலித் மற்றும் சூத்திரர்கள் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்) ஆகியோர் விழிப்புணர்ச்சி அடைவதற்கான கல்வியால் பெற்ற கேள்வி அறிவு, பார்ப்பனியம் தடுத்து நிறுத்தி வைத்த வேதங்கள், புராண, இதிகாசங்களைப் படித்து அதன் மீது எழுப்பப்படும் கேள்விகள் ஆகியவற்றால் அச்சமடைந்த பார்ப்பனியச் சமூகம், இந்திய பெருவாரி மக்களாக உள்ள இந்துப் பெருமதத் தொகுப்பிற்கு எதிரான ஒரு மற்றமையாக முஸ்லிம்களைக் கட்டமைத்து அதற்கான ஓர் உச்சபட்ச குறியாக இராமரை முன்வைத்ததும், பாபர் மசூதியை ஒரு தேசிய அவமானச் சின்னமாக முன்வைத்து இடித்துத் தகர்த்ததுமான ஒரு மத அரசியல் விளையாட்டை நிகழ்த்தியது. அதன்மூலம் இந்துத்துவமயமாதல் என்ற அரசியலை நிகழ்த்தியது.

**11.** இராமர் கோவில் மூலம் மிகவும் பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டுள்ள உத்திரப் பிரதேசத்தின் பொருளியல் பலத்தை அதிகப்படுத்துவது. அதாவது அம்மக்களுக்குக் கல்வி அறிவைப் புகட்டுவதற்குப் பதிலாக, சனாதனத்தையும், வர்க்க ஏற்றத்தாழ்வையும் வளர்த்து, அவர்களைக் கூலிகளாக, சிறு வியபாரிகளாகச் சுற்றுலாத் தலத்திற்கான ஒட்டுண்ணிப் பொருளாதாரத்தை நம்பி வாழ்பவர்களாக மாற்றியமைப்பதே இதன் அரசியல் பொருளாதாரம். அயோத்தியை இந்துக்களின் "மெக்கா"வாக மாற்றி ஒரு பெரும் வணிக மற்றும் புனித சுற்றுலாத் தலமாக மாற்றுவதும், இந்தப் "பிராண பிரதிஷ்டான்" (சிலைக்கு உயிர் கொடுக்கும் சடங்கு, புதிய கோவில்கள், கும்பாபிஷேகம் செய்யப்படும் கோவில்களில் சிலைக்கு உயிர்கொடுக்க அதாவது அதைக் கடவுளாக மாற்றும் ஒரு சடங்கு) தினத்தை ஒவ்வொரு ஆண்டும் புனித விழாவாக மாற்றுவது. அதன் மூலம் உலக இந்துக்களின் வருகையை அதிகப்படுத்தி, உள்ளூர் வணிகத்தைப் பெருக்குவது இதுதான் இதன் பொருளியல் பின்னணி. இதற்கு இஸ்லாமில் முகமது நபி அவர்கள், அரேபிய நாடோடிப் பழங்குடிகளுக்கு ஒரு பொருளியல் மாற்றாக மெக்காவை மையப்படுத்தி, அதனை உலக இஸ்லாமியருக்கான புனிதத் தலமாக்கி, ஹஜ் என்ற சடங்கை முன்வைத்ததை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம். புனித நகரங்கள் என்பதன் பின் ஒரு பெரிய வணிக முதலாளியத்தின் பங்கு உள்ளது. கார்பரேட்டுகளின் உணவகங்கள், விடுதிகள், விமானப் போக்குவரத்து உள்ளிட்ட பல பொருளியல் பரிவர்த்தனைக்கான மையமாக அதனை மாற்றுவார்கள். இந்திய ஒன்றிய அரசு 3000 கோடிகளுக்கு மேல் செலவழித்து (இராமர் கோவிலுக்கான செலவு தனி) அயோத்தி மற்றும் உத்திர பிரதேசத்தை ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றுவதன் பின்னணி இதுதான். அதோடு உத்திரபிரதேச வாக்கு வங்கி இந்தியாவிலேயே பெரியது. அதன் மக்கள் தொகை மட்டும் 2011ஆம் ஆண்டு கணக்குபடி சுமார் 20 கோடி. தற்போது சுமார் 24 கோடியை நெருங்கியிருக்கலாம் என்கிறார்கள். மக்களவைத் தொகுதிகள் மட்டுமே 80. இந்தக் கணக்கீடுகள் அனைத்தும் இதன் பின்னுள்ள அரசியல். இதன்மூலம் இந்திய ஒன்றியத்தின் மையமாக உத்திரப் பிரதேசத்தின் அயோத்தியை மாற்றுவது.

**12.** இந்திய ஒன்றியத்தில் பெரும்பாலான இந்துப் பெருமதத் தொகுப்பைச் சார்ந்த மக்களின் புனித தலமாகக் கருதப்படுவது இரண்டு இடங்கள். ஜோதிர்லிங்கம் உள்ளிட்ட 12 தலங்களில் இவை இரண்டும் முக்கியமானவை. ஒன்று காசி மற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வரம். இதில் காசிதான் அதிமுக்கியமானதொரு புனித தலமாகவும், மோட்சத்திற்கான இந்துக்களின் புனித யாத்திரைக்கான இடமாகவும் கருதப்படுவது. இந்திய ஒன்றியத்தின் அதிகபட்சம் மக்களால் அறியப்பட்ட ஒரு புனித தலமும்கூட. ஜூலை 27, 2018ல் "தி இந்து" நாளிதழில் கீதா வெங்கட்ரமணன் என்பவரால் ஒரு விரிவான செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு கோவிலுக்கும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்வார்கள். ஆனால், காசி விஸ்வநாதர் ஆலயம் 1780ல் மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டு 238 வருடங்களாகக் கும்பாபிஷேகம் நடத்தப்படவில்லை. அப்படி ஒன்று ஏன் நடத்தப்பட வேண்டும்? ஆகம விதிப்படி எப்படி நடத்தப்பட வேண்டும்? என்பதுகூட அந்தக் கோவில் நிர்வாகிகளுக்குத் தெரியவில்லையாம். அதன்பின், தமிழகத்தைச் சேர்ந்த சுப்பு சுந்தரம் (இவர் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர், பார்ப்பனர் அல்லர்) என்பவர் முன்கை எடுத்து 2019 அன்று கும்பாபிஷேகம் செய்துள்ளார். அதற்காக, தமிழகத்திலிருந்து 50 பூசாரிகள் (priests) சென்று அந்தப் பணியை இலவசமாகச் செய்து கொடுத்துள்ளனர். (முழுமையான செய்தியை வாசிக்க *Consecration of Khasi Visvanath temple, Varanasi, a daunting task well done by a devotee from Chettinad, Tamil Nadu (navrangindia.in)*). இங்கு நமக்கு எழும் கேள்வி புனித நகரமான காசியின் (வாரணாசிதான் பிரதமரின் தொகுதியும்கூட) மீது செலுத்தப்படாத அக்கறை இராமரின் அயோத்திமீது செலுத்தப்படுவது ஏன்? இதனை மட்டும் அரசே முன்னின்று நடத்துவது ஏன்? இராமர் என்கிற குறி பாஜக ஆட்சியமைக்க உதவியதைப்போல, இன்று மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் பல்வேறு எதிர்ப்பிற்கு இடையில் இத்திறப்பு விழா நடத்தப்படுகிறதா? இதன் உள்ளிருப்பது அரசியலே தவிர மத நம்பிக்கையோ வழிபாடோ இராம பக்தியோ அல்ல.

**13.** முழுமையாகக் கட்டி முடிக்கப்படாத கோவிலில், ஆகம முறைப்படி "துவிஜஸ்தம்பம்" என்கிற கொடி மேடைகூட அமைக்கப்படாத நிலையில், எந்த ஆகம வழிமுறைகளையும் பின்பற்றாமல் இந்நிகழ்வு நடத்தப்படுகிறது என்று எதிர்க்கும் மதப்பெரியவர்கள் கூறுகிறார்கள். இதற்குப் பல்வேறு எதிர்ப்புகள், குறிப்பாக பார்ப்பனர்கள் சைவ மடங்கள் என எதிர்ப்புக் குரல் வலுவாக ஒலிக்கத் துவங்கியுள்ளது. ஊடகங்களின் முழு விவாதக் களங்களும் இதன் மீதே கட்டமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ஓர் அரசியல் எடுத்துரைப்பு அல்லது கதையாடல் (political narrative) கட்டமைக்கப் படுகிறது. அதாவது 'இந்தியா' கூட்டணி சமீபத்தில் கையில் எடுத்துள்ள அரசியல் சாதிவாரிக் கணக்கெடுப்பு, இந்துப் பெருமதத் தொகுப்பை இந்துத்துவ அரசியலுக்குள் கொண்டுவரும் சங்பரிவார்களின் அரசியலைக் கேள்விக்கு உட்படுத்தி உள்ளது (இது குறித்துக் காக்கையில் எனது கட்டுரை முந்தைய இதழ் ஒன்றில் வெளிவந்துள்ளது). இதனை எதிர்கொள்ள இன்றைய பாஜக அரசு எடுத்துள்ள மற்றொரு மதவாத துருவமய அரசியலே இந் நிகழ்வு. அதனால்தான் கட்டி முடிக்காத கோவிலை அவசரமாகத் திறப்பதும், அதனால் வரும் பெரும் எதிர்ப்பைத் தனக்குச் சாதகமாக மாற்ற முனைவதும் நடக்கிறது. அதாவது பிரதமர் மோடியைச் சனாதனத்தால் பாதிக்கப்பட்ட ஓபிசி தலைவராகக் கட்டமைத்தல் என்ற முயற்சியையும், அவர் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனருக்கு எதிரானவராகக் காட்டப்படுவதும் நடத்தப்படுகிறது. இது ஒரு மத அரசியல் விளையாட்டு. இவ்விளையாட்டில் அனைத்து எதிர்கட்சிகளையும் இழுத்துவிட்டு, மோடி அவர்களை ஓர் ஒப்பற்ற தலைவராக மக்களிடம் கட்டமைக்கும் முயற்சியும் இதன் பின்னணியில் உள்ளது. பாபர் மசூதியை இடித்துவிட்டுக் கட்டப்பட்டது என்பதை மறக்கடித்து, தற்போது மோடியை ஒரு பிற்படுத்தப்பட்ட தலைவராக எண்ண வைக்கும் ஒரு நுண் அரசியல் இதனுள் செயல்படுகிறது.

**14.** மதத்தை அரசியலாகப் பல்லாண்டுகளாகப் பயன்படுத்திவரும் பார்ப்பனியம், தற்போது மதத்தை ஆதரிப்பதாகவும், ஆனால், அரசியலை எதிர்ப்பதாகவும் வேஷமிடுகிறது. உண்மையில் இது ஓர் இந்துப் பெருமத வழிபாட்டுத் தலமாக உருவாக்கப்படுவதில் யாருக்கும் எந்த மறுப்பும், எதிர்ப்பும் இல்லை. ஆனால், அதற்கான அரசியல் வழிமுறைகள் அறமற்ற முறையில் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதே. பொதுவாக, பார்ப்பனியம் மூன்று நிலைகளில் செயல்படுகிறது: 1. பண்பாடு 2. மதம் 3. அரசியல். பண்பாடாக இந்துப் பண்பாடு என்று புராண, இதிகாசப் பண்பாட்டை முன்வைப்பது. மதம் என்று சனாதன வருண தருமத்தை முன்வைப்பது, அரசியல் என்று மனுதர்மத்தை முன்வைப்பது. ஆனால், அரசியல் அதிகாரத்தைப் பெற அனைத்து வழிகளிலும் தனது சுயநலம் மட்டுமே முக்கியம் என்று இயங்குவது. அதற்காக அது ஆகமம், தர்மம், அறம் ஏன் சனாதனத்தைக்கூட கைவிட்டுவிடும். அதற்குத் தேவை அதிகாரம். அதற்காக அது எதையும், யாரையும் முன்வைத்துத் தனது சுயநல வேட்கையை நிறைவு செய்துகொள்ளும். அதன் ஒரே நோக்கம் தன்னைத் தெய்வ நிலை என்கிற எஜமான நிலையில் வைத்துக்கொண்டு, மற்றவர்களைத் தனது அடிமைகளாக வைத்துக் கொள்வதே. அதன் முதல் அடிமைகள் சத்திரியர்கள், அடுத்து வைசியர்கள். அதிகாரத்தை இவர்களுடன் பங்கிட்டுக் கொண்டு பெரும்பான்மைச் சூத்திரர்கள், பஞ்சமர் எனப்படும் அவர்ண தலித்துகளை முழுக்க கொத்தடிமைகளாக நடத்துவதே அதன் நோக்கம். அதற்காக காலனியத்திற்குப் பிந்தைய இந்தியாவில் அது கண்டுபிடித்த உத்தியே இந்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதத் தொகுப்பை இந்துத்துவா என்கிற இனவாத தொகுப்பாக மாற்ற முயல்வது.

**15.** இராம ஜென்ம பூமி என்று அயோத்தியில் உள்ள பாபர் மசூதியை இடித்து அந்த இடத்தில் இராமர் கோவில் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி கட்டப்படுகிறது என்று தங்களது இச்செயலை நியாயப்படுத்துகிறது பாஜக மற்றும் சங் பரிவார்கள். ஆனால், பாபர் மசூதியின் பரந்த வளாகத்தை மூன்று அமைப்புகள் தங்களுடையவை என்று வழக்குத் தொடுத்தன. இந்த வழக்கைத் தொடுத்தவர்கள் 'ராம் லல்லா' என்கிற பால ராமர் சிலையின் பாதுகாவலராக தங்களை அறிவித்துக் கொண்ட இந்து மகாசபா, ராம பக்தர்களாக நிர்மோகி அகோரா மற்றும் உ.பி. சன்னி வஃக்ப் போர்ட் ஆகியவை. வழக்கு தொடுத்தவர் 'ராம் லல்லா' சிலை. அதன் பாதுகாவலராக இந்து மகா சபா வழக்கை நடத்தியது. உண்மையில் வழக்குத் தொடுத்த சிலை சட்டவிரோதமாக 1949ல் வைக்கப்பட்டது என்பது தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பால ராமர் அதாவது சிலை சார்பாக வழக்குத் தொடுப்பது என்பதே ஒரு வினோதமான செய்தி. அதில் பாலர் என்பதால் அவருக்குத் தாங்கள்தான் பாதுகாவலர் என்று இந்து மகாசபை அறிவிப்பது அதனிலும் வினோதமானது. இந்த வினோதங்கள் ஒருபுறமிருக்க, உச்சநீதிமன்றத் தீர்ப்போ இவை எல்லாவற்றிலும் மிக வினோதமானதாக இருந்தது என்று பல வழக்குரைஞர்கள், அறிஞர்களால் அன்றே கருத்துரைக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை ஏக மனதாக வழங்கிய ஐந்து நீதிபதிகளும் தீர்ப்பின் அடியில் கையெழுத்திடவில்லை. யார் வழங்கிய தீர்ப்பு என்பது இல்லாமலே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பில் மூன்று முக்கியச் செய்திகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 1. அங்கு இராமருக்கான கோவில் முன்பு இருந்து இடிக்கப்பட்டது பாபரால் என்பதற்கான எந்த ஆதாரமும் இந்திய தொல்பொருளியல் கழகம் தரவில்லை. எனவே, அங்கு கோவில் இடிக்கப்பட்டு மசூதி கட்டப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லை. 2. 1936ல் மசூதி தாக்கப்பட்டுள்ளது ஒரு குற்றச் செயலே. 1949ல் மசூதிக்குள் சிலை வைத்தது. 3. 1992ல் பாபர் மசூதியை இடித்தது சட்டவிரோதம். என்றபோதிலும், பெரும்பான்மை இந்து மக்களின் நம்பிக்கையை மனதில்கொண்டு அங்கு இராமர் கோவிலை அரசே கட்டித்தர வேண்டும் என்று அந்த மொத்த இடத்தையும் அரசிற்குக் கையளித்தது உச்ச நீதிமன்றம். சன்னி வக்ஃப் வாரியத்திற்கு அரசு தனியாக 5 ஏக்கர் (அதாவது இரண்டு மடங்கு) இடம் தந்து இடித்த பாபர் மசூதியைக் கட்டிக் கொள்ளலாம் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. அயோத்தியிலிருந்து சில கிலோமீட்டர்கள் தொலைவில் ஒரு வயற்பரப்பு சன்னி வஃக்ப் போர்டுக்கு வழங்கப்பட்டுள்ளது மசூதிக் கட்டிக்கொள்ள. நிர்மோகி அரோரா இந்த வழக்கின் வாதியுடன் சம்பந்தமற்றவர் என அவர்களது வழக்கை தள்ளுபடி செய்தது

**16.** இராமயணத்தில் குறிக்கப்படும் இராமர் பிறந்த இடம் என்பதற்குப் பல்வேறு இடங்கள் சுட்டிக் காட்டப்படுகிறது. குறிப்பாக, இராமயணத்தில் வரும் லங்கா என்பது மத்தியப் பிரதேசத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதனால், அயோத்தி என்பது எது? என்பதிலேயே பல கருத்துக்கள் உள்ளன. வி.எச்.பி. என்கிற சங் பரிவார் அமைப்புதான் இராம ஜென்ம பூமி பிரச்சனையை முன்னின்று நடத்தியது. அது இந்தப் பிரச்சனையை எழுப்புவதற்கு முன்பாக அயோத்தியில் 20க்கும் மேற்பட்ட இடங்களில் இராமர் பிறந்த இடம் என்று உண்டியல் வைத்துப் பலரும் வசூல் செய்து வந்துள்ளனர். வி.எச்.பி. அவர்கள் அனைவரையும் அப்புறப்படுத்தி, பாபர் மசூதிதான் இராமர் பிறந்த இடம் என்றும், 1949 டிசம்பர் 22-23ல் மசூதியின் ஒரு சிறு பகுதியை இடித்து இராமர், சீதா சிலை வைக்கப்பட்ட மறுநாளே இராம வழிபாட்டை துவங்கிவிட்டனர் அங்கு. ஆனால், முஸ்லிம்களை வழிபட அனுமதிக்கவில்லை. அரசே முஸ்லிம்களை அனுமதிக்கவில்லை வழிபட என்று கூறுகிறார் தீபக் மேத்தா என்பவர் தனது கட்டுரையில். (*"On January 5, 1950, the State took possession of the mosque under section 145 CrPC, and Hindus, not Muslims, were allowed their worship.", P.276, Wording the World, Edited by Roma Chatterji, Fordham University Press, New York 2015)* ஆனால், தீர்ப்பில் நீண்ட நாட்களாக முஸ்லிம்கள் அங்கு வழிபடவில்லை, இந்துக்கள் வழிபட்டு வருகிறார்கள் என்று தீர்ப்பிற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் பெருந்தன்மையாக ஏற்றுக் கொண்டார்கள் என்றாலும், ஒரு முஸ்லிமாக இருந்து இந்தப் பிரச்சனைகளைப் பார்க்கும் போது மட்டுமே, அதனால் ஏற்பட்ட அவர்களின் அச்ச உளவியலைப் புரிந்துகொள்ள முடியும். இந்த மொத்த நிகழ்வும் முஸ்லிம்களை இந்த நாட்டின் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கி, இந்து மக்களின் எதிரிகளாகக் கட்டமைத்திருப்பதே இன்றைய இந்துத்துவ அரசியல். இராமர் என்ற கடவுளை ஒரு மத அரசியல் குறியாகப் பயன்படுத்தி, முஸ்லிம்களை எதிரிகளாகக் கட்டமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றிய வரலாறே இராம ஜென்ம பூமி குறித்த வரலாறாக உள்ளது. கடந்த கால மதப் புராணங்களை நிகழ்கால அரசியலாக மாற்றியது இந்நிகழ்வுகளின் அடிப்படை. அதன் தொடர்ச்சியாக வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஒரு பிரச்சாரமாக மாற்ற முயலும் அரசியலே இந்த மதச் சடங்கின் பின்னுள்ளது. இது வெற்றியடையுமா? அல்லது ஜனநாயகம் காப்பாற்றப்படுமா என்பதை 2024 தேர்தலுக்கு பின்பே அறியமுடியும்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.மோகன்ராஜன்

# பெரியார் காய்ச்சல்!



கடந்த ஆண்டு இறுதித் திங்களில் சமூக ஊடகங்களில் தமிழர் தலைவர் பெரியாரைப் பன்றியாகச் சித்தரித்து ஒரு கேலிச் சித்திரம் வெளியாகியது. அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று அந்தக் கேலிச் சித்திரத்தின் பின்னிருந்தவர்களுக்கு உறுதியாக ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும். மேலும், அந்தக் கேலிச் சித்திரம் குறித்த பெரியாரின் அணுகுமுறை எப்படி இருக்குமோ, அவ்வாறே பெரியாரியர்களின் வெளிப்பாடுகளும் அந்தச் சித்திரத்தை எதிர்கொள்வதில் இருந்தது மிகப் பெரிய ஆறுதலாகும்.

பெரியார் மீது செருப்பு வீசப்பட்டபோதே அந்த இன்னொரு செருப்பு இல்லாமல் வீசிய நபர் எப்படி நடந்து போகமுடியும் என்று வருத்தம் கலந்த எள்ளலுடன் பெரியார் அந்த நிகழ்வை எதிர்கொண்டதை வரலாறு சித்திரமாக்கியுள்ளது. இந்தப் பன்றி சித்திரம் பெரியாரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவும், சிந்திக்கவும் செய்து அது தொடர்பான அவரது பேச்சும் எழுத்தும் தமிழருக்குச் சிறந்த ஒரு செய்தியைச் சொல்வதாக இருந்திருக்கும். நமது சிந்தனையை அவை தூண்டுவதாகவும் இருந்திருக்கும். அந்த வாய்ப்பைத் தற்போது பெரியாரியர்கள் சரியாகவே எதிர் கொண்டு வருகின்றனர்.

பெரியாரை இழிவாகச் சித்தரிக்க அவர்களுக்குப் பன்றி இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. பன்றி என்றைக்குமே தான் இழிவான பிறப்பு என்று சொன்னதில்லை. அது சேற்றில் புரளுவது குறித்துச் சிறிதும் கவலைபட்டுக் கொண்டதில்லை. அதன் உணவு குறித்தும் அதற்கு இழிவு இல்லாதபோது மனிதர்கள் அதுவும் இழி மனம் கொண்டவர்களுக்கே அப்படியான எண்ணம் தோன்றுகிறது. தோன்றும். பிறப்பில் இழிவோ, ஏற்றத் தாழ்வோ கூடாது என்று பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் உரத்துப் பேசிவந்தது பன்றிகளுக்குமாகத்தான் இருக்க முடியும்.

சேறு இழிவு, மலம் இழிவு அதை உண்ணும் பன்றி இழிவு, அதை வளர்ப்பவர்கள் இழிவானவர்கள் என்று எண்ணும் மனநிலையிலிருந்தே பன்றி குறித்த இழிவான சித்திரமும் பெரியாரை அதனுடன் ஒப்பிடும் வன்மமும் தோன்றுகிறது. புனிதம் - அபுனிதம், சுத்தம் - அசுத்தம் என்ற இவர்களது ஆன்மீக அரசியலிலிருந்தே அவர்கள் எல்லாவற்றையும் பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். பெரியாரையும், பன்றியையும் இழிவுபடுத்த முடிகிறது. சேற்றில்தான் நெல் விளைகிறது. இவர்கள் கடவுளுக்குப் படைக்கும் தாமரை மலர்கள் மலர்கின்றன. ஏன் இவர்களே தன் மலத்தை வயிற்றில் சுமந்து திரிபவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் அதைத் தலையில் சுமப்பவர்கள் இவர்களுக்கு மனிதர்கள் இல்லை. அது பற்றிக் கவலைபடுபவர்கள் மனிதர்கள் இல்லை. சொந்த மலம் இவர்களுக்குப் புனிதமானது. உயர் சாதியினர் மலம் சந்தனத்திற்கிணையானது. காஞ்சி பெரியவர் மலம் கழிப்பதே ஓர் ஆன்மீகச் சடங்காக இருக்கிறது. அது கடவுளின் மலம். புனித மலம். அதைச் சுமப்பவர்கள் மட்டுமே இழிவானவர்களாகிவிடுவதுதான் ஆன்மீக அரசியல் துயரம்.

தோட்டி என்றொரு சாதியும் அவனுக்கு இழிவும் தீண்டாமையும் எப்படி ஏற்பட்டது? மலம் எடுக்கும் தொழிலை, நாற்றமுள்ள தொழிலை அவன் ஏற்றுக் கொண்டதால் தான் இப்படியே கஷ்டமானதும், இழிவானதும் வேலை செய்பவர்கள் எல்லாம் கீழ்ச் சாதியாகவும், சுகமாகவும், மேன்மையாகவும் உள்ள வேலை செய்பவர்கள் மேல் சாதியாகவும் ஒரு வேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் வயிறு வளர்த்துக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு, வஞ்சித்துக் கொண்டு திரிகிறவர்கள் மகாமகா மேல் சாதியாகவும் ஏற்பட்டதற்கு விஞ்ஞான ஞானமின்மையே என்று பெரியார் சுட்டிக்காட்டுகிறார். இந்த இழிவைக் கடவுள் போக்க முடியாது. கடவுள் பெரியலான இந்த இழிவை மனித முயற்சியிலான விஞ்ஞானமே போக்க முடியும் என்கிறார் பெரியார்.

கடவுள் பெயரில் இவர்கள் மனிதர்ளையும், விலங்குகளையும் இழிவுபடுத்துவதை அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சித்திரம் வரையத் தெரிந்தவர்கள். தமது இதயத்தையும், மூளையையும் மதக் குட்டையில் தேங்கவிட்டிருக்கிறார்கள் என்பதே இவர்கள் சித்திரம் சொல்லும் செய்தி. இவர்கள் பிரித்து வைத்திருக்கும் புனிதம் - அபுனிதம், சுத்தம் - அசுத்தம் என்பன ஓர் மனநோயாளியின் இயல்பினை ஒத்தது. பன்றி சுவாசிக்கும் காற்றைத்தான் இவர்களும் சுவாசித்தாக வேண்டும். அது நிரப்பி வெளியேற்றிய காற்றைத்தான் இவர்கள் தமது நுரையீரலில் உயிர்வாழ நிரப்பிக் கொள்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பற்றி அவர்கள் யோசிக்கத் தொடங்கினால் இவர்களது புனிதம் கேள்விக்குள்ளாகிவிடும். அப்படி கேள்வி கேட்கக் கூடாது என்றுதான் மதம் என்கிற பெயரில் அரசியல் ஆன்மீகம் செய்து கொண்டிருக்கின்றனர்.

சொல்லப்போனால் பெரியார், பன்றியின் இழிவையும், அதை வளர்ப்பவர் இழிவையும் சேர்த்தே போக்குவதற்குப் பாடுபட்டிருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். தீண்டக்கூடியவகள் புனிதர்களாகவும், தீண்டப்படாதவர் ஆகிப்போனதற்கும் பன்றி காரணமாக இருக்கவில்லை. மனிதர்களும் அவர்களுடைய மதமும், சாதியுமே காரணம் என்பதைப் பெரியார் அழுத்தமாகவே பேசிச் சென்றிருக்கிறார்.

பறையன், சக்கிலி முதலியோரை ஏன் தொடக்கூடாது, பார்க்கக்கூடாது என்கிறார்கள் என்பதைச் சற்று கவனித்தால் அவன் பார்வைக்கு அசிங்கமாக இருக்கிறான்; அழுக்குடை தரிக்கிறான்; அவன்மீது துர்நாற்றம் வீசுகிறது; அவன் உணவிற்கு மாட்டுமாமிசம் சாப்பிடுகிறான்; மாடு அறுக்கிறான்; மற்றும் சிலர் கள் உற்பத்தி செய்கிறார்கள் என்றுதான் குற்றங்கள் பிரதானமாகச் சொல்லப்படுகின்றன. இவற்றை நாம் உண்மை என்றே வைத்துக் கொள்வோம். இவர்கள் பார்வைக்கு அசிங்கமாகவும் அழுக்கான துணிகளுடனும் துர்வாடையுற்றும் ஏன் இருக்கிறார்கள் என்றும் இதற்கு யார் பொறுப்பாளி என்றும் யோசியுங்கள். அவர்களை நாம் தாகத்திற்கோ தண்ணீர் குடிப்பதறகில்லாமல் வைத்திருக்கும்போது குளிக்கவோ வேட்டி துவைக்கவோ வழியெங்கே? நாம் உபயோகிக்கும் குளமோ குட்டையோ கிணறோ இவர்கள் தொடவோ கிட்ட வரவோ கூடாதபடி கொடுமை செய்கிறோம். அதனால் அவர்கள் அப்படியிருக்கிறார்களேயல்லாமல் அது அவர்கள் பிறவிக் குணமா நம்மை யாராவது குளிக்க விடாமலும், வேட்டி துவைக்க விடாமலும் செய்துவிட்டால் நம்மீது துர்நாற்றம் வீசாதா? நம் துணி அழுக்காகாதா? நாம் பார்வைக்கு அசிங்கமாகக் காணப்படமாட்டோமா? அவர்கள் குளிப்பதற்கும், துணி துவைப்பதற்கும் நாம் சவுகரியம் செய்து கொடுத்துவிட்டால் பின்னும் இவ்விதக் குற்றமிருக்குமா? அதனால் நாம்தான் அவர்கள் இழிநிலைக்குக் காரணமாயிருக்கிறோம்.

மாடு தின்பது முதலியவைகளால் எப்படித் தீண்டாதவனாய் விடுவான்? அய்ரோப்பியர், மகமதியர் முதலானோர் தின்பதில்லையா? அவர்களை நாம் தீண்டாத்தகாதார், பார்க்கத்தகாதார் என்று சொல்லக் கூடுமா? அப்படியே சொல்வதானாலும் மாடு தின்பது என்ன, ஆடு , கோழி தின்பதைவிட அவ்வளவு பாவம்? ஆடு, கோழி, பன்றி தின்பவர்களை நாம் பஞ்சமரைப்போல நினைப்பதில்லை. கோழியும், பன்றியும் தின்னாத வஸ்துவையா மாடு தின்கிறது? சொத்த மாட்டைத் தின்பது உயிருள்ள ஜெந்துவை உயிருடன் வதைத்துக் கொலை செய்து சாப்பிடுவதை விட உயிரற்ற செத்துப்போன பிராணியின் மாமிசத்தை மண்ணில் புதைப்பதை வயிற்றுக்கில்லாத கொடுமையால் சாப்பிடுவது எப்படி அதிக பாவமாகும்? மாடு அறுப்பது பாவமென்றால் ஆடு, கோழி அறுப்பதும் பாவம்தான். மனிதப் பிணத்தையும் கூட வைத்திய சாலைகளில் அறுக்கிறார்கள். அவரை நாம் பஞ்சமரென்று சொல்கிறோமா? (குடியரசு இதழ்கள் 07, 21, 28-06-1925).

இழிவுமனதிலிருந்து பிறக்கும் இழிவே இதற்குக் காரணம். தமது பிறப்பும், மதமும், சாதியுமே உயர்ந்தது, மாறாதது என்ற வக்கிரப் போக்கிலிருந்தே இவை எழுவதை பெரியார் தமது கேள்வியின் வழி முன்வைப்பவராக இருக்கிறார். ஆக மனிதனோ, விலங்குகளோ அதன் செயற்பாடு காரணமாக இழிவுபடுத்தப்படுவதை பெரியார் எதிர்ப்பவராக இருக்கிறார். இருந்திருக்கிறார். இழிவுபடுத்த வேண்டும் என்ற மனம், அதனுடன் இழிவான ஒன்றாகக் கருதும் ஒன்றைப் பொருத்தி இழிவுபடுத்த வேண்டும் என்கிற இழிகுணத்திலிருந்து பெரியாரைச் சிறுமைப்படுத்தும் நோக்கம் எழுகிறது. இது அப்படி எழும் மனதின் சிக்கல். மனநோய் அன்றி வேறில்லை. இந்த நோய் நேரடியாக புனிதம் - அபுனிதம் என கட்டமைக்கும் மதத்திலிருந்து பிறக்கிறது. அதை தேக்கி நிற்கும் மண்டையிலிருந்து நாற்றமெனச் சுரந்து இப்படியான சித்திரத்தை வரைந்தெடுக்கிறது. பெரியாரை இழிவுபடுத்துவதாக, பன்றியை இழிவுபடுத்துவதாகத் தமது இழி மனதையும் இழி நோக்கத்தையும், மேலாகத் தம்மைத் தாமே இழிவுபடுத்திக் கொண்டுள்ளார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

பொதுவாகவே மதங்கள் சில விலங்குகளைப் புனிதமாகவும், சில விலங்குகளை அபுனிதமாகவும் கருதுகின்றன. இதில் எந்த ஒரு மதமும் புனிதத்திற்கு உட்பட்டதல்ல. பசு இந்து மதத்தின் ஆகப் புனிதமான விலங்கு அல்ல, கடவுள். பசுபுனிதம் என்ற ஒரு சொல்லே ஆங்கிலத்தில் புழங்குகிறது. பசு புனிதம் என்றால் அதற்கு அப்பால் எது குறித்தும் கேள்வி எழுப்ப முடியாது. கூடாது. மதங்களும் அப்படிதான். பன்றி இசுலாமியர்களுக்கு மட்டுமல்ல இந்துக்களுக்கும் வெறுக்கத்தக்க விலங்காகவே இருக்கிறது. புனிதம் புனிதமற்றவைகளில் இந்த விலங்குகளும் மதங்களுக்குள் வைத்துப் பார்க்கப்படுவதன் காரணமாக அவற்றைச் சாப்பிடுவது அல்லது அதனுடன் புழங்குவது என்பதும் புனிதமற்றதாகிவிடுகிறது. மேலும் ஒரு மதத்திற்குப் புனிதமானது பிற மதத்திற்குப் புனிதமானது என்றும் சொல்வதற்கில்லை. இயற்கையின் படைப்பில் யாதொரு விலங்கும், அழகு, புனிதம்தான். அவற்றில் பேதம் பார்ப்பது தவறு என்று எந்த மதமும், அதன் குருபீடங்களும், புனித நூல்களும் குறிப்பிடுவதில்லை. மாறாக அப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கடவுள் எதையும் சொன்னதாகத் தெரியவில்லை. ஆனால் கடவுளின் பெயரால் இவர்கள் இவர்களது செயலை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். கடவுள் பெயரால் பிற மதத்தினரை இழிவு படுத்துவதில் தொடங்கி எதிரி மதம் என அடையாளம் காணப்பட்டவர்களின் பெண்களை வன்புணர்வதில் தொடங்கி குழந்தை, முதியோரை படுகொலை செய்வது வரை நீதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.**

விலங்குகள் இழிவானவை, அவற்றை வீட்டில் வைத்திருப்பதே மதத்திற்கும் அதன் கோட்பாட்டிற்கும் எதிரானது என்ற முடிவிற்கே வருகின்றன.

மதத்திற்கு அப்பாலான மனிதர்கள் பறவைகளையும், விலங்குகளையும், ஏன் சக மனிதர்களையும் நேசிப்பதற்கு மனதளவிலோ, செயலளவிலோ எந்தவிதத் தடையுமிருப்பதில்லை. புனிதம், அபுனிதம் என்ற வரையரைக்குள் மதமே சக மனிதனையும், விலங்குகளையும் கீழாகவும், இழிவாகவும் பார்க்கச் செய்கிறது. "மனித சமுதாயம் ஒற்றுமையாக, ஒழுக்கமாக சமத்துவத்துடன் சாந்தியாய் இருக்க கடவுள் உணர்ச்சி மனிதனுக்கு வேண்டாமா என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்ச்சியானது மக்கள் சமூகத்தில் ஒழுக்கம், ஒற்றுமை சமத்துவம் சாந்தி அளிக்கிறதா என்பதையாவது கவனித்திருக்கிறார்களா?" என்று கேட்கிறார் பெரியார்.

ஆயிரத்தில் பத்தாயிரத்தில் ஒருவரையாவது கடவுள் உணர்ச்சியின் அவசியத்திற்கேற்றபடி அவர்களது வாழ்க்கையிலே நீதி, நேர்மை ஒற்றுமை அன்பு நிலவும்படி நடப்பதை நாம் பார்க்கிறோமோ? மக்களுக்கு அக்கிரமம் செய்யவே தைரியம் தருகிறயேல்லாமல் யோக்கியனாக, அன்பானவனாக நடக்க கட்டாயப்படுத்துகிறதா என்று கேள்வியெழுப்புகிறார் பெரியார். இது குறிப்பிட்ட கேலிச்சித்திரத்தை வரைந்த மூளைக்குச் சொந்தக்காரருக்கும் பொருந்தி வரக்கூடியதே.

முதலில் பெரியார் மீதான கோபம். அதுவே பன்றியுடன் ஒப்பிடச் செய்கிறது. ஏன் பெரியார் மீது கோபம். கடவுள் இல்லையென்கிறார். யாருடையக் கடவுளை? சித்திரத்தை வரைந்த அந்த மூளைக்குச் சொந்தமானவரின் கடவுளை. கடவுள் இல்லை என்று தள்ளாத வயதிலும் மூத்திரச் சட்டியைச் சுமந்து கொண்டு ஊர் ஊராகச் சுற்றி முழங்கிவந்த அந்த முதியவர் ஏன் அப்படிச் சொல்கிறார் என்று அந்த பன்றி வரைந்த சித்திர மூளைக்குத் தோன்றவில்லை. தோன்றாது. எதையும் கேள்வி கேட்காதே என்கிறது இந்து மதம். அதனால் கேள்வி கேட்பது என்பதே புனிதத்திற்கெதிரானது. கடவுளுக்கு எதிரானது. எனவே கேள்வி எழுப்பும் இயல்பை அந்த மூளை இயல்பாகவே இழந்துவிட்டது.

கடவுள் கருணை, அன்பு, ஒழுக்கம் மிக்கவரென்றால் கடவுளை நம்பும் ஒருவர் எப்படி எதிர் கொண்டிருக்க முடியும்? அதே அன்பு, கருணை, ஒழுக்கத்துடன்தான் எதிர் கொள்ள முடியும். எதிர் கொண்டிருக்க முடியும். ஆனால் கடவுளுக்கு எதிரான உணர்வுகளான வெறுப்பு, கோபம், கயமைத்தனங்களுடன் பெரியாரை எதிர் கொண்டிருக்கவே முடியாது. கூடாது. மெய்யான கடவுள் நம்பிக்கை, மெய்யான ஆன்மிகம் என்றால் அதுவாகத்தான் இருக்க முடியம். அப்படித்தான் அணுக வேண்டியிருக்கும். ஆனால் பெரியாரை இழிவுபடுத்த வேண்டும் என்ற மனம் கடவுளின் மனமாக எப்படி இருக்க முடியும்?

மனித வாழ்வுக்கு நன்மையும், அவசியமுமான காரியங்கள், குணங்கள் எவை எவையோ அவைகளைத்தான் கடவுள் என பெரியோர்கள் சொன்னார்கள் என்று பெரியார் கடவுளுக்கான மெய் பொருளை சுட்டும் அதே வேளை, அந்தக் கடவுள் உணர்ச்சியைக் கடவுளுக்கும் மனிதருக்கும் தொடர்பில்லாமல் செய்துவிட்டார்கள் என்பதுடன், நமது கடவுளைக் கண்ட பெரியவர்கள் என்பவர்கள், உலகத்திலேயே கேடு, கூடா ஒழுக்கம், வஞ்சனை, பொய் முதலியன செய்பவர்களை இந்த மாதிரியான ஒரு கடவுள் உணர்ச்சியைத் தங்களின் மேல் கண்ட காரியத்துக்கு உபயோகித்துக் கொள்ளும்படிச் செய்துவிட்டார்கள். கடவுள் பெயர் உச்சரிப்பு, புண்ணிய ஸ்தலயாத்திரையைப் புண்ணிய ஸ்தல ஸ்பரிசம் செய்த மாத்திரத்திலேயே மன்னிப்பும், பாப விமோசனமும் கிடைக்கும் – ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு அதனால் மக்களுக்கு அக்ரமம் செய்யவே தைரியம் தருகிறதேயல்லாமல் யோக்கியனாக அன்பானவனாக நடக்க கட்டயாப்படுத்துகிறதா? என பெரியார் கேட்கிறார்.

இங்கு கடவுள் பெயரில் பெரியாரைப் பன்றியாக சித்தரித்த இழிகேலி மனக்காரருக்கும் அதை எதிர்கொண்ட, எதிர்கொள்ளும் பெரியாரியருக்குமான பண்பு இடைவெளியைப் பெரியாரின் மேற்கண்ட கூற்றை வைத்துப் புரிந்து கொள்ள முடியும். அந்தச் சித்திரக்காரரின் இழிவான செயலைக் கடவுள் மன்னிக்கிறாரோ இல்லையோ உறுதியாக பெரியார் மன்னிக்கவே செய்வார். சிக்கல் அதுவல்ல. கடவுள் பெயரைச் சொல்லி ஆன்மிக அரசியல் செய்பவர்கள் கடவுளை எப்போது கடவுளாகப் பார்க்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை.

கடவுள் எதையும் சொன்னதாகத் தெரியவில்லை. ஆனால் கடவுளின் பெயரால் இவர்கள் இவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**“பார்ப்பனர்கள் இந்தப் பிறவியில் விவசாயம் செய்தால் அடுத்த பிறவியில் பன்றிகளாகப் பிறப்பார்கள் என்று ஒரு முறை ராஜாஜி சொன்னதற்குப் பெரியாரின் எதிர்வினை எப்படியிருந்தது பாருங்கள். “அப்படின்னா இந்த பிறவியில் பன்றிகளா உள்ளது எல்லாம் போன பிறவியில் விவசாயம் செய்த பார்ப்பனர்களா?”**

*செயலை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். கடவுள் பெயரால் பிற மதத்தினரை இழிவு படுத்துவதில் தொடங்கி எதிரி மதம் என அடையாளம் காணப்பட்டவர்களின் பெண்களை வன்புணர்வதில் தொடங்கி குழந்தை, முதியோரை படுகொலை செய்வது வரை நீதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. பெரியார் கடவுளை இழிவுபடுத்துகிறார், தாம் சார்ந்த மதத்தினை இழிவுபடுத்துகிறார் என்பதற்காகப் பன்றியாகச் சித்தரிக்கப்படுகிறார். இதுவும் வன்முறையின் பகுதியே, சகிப்பின்மையின் பகுதியே.*

*நான் எந்த மதக்காரனுக்கும் ஏஜண்டு அல்ல, அல்லது எந்த மதத்தக்காரனுக்கும் நான் அடிமையுமல்ல, அன்பு அறிவு என்கிற இரண்டு தத்துவங்களுக்கு மாத்திரம் ஆட்பட்டவன். மதம் என்பது நாட்டிற்கோ ஒரு சமூகத்திற்கோ ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்க வேண்டியது? ஒரு தேசத்தையோ, ஒரு சமூகத்தையோ கட்டுப்படுத்தி ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனசாட்சிக்கு கட்டுப்பட்டதா அல்லது ஒரு மனிதனின் மனசாட்சியைக் கட்டுப்படுத்தக்கூடியதா? மனிதனுக்காக மதமா? மதத்திற்காக மனிதனா என்பவைகளைத் தயவு செய்து யோசித்துப்பாருங்கள் (குடியரசு நாளிதழ் - 11.09.1927).*

*பெரியாரைப் பன்றியாக்கியவர்கள் மதத்திற்குக் கட்டுப்பட்ட மனிதர்கள் அன்றி வேறில்லை. அவர்களது மூளையை மதவெறி முழுமையாக அடைத்துக் கொண்டிருக்கிறது. அவர்களது மூளையில் கேள்விகள் எழும்புவதில்லை. அதனால்தாம் அவர்களை நோக்கிப் பெரியார் பேசுகிறார். அவர்களுக்காகப் பரிதாபப்பட மட்டுமே முடியும். பெரியாரும் அதைத்தான் செய்தார். தன்னை எதிரியாக நினைத்து அவருக்கு எதிராக வினைபுரிந்தவர்களை அப்படித்தான் எதிர்கொண்டார்.*

*“தூத்துக்குடியில் சுமார் 20, 30 சுவர்களில் இராமசாமிக் கழுதைக்குச் செருப்படி என்று எழுதியிருந்தது. ஆனால் இதுவரை அடி விழவில்லை. இங்கும் இராமசாமிக் கழுதை செத்துப் போய்விட்டது என்றும், இராமசாமியின் மனைவி நாகம்மாள் அவிசாரி என்றும் எழுதியிருந்தது.*

*“இராமசாமிப் பெரியார் சிரஞ்சீவியாக இருக்க வேண்டும் என்று எழுதியிருந்ததைப் பார்த்து சந்தோசப்பட்டிருந்தேனேயானால் ராமசாமிக் கழுதை செத்துப்போய்விட்டது என்பதற்கு நான் வருத்தப்பட வேண்டும். அது போலவே, ராமசாமி மனைவி கற்புக்கரசி என்று எழுதி இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து, மாதம் மும்மாரி மழைவரச் செய்து பயன் பெற்று இருந்தால் ராமசாமி மனைவி நாகம்மாள் அவிசாரி என்பதற்கு நான் விசனப்பட வேண்டும். ஆகவே, அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் இவற்றிலிருந்து ஓர் அளவுக்கு நான் வெற்றி பெற்றுவிட்டேன் என்பதை மாத்திரம் உணருகிறேன்!” (குடியரசு-11.10.1931).*

*தன்னைத் தூற்றும் வார்த்தைகளின் பொருள் அறிந்து அதன் பயன் அறிந்து பெரியார் பேசுகிறார். தூற்றும் வார்த்தைகளைக் கூட அது சமூகத்திற்கு எப்படியான நன்மையைத் தரும் என்பதிலிருந்து தன்னைப் பெரியார் வெளிப்படுத்துபவராக இருக்கிறார். திருவாளர் பன்றிச் சித்திரக்காரர் தன்னையறியாமல் சமூகத்தூய்மையின் ஓர் அங்கமாகப் பெரியாரைப் பன்றியாகச் சித்தரித்திருப்பதாகப் பெரியாரியர்கள், சமூகவியளாளர்கள் எடுத்துக் கொள்ள முடியும். பெரியாரின் கூற்று அப்படித்தான் சொல்கிறது. இது பெரியார் சொல்கிறபடி பெரியாருக்கு வெற்றி. பன்றியாகச் சித்தரித்த அந்தச் சித்திரக்காரருக்கு அவமானகரமான தோல்வி என்பதைத் தவிர வேறு எப்படி சொல்ல முடியும்?*

*“ஒரு மனிதனை மதிக்கத் தெரியாதத் எந்தத் தத்துவமும், எந்தக் கோட்பாடும், எந்தப் படைப்பும், எந்தக் கலையும், எந்த ஓவியமும், எந்த இசையும், எந்த வழிபாடும், எந்தப் பண்பாடும், எந்தப் பெருமிதமும், எந்த வாழ்க்கை முறையும் எனக்கு வேண்டாம்!” என்ற பெரியாரின் பிரகடனம் முக்கியமானது. அந்த வன்மம் நிறைந்த பன்றிச் சித்திரத்துடன், சித்திரக்காரருடன் வைத்துப் பேசவேண்டிய ஒன்று.*

*“பார்ப்பனர்கள் இந்தப் பிறவியில் விவசாயம் செய்தால் அடுத்த பிறவியில் பன்றிகளாகப் பிறப்பார்கள் என்று ஒரு முறை ராஜாஜி சொன்னதற்குப் பெரியாரின் எதிர்வினை எப்படியிருந்தது பாருங்கள். “அப்படின்னா இந்த பிறவியில் பன்றிகளா உள்ளது எல்லாம் போன பிறவியில் விவசாயம் செய்த பார்ப்பனர்களா?”*

*பெரியாரை இழிவுபடுத்தப் போய் கடைசியில் பார்ப்பனர்களை இழிவுபடுத்தியிருக்கும் சித்திரம் பற்றிச் சொல்ல என்ன இருக்க முடியும்?* ●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | செல்லப்பா

# எறும்பைக் கொல்ல துப்பாக்கியைத் தூக்கும் பண்பாட்டை வளர விடலாமா?



இந்திய துணைக் கண்டத்தை வழிநடத்தும் ஒன்றிய அரசைத் தேர்ந்தெடுக்கும் நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில் நாடெங்கும் இராமர் கோயில் விவகாரம் பேசு பொருளாக்கப்பட்டிருக்கிறது. உத்தரப்பிரதேசத்தில் சிறுபான்மையினர் தொழுகை நடத்திய பாபர் மசூதியைத் தரைமட்டமாக்கிய இடத்தில் தமக்குக் கோயில் அமையப்போகிறதே என்ற பிரக்ஞையற்று, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக இராமர் கொழுகொழுவென வளர்ந்தபடியே இருக்கிறார். அவருக்கு இணையாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் மேன்மைமிகு பிம்பமும் ஊதிப் பெருக்கவைக்கப்படுகிறது. இராமர் கோயிலைத் துருப்புச்சீட்டாக முன்வைத்து மூன்றாம் முறையாக ஆட்சியைப் பிடிக்கப் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றுகிறது பாரதிய ஜனதா கட்சி. இராமர் கோயில் திறக்கப்பட்ட பின்னர் நாட்டில் பாலாறும் தேனாறும் பொங்கிப் பிரவகிக்கப் போகிறது, ஏழை எளியோரின் வேதனைகள் மறையப் போகின்றன என்பன போன்ற நைச்சியமான கருத்துகளை வெகுமக்கள் ஊடகங்களின் ஒத்துழைப்புடன், பரப்பிவருகிறது அக்கட்சி.

மதம் வேறு, ஆன்மிகம் வேறு எனப் பிரித்தறியவியலாத மனிதர்கள் 5 கோடிப் பேரை 'ராம் தர்ஷன் அபியான்' என்னும் பெயரில் இலவசமாக இராமர் கோயிலுக்கு அழைத்துச் செல்லும் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. உத்தரப்பிரதேச அரசு 100 கோடி ரூபாய் செலவில் இராமர் கோயிலைத் திறந்துவைத்துள்ளது. மக்களை இராமர் கோயிலுக்கு அழைத்துச் சென்றுவந்தாலே, பக்திப் பரவசத்துடன் அவர்கள் தங்களுக்கு வாக்களித்து, தங்களை வெற்றிமேடைக்கு மிக எளிதாகக் கொண்டுசென்றுவிடுவார்கள் என்னும் ஒற்றை நம்பிக்கையில் ஆளும் பாஜகவினர் மிகவும் உற்சாகமாகச் செயல்படுகிறார்கள். மக்களின் இறைநம்பிக்கையைப் பகடைக்காயாக்கித் தேர்தல் எனும் பரமபதத்தில் ஏணியில் ஏறி வெற்றிக் கனியைப் பறிக்க முயல்கிறது பாஜக. தங்களது ஆட்சியின் தோல்விகளை மறைக்க இராமர் கோயிலைச் சாதனையாக முன்னிறுத்துகிறது பாஜக எனத் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. அத்துடன் இந்தியா கூட்டணியில் உள்ள காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மத நல்லிணக்கத்தை முன்னிறுத்தி, இராமர் கோயில் திறப்பு விழாவை முற்றிலுமாகப் புறக்கணித்துள்ளன;

## எடுபடாத மத அரசியல்

ஒன்றிய அரசை நடத்தும் பாஜகவைப் பொறுத்தவரை சாதி, மத அரசியலில் ஊறிப்போனது அது என்பது அரசியல் பால பாடம் அறிந்த எவருக்கும் தெரிந்த ஒன்று. அக்கட்சியினர், சாதிப் பாகுபாட்டையும், மதப் பாகுபாட்டையும் தங்கள் அரசியல் லாபத்துக்கான எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். எங்கே மத அரசியல் எடுபடுமோ அங்கே மதத்துக்கான எரிபொருளையும், எங்கே சாதி அரசியல் எடுபடுமோ அங்கே சாதிக்கான எரிபொருளையும் தனது அரசியல் லாபத்தின் பொருட்டு நிரப்பிக்கொள்வது அதன் வாடிக்கை.

பாபர் மசூதியை இடித்து இராமர் கோயில் கட்ட வேண்டும் என்னும் மாபெரும் இலக்குடன் தேசிய ஆளுமை லால் கிருஷ்ண அத்வானி நடத்திய ரத யாத்திரை தொடங்கி இன்றைக்குத் தமிழ்நாட்டு பாஜக தலைவர் அண்ணாமலை நடத்தும் 'என் மண் என் மக்கள்' பாதயாத்திரை வரை திரியைத் தூண்டினால் தீபம் எரியும் என்ற தீர்மானத்திலேயே அந்தத் திசை நோக்கியே காய் நகர்த்தப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இங்கே ஒருபோதும் மத அரசியல் எடுபட்டதில்லை என்பதே வரலாறு.

தமிழ்நாட்டில் 1971ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது, இராமர் படத்தைச் செருப்பால் அடித்துவிட்டனர் என்று, மக்களின் மத உணர்வுக்கு எதிராகத் திராவிடச் சிந்தாந்தக் கட்சியான திமுக நடந்துகொள்வதாக இல்லாததையும் பொல்லாததையும் கூறி அப்போது காங்கிரஸ் சார்பில் வாக்கு கேட்கப்பட்டது. ஆன்மிகவாதிகள் இறைநம்பிக்கை காரணமாகத் திமுகவுக்கு எதிராக வெகுண்டு எழுந்து தங்களுக்கு வாக்களித்துவிடுவார்கள் என்ற காங்கிரஸின் எதிர்பார்ப்பு பொய்த்துப்போனது. தமிழ்நாட்டு மக்கள் கடவுள் மறுப்பு பேசிய திமுகவுக்கு 184 தொகுதிகளை வாரி வழங்கியிருந்தனர். 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணரை அவமதிக்கிறார்கள் என்று சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், வேலைக்கு ஆகவில்லை. பகுத்தறிவு மண் எனத் திராவிடர் சொல்வதற்கு மாற்றாக, ஆன்மிக பூமி என பாஜக வாய்க்கு வாய் பேசும் தமிழ்நாட்டில் பாஜகவின் மத அரசியல் எடுபடுவதேயில்லை; தேர்தல் களத்தில் நோட்டாவை மிஞ்சவே படாதபாடு பட வேண்டியதிருக்கிறது. ஆன்மிகத்துக்கும் மதத்துக்கும் இடையிலான வேறுபாட்டைத் தமிழ்நாட்டினர் புரிந்துகொண்டுதான் செயல்படுகின்றனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இங்கே மத அரசியல் காலூன்ற மக்கள் இடம்கொடுப்பதில்லை. இதுதான் இன்றைக்கு வரையான கள யதார்த்தம். ஆகவே, தமிழ்நாட்டில் அரசியல் வண்டி மதப் பாகுபாடு என்னும் எரிபொருளால் ஓடாது என்பதை உணர்ந்துள்ளதால், இங்கே சாதிப் பாகுபாடு என்னும் எரிபொருளையே நிரப்பி வெற்றிபெற வேண்டும் என்று அது நினைக்கிறது.

### சாதி அரசியல் எனும் சதி

வட இந்திய மாநிலங்களில் தேர்தல் வெற்றிக்கு மதத்தைப் பயன்படுத்துவது போல் பயன்படுத்தித் தமிழ்நாட்டு அரசியல் களத்தில் வெற்றிக்கனியைப் பறிக்க இயலாது என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்கும் பாஜக இங்கே சாதி அரசியல் வழியே வெற்றிபெற முயல்கிறது. இங்கே திராவிட உணர்வு இருப்பதால், அந்தத் திராவிட உணர்வைச் சிதைக்க சாதி அரசியலை முன்னெடுக்கிறது பாஜக. சாதியால் மனிதரைப் பிளவுபடுத்தி அதில் குளிர்காய நினைக்கிறது பாஜக. ஆதிக்க சாதி, ஒடுக்கப்பட்டோர் எனத் தமிழ் பேசும் திராவிடர்களைப் பிளவுபடுத்திக் கிடைக்கும் இடைவெளியில் தேர்தல் அரசியலில் வெற்றியை நோக்கி நகர விழைகிறது. இந்த நயவஞ்சக எண்ணத்திற்குத் தமிழ்நாட்டின் மக்கள் பலியாகிடக் கூடாது என்பதே சமூகம் குறித்த அக்கறைகொள்வோரின் எண்ணமாக உள்ளது.

மனிதர்களின் நல்லிணக்கத்தைச் சிதைக்கும் வகையிலான சாதியையும் மதத்தையும் தூக்கிப் பிடிக்கும் அமைப்புகளையும் பாஜக போன்ற அரசியல் கட்சிகளையும் கண்டறிந்து அவற்றால் ஏற்படும் தீங்குகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளும் பெரும்பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆனால், நம்மில் சிலர் அறிந்தோ அறியாமலோ இந்தத் தீங்குக்குத் துணைபோகிறார்கள் என்பதே கசப்பான உண்மை. இதனால்தான் பாஜக தமிழ்நாட்டில் சாதி அரசியலை முன்னெடுத்து வெற்றிபெற இயலுமா எனப் பார்க்கிறது. சாதிரீதியிலான கணக்கு வழக்குகளுடன் களம் காணத் துடிக்கிறது பாஜக. தமிழ்நாட்டில் அதற்கான சாத்தியம் இருக்கிறது என்று அக்கட்சி நம்பும் வகையிலான சில நிலைமை இங்கே உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

முதுகுளத்தூர் கலவரம் தொடங்கி தர்மபுரி வன்முறை வரை பல சாதியக் கொடுமைகள் அரங்கேறியுள்ளன தமிழ்நாட்டில். ஆகவே, இங்கே சாதிரீதியிலான மோதல்களை எளிதில் உருவாக்கிவிடலாம் என பாஜக நம்புகிறது. இந்த நிலையில் சாதிப் பாகுபாடு என்னும் சேற்றில் சிக்கிக்கொண்டு வெளிவர மறுப்பது சரியாக இருக்குமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாஜக விரும்பும் சூழல் இங்கே உருவாவது பொதுச் சமூகத்துக்கு நல்லது அன்று. ஆனால், அத்தகைய சூழல் உருவாகிடுமோ என்னும் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சாதிப் பாகுபாடு தொடர்பான பல நிகழ்வுகள் இங்கே அரங்கேறுகின்றன.

### சிறையிலும் பள்ளியிலும் தொடரும் பாகுபாடு

அண்மையில் உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம் உள்ளிட்ட 11 மாநிலங்களில் உள்ள சிறைகளில் சாதியப் பாகுபாடு நிலவுவதாகவும் அது குறித்துப் பதிலளிக்க வேண்டும் என்றும் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இந்த மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடும் உள்ளதால் நாம் இதை உற்றுக் கவனிக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பாளையங்கோட்டைச் சிறையில் கைதிகளைச் சாதிரீதியாகப் பிரித்துவைத்திருப்பதாக 2018இல் புகார் எழுந்தது. இது தொடர்பாக மனித உரிமை ஆணையம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. சிறைக்கைதிகளைச் சீர்திருத்துவதற்காச் சிறைக்குள் நூலகம் அமைத்து அவர்கள் வாசிப்புக்கு வழிசெய்யும் ஒரு மாநிலத்தில் இத்தகைய சாதிப் பாகுபாடு சிறைக்குள்ளேயும் தொடர்வதைச் சமூகநீதி பேசும் ஒரு மாநிலத்தின் முகத்தில் பூசப்படும் கரியாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இதேபோல், 'தீண்டாமை ஒழிப்பு முன்னணி' பள்ளிகளில் சாதியப் பாகுபாடுகள் குறித்துக் கள ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின் முடிவும் சமூகநீதியைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. கழிவறையைச் சுத்தம் செய்யும் தலித் மாணவர்கள், சாதிக் கயிறுகள் அணிந்து வரும் மாணவர்கள், சாதி மோதல் நிகழ்ந்த பள்ளிகள், சாதிப் பெருமை பேசுதல் எனப் பல்வேறு வகைகளில் ஆய்வு முடிவைத் தந்து அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். இந்த அறிக்கையின் முடிவுகளைப் பார்க்கும்போது அதிர்ச்சியாக உள்ளது. சாதி ஒழிப்பிலும் தீண்டாமை ஒழிப்பிலும் நாம் செல்ல வேண்டிய தூரத்தை நினைத்து ஆயாசமாக உள்ளது. தமிழ்நாடு பண்பட்ட பூமி, சாதி, சமயப் பூசல்களால் பாதிக்கப்படாத மண் என்றெல்லாம் நாம் நெஞ்சு நிமிர்த்தித் திரிந்தாலும் இன்னும் இங்கே சாதியப் பாகுபாடு மனிதர்களைப் பிரித்துவைத்திருக்கிறது. வேங்கை வயல் போன்ற சம்பவங்கள் சகோதர சமத்துவம் விழைவோரின் வேதனையைப் பெருக்குகின்றன. பெருமரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாதி என்னும் கருத்தியல் இந்தியத் துணைக் கண்டம் முழுவதையுமே பாகுபடுத்திவைத்திருக்கிறது; சாதியப் பாகுபாடானது இந்தியச் சமூகத்தில் எங்கெங்கிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது. வழிபாட்டுத் தலங்கள், கல்விச் சாலைகள், சீர்திருத்தக் கூடங்கள் எனச் சாதியின் கொடும்பிடியிலிருந்து சமூக அமைப்புகள் எவையும் விடுபட வழியில்லை என்பதே யதார்த்தமாக உள்ளது.**

வேர் சுற்றுச் சுவர்களைப் பிளந்துவிடுவதைப் போல் சாதியின் வேர்கள் சமூகத்தைப் பிளந்துசெல்கிறது. இந்தப் பாகுபாட்டை ஊதி ஊதிப் பெரிதாக்கித் தான் குளிர்காயலாம் என்பதுதான் பாஜகவின் செயல்திட்டம்.

## ஒடுக்கப்பட்டோருக்கு எதிராகச் செயல்படும் பாஜக

தன்னை ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவானதா பாஜக காட்டிக்கொள்ளும்; பழங்குடியினரை குடியரசுத் தலைவர் ஆக்கினோம் என மார்தட்டும், பட்டியலினத்தைச் சேர்ந்த தமிழரான எல். முருகனை அமைச்சர் ஆக்கினோம் எனப் பெருமை பேசும். ஆனால், பாஜக உண்மையிலேயே சாதிப் பாகுபாடு பார்க்காத கட்சியா? அப்படி இருந்தால் அது ஏன் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கும் ஆணைக்கு எதிராக நீதிமன்றத்தின் படிகளில் ஏறி இறங்குகிறது. இவ்வளவு ஏன், பட்டியலினச் சாதியைச் சார்ந்தவரை ஒன்றிய அமைச்சராக்கி அழகுபார்த்த அந்தக் கட்சி வேங்கை வயல் போன்ற சம்பவங்களில் பெரிதாக எந்தப் போராட்டத்தையும் நடத்தியதா? உண்மையிலேயே ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவான கட்சியாக அது இருக்குமானால், பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினருக்கான 10 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக அது நின்றிருக்குமா? இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

அண்மையில் சாதிதொடர்பாக ஊடகங்களில் பரவிய இன்னொரு செய்தியும் பாஜகவின் சாதி தொடர்பான வேடத்தை அம்பலப்படுத்தியது. அது சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு அமலாக்கத் துறை நோட்டீஸ் அனுப்பிய செய்தி. சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுகா, ராமநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த சகோதரர்களான கண்ணையன், கிருஷ்ணன் ஆகிய இருவருக்கும் அமலாக்கத் துறையிலிருந்து அவர்களது பட்டியலினச் சாதியைக் குறிப்பிட்டுச் சட்டவிரோதப் பணமாற்றம் தொடர்பான நோட்டீஸ் அனுப்பப்பட்டது பலத்த அதிர்வலைகளை எழுப்பியது. இதன் பின்னணியில் நில அபகரிப்பு விவகாரம் உள்ளதாகவும் பாஜகவைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர் குணசேகரன் என்பவர் இருப்பதாகவும் செய்தி ஊடகங்களில் தகவல் வெளியானது.

இந்த வழக்கின் பின்னணிச் சம்பவத்தைத் தெரிந்துகொண்டால்தான் மத்தியில் ஆட்சியிலிருக்கும் கட்சி எந்த எல்லைவரை தன் அதிகாரத்தின் கொடுங்கரத்தை வீசுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். சேலம் விவசாயிகளின் நோட்டீஸ் விவகாரத்தின் தொடக்கப் புள்ளியான சம்பவம் 2017ஆம் ஆண்டில் நடந்துள்ளது. அப்போது, விவசாயிகள் கண்ணையன், கிருஷ்ணன் இருவருக்கும் சொந்தமான விவசாய நிலத்தில் அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்கிக் காட்டெருமை ஒன்று உயிரிழந்துள்ளது. அவர்கள் அதைத் தங்கள் நிலத்தில் புதைத்திருக்கிறார்கள். விவசாயிகள் காட்டெருமையைக் கொன்றுவிட்டதாகக் குற்றம்சாட்டி 2017 ஆம் ஆண்டில், வனவிலங்குப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவர்கள் இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட விவசாயிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றம் தகுந்த ஆதாரங்களுடனும் சான்றுகளுடனும் நிரூபிக்கப்படவில்லை என்பதால் ஆத்தூர் செஷன்ஸ் நீதிமன்றம் 2021ஆம் ஆண்டு இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியது.

## பின்னணியில் ஒரு குற்ற நோக்கம்?

2021ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு வழக்கை அமலாக்கத்துறை எந்த அடிப்படையில் தன்னிச்சையாக விசாரணைக்கு எடுத்துக்கொண்டது, ஏன் நோட்டீஸ் அனுப்பியது, இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்றெல்லாம் பல கேள்விகள் எழுந்தன. ஒரு வழக்கில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் விவசாயிகள் இருவரிடம் சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் தொடர்பாக விசாரணை நடத்த அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியதோடு மட்டுமல்லாமல் பட்டியலினச் சாதியைச் சேர்ந்த ஏழை விவசாயிகளின் சாதிப் பெயரை வேறு குறிப்பிட்டிருந்ததால், இதன் பின்னணியில் வேறு பெரிய குற்ற நோக்கம் இருக்குமோ என்னும் சந்தேகம் எழுப்பப்பட்டது.

ஒருவேளை, உயிரிழந்த காட்டெருமை மூலம் விவசாயிகள் ஏதாவது பொருளாதார பலன் பெற்றிருந்தால் சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் எனச் சொல்லலாம். ஆனால், காட்டெருமை மின் வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது. காட்டெருமையை விவசாயிகள் கொன்றிருந்தால் அதை வனத் துறை நீதிமன்றத்தில் நிரூபித்திருந்தால் விவசாயிகள் விடுதலை செய்யப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஆகவே, எந்தக் குற்றமும் செய்திராதவர்கள் விவசாயிகள் என்பது நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் தெளிவாகத் தெரிகிறது. அதனால்தான் நீதிமன்றத்தில் அவர்கள்மீது சுமத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றத்தை நிரூபிக்க முடியவில்லை. நீதிமன்றமும் அவர்களை விடுதலைசெய்திருக்கிறது.

ஆக, சட்ட விரோதப் பணப்பரிமாற்றம் என்று சொல்லத்தக்க வகையில் எந்த ஒரு குற்றம் செய்திராத அப்பாவி விவசாயிகள் மீது அச்சுறுத்தும் நோக்கத்தில் அமலாக்கத் துறை ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி, அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்களை விசாரிக்க நோட்டீஸ் அனுப்பியுள்ளது. விவசாயிகளை மிரட்டுவதற்கு அரசின் அமைப்பு ஒன்று துணைபோயுள்ளது என்றுதான் இந்நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது. இதன் பின்னணியில் அரசியல் அதிகாரத்தின் தூண்டுதல் இல்லாமல் இப்படியான நடவடிக்கைக்கு அமலாக்கத் துறை துணியுமா? இதன் பின்னணி என்ன என்றெல்லாம் சந்தேகங்கள் எழுப்பப்பட்ட நிலையில், விவசாயிகளுக்கு ஆதரவாகப் பொதுவுடைமைவாதிகள் வலுவாகக் குரல் கொடுத்தனர்.

இது தொடர்பான விவாதங்கள் பொதுவெளியில் முன்னெடுக்கப்பட்ட போதுதான், மறைந்திருந்த பூதம் வெளிவருவதுபோல் அடுக்கடுக்கான தகவல்கள் பொதுவெளியில் பரவுகின்றன. நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக கண்ணையன், கிருஷ்ணன் ஆகியோருக்குச் சொந்தமான நிலத்தைக் கைவசப்படுத்தும் வஞ்சக எண்ணத்துடன் விவசாயிகளின் நிலத்துக்கு அருகே நிலம் வைத்திருந்த சேலம் மாவட்ட பாஜக செயலாளர் குணசேகரன் செயல்பட்டு வந்ததாகவும் இதனால் பல ஆண்டுகளாக அந்த நிலத்தில் விவசாயம் செய்ய முடியாத நிலை நீடித்து வந்ததாகவும் தெரிகிறது. ஆகவே, அவரது தூண்டுதலின் பேரில் பழைய வழக்கு ஒன்று தூசு தட்டப்பட்டு முறையற்றவகையில் அரசு அமைப்பான அமலாக்கத்துறை வழியே அச்சுறுத்தும் வகையிலான நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

### எளியோரை மிரட்டும் அமைப்பு

அரசு அமைப்பைச் சாமானியரை மிரட்டிப் பணியவைக்கப் பயன்படுத்துவதா எனச் சமூக ஆர்வலர்களும் இடதுசாரிகளும் தொடர்ந்து குரல் எழுப்பிவந்த நிலையில், விவசாயிகள் கண்ணையன், கிருஷ்ணன் ஆகியோருக்குச் சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாக அனுப்பிய நோட்டீஸைத் திரும்பப்பெற அமலாக்கத்துறை முடிவெடுத்த தகவல் வெளியானது. தனிப்பட்ட பகைமை காரணமாக இரண்டு விவசாயிகளையும் பயமுறுத்தும் வகையில் அமலாக்கத் துறை மூலம் நோட்டீஸ் அனுப்பச் செய்திருக்கிறார் பாஜக பிரமுகர் ஒருவர் என்பது அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. ஆனால், அந்தப் பிரமுகர் இதை மறுத்துள்ளார். இது தொடர்பாக விளக்கமளித்த பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையும் சேலம் மாவட்டச் செயலாளருக்கும் அமலாக்கத்துறை நடவடிக்கைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று கூறியிருந்தார்.

பரவலாகப் பொதுச் சமூகம் விழித்துக்கொண்ட நிலையில், அந்த நோட்டீஸை அமலாக்கத்துறை திரும்பப் பெற்றுக்கொண்டது என்றாலும், எளிய விவசாயிகள் இருவரைத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக பாஜக பிரமுகர் ஒருவர் அமலாக்கத்துறையை வைத்து மிரட்ட முடியும் என்பது எளிதில் சீரணிக்க முடியாததாக இருந்தது. பொதுவாக, அரசியல் ஆளுமைகள், பெரும் தனவந்தர்கள் போன்ற சமூகத்தின் உயர்மட்டத்தில் இருப்பவர்களை மிரட்டவும் அரசியல்ரீதியில் பணியவைக்கவுமே அரசு அமைப்பான அமலாக்கத் துறையை இதுவரை பாஜக பயன்படுத்திவந்தது; இப்படி அரசு அமைப்பைப் பயன்படுத்த அது ஒருபோதும் தயங்கியதில்லை. ஆனால், அதே ஆயுதத்தைச் சாமானியர்கள்மீது பிரயோகிக்க முயல்கிறது எனும்போது, பாஜகவின் அதிகார வெறி வானமே எல்லையாகக் கொண்டு காட்டுத் தீ போல் பரவுகிறது என்பதை எப்படி மறுக்க முடியும்? தொடர்ந்து இதே கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்தால் சாமானியர்கள் நிலை என்னவாகும் என்னும் அச்சம் பொதுச் சமூகத்தினரிடையே உருவாகாமல் இருக்குமா? கையில் துப்பாக்கி இருக்கிறது என்பதற்காகக் கண்ணில் படும் சிற்றெறும்பைச் சுட்டுக்கொல்ல முயல்வது போல் அமலாக்கத் துறையின் இந்த நோட்டீஸ் அனுப்பிய செயல் உள்ளது.

சாதி என்னும் கருத்தியல் இந்தியத் துணைக் கண்டம்முழுவதையுமேபாகுபடுத்திவைத்திருக்கிறது; சாதியப் பாகுபாடானது இந்தியச் சமூகத்தில் எங்கெங்கிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது. வழிபாட்டுத் தலங்கள், கல்விச் சாலைகள், சீர்திருத்தக் கூடங்கள் எனச் சாதியின் கொடும்பிடியிலிருந்து சமூக அமைப்புகள் எவையும் விடுபட வழியில்லை என்பதே யதார்த்தமாக உள்ளது. கௌதம புத்தர் தொடங்கி வள்ளலார் வரை பல்வேறு ஞானிகளும், அண்ணல் அம்பேத்கர் முதல் தந்தை பெரியார்வரையான பகுத்தறிவுமிக்க தலைவர்களும் சாதிப் பூசல்களை எதிர்த்துத் தொடர்ந்து செயலூக்கத்துடன் பணியாற்றிவந்துள்ளனர். ஆனாலும், இதுநாள் வரை சாதி என்னும் பெருந்தொற்றானது மாயும் வழிதெரியவில்லை. நாளாக நாளாக அதன் கட்டுமானம் இறுக்கிக்கொண்டே போகிறது.

சாதி ஒழிப்பு நூலில் பெருஞ்சித்திரனார், சாதிகளுக்கு அடிப்படையாக மத ஆளுமையே பார்ப்பனீயமாக இங்கு மலந்துள்ளது... பார்ப்பனீயத்தை நாம் தவிர்க்க விரும்புகிறோம் என்றால், அதன் மேலாளுமையை நீக்கப் பாடுபடுகின்றோம் என்றால், அந்தப் பார்ப்பனர்களால் உருவாக்கப் பெற்ற சாதிகள் நமக்கு எதற்கு? என்று கேட்கும் அவர், உண்மையிலேயே பார்ப்பான் நம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை | து.பா.பரமேஸ்வரி


## மௌனத்தின் பக்கத்தில்

கொஞ்சமும் நகராது
சலன மற்று நிற்கும்
கடிகார முட்கள்...
கொஞ்சமும் அசையாது
குத்துக்காலிட்டு நிற்கும்
சாவியிட்ட பொம்மை...

கொஞ்சமும் பாயாது
இமைக்குள் நிலைகுத்தி நிற்கும்
கருவிழிகள்...

கொஞ்சமும் பதறாது
புத்தமாய் மௌனித்துக் கிடக்கும்
மனதின் பிரியங்கள்..

நேசங்களும் நெருடல்களும்
இழுபறி செய்தாலும்
பக்கவாட்டில் சன்னமாய்ப்
பாடித் தீண்டுகிறது
மௌனத்தின் ராகமொன்று



அடிமைப்படுத்தவில்லை; பார்ப்பனீயந்தான் நம்மை அடிமைப் படுத்தியிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார் என்பதை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியதிருக்கிறது.

### கேள்விக்குறியாகும் மக்களாட்சியின் மாண்பு

ஆக, சாதியக் கொடுமையின் பின்னணியாகச் சனாதனமும் பார்ப்பனீயமும் இருந்து வருகிறது. சோழர்காலத்தில் இறுகிய சாதியக் கட்டுமானம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக உயிர்ப்புடனும் வீரியத்துடனும் தன் வேலையைக் காட்டிவருகிறது. பார்ப்பனர்கள் இல்லாத கிறிஸ்தவத்தில் கூடச் சாதியின் தீமைகள் கேடுகளை விளைவித்துவருகின்றன. அந்த அளவுக்கு இங்கே சாதி விஷ விருட்சமாக வளர்ந்து நிற்கிறது; பார்ப்பனீயத்தின் தாக்கம் எல்லை கடந்து பரவியுள்ளது என்பதற்கு இதுவே சான்று.

பாஜக என்னும் கட்சி பார்ப்பனீயத்தின் பண்புநலன்களையும் மநுவாதிகளின் சிந்தனைகளையும் சிந்தையில் ஏந்திச் செயல்படுகிறது எனும்போது, நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது? மதம், சாதி இரண்டும் அரசியல் அதிகாரத்துடன் கைகோத்தது எனில் அதன் விளைவுகள் மிகவும் விபரீதமானவை. அதைக் கடந்த பத்தாண்டுகளாகப் பார்த்து வருகிறோம். மக்களாட்சியின் மாண்புகள் ஒவ்வொன்றாகக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவருவதை அன்றாடம் காண முடிகிறது.

ஒருபுறம் பட்டியலினச் சாதியைச் சார்ந்த ஒருவரை அமைச்சராக்கியுள்ளோம் எனச் சொல்வது, மறுபுறம் அரசு அமைப்புகளைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்டோரைக்கூட அச்சுறுத்துவது. இராமர் கோயில் அழைப்பிதழ் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படவில்லை என்பதை எப்படிப் புரிந்துகொள்வது? இது வெளிப்படையான சாதிப் பாகுபாடு இல்லையா? இப்படிச் செயல்படும் பாஜகவுக்குக் களம் அமைத்துக் கொடுப்பது போல் தமிழ்நாட்டில் சாதிப்பாகுபாடு என்னும் நிலைமை நீடித்தால் அதனால் பயனடையப் போவது பாஜகவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பாஜக போடும் கபட வேடத்தைப் புரிந்துகொள்ளாமல் நமக்குள் சாதியின் பெயரால் பிரிந்துகிடந்தால், நாம் பேசும் சமூக நீதிக்கு என்ன மதிப்பிருக்கும்? நமக்குள் நாம் ஒற்றுமையின்றிப் பிரிந்துகிடந்தால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக தமிழ்நாட்டிலிருந்துகூட நாடாளுமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் நிலை ஏற்பட்டுவிடலாம். அப்படி ஒருவேளை நடந்து மீண்டும் ஒன்றிய அரசை பாஜக கைப்பற்றிவிட்டதென்றால் அதன் பின்னர் நடைபெறும் சம்பவங்கள் வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத கொடுமையானவையாக இருக்கும் என உள்ளுணர்வு சொல்வது உங்களுக்குக் கேட்கவில்லையா? வந்த பின்னர் புலம்புவதைவிட வருவதற்கு முன்னர் காத்துக்கொள்வதுதானே பகுத்தறிவு?

●

கட்டுரையாளர், எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் மதிப்புரை | ந.முருகேசபாண்டியன்

# உயர்ஜாதியினருக்கு 10% EWS இட ஒதுக்கீடு சரியா? தவறா?

## சில விவாதங்கள்




**ஒன்றிய அரசான பிஜேபி கட்சி, 2019 ஆம் ஆண்டு உயர்சாதி ஏழைகளுக்கு 10% EWS இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை வேகம்வேகமாக ஐந்து நாட்களில் நிறைவேற்றி, நடைமுறைப்படுத்தியுள்ளது. உயர்சாதி ஏழைகள் இட ஒடுக்கீடுப் போராட்டம் எதுவும் நடத்தாத சூழலில் ஏன் இந்த அவசரமான சட்டம்? அதற்கான தேவை என்ன என்று யோசிக்க வேண்டியுள்ளது.**

ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ இட ஒதுக்கீடு, சமூக நீதி அடிப்படையிலானது. சமூக நீதி எனப்படும் இட ஒதுக்கீட்டைச் சமூகரீதியிலும் கல்விரீதியிலும் காலங்காலமாகப் பின்தங்கியவர்களுக்குத் தரவேண்டும் என்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்ட வரையறை. பொருளாதார அளவுகோலை முன்வைத்துப் புதியதாக இட ஒதுக்கீடு செய்வது, ஒருவகையில் சமூக அநீதி. ஒருவருடைய பொருளாதார நிலை மேம்பாடு அடைந்தாலும் சாதியரீதியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் மாறாமல்தான் இன்றளவும் இருக்கின்றன. இத்தகு சூழலில் 'உயர்ஜாதியினருக்கு 10% EWS இட ஒதுக்கீடு சரியா?' தவறா? என்ற தலைப்பில் சு.விஜயபாஸ்கர் 106 கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு முதல்வர், அரசியல் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேனாள் நீதியரசர்கள், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள், துணைவேந்தர், மேனாள் ஐஏஎஸ் அதிகாரி, பேராசிரியர்கள், இசைக் கலைஞர், மருத்துவர், பொருளியல் வல்லுநர்கள், சமூகவியலாளர், பத்திரிகையாளர்கள், ஆய்வு மாணவர்கள் போன்ற பல்வேறுபட்ட பிரிவினர் புதிய இட ஒதுக்கீடு பற்றி எழுதியுள்ள கட்டுரைகள், நூலில் இடம் பெற்றுள்ளன. உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களின் வாதங்கள், நீதியரசர் இரவீந்திர பட் வழங்கிய மாறுபட்ட தீர்ப்பு, நீதிமன்றத் தீர்ப்பின் மீதான விமர்சனங்கள், இட ஒதுக்கீட்டை எதிர்த்த அமைப்புகள் மற்றும் தலைவர்களின் அறிக்கைகள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வீர்யமான உரை போன்றன இட ஒதுக்கீட்டின் பன்முகத்தன்மைகளை விவாதிக்கின்றன.

இந்திய வரலாற்றில் பிறப்பின் அடிப்படையில் வருணாசிரமத்தை முன்வைத்து மேல்-கீழ் என்ற பாகுபாட்டிலான ஒடுக்குமுறை, ஆயிரமாண்டுகளுக்கும் கூடுதலாக இன்றளவும் நிலவுகிறது. மன்னர்களின் ஆட்சியில் பன்னெடுங்காலமாகப் பார்ப்பனர்கள் இறை வழிபாடு,' வேள்வி, சம்ஸ்கிருதக் கல்வி போன்றவற்றுடன் பிரம்மதேயம், மங்கலம் போன்ற பொருளியல் ஆதாயங்களையும் அனுபவித்தனர். உயர்சாதியினர் வணிகம், தொழில்களைச் செய்து வளமாக வாழ்ந்தனர். சாதிய அடுக்கில் முதல் மூன்று வருணத்தினருக்கு மட்டும் கல்வி கற்றிட உரிமை இருந்தது. நான்காம் வருணத்தினரான சூத்திரருக்குக் கல்வி கற்றல் மறுக்கப்பட்டது. பிரிட்டிஷாரின் காலனியாதிக்க ஆட்சியில் ஆங்கிலேயக் கல்வி முறை பரவலானதுடன் யார் வேண்டுமானாலும் அரசாங்கப் பணியில் சேர்ந்து பணியாற்றிடலாம் என்ற நிலை உருவானது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வருணாசிரமத்தை எதிர்த்துச் சமூக நீதிக்காகக் குரல் கொடுத்தவர்களில் பெரியார், அம்பேத்கர் போன்ற சிந்தனையாளர்கள் தனித்துவமானவர்கள். 1923 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நீதிக் கட்சியினரால் அமல்படுத்தப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், சமூகத்தில் நிலவிய சாதிய இழிவைக் கேள்விக்குள்ளாக்கியதுடன் ஒடுக்கப்பட்டவர்கள் சமூக அந்தஸ்து பெற்றிட வழி வகுத்தது.

" இடஒதுக்கீட்டின் அடிப்படை நோக்கமே, மதம், ஜாதியின் பெயரால் இந்த நாட்டு மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் தவறுகள் சரி செய்யப்பட வேண்டும் என்பதுதான். இது கருணையால் அல்ல, இடஒதுக்கீடு அவர்களின் உரிமை. அது பொருளாதாரம் சார்ந்தது அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏழைகளாக இருந்ததால் அவர்களுக்குக் கல்வி உரிமையும், ஆட்சியில் இடமும் மறுக்கப்பட்டது என்பதல்ல. அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறந்ததால்தான் மறுக்கப்பட்டது. சிலர் மற்றவர்களைத் தங்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடஒதுக்கீடு என்பது வாய்ப்புகளையும் அதை அனுபவிக்கும் வெளியையும் மட்டும் தருவதோடு மட்டுமல்லாது காலம் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட மகிழ்ச்சி என்னும் அடிப்படை உரிமையையும் சேர்த்தே வழங்குகிறது. கல்வியும் வேலைவாய்ப்பும் பொருளாதாரத்திற்கான அளவுகோல்கள் மட்டுமல்ல. அது கற்றலுக்கும், சமத்துவம் மற்றும் கண்ணியமான சமூக உறவுகளை உருவாக்குவதற்கும், இயற்கையின் பரிபூரணத்தை உணர்ந்துகொள்வதற்கும் சுப மரியாதையை மீட்டெடுப்பதற்குமான அளவுகோல்களும் ஆகும்.**

எந்த உரிமையும் இல்லாமல் போனது" என்று கனிமொழி கருணாநிதி மக்களவையில் பேசிய பேச்சு, புதிய இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையை நுட்பமாக விவாதித்துள்ளது.

"இடஒதுக்கீடு என்பது வாய்ப்புகளையும் அதை அனுபவிக்கும் வெளியையும் மட்டும் தருவதோடு மட்டுமல்லாது காலம் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட மகிழ்ச்சி என்னும் அடிப்படை உரிமையையும் சேர்த்தே வழங்குகிறது. கல்வியும் வேலைவாய்ப்பும் பொருளாதாரத்திற்கான அளவுகோல்கள் மட்டுமல்ல. அது கற்றலுக்கும், சமத்துவம் மற்றும் கண்ணியமான சமூக உறவுகளை உருவாக்குவதற்கும், இயற்கையின் பரிபூரணத்தை உணர்ந்துகொள்வதற்கும் சுப மரியாதையை மீட்டெடுப்பதற்குமான அளவுகோல்களும் ஆகும். அரசியலமைப்புச் சட்டத்தின் பீடிகையில் சொல்லப்பட்டுள்ள கண்ணியம் என்னும் சொல்லுக்கு இதுவே உண்மையான விளக்கமும் ஆகும்." இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணாவின் கட்டுரை, இட ஒதுக்கீட்டின் அடிப்படையை துல்லியமாக விவரித்துள்ளது..

சமூக நீதி ஏன் தேவை? என்ற கேள்வியைப் புரிந்திட வைதிகத்தின் பின்புலத்தில் பொதிந்திருக்கின்ற அரசியலைக் கண்டறிந்திட வேண்டியுள்ளது. இன்றைக்குச் சமூக நீதியை எதிர்க்கின்ற வைதிக சநாதனம் முன்னிறுத்துகின்ற வருணாசிரமம் காலந்தோறும் ஏற்படுத்தியுள்ள சேதங்கள் அளவற்றவை. வைதிக சநாதனம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யக்ஞம் என்ற வேள்வித்தீயை முன்வைத்து வாய்மொழியாகப் புனையப்பட்ட சடங்கியல் நூல்களான வேதங்களுடன் தொடர்புடையது. ரிஷிகளால் கேட்கப்பட்ட வேதங்களுக்குப் புனித அடையாளம் கற்பிக்கப்பட்டபோது வேதம், யக்ஞம், மந்திரம், வேதம் ஓதுகிற புரோகிதன் என எல்லாம் புனிதமயமாக்கும் அரசியல் நடந்தேறியது. வேதத்தைப் புனிதப் பிம்பமாக்கிட பிரம்மன், பிரம்மம், பார்ப்பனர் பயன்பட்டன. வேதங்கள், தொடங்கிப் பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் என்ற வைதிக சமய நூல்களின் வரிசை வளர்ந்தது. பிரம்மம் என்ற கருத்தியலைத் தத்துவமாக்கிட பயன்பட்ட உபநிடதங்கள் வேதாந்தத்தை உருவாக்கின. இது இந்தக் குணம் என்று சுட்டப்படக்கூடிய எந்தக் குணமும் இல்லாதது பிரம்மம் என்று உபநிடதம் வரையறுத்தது. வைதிக சநாதனவாதிகள் அருவமான சூக்குமமான ஒன்றைப் பிரம்மம் என்று வரையறுத்தனர். பிரம்மம் புனிதமானதாகவும் சடப்பொருளான உலகம் தீட்டு என்றும் தரப்பட்ட வைதிகத் தத்துவ விளக்கம் முக்கியமானது. பிரபஞ்சம் சுயம் அற்றது; பிரம்மம் மட்டும் சுயமானது. எனவே சுயமற்ற உலகை அழிப்பதுடன், அதிகாரத்தின் மூலம் பார்ப்பனர் எல்லாவிதமான செயல்களையும் செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டது. குறிப்பாக விளிம்புநிலையினர்மீது அதிகாரம் செலுத்தலாம்; சமூகத்தில் நிலவுகிற எல்லாவிதமான ஏற்றத்தாழ்வுகளையும் நியாயப்படுத்தலாம்; பெண்களைத் தீட்டுக்குரியவர்களாக ஒதுக்கிடலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டது. அதற்கான வெளிப்பாடான மநு தருமம், இன்றளவும் மக்களைப் பிறப்பு, பால்நீதியில் தீட்டு என இழிவுபடுத்தி ஒடுக்கிட வைதிக சநாதனம் வழி வகுத்துள்ளது.

வேதகாலப் பெருமைக்குப் பின்னர் சாதியமைப்பு முறை பொதிந்துள்ளது. சமூகத்தில் சாதிய அமைப்புகள் நேரடியாகச் செய்ததை வைதிக சநாதனம் மறைமுகமாகச் செய்ததுடன் நிலவுகிற ஏற்றத்தாழ்வான சாதிய அமைப்பிற்கு வலுவான தளமைத்தது. வேதாந்தத்திற்கும் சாதியத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதனால்தான் பிரமத்திற்கும் உலகினுக்கும் தீட்டு என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. பிரம்மம் கறாராகத் தீண்டாமையைப் பின்பற்றித் தூய்மையைப் பாதுகாத்திட வேண்டுமென்று வேதாந்தம் வலியுறுத்துகிறது. பிரம்மம் தன்னுடைய தூய்மையை முன்மொழிந்திட உலகம் மாயை, உடல் மாயை, உழைப்பாளர்கள் மாயை, பிறப்பு, இறப்பு, நிலம், இரும்பு, ரத்தம் போன்றனவும் மாயை என்கிறது. நிலத்தில் வேலை செய்கிற உழவர்கள் உள்ளிட்ட தொழிலாளர்கள், இறந்த விலங்குகளின் தோல்களைப் பதனிடுகிறவர்கள், பறை அடிக்கிற கலைஞர்கள், ரத்தத்தைத் தீண்டி வேலை செய்கிறவர்கள் போன்ற உழைப்பாளர்களைத் தீட்டுக்குரியவர்கள் என்று வேதாந்தம் அடையாளப்படுத்தியது. இவை போன்ற தொழில்களைச் செய்கிற உழைப்பாளிகளுடல் கலந்துவிடாமல் இருப்பதே பிரம்மத்தின் தூய்மை என்று குறிப்பிடுகிற வேதாந்தம், சாதியத்தின் வேர்களைத் தாங்கிப் பிடிக்கிறது.. வருணம், சாதிய அமைப்புகளின் உருவாக்கத்தில் யக்ஞங்கள் எனப்படும் வேள்விகள் முக்கிய இடம் வகிக்கின்றன. புருஷன் என்ற மகாமனிதனை வேள்வித்தீயில் பலியிட, அதிலிருந்துதான் பிரபஞ்சம், மனிதர்கள், உயிரினங்கள் உற்பத்தியானதாக வேதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றன. வேள்வித்தீயில் இருந்து உருவான புருஷனின் நெற்றியிலிருந்து பார்ப்பனரும் தோள்களில் இருந்து சத்திரியரும் தொடைகளில் இருந்து வைசியரும் கால்களில் இருந்து சூத்திரனும் தோன்றினர் என்ற வேதத்தின் விவரிப்பு, வருணக் கோட்பாட்டை முன்வைத்தது. உறுப்புகளில் இருந்து பார்ப்பனர் உள்ளிட்ட சாதியினர் தோன்றினர் என்ற கருத்தியல், பார்ப்பனர்களின் அதிகாரத்தைச் சமூகத்தில் தக்கவைத்தது. பிரம்மமும் வருணாசிரமமும் ஒத்திசைந்து செயல்பட்டதன் விளைவுதான் இன்றைய சாதிய ஏற்றத்தாழ்வுகள். இந்நிலைமைக்கு எதிராக 1923 ஆம் ஆண்டில் சாதியரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பதற்காகப் பெரியார் உள்ளிட்ட சமூக சீர்திருத்தவாதிகளின் முயற்சிகள்தான் சமூக நீதியான இட ஒதுக்கீடு என்ற புரிதல் இங்குப் பலருக்கும் இல்லை.

இடஒதுக்கீட்டில் உயர்சாதியினரை முன்வைத்துச் செயல்படுகின்ற ஆர். எஸ்.எஸ் உள்ளிட்ட இந்துத்துவா அமைப்புகளுக்குக் கூடுதல் ஆர்வம் இருக்கிறது என்றால், தனியார் துறையிலும் EWS இடஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டியதுதானே? கார்ப்பரேட்டுகளைக் கண்டு வாலை ஆட்டுகின்ற பிஜேபி அரசு ஏன் பம்முகின்றது? என்ற கேள்வி தோன்றுகின்றது? தனியார் துறையான கார்ப்பரேட்டுகளுக்கு ஆயிரக்கணக்கான கோடிகள் உள்ளிட்ட அனைத்துவிதமான சலுகைகளையும் வாராக் கடன்களையும் தருகின்ற பிஜேபி அரசு அங்கேயும் இடஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று கேட்காமல் வாய்மூடி மௌனமாக இருப்பது ஏன்? தனியார் துறைகளிலும் 10% EWS இடஒதுக்கீடு வேண்டும் என்று அவசரச் சட்டம் இயற்றாமல் ஏன் இந்தக் கள்ள மௌனம்? ஜாதிவாரிக் கணக்கெடுப்பு என்கிற விஷயத்தின்மீது பாம்பு அடைகாத்து உட்கார்ந்திருப்பதுபோல அமர்ந்திருக்கிற பிஜேபி அரசினுடைய கையாலாகத்தனத்தின் பின்னர் நுண்ணரசியல் பொதிந்துள்ளது.

. OBC பிரிவினரின் மக்கள்தொகை 65% முதல் 68% வரை உள்ளது. ஒப்பீட்டளவில் OBC, SC, ST மக்கள்தொகை அதிகமாக உள்ளது. மக்கள்தொகை விகிதாச்சாரத்துக்கு ஏற்ப இடஒதுக்கீடு தேவை என்கிற கோரிக்கை மீண்டும் வலுவடையும்போது உயர்சாதியினரை முன்வைத்து நடைபெறும் கபட நாடகம் அம்பலமாகும். இந்துத்துவா என்ற பெயரில் உயர்சாதியினரின் நலன்களைப் பாதுகாக்கின்ற பிஜேபி அரசாங்கமும் ஆர்எஸ்எஸ்காரர்களும் ஒடுக்கப்பட்டவர்களின் எதிரிகள்; பழங்குடியினரின் எதிரிகள்; பிற்படுத்தப்பட்டவர்களின் எதிரிகள்; பட்டியலினத்தாரின் எதிரிகள்; இஸ்லாமியர்களின் எதிரிகள்.

கடந்த நூறாண்டுகளாக இடஒதுக்கீட்டை எதிர்த்துத் திறமை, தகுதி எனக் குரல் கொடுத்த பார்ப்பனர் உள்ளிட்ட உயர்சாதியினர், 10% EWS இடஒதுக்கீடு என்று வரும்போது அமைதி காக்கின்றனர். தகுதி, திறமை பற்றிய பேச்சு எதுவும் இல்லை. உயர்சாதியினர், இந்துத்துவா கட்சியான பிஜேபியுடன் சேர்ந்துகொண்டு சமூக நீதிக்கு எதிராகவும் உழைக்கும் மக்களுக்கு விரோதமாகவும் தொடர்ந்து செயல்படுகின்றனர். கடந்த நான்காண்டுகளாக ஒன்றிய அரசாங்கப் பணியிடங்கள், வங்கி, பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்கள் தேர்வுகளில் உயர்சாதியினருக்குச் சார்பாக நடைபெறுகின்ற திட்டமிடல், விளிம்புநிலையினருக்கு எதிரானது. அண்மையில் வங்கிப் பணியாளர் தேர்வில் அறிவிக்கப்பட்டுள்ள கட் ஆஃப் மதிப்பெண்கள் பின்வருமாறு: S.c - 61.25%, S.T. - 53.75%, OBC - 61.25%, General - 61.25%, EWS - 28.5%. பட்டியலினத்தவரும் இடைநிலைச் சாதியினரும் ஒருவரையொருவர் எதிரிகளாகப் பாவித்து மோதல் நடத்துமாறு சமூகச்சூழலை உருவாக்கிவிட்டு, உயர்சாதியினர் கணிசமான அளவில் வேலை வாய்ப்புகளை அறுவடை செய்கின்றனர். 10% EWS இட ஒதுக்கீட்டினைப் பற்றி முழுமையாக அறிந்திடாமல் உயர்சாதியினரின் தந்திரங்களுக்குப் பட்டியலினத்தவரும் இடைநிலைச் சாதியினரும் பலியாகிக்கொண்டிருப்பது வேதனையான விஷயம்.

10% EWS இடஒதுக்கீட்டைப் பாரதிய ஜனதா கட்சி 'ஏழைகளுக்கான நீதி' என வரவேற்றுள்ளது. EWS இட ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, வருடத்திற்கு 8 இலட்சம் வருமானம் உள்ளவர்களும், 1000 சதுர அடியில் சொந்த வீடு கொண்டவர்களும் 'ஏழைகளாக' வரையறுக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் 30 கோடிப் பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் (கிராமங்களில் தினம் ரூ. 27/- வருவாய் உள்ளவர்; நகரங்களில் ரூ. 32/- வருவாய் உள்ளவர்) இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. ஏழைகளில் பெரும் பகுதியினர் SC, ST, OBC வகுப்பைச் சார்ந்தவர்கள். அரசாங்கம் தினசரி ரூ.75/- வருவாய் ஈட்டுகிறவர்களை வறுமைக்கோட்டுக்கு மேலானவர்கள் என வரையறை செய்துள்ளது. அதேவேளையில் உயர்சாதியினர் தினசரி ரூ.2,222/- வருவாய் ஈட்டினாலும் ஏழை என்கிற EWS 10% இட ஒதுக்கீடுச் சட்டம், கேலிக்கூத்து மட்டுமல்ல; சநாதனத்தைப் புதிய மொழியில் மீண்டும் முன்மொழிகின்றது.

வேலைவாய்ப்பிலும் கல்வியிலும் உயர்ஜாதியினர் பின்தங்கி உள்ளனரா? 2019 ஜூலை 17 அன்று பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் வெளியிட்ட தரவுகளின்படி, ஒன்றிய அரசின் 78 அமைச்சகங்களில் SC- 17.49; ST- 8.47%; OBC-21.57% வகுப்பைச் சேர்ந்த பணியாளர்கள் உள்ளனர். மீதமுள்ள 52.47% பணியாளர்கள் உயர்சாதியைச் சேர்ந்தவர்கள். 2021 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வி குறித்த அகில இந்தியக் கணக்கெடுப்பின்படி (AISHE), நாட்டின் அனைத்து உயர்கல்வி நிறுவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் சேர்க்கை விவரங்களின் அடிப்படையில், SC- 14.7%; ST- 5.6%; OBC- 37% வகுப்பு மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களின் சேர்ந்துள்ளனர். இதை ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கை எண்ணிக்கையுடன் (3,85,36,359) ஒப்பிடுகையில் 42.7% உயர்சாதி மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பிடித்துள்ளனர். அதாவது வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் கூடுதல் இடங்களை ஏற்கெனவே உயர்சாதியினர் பெற்றுள்ளனர் என்பதைப் புள்ளிவிவரங்கள்மூலம் அறிய முடிகின்றது. ."பொருளாதாரரீதியாக நலிவடைந்த குடிமக்கள் உயர்கல்வி நிறுவனச் சேர்க்கையிலும், பொது வேலைவாய்ப்பிலும், பொருளாதார வசதியின்மை காரணமாக, பொருளாதாரத்தில் அதிக வசதி பெற்ற நபர்களுடன் போட்டியிட இயலாமல் ஒதுக்கப்பட்டுள்ளனர்" என்ற ஒன்றிய அரசின் வாதத்தைப் புள்ளிவிவரங்கள் பொய்யாக்குகின்றன என்று நூலின் தொகுப்பாசிரியர் சு. விஜய பாஸ்கர் குறிப்பிடுவது ஏற்புடையதாகும்.

இஸ்லாமிய ஏழைகளுக்கு உயர்சாதி இட ஒதுக்கீட்டினால் பலன் கிடைப்பது மிகவும் அரிது. கடந்த இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சி முதலாக அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்துவரும் உயர்சாதியினருடன் போட்டியிடுவது சிரமம். இன்றைக்கும்கூட அரசாங்கத்தில் உயர்பதவிகளை வகிப்பது உயர்சாதியினர்தான். உச்சமன்ற நீதியரசர்கள் எல்லோரும் உயர்சாதியினர்தான்.

உயர்சாதிகளில் இருக்கும் ஏழைகள் முன்னேற்றமடைய வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. கார்ப்பரேட்டுகளுடன் கைகோர்த்து அவர்களின் நலன்களுக்காகச் செயல்படுகின்ற ஒன்றிய பிஜேபி அரசு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சீர்செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். ஆனால், பிரச்சினையைத் திசை திருப்பும்விதத்தில் அமல்படுத்தப்பட்ட 10% EWS இட ஒதுக்கீடுச் சட்டம், அறமற்றது. இட ஒதுக்கீடு என்பது வறுமை ஒழிப்புத் திட்டமல்ல. அது, ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டிருக்கின்ற சாதியரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களை அறிவுத்தளத்திலும், சமூகத்தளத்திலும் முன்னேற்றமடைய வழி வகுக்கின்ற திட்டமாகும். "10% EWS இட ஒதுக்கீடு செல்லும் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, சமூகநீதியை வென்றெடுப்பதற்கான நூற்றாண்டு காலப் போராட்டத்தில் ஒரு பின்னடைவு" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டிருப்பது சமகாலத்தின் அரசியல் சொல்லாடலுக்கு வழி வகுத்துள்ளது.

சு.விஜயபாஸ்கரின் தொகுப்பு முயற்சியும் குறைந்த விலையில் தரமாகப் புத்தகத்தை வெளியிட்டுள்ள நிகர்மொழி பதிப்பகத்தின் பதிப்புச் செயல்பாடும் சமூக அக்கறையின் வெளிப்பாடுகள்.

**உயர்ஜாதியினருக்கு 10% EWS இட ஒதுக்கீடு சரியா? தவறா?**
**சென்னை: நிகர்மொழி பதிப்பகம். பக்கம்: 584; விலை: ரூ.600/-. தொடர்புக்கு: 8248 455 455**

*கட்டுரையாளர்: விமர்சகர்*

கவிதை | பிரதிபா ஜெயச்சந்திரன்

# பூக்களை கவனிக்கத் தவறிவிட்டேன்

வானத்தில் பூத்த நட்சத்திரங்களைப்
பார்த்துக்கொண்டே என்னைக் கடந்து சென்ற
பூக்களைக் கவனிக்கத் தவறிவிட்டேன்

■

வந்த வழி தெரியும்
திரும்பிச் செல்ல முடியவில்லை

■

வாழ்வதற்கென்று வருகிறோம்
வாழாமல் போகிறோம்

■


காலத்தின் சிறையில் நாட்கள்
நாட்களின் சிறையில்
நான்

■

திசைகள் சுருங்கிய புள்ளியில்
காலூன்றும் மனம்

■

நகுலனைக் குத்தும் கடிகார முள்
எனக்கு விலா எலும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஆ. சிவசுப்பிரமணியன்

சென்றஇதழ் தொடர்ச்சி...

# தமிழகத்தில் காலந்தோறும் பலி



இறைவனின் படிமத்தை நீராட்டப் பயன்படுத்தப்படும் தேன், பால், எண்ணெய் ஆகியனவும் வழிபாட்டின் போது படிமத்தின் மீது தூவப்படும் மலர்கள், தானியங்களும், அதன் முன்னர் படையலாகப் படைக்கப்படும் காய்கனிகளும், தானியங்களும், சமைக்கப்பட்ட உணவுப் பொருட்களும் பலி என்பதனுள் அடங்கும். விலங்கு உயிர்ப்பலி, மனித உயிர்ப்பலி ஆகியனவும் பலி என்ற வரையறைக்குள் அடங்குவனவே. இவ்வாறு பலி கொடுக்கப்படும் விலங்கின் பெயரால் ஆடு பலிகொடுத்தல், மாடு பலிகொடுத்தல், கோழி பலிகொடுத்தல் என்று பாகுபடுத்திக் கூறலும் உண்டு.

இன்று பலி என்ற சொல் உயிர்ப்பலியைக் குறிக்கும் சொல்லாகவே வழங்குகிறது. உயிர்ப்பலி, நரபலி, விலங்கு உயிர்ப்பலி, விபத்தில் பலி, வெள்ளத்தில் மூழ்கிப் பலி, என்று இன்று வழங்கும் சொல்லாட்சிகள் உயிர்ப்பலியைக் குறிப்பனவாகவே பயன்படுத்தப் படுகின்றன. மாடு, எருமை, ஆடு என்ற மூன்று விலங்குகளையும் பலி கொடுப்பது முப்பலி எனப்படுகிறது (மாடு, ஆடு, கோழி என்று கூறுவதுமுண்டு).

காவு என்ற சொல் உயிர்ப் பலி ஏற்கும் நாட்டார் தெய்வங்கள் உறையும் இடத்தைக் குறிக்கும் சொல்லாக வழங்குகிறது. சங்க இலக்கியங்களில் பயின்றுவரும் காவு என்ற சொல் மரங்கள் அடர்ந்த சோலையைக் குறிக்கிறது. மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள மன்றத்தில் உறையும் கடவுளர்க்கு உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'காவு கொடுத்திருவேன்', 'காவு வாங்கிட்டு' என்று பேச்சுத் தமிழில் வழங்கும் சொற்களை மலையாள மொழியில் வழங்கும் காவு என்ற சொல்லுடன் ஒப்பிட்டு நோக்க இடமுள்ளது (இன்று சமஸ்கிருமயமாக்கலின் தாக்கத்தினால் கேரளத்தின் காவுகளில் உயிர்ப்பலி மறைந்து வருகிறது).

ஆனால் சங்ககாலத்தில் பலி என்ற சொல் உயிர்பலியை மட்டுமின்றி மலர்கள், தானியங்கள், தேன், கள் போன்றவற்றைப் படைத்து வழிபடுதலையும் குறிப்பதாய் இருந்துள்ளது. ஆவியம் (அனிமிசம்) குறித்த நம்பிக்கை இருந்தமையால் கடவுளர்களுக்கு மட்டுமின்றி, போர் முரசுளுக்கும் குருதிப்பலி இட்டு வணங்கி உள்ளனர் (புறநானூறு 362:3, 369:5). விலங்குகளில் ஆடு பலியிடல் பரவலாக இருந்துள்ளது. பசு பலியிடலும் இருந்துள்ளது.

### விலங்கு உயிர்ப்பலி

விலங்குகளைப் பலியாகக் கொடுப்பது தொன்மையான தமிழ் மரபாகும். ஆடு ஒன்றைப் பலிகொடுத்து அதன் இரத்தத்தில் தினை அரிசியை விரவி நிலத்தில் தெளித்ததாக அகநானூறு (22:10) குறிப்பிடுகிறது. 'கொழுப்பா தின்ற கூர்ம்படை மறவர்' என்ற அகநானூற்றுச் செய்யுள் (129:12) தொடரால் அறிய முடிகிறது. மற்றொரு அகநானூற்றுப் பாடல் (242:12-13) 'மழவர்கள் கொழுத்த பசுவைக் கொன்று தெய்வம் உறையும் வேப்பமரத்தின் அடியில் அதன் இறைச்சியைப் புழுக்கி உண்டதாகக் குறிப்பிடுகிறது.

காதல் வயப்பட்டமையால்தான் தன் மகள் உடல் மெலிகிறாள் என்ற உண்மையை அறியாத தாய் வேலன் என்றழைக்கப்படும் பூசாரியை அழைத்துத் தன் மகளைப் பற்றியிருக்கும் முருகனை விரட்டச் செய்யும் சடங்கை நடத்த வேண்டுவாள். இச்சடங்கு நிகழும் களம் வெறியாடு களம் என்றும் இந்நிகழ்வு வெறியாட்டம் என்றும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் கூற்று வடிவிலேயே இந்நிகழ்வு குறிப்பிடப்படுகிறது. வெறியாட்டு நிகழ்வில் மறி (ஆட்டுக்குட்டி) பலியிடல் பரவலாக நிகழ்ந்துள்ளது (அகநானூறு, 242:11-12). இப் பலிச் சடங்கை நிகழ்த்துபவனாக இனக்குழுவின் பூசாரி இருந்துள்ளான். வேலன் என்ற பெயரால் இப் பூசாரிகள் அழைக்கப்பட்டனர். இன்று முற்றிலும் புலால் தவிர்த்த உணவுப் படையலை ஏற்கும் இறைவனாகக் காட்சியளிக்கும் முருகன் சங்க இலக்கியத்தில் வேலன் படைக்கும் புலால் உணவை ஏற்கும் இறைவனாகவே காட்சியளிக்கிறார். பத்துப் பாட்டு என்ற சங்கநூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பத்து நூல்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படை முருகனை மையமாகக் கொண்டது. இந்நூலில் அவருக்கு ஆடு பலியிட்டு வணங்கியது இடம்பெற்றுள்ளது (218). நற்றிணையும் (47:9-10) இச்செய்தியைக் குறிப்பிடுகிறது. தமிழ்நாட்டில் பரவிய வைதிக மரபு மேற்கொண்ட வேள்விகளில் பசு பலியிடப்பட்டதை மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெறும் ஆபுத்திரன் வரலாறு உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் வாழும் அரண்மனையும், கடவுள் உறையும் வழிபாட்டிடமும் கோவில் என்று ஒரே பெயரைப் பெற்றதும், இறைவன் இறை என்ற ஒரே சொல்லால் இருவரும் அழைக்கப்பட்டதையும் மன்னனுக்குச் செலுத்தும் வரி 'இறை' என்ற பெயரைப் பெற்றதையும் இத்துடன் இணைத்துப் பார்க்க இடமுண்டு. அளப்பரிய அதிகாரம் கொண்ட தனிமனிதனுக்காகத் தன்னுயிரைத் தானே மாய்த்துக்கொள்ளும் தற்பலியானது அவனது தலைமையை மேலும் உறுதிப்படுத்தும் சடங்காக வலுப்பெற்றுள்ளது.

**மனித உயிர்ப்பலி**

மனித உயிர்ப் பலி என்பது நரபலி என்று பேச்சு வழக்கில் இடம்பெறும் சொல்லாகும். பிறரால் வெட்டப்படாது தன்னைத்தானே வெட்டிக்கொண்டு தெய்வத்துக்குக் கொடுப்பது தற்பலியாகும். நவகண்டம் கொடுத்தல் என்றும்

கல்வெட்டுக்களில் இது குறிப்பிடப்படுகிறது. நவகண்டம் கொடுப்பதைச் சித்திரிக்கும் சிற்பங்கள் தமிழகக் கோவில்களில் காணப்படுகின்றன. மன்னனின் வெற்றிவேண்டி தன்னைத் தானே வெட்டிக்கொண்ட நிகழ்வுகள் இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றுள்ளன. ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாக ஒரு தனிமனிதனைச் சித்திரிக்கும் போக்கு இனக்குழுச் சமூகத்தின் சிதைவையடுத்து உருவான உழுதொழிலின் வளர்ச்சிக்குப் பின் உருவாகிப் போனது. இனக்குழு மன்றம் அரசவையாக மாற்றம் பெற்றது. இதன் விளைவாக கடவுளுக்கு இணையான தகுதி அவனுக்கு வழங்கப்பட்டது. மோசிகீரனார் என்ற கவிஞரின் புறநானூற்றுச் செய்யுளில் (186:1-2) இடம்பெறும் 'நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற தொடர்கள் இதனை உணர்த்துவன. இதன் வளர்ச்சி நிலைதான் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்ற திவ்விய பிரபந்தத் தொடரும் இச்சிந்தனைப் போக்கின் வெளிப்பாடுதான்.

அரசன் வாழும் அரண்மனையும், கடவுள் உறையும் வழிபாட்டிடமும் கோவில் என்று ஒரே பெயரைப் பெற்றதும், இறைவன் இறை என்ற ஒரே சொல்லால் இருவரும் அழைக்கப்பட்டதையும் மன்னனுக்குச் செலுத்தும் வரி 'இறை' என்ற பெயரைப் பெற்றதையும் இத்துடன் இணைத்துப் பார்க்க இடமுண்டு. அளப்பரிய அதிகாரம் கொண்ட தனிமனிதனுக்காகத் தன்னுயிரைத் தானே மாய்த்துக்கொள்ளும் தற்பலியானது அவனது தலைமையை மேலும் உறுதிப்படுத்தும் சடங்காக வலுப்பெற்றுள்ளது.

**தானியப்பலி**

தானிய வேளாண்மையில் அதன் முதல் பலனை இறைவனுக்குப் படைக்கும் வழக்கம் இருந்துள்ளதைக் குறுந்தொகைச் செய்யுள் (105:1-3) ஒன்றால் அறியமுடிகிறது. இது உலகளாவிய ஒன்றாக இருந்துள்ளது. விவிலியத்தில் லேவியர் ஆகமத்தில் (2:14, 3:14) தானிய அறுவடையின் முதற்பலனை இறைவனுக்குப் படைப்பது இடம் பெற்றுள்ளது. இதன் தாக்கத்தாலோ என்னவோ பதநீர், இறக்கும் பருவத்தில் பதநீர் இறக்கியதும் தேவாலயத்தில் குருவின் ஆசீர்வாதம் பெற்று வழிபாட்டுக்கு வருவோருக்கெல்லாம் பருகத் தருகின்றனர். இன்றும் கூட சைவ வைணவக் கோயில்களிலும் கிராமப்புறத் தேவாலயங்களிலும் முதல் விளைச்சலில் ஒரு பகுதியைக் காணிக்கையாகச் செலுத்தும் முறை தொடர்கிறது. இவை பின்னர் ஏலத்தில் விடப்படுகிறது. அழகர் கோயிலில் இது போல் அப்பகுதி மக்களால் வழங்கப்பட்ட பொருள்களின் பட்டியலைத் தொ. பரமசிவன் தமது அழகர் கோயில் குறித்த ஆய்வு நூலில் தொகுத்தளித்துள்ளார். இந்த நூலில் சித்திரைத் திருநாளில் நாட்டுப் புறக்கூறுகள் என்ற ஒன்பதாவது இயலில் நாட்டுப்புற மக்களின் காணிக்கை என்ற உபதலைப்பில் 1388 ஆவது பசலை ஆண்டில் (1-07-1978 முதல் 30-06-1979 முடிய) காணிக்கையாக வழங்கப்பட்ட வேளாண் பொருள்களின் அளவையும் கால்நடைகளின் எண்ணிக்கையையும் பட்டியலிட்டுள்ளார். இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள தானிய இனங்கள் வருமாறு: நெல், வரகு, சாமை, தினை, வெள்ளைச் சோளம், இருங்குச் சோளம், கேழ்வரகு, கம்பு. இவை பழைய தானியப் பலிமுறையின் எச்சமாகும்.

சங்ககாலத் தமிழகத்தில் தினை (புறநானூறு 119:4, 120:16, குறுந்தொகை 263:1-6) முக்கிய பலிப்பொருளாக விளங்கியதன் எச்சமாக இன்றும் மாவிளக்கு ஏற்றுதல் என்ற சடங்கில் மாவிளக்குச் செய்தலில் 'தினை மாவு' சிறப்புக்குரியதாக விளங்குகிறது.

தினையைப் போன்றே நெல்லும் பலிப் பொருளாக விளங்கியுள்ளது.

நடுகல் வழிபாட்டின் சிறப்பைக் கூறும் போது, 'கல்லே பரவின் அல்லது நெல் உகுத்துப் பரவும் கடவுளே இலவே' என்று புறநானூறு (186:1-2) குறிப்பிடுகிறது. பல கடவுளர் வணக்கம் அறிமுகமான சூழலில் இத்தொடர்கள் உருவாகியுள்ளன. தொன்மையான நடுகல் வணக்கத்திற்கும் நெல் உகுத்து வழிபடும் புதிய கடவுள் வழிபாட்டிற்கும் இடையிலான முரணை இது வெளிப்படுத்துகிறது.

தனியாக இன்றி மலருடன் நெல்லும் கலந்து வழிபட்டதை நெடுநல்வாடையும் (43-44) அறுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **உணவு தேடி வாழும் வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்த சமூக வாழ்க்கையில் இறைச்சி, காய், கனி, தேன், கிழங்கு என்பனவற்றை மனிதர்கள் தம் அடிப்படையான உணவுப் பொருள்களாகக் கொண்டிருந்தனர். இதனால் தாம் உண்ணும் இப்பொருள்களையே தெய்வத்திற்கான பலிப்பொருளாகப் படைத்தனர். தானியப் பயிரிடலை மேற்கொள்ளத் தொடங்கியதும் தானியமும் பலிப் பொருளானது. கால் நடை வளர்ப்புச் சமூகத்தில் பால் பலிப் பொருளாகியது.**

புல், பூளைப்பூ நெல் என்ற மூன்றையும் கலந்து தூவி வழிபட்டதைச் சிலப்பதிகாரமும் *(6:124, 9:34)* குறிப்பிடுகின்றன.

### பிற பலிப்பொருள்கள்

இறைவனின் படிமத்தை நீராட்டுவதற்காக எண்ணெய், பால், இளநீர், தேன் என்பன பயன்படுத்தப் படுகின்றன. திருநீராட்டுப் பொருள்களாக இவை வகைப்படுத்தப் பட்டுள்ளன. பலிப் பொருளைப் போன்றே கருவறையில் கடவுளின் படிமத்துடன் தொடர்புடையதாக அமைவதாலும் திருநீராட்டை அடுத்து வழிபடுவோருக்குப் புறபுனிதப் பொருளாக வழங்கப்படுவதன் அடிப்படையிலும் இவற்றையும் பலிப்பொருளாகக் கொள்ள இடமுண்டு.

### பலிப்பொருளான உணவு

உணவு தேடி வாழும் வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்த சமூக வாழ்க்கையில் இறைச்சி, காய், கனி, தேன், கிழங்கு என்பனவற்றை மனிதர்கள் தம் அடிப்படையான உணவுப் பொருள்களாகக் கொண்டிருந்தனர். இதனால் தாம் உண்ணும் இப்பொருள்களையே தெய்வத்திற்கான பலிப்பொருளாகப் படைத்தனர். தானியப் பயிரிடலை மேற்கொள்ளத் தொடங்கியதும் தானியமும் பலிப் பொருளானது. கால் நடை வளர்ப்புச் சமூகத்தில் பால் பலிப் பொருளாகியது. ‘ஆகாத்தோம்பி அப் பயன் அளிக்கும் கோவலர்’ குடியில் பிறந்த மாதரி என்ற ஆயர்குலப் பெண் பூங்கண் இயக்கி என்ற தெய்வத்திற்குப் பால்மடை சாற்றி வருவதாகச் சிலப்பதிகாரம் (புறஞ்சேரி இறுத்த காதை) குறிப்பிடுகிறது.

வேளாண் சமுகத்தில் தானியங்களால் சமைத்த உணவு பலியுணவாகிற்று. இயற்கைப் பொருள்களையும் விலங்குகளையும் பலிப் பொருளாக வழங்கியமை குறித்த பதிவுகளுடன் சமைத்த உணவும் பலிப்பொருளாக இருந்தமை குறித்த பதிவுகளும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. வேட்டை, காட்டெரிப்பு வேளாண்மை, கால்நடைவளர்ப்பு, கொல்லை வேளாண்மை, நீர்ப்பாசன முறை சாரந்த வேளாண்மை, மீன்பிடித்தல் எனப் பல்வேறு பொருள் உற்பத்தி முறைகள் இக்காலத்தில் நிலவியுள்ளன. இவற்றின் தாக்கத்தால் பல்வேறு பலிப் பொருள்கள் குறித்த பதிவுகள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. இவ்வகையில் சமைத்த உணவு பலிப்பொருளாக இருந்தமை குறித்த பதிவுகளும் இடம் பெற்றுள்ளன. கரிய கண்களை உடைய கருணைக் கிழங்கின் பொரிக் கறியோடு செந்நெல் அரிசியோடு ஆக்கிய வெள்ளிய சோற்றுத் திரளை பலியுணவாக விளங்கியதாக நற்றிணை *(367:3-5)* குறிப்பிடுகிறது.

இதன்வளர்ச்சி நிலையாக உணவுப் பொருள்களும், ஏனைய பலிப் பொருள்களும் மூப்பு, இறப்பு என்பனவற்றைத் தடுக்கும் பொருளாகத் தொன்மங்களில் இடம் பெற்ற அமிழ்தம் (அமிர்தம், அமுதம்) என்பதுடன் இணைத்துப் பார்க்கப் படலாயின.

இதனால் பலிப் பொருள் புனிதமான பொருளாக அடையாளப் படுத்தப் பட்டது. இம்மாற்றத்தால் திருவமுது, திருவமிர்து, அமுதுப்படி என்று பலிப் பொருள்கள் குறிப்பிடப் படலாயின. சமைத்த உணவு தளி என்றும், தளி சமைக்கும் பாத்திரம் தளிகை என்றும் அழைக்கப்பட்டன. வேளாண் சமூகம் நிலமானியச் சமூகமாக வளர்ச்சியுற்றபோது பலியுணவானது அமுது என்ற பின்னொட்டைப் பெற்றுள்ளதை இடைக்காலப் பாண்டியர் சோழர் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. சான்றாகப் பின்வரும் சொற்களைக் குறிப்பிடலாம். அன்னமுது (சோற்றுப் படையல்), அவல் அமுது, அக்காரடியல் அமுது (வெல்லம் கலந்த சோறு - சர்கரைப் பொங்கல்?) பிட்டமுது, இளநீர் அமுது, கறி அமுது (சமைத்த காய்கறி), மிளகுப் பொரி கறியமுது, நெய்யமுது, தயிர் அமுது, வாழைப்பழ அமுது ஆகிய சொற்களைக் குறிப்பிடலாம். தெய்வத்திற்குப் படைக்கும் வெற்றிலை பாக்கு எனபனவும் முறையே வெற்றிலையமுது, இலையமுது, வெள்ளிலையமுது, இலைக்காய் அமுது, அடைக்காய் அமுது என்ற பெயர்களால் குறிப்பிடப் பட்டுள்ளன.

கோவில் படையலான உணவுப் பொருட்களைக் குறிக்கும் சொற்களை வைணவர்கள் உருவாக்கிக் கொண்டுள்ளனர். தயோதனம் (புளியோதரை), சாத்தமுது (இரசம்), திருக்கண்ணமுது (பாயாசம்), சக்கரத்தாழ்வார் (தோசை) என்பன ஒரு சில எடுத்துக்காட்டுகள்.

‘நான்கு காலமும் திருவமுது செலுத்தும்படி ஒரு பொழுதைக்கு வேண்டுவன’ என்ற தொடர் இடம் பெற்றுள்ள முதல் வரகுணபாண்டியனின் கல்வெட்டொன்று (கி.பி.784) வழிபாட்டின்போது படைக்கவேண்டிய பொருள்கள் குறித்து அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவுடன் இவ்வாறு பட்டியலிட்டுள்ளது:

அரிசி சென்னெற் தீட்டல் நானாழி, கும்மாயத்துக்கு பயற்றுப் பருப்பு உரி, நிவேதிக்க பசுவின் நறு நெய் உழக்கு, பசுவின் தோய் தயிர் உரி, கரு வாழைப்பழம் நான்கு, சர்க்கரை ஒரு பலம், கறி அமிர்து காய்கறி ஒன்று, புளிங்கறி இரண்டு, புழுக்குக் கறி ஒன்று, பொரிக்கறி ஒன்று, எற்றிக் கறி ஐஞ்சினுக்குங் கறி பதின் பலம் (கறி துமிக்கவும் (பொரிக்கவும்) பசுவின் நறு நெய் உழக்கு, காயம் இரு செவிடு. (எருமை தவிர்க்கப் பட்டுள்ளது நினைக்கப்பட வேண்டிய ஒன்று உரி, உழக்கு, நாழி என்பன அப்போது வழக்கில் இருந்த முகத்தல் அளவையையும் பலம் என்பது நிறுத்தல் அளவையையும் குறிப்பிடுகின்றன).

இவ்வாறு திரு அமுதுக்கான பொருட்களை இன்னும் விரிவாகப் பட்டியலிடும் இக் கல்வெட்டு இப்பொருட்கள் வாங்கப் பண்டமாற்றாக வழங்க வேண்டிய நெல்லின் அளவையும் குறிப்பிட்டுள்ளது (தெ.இ.க. கல்வெட்டு தொகுதி 41: க.எண்:106).

பெரியகோவில்களில் வழிபாட்டு நேரங்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகாலை அமுது, உச்சிப்பலி, மத்தியானப்பலி என்று பலியைக் குறிப்பிடும் வழக்கமும் இருந்துள்ளது. சில கல்வெட்டுக்களில் 'நான்கு காலங்களிலும் திருவமுது சாத்தும்படி', "நிசதி (நாளும்) நான்கு பொழுதைக்கு' என்ற பதிவுகளையும் காணமுடிகிறது. விருப்பத்தை முன்வைத்து விரும்பிய நேரத்தில் பலி படைக்கும் இயல்பில் மாற்றம் ஏற்பட்டுப் பலி படைக்கும் நேரம் வரையறுக்கப்பட்டதை இப்பதிவுகள் உணர்த்துகின்றன. சங்க இலக்கியங்களில் பலி படைக்கும் நேரம் வரையறுக்கப் படவில்லை.

அமுது என்ற பின்னொட்டுப் பெற்ற பொருள்கள் தெய்வத்திற்குப் படைக்கப்படும் போது நைவேத்தியம் என்ற வடமொழிச் சொல்லால் மொத்தமாகக் குறிப்பிடப் பட்டன. இதுவே வழிபடுவோருக்கு வழங்கப்பட்டபோது 'பிரசாதம்', 'சாமி பிரசாதம்' என்ற பெயரைப் பெற்றது. ஆனால் இது வருணப் பாகுபாடின் அடிப்படையில் சிலருக்கு வழங்கப்படவில்லை. சைவ வைணவக் கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னரே வருணப் பாகுபாடின்றி அனைவருக்கும் வழங்கப்படலாயிற்று. திருவிழாக்களில் படைக்கப்படும் சிறப்புணவு 'பெருந்திருவமுது' என்ற பெயரைப் பெற்றிருந்தது.

## திருமடைப்பள்ளி

தானியங்களும் காய்கறிகளும் இயல்பாகவே பலிப் பொருளாகப் படைக்கப்பட்ட நிலைமை மாறி அவை சமைத்த உணவாக மாற்றம் பெற்றதை இச் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. சமைத்த உணவு எனும் போது அதற்கான சமையற் கூடம் தேவைப்பட்டது. இதன் பொருட்டு மடைப்பள்ளி என்ற பெயரில் சமையற் கூடங்கள் சைவம், வைணவம் சார்ந்த நிறுவனசமயக் கோவில்களில் உருவாயின. தெய்வத்திற்கான உணவு சமைக்கப்படும் இடம் என்பதால் 'திரு' என்ற அடை மொழியைப் பெற்று திருமடைப்பள்ளி என்று இவை அழைக்கப்படலாயின. வைதிக மரபின் தாக்கம் நிகழ்ந்போது அது அமைக்கப்படும் திசையும் அதில் பணிபுரிவோரின் வருணமும் வரையறுக்கப்பட்டன. அக்கினி மூலையில் (தென் கிழக்குத் திசையில்) சமையலறை அமையவேண்டும் என்று சைவ ஆகமங்கள் குறிப்பிடுகின்றன (கைலாசநாத குருக்கள் 2021:107).

திருமடைப்பள்ளியில் பணிபுரிய ஆணும் பெண்ணுமாக ஊழியர்கள் பலர் இடம் பெற்றிருந்தனர். இவர்களது பணிகள் குறித்தும், இவர்களது பணியின் அடிப்படையில் இவர்களுக்கு வழங்கப்பட்ட பணிப் பெயர்கள் குறித்தும் கோவில்களை மையமாகக் கொண்டு உருவான இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:

1) அக்கிரம்: கடவுளுக்குப் படைக்கும் உணவு.

2) அடுநங்கை: திருமடைப்பள்ளியில் சமையல் செய்யும் பெண்.

3) அடுவார்: பாத்திரம் துலக்க சாம்பல் இடுபவர். இதே பொருள்தரும் சாம்பலிடுவாள், சாம்பலிடுவான் என்ற சொல்லாட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

4) அப்பஞ்சுடுவான்: அப்பம் தயாரிப்பவர்.

5) எச்சில் எடுப்பான்: எச்சில் இலைகளை அப்புறப்படுத்துபவர்.

6) சாலை அட்டுவான்: சமையல் செய்பவர் (திருமடைப்பள்ளி அட்டுவார் என்ற சொல்லாட்சியும் உள்ளது).

7) மடையர்: சமையல் செய்யும் ஆண்.

8) மடைப்பள்ளிப் பெண்டாட்டி (மடைப் பள்ளியில் பணிபுரியும் பெண்)

9) மாவிடிப்பார்.

10) நெற்குற்றுவோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) விறகிடுவான் / விறகிடுவார் (எரிகரும்பு என்ற பெயராலும் விறகு குறிப்பிடப் பட்டுள்ளது).

திருவிழாக்களின் போது சிறப்பான உணவு படைப்பதை, 'பெருந்திருவமிர்து', 'பெருந்திருவமுது' என்ற அடைமொழிகளால் குறித்துள்ளனர். நிறுவனச் சமயங்களான சைவம் வைணவம் சார்ந்த கோவில்களில் அவை உருவானமை குறித்த தோற்றத் தொன்மங்களுடன் (*Orgin Myths*) தொடர்புடையதாகவும் நாட்டார் தெய்வக் கோவில்களில் அத்தெய்வங்கள் உருவான தோற்ற வரலாறு தொடர்பான பழமரபுக் கதைகளுடன் (*legends*) தொடர்புடையதாகவும் பலிப் பொருட்கள் அமைந்துள்ளன.

நெற்குற்றும் பணியில் பெண் அடிமைகளைப் பயன்படுத்தி உள்ளனர். இவ்வுண்மையைக் குறிப்பிடும் இடைக்காலச் சோழர் காலக்கல்வெட்டொன்று இவர்கள் மட்டுமின்றி இவர்களின் பரம்பரையினரும் சந்திரனும் சூரியனும் உள்ளவரையிலும் இப்பணியைத் தொடர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

## திருவாதிரைக் களி

சேந்தனார் என்ற ஆதித்திராவிடர் இயற்றிய பக்திப் பனுவல் சைவர்களின் பன்னிரு திருமுறைத் தொகுப்பில் ஒன்பதாம் திருமுறையாக 'திருவிசைப்பா' என்ற பெயரில் இடம்பெற்றுள்ளது.

இவர் பட்டினத்தாரிடம் தலைமைக் கணக்கராகப் பணியாற்றினார். இவர் மீது பொறாமை கொண்டோர் பொய்க் குற்றம் சாட்டி இவரைச் சிறையில் அடைத்தனர். பட்டினத்தார் இவரை விடுவித்தார். பின்னர் இவர் சிதம்பரம் சென்று விறகுவெட்டியாக வாழ்ந்தார். ஏழ்மை நிலையில் வாழ்ந்தமையால் இவர் நாள்தோறும் தாம் உண்ணும் கேழ்வரகுக் களியையே தில்லை நடராசருக்குப் படையலாகப் படைத்துத் தம் இல்லத்தில் வணங்கி வந்தார். இவரது பக்தி உணர்வை உலகுக்கு அறிவிக்க விரும்பிய சிவன் தாம் உறையும் தில்லைக் கோயிலின் கருவறையில் கேழ்வரகுக் களியின் சிதறல்கள் கிடக்கும்படிச் செய்தார். கருவறைக்குள் புன்செய்த் தானியங்கள் அனுமதிக்கப்படாத நிலையில் இச்சிதறல்களைக் கண்டு அதிர்ச்சியுற்ற பூசகர், அச்சிதறல்களை அப்புறப்படுத்தினார். ஆனால் இந்நிகழ்வு தொடரவே அவர் மனம் வருந்தலானார்.

இதன் பின்னரே தில்லை நடராசர் கோவிலின் படையல் பொருள் வரிசையில் களி இடம் பெறலாயிற்று. இக்கோயிலின் சிறப்புமிகு திருவிழாவாக மார்கழி மாதம் நிகழும் திருவாதிரைத் திருநாளின் சிறப்புக்குரிய படையல் என்ற அடையாளத்தையும் களி பெற்றது. ஆனால் காலப் போக்கில் எளிய உணவான கேழ்வரகுக் களி என்ற தொடக்க அடையாளத்தை இழந்து பச்சரிசி மாவு, பாசிப்பருப்பு மாவு, வெல்லம், நெய், தேங்காய் என்பனவற்றின் கலவையால் உருவான சுவையான இனிப்புப் பண்டமாயிற்று. ஒரு வகையில் நம் காலத்திய இனிப்பான 'கேசரி' போல் ஆனது (தற்போது முந்திரிப் பருப்பும் கூட இல்லங்களில் படைக்கும் திருவாதிரைக் களியில் இணைந்துள்ளது). அத்துடன் சேந்தனார் வரலாறும் மறக்கப்பட்டது.

கேழ்வரகுக்களி இவ்வாறு இனிப்புணவாக மாறியதில் திருமடைப்பள்ளியின் பங்களிப்பு இருந்துள்ளது. கோயில் என்ற பெரிய நிறுவனத்தின் ஓர் அலகாக (*unit*) இருந்ததமையால் பலிப்பொருளாக எதை அனுமதிக்க வேண்டும் - அனுமதிக்கக் கூடாது என்று முடிவெடுக்கும் உரிமையை அது பெற்றிருந்தது. தமிழில் 'செய்' என்பது விளைநிலத்தைக் (வயல்) குறிக்கும். இச்சொல்லானது 'நன்' என்ற அடைமொழியைப் பெற்று 'நன்செய்' அல்லது 'நஞ்சை' என்றும் 'புன்' என்ற அடைமொழியைப் பெற்றுப் 'புன்செய்' அல்லது 'புஞ்சை' என்றும் இரண்டு சொற்களாக வழங்குகிறது. இவற்றுள் நன்செய் என்பது நீர்வளம் உள்ள நிலப்பகுதியிலும் புன்செய் என்பது நீர் வளம் குன்றிய பகுதியிலும் அமைந்திருக்கும். நீர்வளம் அற்ற பகுதியில் உள்ள நிலம் பயன் குன்றியது என்பதன் அடிப்படையில் 'புன்' என்ற அடைமொழி இடப்பட்டுள்ளது. 'புன் புலம்' என்று சங்க இலக்கியம் இந்நிலப் பகுதியைக் குறிப்பிடும். புன் என்ற சொல் இழிந்த என்ற பொருளையும் தரும். இதனாலோ என்னவோ தினை நீங்கலாக ஏனைய புன்செய் நிலப் பயிர்கள் சைவ வைணவக் கோயில்களில் பலிப் பொருளாக இடம் பெறுவதில்லை. கேழ்வரகு புன் செய் நிலப் பயிராகும். இன்று வரை தினையைத் தவிர ஏனைய புன்செய்த் தானியங்கள் நிறுவனச் சமயங்களான சைவ வைணவக் கோயில்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அப்பமுது செய்ய அனுமதிக்கப்பட்டிருந்த கருப்புக்கட்டி குறித்த பதிவுகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அதை வைப்பதற்கான உலோகப் பாத்திரம் கொடையாக வழங்கப்பட்டதைக் கூறும் கல்வெட்டும் உள்ளது. ஆனால் இன்று திருமடைப்பள்ளியில் விலக்கப்பட்ட பொருளாக அது மாறிவிட்டது. இது போன்றே எருமைப்பாலும் நெய்யும் கோயில் எல்லைக்குள் மதிப்பற்று போய்விட்டது. இடைக்காலச் சோழர் கல்வெட்டுக்களில் பசுவைப் போன்றே எருமையும் அதன் பால், நெய் என்பனவற்றிற்காகக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட கொடைப் பொருள் வரிசையில் இடம் பெற்றிருந்தமை பதிவாகியுள்ளது. இன்று இதன் பாலும் நெய்யும் வழிபாட்டில் தவிர்க்கப்படும் பொருளாக மாற்றப்பட்டுவிட்டன. மற்றொருபக்கம் குதிரைகளின் உணவுக்காக இறக்குமதி செய்யப்பட்ட கடலைப் பருப்பானது சுண்டல் செய்ய உதவும் மூலப் பொருளாக இடம்பெற்றுவிட்டது. ●

கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்

-தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சு.இராமசுப்பிரமணியன்

# காக்கை கரைந்தால், காதலன் வருவான்?

## நம்பிக்கைகள் – அன்றும், இன்றும்

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்மொழி உருப்பெற்று, வளர்ந்து செம்மொழியும் ஆகிவிட்டது. ஒருமொழி வளர்ச்சிப்பெற்றது என்று சொல்லும்போது, அந்த மொழியை உருவாக்கிய, பேசிய, அந்த மொழியில் எழுதிய, இலக்கியம் படைத்த தமிழ் இனமும் வளர்ச்சியடைந்திருந்தது என்பதே பொருளாகும். சங்க இலக்கியப் பாடல்களை வாசிக்கும்போது, அன்றைய தமிழர்களின் அறிவியல்-தொழில்நுட்பமும், இசை, நாட்டியம், சிற்பம், கூத்து போன்ற கலைகளும், கட்டிடவியல், உணவுப்பொருட்களை விளைவிக்கும் வேளாண்தொழில், மருத்துவம், சமூக அறம் ஆகிய வாழ்வியல் கூறுகளையும் அறிந்துகொள்ளமுடிகிறது.

மனித சமூகம் ஒரே நாளில் தோன்றி, வளர்ந்து நாகரிக சமூகமாக மாறிவிடவில்லை. இரண்டு கால்களில் நிமிர்ந்து நின்றது, முதல் கொஞ்சம்கொஞ்சமாக வளர்ச்சிபெற்றது. ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு வளர்ச்சிபெற புல்லாயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. பூமியெங்கும், பல மனித இனங்களாக பரிணாம உருவெடுத்து, இன்றையமனிதர்களாக (*Homosapiens*) வளர்ச்சிபெற பல்லாயிரம்பல்லாயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும். என்னதான் நாகரிக சமூகமாக மாறிவந்தாலும், பூமியெங்கும் உள்ள மனித சமூகங்களில் தொடக்க காலத்தில் இருந்துவந்த அறிவிற்கு அப்பாற்பட்ட சில நம்பிக்கைகளும்கூடவே வந்து நிலைபெற்றிருப்பதைப் பார்க்கமுடிகிறது. இதற்குத் தமிழ்ச்சமூகமும் விதிவிலக்கு அல்ல.

### அன்றைய தமிழர்களின் நம்பிக்கைகள்:

#### காக்கை கரைந்தால், காதலன் வருவான்:

வீட்டு வாயிலில் காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்னும் நம்பிக்கை கிராமங்களில் இன்றும்கூட வழக்கில் இருக்கிறது. இப்படிப்பட்ட நம்பிக்கை இன்று நேற்று வந்ததல்ல, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சமூகத்தில் இருந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன.

**"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
**எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி**
**பெருந்தோள் நெகிழ்த்த செலவற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"**
(குறுந்தொகை, பாடல் 210)

தலைவியை பிரிந்துசென்ற தலைவன் மீண்டும் தலைவியுடன் வந்து சேர்ந்துவிட்டான். தனது பிரிவால் துன்புறாத வகையில், தலைவியைத் தோழி நன்றாக ஆற்றுப்படுத்தியதாக, தோழியைத்தலைவன் புகழ்ந்துபேசுகிறான். அதற்குத் தோழி மறுமொழி சொல்லும் பாடல் இது. தலைவனைப் பிரிந்திருந்த காலத்தில் காக்கை கரைந்தது. அதனால், தலைவன் விரைந்து வருவான் என்றுசொல்லித்தான் தலைவியை ஆற்றுப்படுத்தியதாக தோழி சொல்கிறாள். தலைவன் வரவைக் கரைந்து சொல்லிய அக்காக்கைக்குக் கோப்பெருநள்ளியின் காட்டிலுள்ள பசுக்களில் இடையர்கள் (அண்டர்) கறந்த பாலில் எடுத்த நெய்யுடன், தொண்டி நகரில் விளைந்த வெண்ணெல்லின் அரிசியை சமைத்த சோற்றை ஏழு கலங்களில் பலிச்சோறாக கொடுத்தாலும் அது சிறிதே ஆகும். இப்பாடலை பாடியவர் பெண்பாற்புலவரான 'காக்கை பாடினியார் நச்செள்ளையார்'.

#### மகள் வரும் செய்தியைக் காக்கை சொல்லுமா?:

**"மறுவில் தூவிச் சிறுகரும் காக்கை**
**அன்புடை மரபின் நின்கிளையொடு ஆரப்**
**பச்சூன் செய்த பைந்நிண வல்சி**
**பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ**
**வெஞ்சின விறல்வெல் விடலையொடு**
**அஞ்சில் ஓதியைவரக்கரைந் தீமே"**
**(ஐங்குறு நூறு, பாடல் 391;**
**பாடியவர், ஓதலாந்தையார்)**

தனது மகள், அவளது காதலனுடன் உடன்போக்காகச் சென்றுவிட்டாள். அதனால் கவலையுற்றாள், தாய். உடன்போக்காகச் சென்ற மகளும், அவளை கூட்டிச்சென்ற இளைஞனும் (விடலை) திரும்பிவரும் செய்தியை கரைந்து சொல்லவேண்டும் என்று காக்கையிடம் வேண்டுகிறாள். அப்படிக் கரைந்தால், அவர்கள் இல்லம்திரும்பியபிறகு, தூய சிறகுகளை உடைய அந்தக் காக்கைக்கும், அதன் சுற்றத்திற்கும், சூடாக்கிய பச்சை இறைச்சியையும் வெந்த சோற்றையும், பொற்கலங்களில் இட்டுத் தருவதாகவும் கூறுகிறாள் நற்றாய்.

#### நல்லபாம்பும், நாகமணியும்:

முற்றிய நல்லபாம்பிடம் ஒளிபொருந்திய மாணிக்கக்கல் இருக்கும். அதுதான் நாகமணி. இரவில், குறிப்பாக அமாவாசை இரவில், அதனை உமிழ்ந்து, அதன் வெளிச்சத்தில் இரைதேடும். அந்த மணியின்மீது சாணத்தை போட்டுவிட்டால், நல்லபாம்புக்குக் கண் தெரியாது. காலையில் விலைமதிக்கமுடியாத அந்த நாகமணியை கவர்ந்துவிடலாம். இப்படியாக, எனது சிறுவயதுக்காலத்தில் கூட்டாளிகள் கதைசொல்வார்கள். இந்த நம்பிக்கையும்கூட சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்ச்சமூகத்தில் நிலைபெற்றிருக்கிறது என்பது, சங்க இலக்கிய வாசிப்பில் தெரியவருகிறது.

**"திருமணி அரவு தேர்ந்து உழல"**
(நற்றிணை, பாடல் 255 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மறக்குடிப்பெண்ணிடம், போர்க்களத்தில் அவள் கணவன் காட்டிய வீரம்பற்றி அவனது தோழர்கள் சொல்வதாக அமைந்த பாடல். நாகம் உமிழ்ந்த மணியை நெருங்குவதற்கு எப்படி அஞ்சுவார்களோ, அப்படித்தான் அவளது கணவனை நெருங்குவதற்கு எதிரிநாட்டுப் படைவீரர்கள் அஞ்சினார்கள். அந்த அளவிற்கு வீரமுடன் கடும்போர் புரிந்திருக்கிறான், அவளது கணவன்

"மேய்மணி இழந்த பாம்பின், நீநனி"

(அகநானூறு, பாடல் 372)

மேய்வதற்காக உமிழ்ந்த மணியை இழந்த பாம்பைப்போல தலைவி வாடியதாக தோழி கூறுகிறாள். இரைதேடுவதற்காகவே நல்லபாம்பு மணியை உமிழ்கிறது என்னும் நம்காலத்து நம்பிக்கை இதில் பொதிந்துள்ளது.

"தண்பல் அருவித் தாழ்நீர் ஒருசிறை
உருமுச்சிவந்து எரிந்து உரன்அழி பாம்பின்
திருமணி விளக்கின் பெருகுவை"

(அகநானூறு, பாடல் 92)

அருவிக்கரையின் அருகில், பாம்பு உமிழ்ந்த மணியின் வெளிச்சத்தில், தலைவியின் அடர்ந்த கூந்தலின்மீது படுத்து உறங்கி இன்பம் காணலாம் என்று தோழி, தலவனுக்கு இரவுக்குறி கூறுகிறாள்.

**பேய்:**

சங்க காலத்தில், முருகு, அணங்கு, பேய் பற்றிய நம்பிக்கைகள் இருந்திருக்கின்றன. தலைவி, தலைவனை நினைத்து உடல்மெலியும்போது, அவளுக்கு முருகு, அணங்கு அல்லது பேய்பிடித்திருப்பதாக தாய் நம்புகிறாள். முருகுக்கு வேலன் வெறியாட்டு வீட்டு முற்றத்திலேயேக் களம் அமைத்து நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அணங்கு என்றால், அந்தச் சடங்கு ஊர்மன்றத்தில் நிகழ்ந்திருக்கிறது. ஆனால், மறி அறுத்து, பேய்விரட்டுவது ஊருக்குப்புறத்தே ஆற்றிடைத் திட்டுகளில்வைத்து நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, பேய்பற்றிய அச்சம்தான் மிகுதியாக இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

ஆற்றிடைத்திட்டில் பேய்விரட்டும் சடங்கிற்குச் சான்றாக ஒரு பாடல்.

"மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியகம் கறங்க
தோற்றம் அல்லது நோய்க்குமருந்து ஆகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
'பேய்க் கொளீஇயள் இவள்' எனப் படுதல்"

(குறுந்தொகை, பாடல் 263)

பல நாள், பரத்தையருடன் தங்கியிருந்த தலைவன், இல்லம் திரும்புகிறான். அவனுடன் ஊடல்கொள்ளும் தலைவியின் கூற்றாக பின்வரும் பாடல அமைகிறது.

"தூயர் நறியர்நின் பெண்டிர்
பேஎய் அனையம்யாம் சேய்பயந்தனமே"

(ஐங்குறுநூறு, பாடல்70)

"உன் பரத்தையர் தூய்மையானவர்கள், ஒப்பனைசெய்பவர்கள். ஆனால் நாங்களோ பிள்ளைபெற்றவர்கள். அதனால் உடல் மெலிந்து, கன்னம் குழிவிழுந்து, பேய்போன்ற தோற்றமுடையவர்கள்" என்று சொல்கிறாள் தலைவி. பேய் இப்படித்தான் இருக்கும் என்னும் கற்பனையும் அவர்களிடம் இருந்திருக்கிறது என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

புறநானூற்றுப் போர்க்களப்பாடல்களில், பேய் பிணங்களைத்தின்னும் என்னும் நம்பிக்கை உள்ளிட்ட பேய்பற்றிய ஏராளமான குறிப்புகளைப் பரவலாக காணமுடிகிறது. பேய், பெண்களை மட்டுமே பிடிக்கும் என்பது மட்டுமல்ல, போர்க்களத்தில் பிணங்களை உண்ணும் பேய்களையும் 'பேய்மகள்' என்று பெண்ணாகவே உருவகம் செய்திருக்கின்றனர். அது, சங்க காலத்திற்கு முன்னரே தமிழ்ச்சமூகம் தந்தைவழிச்சமூகமாக, ஆணாதிக்கச் சமூகமாக மாறிவிட்டதை உணர்த்துகிறது.

"பேஎய் மகளிர் பிணம்தழூஉப் பற்று"

(புறநானூறு, பாடல்-259)

"பேய்மகள் பற்றியபிணம் பிறங்கு பல்போர்பு"

(புறநானூறு, பாடல்-369)

இன்றும்கூட, இந்து, இஸ்லாம், கிறித்துவம் என்று எந்த ஒரு மதமானாலும், மதம்சார்ந்த கூட்டு நுகழ்வுகளில் பெண்களே பேய்பிடித்து ஆடுவது, நம் காலத்திலும் தொடரும் முழுமூடநம்பிக்கையே.

**காட்சிப்பிழை:**

"தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலையொடு"

(ஐங்குறு நூறு, பாடல்- 41)

இன்றுபோல் தொழில்நுட்பம் வளர்ந்திராத அன்றைய காலத்திலும், தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நிலப்பரப்பை, அதில் இருந்த மரம், செடிகொடிகளை, வசித்த விலங்குகளை, பறவைகளை, நீர்வாழ் உயிரினங்களை அருகில் சென்று பார்த்ததுபோலப் பதிவுசெய்திருக்கின்றனர். அப்படிப்பட்ட பதிவுகளில் ஒன்றிரெண்டு தவறாகவும் இருக்கின்றன. அதற்கான சான்றுதான், முதலை தன்பார்ப்பு தின்னும் என்பதாகும்.பார்ப்பு என்றால் குஞ்சு, குட்டி என்று பொருளாகும்.

முதலைகள் நீரில் வசிப்பவை. அவை, முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவை. கரைக்கு வரும் முதலைகள், மணலில் ஆழமாகக் குழிதோண்டி, அதில் முட்டைகளை இட்டு, காய்ந்த சருகு, மண் ஆகியவற்றால் மூடிவிடும்" பெண்முதலை சராசரியாக 12 முதல் 48 வரையிலும் முட்டைகளை இடும். ஒரு முட்டையின் அளவு 20 செ.மீ. முதல் 30 செ.மீ. வரையிலும் இருக்கும். முட்டைகள் பொரிப்பதற்கு 55 முதல் 100 நாட்கள் வரையிலும் ஆகும்.

முட்டைக்குள் இருக்கும்போதே, பொரிப்பதற்கான காலம் வந்துவிட்டது என்பதை, முட்டைக்குள் இருந்துகொண்டே குஞ்சுகள் சைகைக்குரல் எழுப்புவதுண்டு. முட்டைகளையும், குஞ்சுகளையும் எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக பெண்முதலை அருகிலேயே இருந்துகொண்டிருக்கும். முட்டைகளைவிட்டு வெளியில்வந்த குஞ்சுகளை, மிகவும் கவனமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்முதலை நீருக்குள் நடத்தியே அழைத்துச்செல்லும். பொரிக்காத முட்டைகளை, முதலை தனது நாக்கால் கவனமாக உடைத்து குஞ்சுகளை வெளியேற்றும். அப்படி வெளியில் வரும் முதலைக்குஞ்சுகளைத் தனது வாயில் சுமந்துசென்று நீரில்விட்டுவிடும். இதனைக் கண்ணுற்றவர்கள்தான், முதலைத் தனது குஞ்சுகளையே தின்னும் என்னும் தவறான புரிதலுக்கு வந்துவிட்டார்கள்.

**நல்வாக்கு கேட்டல்:**

முன்பெல்லாம் எங்கள் ஊர்களில், 'குறி கேட்டல்' என்னும் நடைமுறை இருந்தது. காணாமல்போன கால்நடைகள், காணாமல்போன சிறுவர்கள்பற்றிய தகவல்களை அறிய குறிசொல்பவர்களைத் தேடிச்செல்வார்கள். காணாமல்போனவன் உயிருடன் இருக்கிறானா?, திரும்பிவருவானா?, எப்போதுவருவான் என்பது பற்றிய தகவல்களைக் கேட்டு அறிவார்கள். கால்நடைகள் என்றால், அவை எந்தத்திக்கில் சென்றிருக்கின்றன என்பதை அறிந்து, அந்தத்திக்கில் தேடிச்செல்வார்கள். அப்போதெல்லாம், குறிசொல்வதற்கு, வெற்றிலைப்பாக்கு, பழம், கால் ரூபாய் பணம் வைத்தால் போதுமானது. பெரும்பாலும் குறிசொல்பவர்கள் சிறுதெய்வக்கோயில்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

இதே நடைமுறை, சங்க காலத்தில், ' நல்வாக்கு கேட்டல்' என்னும் பெயரில், அன்றைய தமிழர்களிடம் இருந்திருக்கிறது.

"அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுதுப் பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுஇயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
- - - -
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
- - - - - - -
முனைகவர்ந்து கொண்டதிறையர் வினைமுடித்து
வருவர் தலைவர் வாய்வது நீநின்
பருவரல் எவ்வம் களை மா யோய்என"

(முல்லைப்பாட்டு, வரிகள், 7-21)

தலைவன் போருக்கு சென்றிருக்கிறான். வருவதற்கு காலதாமதம் ஆகிறது. அதனால் தலைவி வாடுகிறாள். தலைவியின் வாட்டத்தைப் போக்க எண்ணிய முதுபெண்டிர், நல்வாக்குக் கேட்க திருமால் உறைந்திருக்கும் இடத்திற்கு செல்கின்றனர். நெல்லும், நறுமணம்கொண்ட நாழி என்னும் முல்லை அரும்புகளையும் தூவி, திருமாலை வழிபட்டு 'நல்வாக்கு' கிடைக்குமா என்று காத்திருக்கின்றனர். அந்தவேளையில், அங்கு சிறு கயிறுகளால் கட்டப்பட்டிருந்த இளங்கன்றுகள் பசிமிகுந்து தங்கள் தாய்ப்பசுக்களைத் தேடுகின்றன. இதனைக் கண்ணுற்ற ஆயர்மகள், அக்கன்றுகளிடம், "இப்போதே உங்கள் தாயர் வந்துவிடுவர்" என்று கூறுகிறாள். இதனைக்கேட்ட முதுபெண்டிர், அதனையே நல்வாக்காகக்கொண்டு, தலைவியிடம் சென்று, "நல்வாக்குக் கேட்டோம். உனது கணவன், போர்முடிந்து திறைப்பொருட்களுடன் விரைவில் வீடுதிரும்புவான். அதனால் கவலை விடு" என்று ஆறுதல்கூறுகின்றனர்.

இப்படிப்பட்ட அறிவுக்கு அப்பாற்பட்ட சில மூடநம்பிக்கைகள் நாகரிகம் அடைந்திருந்தச் சங்ககாலத்தமிழரிடம் இருந்திருக்கிறது என்பது உண்மைதான். சங்க காலம் என்பது நீண்ட வரலாறுகொண்டது. நீண்டநெடிய காலகட்டத்தின் தொடக்கத்தில் தமிழ்ச்சமூகத்தில் கடவுள், தெய்வம் போன்ற கருத்துருக்கள் உருவாகியிருந்திருக்கவில்லை. அப்படிப்பட்ட கருத்துருக்கள் பிற்காலத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் , இன்றுபோல் அன்று கடவுள்சார்ந்த மூடநம்பிக்கைகள் இல்லை என்றே தெரிகிறது. உலகில், அதே காலகட்டத்தைச்சேர்ந்த மற்ற பண்பாடுகளில், நரபலிகூட கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், அப்படியான நரபலிபோன்ற சடங்குகளும், வேண்டுதல்களும் தமிழ்ச்சமூகத்தில் இல்லை என்று சொல்லும் அளவிற்கு நாகரிக சமூகமாகவே நம் தமிழ்ச்சமூகம் இருந்திருக்கிறது.

**இன்றைய தமிழர்களின் நம்பிக்கைகள்:**

நடை, உடை, பாவனை என்று பலவற்றிலும் இன்றைய தமிழன் பெரிதும் மாறிவந்திருந்தாலும், இதுபோன்ற அறிவுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைசார்ந்த வாழ்வியலில் மாறாமலேயே இருந்துகொண்டிருக்கிறான். இன்னமும் சொல்லப்போனால், பண்டைய தமிழர்களிடம் இருந்ததைவிடவும், நாகரிகம் அடைந்துவிட்டதாக, கல்வியறிவில் வளர்ச்சிபெற்றதாகச் சொல்லிக்கொள்ளும் இன்றைய தமிழர்களிடம், அறிவுக்குப் புறம்பான போலி நம்பிக்கைகள் மலைபோல் வளர்ந்திருக்கின்றன.

அறிவியல்-தொழில்நுட்பம் எப்படி வளர்ந்தது என்று பார்த்தோமானால், ஒவ்வொரு கட்டத்திலும் அது தவறைக் கண்டுபிடித்து, அதனை சரிசெய்ததன்வழியேதான் இன்று இந்த அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. இதற்கு எதிர்த்திசையில் பயணிக்கிறது கடவுள், பரிகாரம் சார்ந்த மூட நம்பிக்கைகள். காரணம், அது தனது தவறை உணர்வதில்லை. யாராவது சுட்டிக்காட்டினால் ஏற்றுக்கொள்வதும் இல்லை.

தொலைக்காட்சி அறிவியல் கண்டுபிடிப்பு. ஆனால், அந்தத் தொலைக்காட்சிகளில் தினமும் காலையில் அவரவர் பிறந்த நட்சத்திரப்பலனைச் சொல்லும் மிகவும் பிற்போக்கான மூட நம்பிக்கைகளை வளர்க்கும் நிகழ்ச்சிகள் தவறாமல் இடம்பிடிக்கின்றன. பலன் சொல்வதோடு நில்லாமல், பரிகாரமும் சொல்வதுதான் மக்களை சிந்திக்கவிடாமல் , மூளைச்சலவை செய்துவிடுகிறது.

பாபனாசம், மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து தமிரபரணி ஆறு தரையைத்தொடும் இடம். அங்கு உலகம்மன் கோயிலும் இருக்கிறது. ஐம்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு முன்பு, அந்த ஆற்றில் பத்தடி ஆழத்தில் மணல் தெளிவாகத்தெரியும் வகையில் தண்ணீர் கண்ணாடிபோல் தூய்மையாக இருந்தது. ஆனால் இன்று தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்து பரிகாரம் என்னும் பெயரில் பல டன் துணிகள் ஆற்றில் விடப்படுகின்றன. அப்படி விடப்பட்ட துணிக்கழிவுகளை டிசம்பர் மாதத்தில் பெய்த பெருமழையால் வந்த பெருவெள்ளம் அடையாளம் காட்டியது. 'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' (புறம்.-18). மக்களின் மூடநம்பிக்கைகளால் ஆற்றுநீர் முற்றிலும் மாசுபட்டுவருகிறது.

கடவுள் நம்பிக்கை என்பதே அறிவுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைதான். இதில், கடவுளை வழிபட்டால், யாகங்கள் செய்தால், நடைபயணம்போனால், அலகு குத்தினால், மொட்டை அடித்தால், தரையில் உருண்டால், மண்சோறு உண்டால், மலையை வலம்வந்தால், பரிகாரம் செய்தால், நல்ல நேரம்பார்த்து வினைபுரிந்தால் வாழ்வு வளமாகும், நன்மைகள் உண்டாகும், தீமைகள் அகலும் என்பவை அனைத்துமே அறிவுக்கு அப்பாற்பட்ட மூடநம்பிக்கைகளே.

உழைப்பை நம்பாமல், குறுக்குவழியில், குறுகிய காலத்தில் அனைத்தையும் அடைய எண்ணும் சுயநலக்காரார்களே இப்படியான மூட நம்பிக்கைகளுக்கு ஆளாவார்கள். மூடநம்பிக்கை உள்ளவர்கள், எத்தனைமுறை ஏமாந்தாலும், திரும்பதிரும்ப அந்த மூடநம்பிக்கைகளுக்குள்ளேயே உழன்று கொண்டிருப்பர். ஜாதகம் பொருந்தவில்லை என்னும் ஒற்றைக்காரணத்தால், பல இளம்பெண்கள், பேரிளம் பெண்களாக மாறியுள்ளனர்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழரிடம்கூட இத்தனை மூடநம்பிக்கைகள் இல்லை. விளக்கு பூஜை, பிரதோஷம், பலவண்ணங்களில் கயிறுகட்டுவதுபோன்று நம் மண்ணுக்குத் தொடர்பில்லாத மதம்சார்ந்த பல மூடநம்பிக்கைகள் விஷம்போல் மக்களிடம் பரவிவந்து நிலைபெற்றுவிடுவதை நம் சமகாலத்தில் கண்டுவருகிறோம். நேர்மையாகச் சிந்தித்தால், ஒவ்வொரு தலைமுறையினரிடமும் இருக்கும் தவறுகள் அதற்கடுத்தத் தலைமுறையில் சரிசெய்யப்படவேண்டும். அதுதான் வளர்ச்சி. இதற்கு மாறாக, அடுத்தடுத்தத்தலைமுறைகளில், நாகரிகம் வளர்ச்சியடைந்த வேகத்தைவிடவும், பலமடங்கு விரைவாகவும், கூடுதல் எண்ணிக்கையிலும் மூடநம்பிக்கைகள் வளர்ந்துவருவது நாகரிக மக்கட்சமூகத்திற்கு நன்மை பயக்காது. இதனை, இன்றைய இளைஞர்கள் புரிந்துகொண்டால், அவர்களுடைய வாழ்வும் வளம்பெறும், நாடும் நலம்பெறும். அதோடு, சாதி, மதம் என்று சொல்லி ஏமாற்றுபவர்கள் ஏமாந்துபோவார்கள். காரணம், இந்த சாதி உயர்ந்தது, இந்த மதம் சிறந்தது என்பதுபோன்ற கருத்துக்களும் மூடநம்பிக்கைகளே.

**நம்பிக்கைகள் அனைத்துமே மூடநம்பிக்கைகளா?**

நம்பிக்கை என்றாலே அது மூடநம்பிக்கைதான் என்று சிலர் கருத்து சொல்லிவருகின்றனர். அந்தக்கருத்து சரிதானா என்றால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பருவத்தில் பெய்யும் மழையை நம்பியே வேளாண்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒருவேளை மழை பொய்த்துப்போகலாம். அதனால், உழுகுடிகளின் நம்பிக்கையை, மூட நம்பிக்கை என்று சொல்லிவிடமுடியாது., ஒரு மாணவன் நன்றாகப் படிக்கிறான். தேர்வுக்காக உழைக்கிறான். அவனது தந்தை, தனது மகன் சிறப்பாக தேர்ச்சிபெறுவான் என்று நம்புகிறார். அது மூடநம்பிக்கை ஆகாது. மற்றொரு தந்தைக்குத் தனது மகன் எப்படிப்படிக்கிறான் என்று தெரியாது. படிப்பில் அவனது கவனம், திறமைபற்றியும் தெரியாது. ஆனால் அந்தத் தந்தையோ, தனது மகனுக்காக குலதெய்வத்தில் தொடங்கி பலதெய்வங்களை வழிபடுகிறார், வேண்டுகிறார், பேரம்கூட பேசுகிறார். அதன் அடிப்படையில், தனது மகன் சிறப்பாக தேர்ச்சிபெறுவான் என்று நம்பினால் அது முழு மூடநம்பிக்கையே.

இப்படி சொல்லலாம். உண்மையாகவும், நேர்மையாகவும் உழைப்பவர்களின் நம்பிக்கை, உழைத்து வாழ்வில் முன்னேறலாம் என்னும் நம்பிக்கை அவர்களது உழைப்பு சார்ந்தது என்பதால் அது அறிவுக்கு அப்பாற்பட்டது ஆகாது. மாறாக, உழைக்காமலும், உழைப்பை நம்பாமலும் பல தெய்வங்களையும் நம்பினால், வெற்றுச்சடங்குகளை செய்தால் வெற்றிபெறலாம் என்பது அறிவுக்கு அப்பாற்பட்ட மூடநம்பிக்கையே ஆகும். மூடநம்பிக்கைகளை களைதல் நாகரிக சமூகத்தின் வளர்ச்சிக்குத் தேவையானவற்றில் முதன்மையானது ஆகும்.

முடிவாக, அறிவியல்-தொழில்நுட்ப வளர்ச்சி உச்சம்தொட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். கடவுளையோ, சடங்கையோ, பரிகாரத்தையோ நம்புபவன் தன்னை, தனது திறமையை நம்பமாட்டான், உழைக்கவும்மாட்டான். பொய்சொல்லவும், பிறரை ஏமாற்றவும் தயங்கமாட்டான். எந்தக்காலத்திலும், எந்தக்கடவுளும், எந்தச்சடங்கும், எந்த ஒரு பரிகாரமும் எவர் ஒருவருக்கும் நல்லதோ, கெட்டதோ செய்ததாக வரலாற்றில் சான்று இல்லை. நேர்மையான வழியில் உழைப்பது ஒன்றே எதிர்காலம் சிறக்க சிறந்த வழியாகும். இவற்றை இன்றைய இளைஞர்கள் மனதில் ஆழமாகப் பதியம் செய்துகொள்ளவேண்டும். அது அவர்களுக்கும் நல்லது, அவர்களைச்சார்ந்து இருப்பவர்களுக்கும் நன்மைபயக்கும். ●


கட்டுரையாசிரியர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | வல்லபாய்

# நாற்காலிகளும் நாலாம் தூணும்



“அமெரிக்க அதிபரின் ஆளுகை நான்கே ஆண்டுகள்தான்; ஆனால் பத்திரிகைகளோ என்றென்றும் ஆளுகின்றன.” - ஆஸ்கார் ஒய்ல்ட்

ஆதி மனிதனின் குகை ஓவியங்கள் யாருக்கு என்ன சொல்ல விரும்பி வரையப்பட்டன? மொழி பிறக்காத அந்த நாட்களிலேயே உணர்வுகளின் பரிமாற்றம் மனித குலப் பரிணாமத்தின் தவிர்க்க முடியாத அங்கம் என்பதின் சான்றுதான் அந்தக் குகை ஓவியங்கள். சிரிப்பும் சிந்தனையும்தான் மனிதனை விலங்கிலிருந்தும் வேறு பிரிப்பது; தனியாகவே சிரித்துக் கொண்டேயிருப்பது எப்படி ஒரு மனப் பிறழ்வோ அப்படித்தான் சக மனிதனைத் தவிர்த்து தான் மட்டுமே சிந்தித்துத் தனிமையில் ஏகாந்தத்தில் ஏங்குவதும் ஒரு சமூகப் புறக்கணிப்புதான். ஆனாலும் அரண்மனை வாசத்தையும் அழகிய மனைவியையும் பிரிந்து வனமேகி அலைந்து திரிந்து போதி மரத்தின் கீழ் பெற்ற ஞானத்தை, புத்தரான சித்தார்த்தன் தனக்குள்ளே பொத்தி வைக்காமல் சங்கம் சமைத்ததும், மூன்றே மூன்றரை ஆண்டுக் கால யுகப் புரட்சிக்குப் பன்னிரெண்டு சீடர்களைச் சேர்த்துக்கொண்ட கிறிஸ்து இயேசுவும், பாரதம் என்கிற இந்த நெடிய நிலப் பரப்பைத் தன் கால்களாலேயே அளந்து பீடங்களை நிறுவி அத்வைதம் ஸ்தாபித்த ஆதி சங்கரரும் மனித வரலாற்றின் வெகுஜனக் குழு பிரித்த, தம் இனம் சேர்த்த முன்னோடிகள். “என் படைப்புகள் மக்களைச் சரியாகச் சென்று சேராத போது நான் சிதைந்து போகிறேன்” என்று சொன்ன புதிய திரை இயக்குநர் மிருணாள்சென்னையும் இந்த இடத்தில் பொருத்திப் பாருங்கள்; மனித உறவின், உணர்வின், பரிமாற்றத்தின் அந்த உயிர்ப்பின் தாகம் புரியும். தகவல் பரிமாற்றம் என்பது மனித சமூக இயக்கத்தின் தவிர்க்க இயலாத அடிப்படை உந்து சக்தி.

இப்படி குகை ஓவியங்களில் துவங்கி மொழி அறிந்து பாப்பிரஸ், ஓலைச் சுவடிகளில் பகிர்ந்து, பாடல்கள் இலக்கியத்தில் சிநேகம் முகர்ந்த பரிமாற்றங்களை அன்றாட தகவல், செய்திகளைப் பரிமாற மனிதன் கண்டுகொண்ட மாபெரும் சாதனம்தான் பத்திரிகை. “இதழியல் என்பது அவசரத்தில் பிறக்கும் இலக்கியம்” என்று கவிஞரும் அரசியல் சமூக விமர்சகருமான மாத்யூ ஆர்னால்ட் அடையாளம் கண்டுள்ளார். 1605ல் அண்ட்வெர்ப் நகரில் “தொடர்பு” (RELATION) என்ற அச்சில் வெளிவந்த முதல் பத்திரிகையின் பெயரே சமூகத் தகவல் பரிமாற்றத்தின் அவசியம் அறிந்திருந்ததை வெளிப்படுத்துகின்றது. ஒரு சண்டமாருதமாய் உலகைப் புரட்டிய ஃப்ரெஞ்ச் புரட்சியை இந்த முதல் பத்திரிகை என்னவாக சக மனிதனிடமும் தேசங்களிடமும் பகிர்ந்திருக்கும் என்பது ஒரு ருசிகரமான தேடலாகவே இருக்கும். நானூறு ஆண்டு கால் மார்க்கண்டேயனாக வலம் வரும் பத்திரிகைத் தளம் மனித நாகரீக முதிர்வின் தவிர்க்க முடியாத அங்கம் மற்றும் அடையாளம். முதலாளித்துவம் கால்கோள் கொள்ளும் முன்னதாகவே ஐரோப்பா தன் சமூகத்தின் நான்காம் தூணாகச் சுவீகரித்தது இன்றளவும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் பெருமைக்குரிய குடியுரிமைச் சுதந்திரத்தின் ஆணிவேராக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஜனநாயக மக்கள் நல அரசின் அத்தியாவசிய அடையாளம், பண்பு மற்றும் நிபந்தனையாகக் கட்டுப்பாடுகளற்ற பத்திரிகைச் சுதந்திரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அடிப்படை உரிமைகளான கருத்துச் சுதந்திரம், பேச்சுரிமை, எழுத்துரிமை என்பவற்றின் மொத்த வடிவாகப் பயணிப்பதுதான் பத்திரிகையுலகம். இந்தப் பத்திரிகைகளின் சுதந்திரமான செயல்பாட்டிற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது சாம, பேத, தான, தண்ட சாமர்த்திய அழுத்தங்களாலோ, விமர்சிக்கப்படுகிற அரசுகளிடமிருந்தோ அல்லது அதிகார மையங்களிலிருந்தோ தடைகளோ அழுத்தமோ வருமானால் அத்தகைய அரசுகளின் மடியிலே கனமிருக்கிறது; அதனால் அவர்கள் வழியிலே அவர்களுக்கே பயமிருக்கிறது என்றுதான் அர்த்தம். எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் பத்திரிகைகள் மீது கடுமையான தணிக்கை நடவடிக்கைகள் அமுல் படுத்தப்படுகின்றனவோ, அங்கெல்லாம் ஆளுவோருக்குத் தன் குடிமக்களை, அவர்களுடைய ஜனநாயகக் கோரிக்கைகளைத் தைரியமாய் எதிர்கொள்வதில் தயக்கங்கள் இருப்பதால்தான், இந்த அவலங்கள் அரங்கேறுகின்றன. “ஒரு சுதந்திரமான பத்திரிகையுலகம் நன்மையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு ஜனநாயக மக்கள் நல அரசின் அத்தியாவசிய அடையாளம், பண்பு மற்றும் நிபந்தனையாகக் கட்டுப்பாடுகளற்ற பத்திரிகைச் சுதந்திரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது.**

தீமையோ? ஆனால் சுதந்திரமற்ற முடக்கப்பட்ட சூழ்நிலைகளில் செயல்படும் பத்திரிகைகள் தீதாகவே முடியும்" என்ற நோபல் பரிசு நாவலாசிரியர் அல்பர்ட் கேமுஸின் வார்த்தைகளை இங்கு நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தகவல் பரிமாற்றம் மின் காந்த, மின்னணு, சிலிக்கான் என்கிற விஞ்ஞானத் தொழில்நுட்ப வேகத்தில் சிறகடித்து தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, அலைபேசி, இணையம் அதன் வழி செயலிகளில் சமூக வலைத் தளம் என பரிணமித்து விரிந்து பரந்து படர்ந்து தனி மனிதனுக்கும் சமூக அதிகார மையத்துக்குமான இடைவெளியை ஒரு நூலிழை அளவுக்குக் குறைத்து விட்டன. இங்குதான் ஆளும் வர்க்க அதிகார மையத்திற்கும் அச்சில் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கும் வேறு வேறு விதமான பிரச்னைகள் தோன்றுகின்றன.

செய்திகள் வந்து சேர்ந்து பரவும் வேகம், வாசகர்கள் அதைப் பெறுவதில் இருக்கும் எளிய இலகுவான முறைகள், அவசர உலகத்தில் நீண்ட நெடிய கட்டுரைகள்/செய்திகள் எடுத்துக் கொள்ளும் கால அவகாசம் ஆகிய தீர்மானகரமான விஷயங்களில் ஒப்பீட்டளவில் அச்சு ஊடகங்கள், பத்திரிகைகளுக்கும் சமூக வலைத்தளங்களுக்குமான அனுகூலங்களில், அந்தப் பந்தயத்தில் தவிர்க்க முடியாமல் அச்சு ஊடகங்கள், பத்திரிகைகள் பின் தங்குவதால் மிகப் பிரபலமான பெரிய பத்திரிகைகளிலிருந்து சிறிய பத்திரிகைகள் வரை தங்கள் கடையை மூட வேண்டிய நிலவரத்திற்குத் தள்ளப்படுகின்றன. மிகச் சிறந்த சமூக அரசியல் விமர்சன அடையாளமாகக் கருதப்பட்ட "கார்டியன்" அச்சிலிருந்து விலகி இணைய இதழாக மாத்திரம் பிரசுரமாவதே இந்த விபத்தின் மிகச் சிறந்த உதாரணம். இந்தச் சூழல்களில் இயல்பாகவே மூச்சுவிடத் திணறும் பத்திரிகை உலகம், பகாசுரக் கார்ப்பரேட்டுகளின் கொள்முதல் வழியாக நிர்வாக மாற்றத்தில், மக்கள் விரோத, பெயரளவிலான போலி ஜனநாயக அரசுகளின் ஊதுகுழலாக எளிதில் விழுங்கப்படுகின்றன. பிரபலமான ஜனரஞ்சகமான தொலைக் காட்சி நிறுவனங்களும் இப்படி விலைபோவதில் விதிவிலக்காகவில்லை.

இந்துத்துவா என்கிற ஒற்றைப் போர்வையில், அந்தப் போதையில் முழு தேசத்தையும் சுருட்டி தங்களின் அபிமான ஒன்றிரண்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மாத்திரம் வாய்ப்பு, வளங்களையும், சந்தையையும் விரியத் திறந்து, மக்களின் வயிற்றிலடிக்கிற வலதுசாரி ஃபாஸிச ஒன்றிய அரசு தகவல் தொடர்பு வெளியில் தன் நிகழ்ச்சிநிரலைச் சாதித்துவிட்டது. தேசத்தின் குறிப்பிடத்தக்க மக்கள்திரள், மதவெறி அரசால் அரங்கேற்றப்படும் இந்த ஊமை நாடகத்தை ராம ராஜ்யக் கனவோடு விரலைச் சப்பிக்கொண்டு, இதயமற்ற உலகத்தின் இதயத்தில், அந்த அபின் போதையில் அரற்றிக் கொண்டிருக்கிறது. ஜார்ஜ் ஆர்வெலின் 1984 நாவலில் வரும் காட்சி ஊடகம் தவிர்க்க முடியாமல் நினைவில் வருகின்றது.

பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி எல்லாவற்றையும் சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளையாக இறுகப் பற்றிக் கொண்டாலும் இன்றைய ஆட்சியாளர்களுக்கு இணையம் மிகப் பெரிய தலைவலியாக யானையின் காதுக்குள் புகுந்த எறும்பு போல இவர்களைக் குடைகின்றது. பத்திரிகைகளில் கேலிச் சித்திரம் வரைய அன்று அனுபவம் மிக்க பிரத்யேகமான கலைஞர்கள் இருந்தார்கள். ஓவியத் தளத்தில் அது ஒரு தனித் திறனாக,ஆளுமையாகவளர்த்தெடுக்கப்பட்டிருந்தது. சங்கர், விகடன் மதன் இவர்களுக்கெல்லாம் ஒரு தனி வாசகர் மற்றும் ரசிகர் கூட்டமும் இருந்ததுண்டு. ஆனால் இன்றோ இணையம் குப்பனையும் சுப்பனையும் கூட அரசியல், சமூகக் கேலிச் சித்திரத் துணுக்குகள், குறுஞ் செய்திகள் புனைபவர்களாகக் களமிறக்கிவிட்டது. போதாத குறைக்குப் புற்றீசல் போல் முளைத்து வரும் இணைய இதழ்கள் நேரடியாகச் சவால் விடுகின்றன. சமூக வலைத் தளம் பத்திரிகை, தொலைக்காட்சி அலைகளைக் காட்டிலும் எளிதில் அணுகக்கூடிய வலிமை மிகுந்த கவர்ச்சிகரமான ஊடகமாக - படித்தவன், பாமரன், வசதி பெருத்தவன், பாட்டாளி, ஆத்திகன், நாத்திகன், ஜாதி, மத, இன பேதமின்றி - அனைத்து மக்களையும் ஒரு தவிர்க்க முடியாத தொற்றாக, போதையாகக் கபளீகரம் செய்துவிட்டது. உணவு, உடை , உறைவிடத்தோடு கூடவே ஓர் இரண்டு ஜீபி அலைக் கற்றையையும் தம் குடிமக்களுக்கு உத்தரவாதம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் மக்கள் நல அரசுகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த தொழில் நுட்பப் பேரெழுச்சிக்கு முன்பாக என்ன செய்வதென்று தெரியாமல் ஆளுகின்ற கூட்டத்தார் திருவிழாக் கூட்டத்தில் வழிதப்பிப்போன குழந்தையைப் போல முழித்துக் கொண்டிருக்கிறார்கள். கூலிக்கு ஒரு பெரிய கூட்டத்தை அமர்த்தி சுய புராணம், எதிர் விமர்சனம் எனறு கூவச் சொன்னாலும் அதுவும் அம்பலமாகி விடுகின்றது. வாஷிங்டன் போஸ்ட் கர்நாடக வாட்ஸப் இந்துத்துவா பிரச்சாரத்தை வெளிச்சம்போட்டுக்காட்டிவிட்டது. இணையத்தை முற்றிலுமாய் தடை செய்தால் இவர்களின் ஜனநாயக வேஷம் கலைந்து விடும். பாம்பும் சாக வேண்டும்; கோலும் முறியக் கூடாது.

தலையைச் சொறிந்து சொறிந்து ஒன்றிய அரசு, தொண்ணூறுக்கும் மேற்பட்ட எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளியேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்துத்துவா என்கிற ஒற்றைப் போர்வையில், அந்தப் போதையில் முழு தேசத்தையும் சுருட்டி தங்களின் அபிமான ஒன்றிரண்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மாத்திரம் வாய்ப்பு, வளங்களையும், சந்தையையும் விரியத் திறந்து, மக்களின் வயிற்றிலடிக்கிற வலதுசாரி ஃபாஸிச ஒன்றிய அரசு தகவல் தொடர்பு வெளியில் தன் நிகழ்ச்சிநிரலைச் சாதித்துவிட்டது.**

விட்டு, இந்த விஷயத்தில் மூன்று மசோதாக்களை நிறைவேற்றியிருக்கிறது. தொலைத் தொடர்பு மசோதா 2023, ஒளிபரப்புச் சேவைகள் (விதிகள்) 2023, தனிநபர் மின்னணு தரவுப் பாதுகாப்புச் சட்டம் 2023 என்பவைதான் அந்த மூன்று சட்டங்கள். இந்த மூன்று மசோதாக்களும் காந்தியின் மூன்று குரங்குப் பொம்மைகளையே நினைவுக்குக் கொண்டு வருகின்றன. ஒன்றே ஒன்றை மட்டும் பின் குறிப்பாகச் சேர்க்க வேண்டும். "இந்துத்துவாவுக்கும் அதை அரங்கேற்ற முனையும் ஒன்றிய அரசுக்கும் எதிரான, அதைக் கேள்வி கேட்கிற, விமர்சிக்கிற, கண்டிக்கிற அனைத்தும் தீமையானவைகள்" என்பதுதான் அந்தப் பின் குறிப்பு.

இந்த மூன்று மசோதாக்களையும் குறித்த விவாதத்தில் தேசத்தின் அறுபதுக்கும் மேற்பட்ட முன்னோடி ஊடகவியலாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட ஒரு கருத்தரங்கம் சமீபத்தில் தலைநகர் டெல்லியில் நடந்தது. குய்ன்ட் இணையதளத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி ரிட்டு கபூர் இந்த மசோதாக்கள் தெளிவற்றவையாகவும் மிகவும் பரந்துபட்ட, குழப்பமான அம்சங்களைக் கொண்டிருப்பதாகவும் கூறினார். அரசின் குறுக்கீடு, தண்டனை, விசாரணை மற்றும் புலனாய்வுக்கு எது வழி வகுக்கும் என்பதில் தெளிவற்ற நிலவரமே இருக்கிறது என்றார். ஒளிபரப்பாகும் தகவல்கள் மற்றும் செய்திகள் ஒரு பரிசீலனைக் குழுவின் சுய சான்றிதழ் பெற்றிருக்க வேண்டுமென்பது செய்தி ஆசிரியரின் வேலை மற்றும் பொறுப்பு குறித்த சந்தேகங்களைக் கிளப்பியிருக்கின்றன.

மின்னணு வரைவாளர் மெக்னாத் இந்த மசோதா பத்திரிகையாளருக்கும் மின்னணு வரைவாளருக்குமான வித்தியாசம் பற்றித் தடுமாறுகிறது என்றார். மின்னணுச் செய்திகளும் சர்ச்சைக்குரியவையாகும் அபாயம் இருக்கிறது என்று குறிப்பிட்டார். மேலும் உடல்மரபுத் தடையங்களை அடையாளமாகப் பத்திரிகையாளர்களை நிறுவச் சொல்லுவது செய்தி/தகவல் பரிமாற்றங்களில் நிகழும் பாதுகாப்பு, நம்பகத் தன்மை மற்றும் அந்தரங்கத்தைக் கேள்விக்குரியதாக்கும் என்றார்.

மூக்னயாக் செய்தித் தளத்தின் நிறுவனர் மீனாகோட்வால் மசோதா அரசின் பாரபட்சமான நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக அமையும். செய்திகளில் உண்மை நிலவரம் இருந்தாலும் சட்டத்தின் ஷரத்துகள் அரசுக்குப் பிரியமற்ற விஷயங்களை விவாதிப்பவர்கள் மேல் பாய்வதற்கு வசதியாகும் என்றார்.

மக்டூபின் நிறுவன ஆசிரியர் அஸ்லா கய்யலாக்கத் கேரளக் காவல்துறையுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்தார். முதல் தகவல் அறிக்கையில் அவர் பெயர் சேர்க்கப்பட்டு மணிக்கணக்கான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதை நினைவு கூர்ந்தார். இது போன்ற நடவடிக்கைகள் பத்திரிகையாளர்கள் தங்களுக்குத் தாங்களே தணிக்கை செய்து கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு வழி வகுக்கிறது என்றார்.

வழக்கறிஞர் அபர் குப்தா இணையப் பயனாளிகள் கடமைகள் பொறுப்புகள் பற்றிய சட்டம், தகவல் தொடர்பு தளத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மாத்திரம் செயல்படும் சூழ்நிலையில், நிகழும் இணைய முடக்கம் பற்றிக் கூறினார். ஜம்மு காஷ்மீரில் அமுலான நீண்ட இணைய முடக்கம் அந்த மக்களுக்கு இழைத்த சமூகப் பொருளாதார வலிகளைக் குறிப்பிட்டார். கோவிட் துயரத்தின் போது இணைய முடக்கம் அவர்களைக் காட்டுமிராண்டி இருத்தல் நிலமைகளுக்கு உந்தித்தள்ளியது என்றார். தொலைத் தொடர்புச் சட்ட விதிகளுக்குட்பட்டு எத்தனை முறை எங்கெங்கு இணையம் முடக்கப்பட்டது என்பதற்கான புள்ளிவிவரங்கள் எதுவும் பதிவேற்றி ஆவணப்படுத்தப்படவில்லை என்று குற்றம் சாட்டினார். 2022ல் நிறைவேற்றப்பட்ட சட்ட ஷரத்துகளைக் காட்டிலும் தற்சமயம் உருவாக்கப்பட்டிருக்கும் சட்டம் கடுமையானது என்று குறிப்பிட்டார். 2022 ஷரத்துகளைப் பொதுவெளியில் வைத்துப் பெற்ற ஆலோசனைகள், அபிப்ராயங்கள் குறித்த எந்தத் தகவலையும் அரசு இது வரையிலும் வெளியிடவில்லை என்பதையும் குறிப்பிட்டார். சந்தேகத்துக்குரிய வாட்ஸப் தகவல்களை தரவிறக்கம் செய்ய வசதி செய்யும் ஷரத்து வாட்ஸப்பின் அடிப்படையான குறியீட்டு வழிமுறையையேக் கேள்விக்குள்ளாக்குகிறது என்றும் இது பயனாளிகளின் தனித்துவம் மற்றும் பாதுகாப்பைச் சிதைக்கிறது என்றார்.

வழக்கறிஞர் விருந்தா பந்தாரி, சட்டத்தின் கீழ் புலனாய்வு அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டிருக்கும் அதிகாரங்கள் மிகவும் பரந்து பட்டதாகவும் அரசுக்கு ஆட்சேபகரமான எதைச் செய்தாலும் வழிமறித்து முடக்கும் வகையிலும் ஷரத்துகள் உள்ளன. தொலைத் தொடர்பின் கீழ் வாட்ஸப், பேடிஎம், கூகுள்பே என்று அனைத்துச் செயலிகளுக்கும் பொருந்தும் பரந்துபட்ட வரையறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்றார். பொதுநல அவசர அவசியம் என்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதாவில் இணைய முடக்கம் மாத்திரமல்லாமல் அலைபேசிச் சேவைகளையே முடக்கும் வழி வகைகளும் கூறப்பட்டிருக்கின்றன என்றார்.

பத்திரிகையாளர் அன்னா எம். எம். வெட்டிக்காடு ஒளிபரப்புத் தணிக்கை மசோதா முழு ஹிந்தித் திரையுலகையும் ஒரு திகிலுக்குள் ஆழ்த்தியிருக்கிறது என்றார். நடிகர்களின் பேச்சுச் சுதந்திரம் கேள்விக்குள்ளாக்கப் படுகிறது. "பீட்" திரைப்பட இயக்குநர் அனுபவ் சிங்காவுக்கு நேர்ந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அரசையோ இந்துத்துவாவையோ விமர்சிக்கும், கேள்விக்குள்ளாக்கும் எந்தப் படைப்புகளும் சிரமத்துக்குள்ளாக்கப்படுகின்றன. ஓ.டி.டி. தளத்தைக் கட்டுப்படுத்துவதில் மிகக் குழப்பமான அணுகுமுறைகளை இந்த மசோதா முன்மொழிவதாக வழக்கறிஞர் அலோக் பிரசன்னா குறிப்பிடுகிறார். நியூஸ்லாண்ட்ரியின் முதன்மை நிர்வாக அதிகாரி அபிநந்தன் சேக்ரி தான் சந்திக்க நேர்ந்த வழக்குகளின் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். வெகுஜனப் பார்வையாளர்கள் குறித்த அளவீட்டிற்கான சரியான வழிமுறைகள் எதுவும் அரசிடம் இல்லை என்றும் கூறினார்.

ஆக மொத்தம் மேற்கண்ட ஊடக, பத்திரிகை விற்பன்னர்களின் அனுபவங்கள் வாக்குமூலங்களின் அடிப்படையில் பார்த்தால் தேசத்தில் பத்திரிகை, ஊடக, பயனாளிகளின் சுதந்திரம் என்பதின் நடைமுறை நிலவரம் "இருக்கு; ஆனா இல்ல" என்கிற மிகப் பெரிய நகை முரண்தான் என்பது தெளிவாகின்றது. மசோதாக்களின் பரந்துபட்ட தெளிவற்ற ஷரத்துகளின் நோக்கமே, சம்பந்தப்பட்ட நபர்கள், தகவலின் பேசுபொருள் என்பவற்றைப் பொறுத்து அரசின் தேவைக்கேற்றபடி வளைப்பதற்காகவே என்பது தெளிவாகின்றது. இந்த அருவருக்கத்தக்க நிலவரம்தான் இவர்களை, தேசத்தின் உழைக்கும் மக்களின் வரலாற்றில் முத்திரை பதித்த ஓராண்டுக்கும் மேலாக நீடித்த விவசாயிகளின் தலைநகர் முற்றுகைப் போராட்டத்தின் போது, அது குறித்து இணையத்தில் தன் உணர்வுகளைப் பதிவேற்றிய பதின்ம வயது மகளை விசாரணை என்ற பெயரில் கூச்ச நாச்சமில்லாத காவல் துறை அடக்குமுறைக்குள்ளாக்கத் தூண்டியது.

தேசத்தின் பிரபல கேலிச் சித்திரக் கலைஞர் சங்கரின் ஒரு கண்காட்சியைத் திறந்துவைத்துவிட்டு "பிரதமர் என்பதால் என்னை வரையாமல் விடவேண்டாம்" என்று அவரை உற்சாகப் படுத்திய ஒரு அரசியல் ஞானியை, நேரு என்கிற பெருமகனை இந்தத் தேசம் தன் முதல் பிரதமராகப் பெற்றிருந்தது. இன்றைக்கு ஏழு தசாப்தங்கள் கடந்து, தன் பத்தாண்டுக் கால ஆட்சியில் ஒரு முறை கூட பத்திரிகையாளர்களைச் சந்திக்காத கின்னஸ் சாதனை படைத்த பெருமைக்குரிய பிரதமருடன் இந்த தேசம் எங்கே பயணிக்கிறது?

இக்கட்டுரை எழுத உதவியவை:

*Counts Currents - Three new laws before parliament give government sweeping new powers to control journalism, entertainment and internet by Akshif Chawla Dt : 21.12.2023*

கட்டுரையாளர்: எழுத்தாளர்

கவிதை | கவிஜி

# புத்தம் புது சித்தார்த்தன்

கண்கள் மூடி கழுத்து சாய்ந்து
ஒரு சிற்பத்தைப் போல
அமர்ந்திருக்கிறாய்

மிகச் சிறிய கனவை
மேலே மேலே
காண்பது போல அது

இன்னும் வார்த்தை செய்கிறேன்
ஒரு ஈஸ்ட்மென் திரையை
நகர்த்தவியலா அனுபவத்தோடு
காண்கிறேன் எனவும்

நான் காணும் கானகத்தில்
பூத்து காய்த்து உதிர மறுக்கும்
ஒரு திவ்விய தோரணை நீ

தோகையற்றும்
சீறி பறக்கும் கற்பனைக்கு
கௌரவம்
அதை விடாமல் காண்பது தான்

ஒருவேளை தவம் இதுவென
இருக்கலாம்
அழகு ஊரும் பொறுப்பு துறப்பு
செய்து பார்க்கிறேன்

கனி முளைத்த கண்களில்
புத்தனுக்கு பதில்
புத்தம் புது சித்தார்த்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா. எட்வின்



# அன்பற்று இருத்தல் குற்றம்

“அறம்” என்பது நமது கல்வியின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்று. மற்ற எந்தப் பூமியை விடவும் தமிழ் மண் அறத்தின்பால் விருப்பத்தோடு நிற்கக்கூடியது. அதனால்தான் தனது பச்சைக் குழந்தைகளுக்கு எழுதச் சொல்லித்தரும் முன்பே ‘அறம் செய விரும்பு’ எனச் சொல்வதற்குச் சொல்லித் தருகிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில் ‘அறம் செய்’ என்று குழந்தைகளுக்குச் சொல்லித் தரவில்லை. ‘அறம் செய விரும்பு’ என்று கற்பிக்கப்படுகிறது. அறம் செய்வதென்பது ஒரு செயல். அறம் செய விரும்புவது என்பது ஒரு செயல். விருப்பத்தோடு அறத்தைச் செய்வதென்பது மற்றுமொரு செயல்.

இது மூன்றையும் ஒன்றெனக் குழப்பிக் கொள்வது பிழையானது. அறம் என்பது ஒரு செயல் என்பதைச் சொல்லித் தருகிறோம். அதன் பிறகு அந்த விழுமியங்கள் மிக்க அறத்தைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும் என்று குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிறோம். உச்சமாக, விருப்பத்தோடு அதைச் செய்ய வேண்டும் என்று நாம் நமது குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிறோம். மற்ற இடங்களில் அறம் என்பது சட்டம், நிபந்தனை அல்லது இதுபோன்று கட்டாயமாகச் செய்ய வேண்டிய வேறு எதுவோ ஒன்று.

தமிழ் மண்ணில் அறம் என்பது விருப்பம். கல்வி கற்பதன் முக்கியமான இரண்டு நோக்கங்களாக,

- அறத்தின் வழி நிற்பது
- அறம் மறுப்பதைச் செய்யாது நிற்பது

என்பவை முன்வைக்கப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்வதெனில் அறம் எவற்றை எல்லாம் செய்யச் சொல்கிறதோ அவற்றை விருப்பத்தோடு செய்வதும், அறம் எவற்றை எல்லாம் செய்யக்கூடாது என்று சுட்டுகிறதோ அவற்றைச் செய்யாது அவற்றினிடமிருந்து விலகி நிற்பதும் கல்வியின் இரண்டு முக்கிய நோக்கங்களாகக் கொள்ளப்படுகிறது.

**“செயத்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமையானும் கெடும்”**

என்கிறார் வள்ளுவர்.

எனவே செயத் தக்கவற்றைச் செய்வதும் செயத்தக்க அல்லாதவற்றைச் செய்யாது இருப்பதும் அறம் என்றும் கொள்வதற்கு இடமிருக்கிறது. இந்த இடத்தில் செயத்தக்க அனைத்தையும் என்று இதற்கு பொருள் கொள்வதைவிட செயத்தக்க அறச் செயல்களை என்று கொள்ளுதல் நலம்

எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்பதற்கு முன்னமே நமது குழந்தைகளுக்கு “அறம் செய விரும்பு” என்று பிழையறச் சொல்வதற்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

”பிழையறச் சொல்வதற்கு” என்பதை அடிக்கோடு போட்டு வாசிப்பது உத்தமம். இன்னும் ஒரு உண்மையை சொல்வதெனில் “அறம் செய விரும்பு” என்பது பல இடங்களில் அடித்தே சொல்லித் தரப்படுகிறது. எங்கள் காலத்தில் சிலர் சொல்லத் தெரியாமல் “அறம் செய விரும்பு” என்பதற்கு பதில் “அறம் செய இரும்பு” என்று சொன்னதும் உண்டு. அதற்காக டீச்சரிடம் அடி ஸ்கேலால் செமையாக வாங்கிய நினைவுகள் இப்போது நினைத்தால் சுவையானவை அப்போது வலித்திருக்கக் கூடும். கொஞ்சம் நகைச்சுவையோடு பார்த்தால்,அறம் செய இரும்பு என்பதும் சரிதான். அடிப்பதற்கான ஸ்கேல் என்ற வகையில் அடி-ஸ்கேல் என்பதும் சரிதான். அறம் செய விரும்பு என்பதைப் பிழையாக உச்சரித்தால் அடியே விழும் என்றால் அறம் என்றால் என்ன?

இந்த இடத்தில் இரண்டைப் பேசிவிடுவது மிகச் சரியானது.

- அறம் செய விரும்பு என சொல்லக் கற்றுக் கொடுத்த அளவிற்கு அறத்தைச் செய்வதற்குக் குழந்தைகளுக்கு நாம் கற்றுக் கொடுத்தோமில்லை.
- எது அறம் என்பதையும் குழந்தைகளுக்கு நாம் தெளிவாகச் சொல்லிக் கொடுத்தோம் இல்லை.

உண்மையைச் சொல்வதெனில், திருக்குறள் அறம் என்று சொல்கிற ஒன்றைத் தங்களது விருப்பக் கடமையாகச் செய்வதற்குக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை அழுத்தவே இந்தக் கட்டுரை.

பொதுவாக உண்மை, நேர்மை, களவாடாது இருத்தல், புறம் பேசாது இருத்தல், சக மனிதனை எதன் பொருட்டும் இழிவுபடுத்தாது இருத்தல், பெண்மையை மதித்தல், சக மனிதனின் வலியைத் தன் வலியாகக் கருதுதல் போன்றவை எல்லாம் அறம் என்று கொள்ளப்படுகிறது. இந்தப் பட்டியல் இன்னும் ஆயிரம் சொற்களைக் கடந்தும் நீளக் கூடும். எது உண்மை என்பதில் கூட மாறுபட்டு நிற்க முடியும். எது அறிவு என்பதில் கூட மாறுபட்டு நிற்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவாக உண்மை, நேர்மை, களவாடாது இருத்தல், புறம் பேசாது இருத்தல், சக மனிதனை எதன் பொருட்டும் இழிவுபடுத்தாது இருத்தல், பெண்மையை மதித்தல், சக மனிதனின் வலியைத் தன் வலியாகக் கருதுதல் போன்றவை எல்லாம் அறம் என்று கொள்ளப்படுகிறது.**

வள்ளுவரே கூட,"பொய்மையும்வாய்மையிடத்து" என்கிறார். பொய்யான ஒரு சொல் நன்மையைத் தருமானால் அந்தச் சொல்தான் உண்மை வள்ளுவருக்கு. ஒரு உண்மையான சொல் சில நேரங்களில் ஓர் உயிரைக் கொல்லக் கூடும். பொய்யான ஒரு சொல் சில நேரங்களில் ஓர் உயிரைக் காப்பாற்றவும் கூடும் என்றால், அந்தப் பொய்தான் உண்மை என்கிறார் வள்ளுவர். அது எப்படி ஓர் உண்மை உயிரைக் கொல்லும்? ஒரு பொய் உயிரைக் காப்பாற்றும்?

ஒரு கலவர நேரத்தில் ஒரு நால்ரோட்டில் நின்றுகொண்டிருக்கிறோம். உயிரைக் கையில் பிடித்தபடி ஒருவன் நம்மைக் கடந்து கிழக்குப் பக்கமாக ஓடி மறைகிறான். அவன் சென்ற சில நேரத்தில் ஒரு கூட்டம் வந்து ஓர் இளைஞன் இந்தப் பக்கம் வந்தானா என்று கேட்கிறது என்று கொள்வோம். இல்லை என்று சொல்ல முடியாது. காரணம் அவன் இந்த வழியாகத்தான் அவன் வந்திருக்க முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். இல்லை என்று பொய் சொன்னால் நம்மைக் கொன்று போடுவார்கள். ஆமாம் என்று உண்மையை சொல்கிறோம். அந்த உண்மை நம்மைக் காப்பாற்றுகிறது.

அவன் எந்தப் பக்கம் ஓடினான் என்று கேட்கிறார்கள். கிழக்குப் பக்கமாகப் போனான் என்பதுதான் உண்மை. அந்த உண்மையைச் சொன்னால் அவனைக் கொன்று போடுவார்கள். தெற்குப் பக்கமாகப் போனான் என்று சொல்கிறோம். இது பொய். ஆனால் நாம் சொன்ன இந்தப் பொய்யினால் கிழக்குப் பக்கமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய அந்தப் பிள்ளைப் பிழைத்துக் கொள்வான். இப்போது நாம் முதலில் சொன்ன உண்மையும் உண்மை. இரண்டாவதாக சொன்ன பொய்யும் உண்மை என்கிறது தமிழ் அறம்.

கிட்டத்தட்ட அறிவையும் இப்படியாக நம்மால் மாற்றிப் பொருத்திப் பார்க்க முடியும். அறிவு என்பது அறிவியலோடும், தொழில் நுட்பத்தோடும், மருத்துவத்தோடும், வானவியல் மற்றும் புவியியல் நிபுணத்துவத்தோடும், தத்துவ ஆராய்ச்சிப் போன்றவற்றோடும் பொருத்திப் பார்க்கப்படுகிறது. நாகசாகி, ஹிரோஷிமா போன்ற பேரழிவுகளை அறிவுதான் கொடுத்தது. இவற்றில் இருந்து முற்றாக மாறுபட்டு அறிவைப் பார்த்தவர் வள்ளுவர். "பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றாக் கடை" என்றார்.

அணுகுண்டு போடு, அனைத்தையும் அழி என்பதும் அறிவுதான். அடிபட்டுக் கிடக்கும் மனிதன் எதிரியே ஆயினும் அவனுக்கு மருந்திடு. ஆறுதலாகப் பேசு. அவன் வலி தீர பாடுபடு என்பதும் அறிவுதான். மனிதனை அழிவில் இருந்து காப்பாற்று என்பது இரண்டாயிரம் வருடத்து தமிழ் அறிவு.

இவைபோல் அல்லாமல் அன்பு என்பதை இப்படிப் பிரித்துப் பொருத்திப் பார்க்கவே இயலாது. அன்பு என்றால் எங்கும் அன்புதான். அன்பை அறமாகக் கொள்ளும் மொழியும் மக்களும் இருக்கவேக் கூடும். அன்போடு இருத்தல் அறம் என்று மட்டும் சொல்லித் தரவில்லை தமிழ். "அன்புடுத்தி அலை" என்று சொல்வதோடு நின்றிருந்தால் தமிழும் சராசரிதான். அது கடந்தும் தமிழ் நமக்குக் கட்டளையிடுகிறது. கொஞ்சமும் நெளிவு சுழிவு இல்லாமல் கறாராக சொல்கிறது.

**"என்பிலதனை காயும் வெயில்போல காயுமே**
**அன்பிலதனை அறம்"**

எலும்பு இல்லாத உயிர்களை வெயில் இரக்கமற சுடுவது போல் அன்பு செய்யாதவனைத் தண்டித்தலே அறம் என்கிறார் வள்ளுவர்.

திருடுதல் போல், கொலை செய்வது போல், கொள்ளையடிப்பது போல், பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது போல் அன்பற்று இருப்பதும் குற்றம் என்கிறது தமிழ் மரபு. அன்பற்று இருப்பதைத் தண்டனைக்குரிய குற்றம் என்றும் கூறுகிறது. எலும்பே இல்லை என்பதற்காக வெயில் அந்த உயிர்களைச் சுடாமல் இருப்பதில்லை. அதுபோல அன்பு இல்லாதவர்கள், அவர்கள் எவ்வளவு பலவீனமானவர்களாக இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

அன்பில்லாதவனைத் தண்டிப்பதே அறம் என்கிறது தமிழ் மரபு. அன்பற்றவனுக்கே இது கதி என்றால் வெறுப்பை விதைப்பவர்களை என்ன செய்வது. இந்த மண்ணை ஆளும் மகா மனிதரே இது எண்பதிற்கும் இருபதிற்கும் நடக்கும் யுத்தம் என்கிறார். இங்கு அவர்கள் 'எண்பது' என்பது இந்துக்கள். இருபது என்பவர்கள் மற்ற சிறுபான்மையினர்.

எண்பது இருபதை எதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதைடா தனது மகத்தான பதவியின் மாண்பு கருதிகூட ஒளித்து மறைத்துச் சொல்லாமல் கூச்ச நாச்சமே இன்றி வெளிப்படையாகப் பேசும் வெறுப்பை எப்படி எதிர்கொள்வது என்றும் கல்வி கவலைப்பட வேண்டும்.

தான் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக கடவுளிடம் முறையிடலாம். அதில் எந்தப் பிழையும் இல்லை. அதைப் போட்டியில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை | ச.ஆனந்தகுமார்

## பிரார்த்தனை


சலனமற்று மௌனித்திருக்கும் குளம்
சட்டென குதிக்கிற கல்லால்
கலைக்கிற தியானம் போல்.

எந்தனையாவது உரசலில்
பற்றிக்கொள்வோமெனப்புலப்படாத
தீக்குச்சி போல்..

எந்த நொடி திரைச்சீலைக்குள்
நுழைந்து மெய் தொடுமென
புரியாத காற்றைப்போல்.,

நெடுந்தூர தொடர்வண்டி பயணத்தில்
எப்போது எதிரிலிருக்கும்
குழந்தை சிரிக்கதொடங்குமென்கிற
புதிர் போல்..

அனிச்சையாய்.. இன்றாவது
முழுமையாய் அலைபேசி
முழிக்க கூடாதென கைகூப்பி
பிரார்த்திக்கிறார்
நூற்றியெட்டின் அவசர ஊர்தி
ஓட்டுநர்..



அனைவருமே செய்வதற்குப் பாத்தியதை உள்ளவர்கள் என்பதால் போட்டியில் நிற்கும் அனைவரும் அல்லது பெரும்பாலானவர்கள் செய்யக் கூடும். கடவுள் பாடு அவர்கள் பாடு அது என்பதால் நமக்கு அதில் பிரச்சினை இல்லை. ஆனால், அந்தக் கடவுளையே சிலர் போட்டிக்காகத் தங்கள் கைகளில் சுமந்து கொண்டு திரிகிறார்கள். அந்தக் கடவுள் அவர்கள் கடவுள் என்றும். தம்மை ஆதரிக்காதவர்கள் அந்தக் கடவுளின் எதிரிகள் என்றும் சொல்கிறார்கள். அந்தக் கடவுளின் எதிரிகள் இந்த மண்ணின் எதிரிகள் என்று திரிக்கிறார்கள். அப்படியாக அவர்கள் சுட்டும் எதிரிகள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்று வெறுப்பை மனசாட்சியே இல்லாமல் விதைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த வெறுப்பை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்றும் கல்வி கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்படுகிறார்கள். அது குறித்து என்ன சொல்கிறீர்கள் என்று அந்தத் தலைவரைக் கேட்கிறார்கள். அன்றைய குஜராத் ரத்தச் சகதியில் அவரது பங்கு குறித்தான கேள்வி அது. காரில் போகிறோம், ஒரு நாய் அடிபட்டு விட்டது, அதற்காக அழுதுகொண்டா இருக்க முடியும் என்கிறார் அந்தத் தலைவர்.

மணிப்பூரில் ஒரு பெண் நிர்வாணமாக இழுத்து வரப்பட்ட காணொலிக் காட்சி வைரலாகிறது. பதறி அழுகிறோம். அந்த மண்ணின் முதல்வரைக் கேட்கிறோம். "அடப் போங்க, இது மாதிரி எத்தனையோ நடக்கிறது இங்கு. ஒரு காட்சியைப் பார்த்ததற்கே இப்படிப் பதறினால் நான் என்ன செய்வது" என்பது மாதிரி பதில் தருகிறார். அன்புடுத்தி அலைவதற்கு பதில் வெறுப்புடுத்தி அலைகிறார்கள். அனைவரையும் வெறுப்புடுத்தக் கேட்கிறார்கள்.

அன்பிற்கும் வெறுப்பிற்கும் இடையே ஒரு யுத்தமே நடந்து கொண்டிருக்கிறது. எலும்பில்லாதவற்றைச் சுடும் வெயில்போல அன்பு இல்லாதவர்களைத் தண்டிக்க வேண்டும் என்பது வள்ளுவம். அதுதான் தமிழ் மரபு.

வெறுப்பாளர்களை அடையாளம் காண வேண்டியதையும், அன்பைத் தெரிவு செய்வதையும் அய்யம் இல்லாது சொல்லித் தர வேண்டும். நல்ல கல்வியின் ஆகச் சிறந்த அடையாளம் அது.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | துருவன்

# சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா எல் 1 விண் ஆய்வகம்

சூரியனை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட ஆதித்யா எல் 1 விண்கலம், பூமியில் இருந்து 15 லட்சம் கி.மீ தொலைவில் உள்ள எல்-1 புள்ளியை மையமாக கொண்ட சூரிய ஒளிவட்ட சுற்றுப்பாதையில் ஜனவரி6, 2024 மாலை 4 மணிக்கு வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. எல்-1 புள்ளியை வலம் வந்தவாறு சூரியனின் கரோனா, போட்டோஸ்பியர் மற்றும் குரோமோஸ்பியர் பகுதிகளை விண்கலம் 5 ஆண்டுகளுக்கு ஆய்வு செய்யும்.


இது குறித்து கருத்து தெரிவித்த இஸ்ரோ தலைவர் திரு.சோம்நாத், "இது ஒரு நீண்ட பயணத்தின் முடிவு என்றார். லிப்ட்-ஆஃப் ஆன 126 நாட்களுக்குப் பிறகு அதன் இறுதிப் புள்ளியை அடைந்துள்ளது' என்று அவர் கூறினார்.

சூரியனை ஆராயும் ஆதித்யா எல்-1 விண்கலம் செப்டம்பர் 2 ஆம் தேதி பி எஸ் எல் வி சி 57 ஏவுவூர்தி மூலம் விண்வெளியில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. 127 நாள்கள் பயணித்த பின்னர், பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள 'லக்ராஞ்சியன் புள்ளி எல்-1' என்னும் இடத்தில் திட்டமிட்டபடி நிலைநிறுத்தப்பட்டது. இந்த விண்கலமானது நான்கு முறை புவி வட்டப் பாதையில் இருந்து உயர்த்தப்பட்டு, செப்டம்பர் 19ஆம் தேதி சூரியனை நோக்கி தனது பயணத்தை தொடங்கியது.

ஆதித்யா எல்-1 சுமார் 1,475 கிலோ எடை கொண்டது. இதில் சூரியனின் வெளிப்புற அடுக்குகளை கண்காணிக்க 7 விதமான ஆய்வு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதில் 4 கருவிகள் சூரியனை நேரடியாக கண்காணித்து தகவல்களை வழங்கும். மீதமுள்ள 3 கருவிகள் சூரியனில் ஏற்படும் நிகழ்வுகளால் அதன் புறவெளியில் உருவாகும் மாற்றங்கள், எல்-1 பகுதியில் உள்ள துகள்கள் மற்றும் புலங்களை ஆராய்ந்து தரவுகளை வழங்கும்.

### லக்ராஞ்சியன் புள்ளி எல்-1 என்றால் என்ன?

பூமிக்கும் ஈர்ப்பு விசை இருக்கிறது, சூரியனுக்கும் ஈர்ப்பு விசை இருக்கிறது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள நேர்க்கோட்டில் ஏதாவது ஒரு



ஆதித்யா எல் 1- செயற்கைகோளில் உள்ள சூரிய புற ஊதாக் கதிர்கள் படிமத் தொலைநோக்கியால் எடுக்கப்பட்ட சூரியன் படம்.


புள்ளியில் இரண்டின் ஈர்ப்பும் சமமாக இருக்கும், இல்லையா? அந்த ஈர்ப்பு விசை சமப்புள்ளிதான் லக்ராஞ்சியன் புள்ளி எல்-1. பூமியிலிருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் சூரியனை நோக்கி இந்தப் புள்ளி அமைந்துள்ளது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தொலைவு 15 லட்சம் கி.மீ. அதாவது, பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தொலைவில் நூறில் ஒருபங்கு தொலைவில் இந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது.

### என்ன பயன்?

சூரியன், பூமி இரண்டின் ஈர்ப்பு விசையில் சமமாக இழுபட்டு நிற்பதால் பூமியோடு சேர்ந்து இந்தப் புள்ளியில் உள்ள விண்கலம் சூரியனைச் சுற்றிவரும். எனவே, ஒவ்வொரு கணமும் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே இந்த விண்கலம் நிலைநிற்கும். சூரியப் புயல் அல்லது சூரியச் சூறாவளி ஏற்படும்போது முதலில் இந்த விண்கலத்தைத் தாக்கும். இந்த விண்கலம் அதனை உணர்ந்து காந்தப்புயல் குறித்த முன்னெச்சரிக்கையை நமக்குத் தரும். நாம் முன்கூட்டியே பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம். சூரியக் காற்றும் புயலும்: சூரியனின் இயல்பான இயக்கம் அவ்வப்போது மாறி, சீற்றம் கொள்ளும். சூரியச் சூறாவளி (*solar storm*), சூரிய ஒளிப்புயல் (*solar flash*), சூரிய வெடிப்பு (*coronal mass ejections*) என்கிற மூன்று முக்கியச் சீற்றங்கள் காந்தப்புயலை ஏற்படுத்தி பூமியின் மீது தாக்கம் செலுத்தும். சூரியனின் இயல்பு இயக்கத்தில் வெளிப்புற மண்டலமான கரோனாவிலிருந்து சூரியக் காற்று எனப்படும் காந்தப்புலத்துடன் கலந்த மின்னூட்டம் கொண்ட அயனித் துகள்களின் வீச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் காற்று, கோள்களுக்கு இடையே உள்ள விண்வெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நொடிக்குச் சுமார் 200 முதல் 400 கி.மீ. வேகத்தில் வீசுகிறது.

சூரியன் தன்னைத் தானே சுற்றிக்கொள்வதால் அதன் காந்தப்புலக்கோடுகளில் அவ்வப்போது முறுக்கம் ஏற்படும். குறிப்பிட்ட வரையறையைக் கடக்கும்போது இந்த முறுக்கம் வெட்டிக்கொள்ளும். அப்போது சில வேளை மிக உக்கிரமாக - நொடிக்கு 800 கி.மீ. வேகத்தில் துகள்கள் பாயும். இதுவே சூரியச் சூறாவளி. சில வேளை, முறுக்கிய காந்தப்புலக் கோடுகள் வெடித்துப் புதிய இணைப்பைப் பெறும்.

அப்போது பெருமளவில் ஒளி, எக்ஸ் கதிர், காமா கதிர் முதலிய பெரும் ஆற்றலுடன் வெளிப்படும். இதுவே சூரிய ஒளிப்புயல். முறுக்கிய காந்தப் புலம், பால் பொங்குவதுபோலப் பொங்கி சூரியனின் மேற்புறத்தில் எழுந்தால் அதுவே சூரிய எரிமலை வெடிப்பு அல்லது சூரிய நிறை வெளியேற்ற வெடிப்பு (*coronal mass ejection*). இந்த மூன்று நிகழ்வுகளின்போதும் சூரியக் காற்றின் வேகம் வெகுவாகக் கூடும்; பூமியின் மீது காந்தப் புயல் ஏற்படும்.

காந்தப் புலப் புயலால் என்ன ஆபத்து? காந்தப் புயலின் விளைவாக மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் எந்த ஆபத்தும் இல்லை. தீவிர காந்தப் புயல் பூமியைச் சுற்றியுள்ள அயனி மண்டலத்தை ஆட்டம்கொள்ள வைக்கும். இதன் தொடர்ச்சியாக சிற்றலை ரேடியோ தகவல்தொடர்பில் பாதிப்பு ஏற்படும். நாடு விட்டு நாடு செல்லும் விமானங்கள், சரக்குக் கப்பல்கள் முதலியவை சிற்றலை ஒலிபரப்பைப் பயன்படுத்துகின்றன.

விண்வெளியில் செயற்கைக்கோள் மீது எலெக்ட்ரான் பரவி நிலை மின்னூட்டத்தை ஏற்படுத்தி, மின்னணுக் கருவிகளைப் பாதிக்கும். செயற்கைக்கோளில் உள்ள சூரியத் தகடுகள் பாதிப்புக்கு உள்ளாகும். குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் (ஜிபிஎஸ்) தரும் தகவலில் பல மீட்டர் அளவுக்குத் துல்லியம் சார்ந்த பிழை ஏற்படும். பூமியில் உள்ள மின் விநியோக மின்மாற்றிகளில் அதிக மின்னோட்டத்தை உருவாக்கிச் செயலிழக்கச் செய்து தற்காலிக இருட்டடிப்புகூட ஏற்படலாம்.

**விண்வெளி வானிலை:** பூமிக்கு அருகே காந்தப் புலத்தில் ஏற்படும் மாற்றங்கள், சூரியனிலிருந்து வரும் சூரியக் காற்றின் வேகம் முதலியவற்றை அறிந்துகொள்வதைத்தான் விண்வெளி வானிலை என்கிறார்கள். பல ஆயிரம் செயற்கைக்கோள்கள் பூமியைச் சுற்றிவருகின்றன. எனவே, இன்று விண்வெளி வானிலை மாற்றத்தை முன்கூட்டியே அறிந்துகொள்வது செயற்கைக்கோள்கள் பூமியில் தகவல்தொடர்பு, ஜிபிஎஸ் போன்றவற்றைப் பாதுகாத்துக்கொள்ள உதவும்.

**நீடிக்கும் மர்மம்:** சூரியனின் மேற்புற வெப்பம் சுமார் 5,600 டிகிரி செல்சியஸ். ஆனால், அதைத் தாண்டி சூரியனைச் சுற்றிப் படர்ந்துள்ள கரோனா எனும் வளிமண்டலப் பகுதியில் வெப்பநிலை பல லட்சம் டிகிரி செல்சியஸ். விளக்கின் அருகே வெப்பம் கூடுதலாக இருக்கும்; தொலைவு செல்லச் செல்ல வெப்பம் குறையும். ஆனால், சூரியனின் கரோனா மிகமிக உயர் வெப்பநிலையில் அமைந்துள்ளது பெரும் புதிர். இது குறித்தும் ஆதித்யா எல்-1 ஆய்வு நடத்தும்.

**என்னென்ன கருவிகள்?** புற ஊதா நிறத்தில் சூரியன் உமிழும் ஆற்றலை, சூரிய புற ஊதாக் காட்சித் தொலை நோக்கி (*Solar Ultra-violet Imaging Telescope - SUIT*) வழியே அளவிடுவதன் மூலம் சூரியனில் ஏற்படும் சீற்றங்கள் குறித்து ஆய்வு செய்யலாம். சூரிய எரிமலைகள் வெடித்து எழும்புவதைப் படம்பிடிக்கும் *Visible Emission Line Coronagraph - VELC* எனும் கருவி, சூரிய ஒளிப்புயல் ஏற்படுத்தும் எக்ஸ் கதிர்களைப் பதிவுசெய்யும் தாழ் ஆற்றல் எக்ஸ் கதிர் நிறமாலைமானி (*Solar Low Energy X-ray Spectrometer*), உயர் ஆற்றல் எக்ஸ் கதிர் நிறமாலைமானி (*High Energy L1 Orbiting X-ray Spectrometer*) முதலிய கருவிகள் உள்ளன. இந்த மூன்று கருவிகளும் சூரிய இயக்கத்தை ஆய்வு செய்யும்.

இதைத் தவிர, விண்கலம் உள்ள பகுதியில் விண்வெளி வானிலையைக் கண்காணிக்கச் சூரியக் காற்று ஆய்வுக் கருவி (*Aditya Solar wind Particle Experiment*), பிளாஸ்மா துகள் பகுப்பாய்வுக் கருவி (*Plasma Analyser Package for Aditya*) முதலியவை உள்ளன. இவை அந்தப் புள்ளியில் சூரியக் காற்றின் வேகம், திசை, மின்னேற்றம் முதலியவற்றை ஆராயும்.

சூரியப் புயல் அல்லது சூரியச் சூறாவளி கடந்துசெல்கிறதா என அறிய முடியும். மேலும், காந்தப்புல அளவைமானி (*Magnetometer*) வழியே காந்தப் புயல் ஏற்படுகிறதா எனவும் முன்கூட்டியே அறிய முடியும். இதுவரை அமெரிக்கா, ஐரோப்பிய விண்வெளிக் கழகம், ஜப்பான், சீனா மட்டுமே சூரியனை ஆய்வுசெய்ய விண்வெளித் தொலைநோக்கிகளை அனுப்பியுள்ளன. தற்பொழுது, இந்த முயற்சியில் இந்தியாவும் வெற்றியடைந்துள்ளது. •

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: எஸ்.ஜெயச்சந்திரன் நாயர்
மலையாள மூலத்திலிருந்து தமிழில்: யூமா வாசுகி



# உன்மத்தத்தின் சூரியகாந்திகள்

எஸ்.ஜெயச்சந்திரன் நாயர்: பத்திரிகையாளர், நாவலாசிரியர். 1939 இல், திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவராகம் எனும் இடத்தில் பிறந்தார். திருவனந்தபுரம் யுனிவர்சிட்டி கல்லூரியில் பயின்றார். 'கௌமுதி' நாளிதழ், 'மலையாள ராஜ்யம்', 'கேரள ஜனத', 'கேரள கௌமுதி' ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியர் குழு உறுப்பினராகச் செயல்பட்டார். 'கலாகௌமுதி', 'சமகாலிக மலையாளம்' ஆகிய வார இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1970 க்குப் பிறகான மலையாள இலக்கியத்தில் நிறைய புதிய எழுத்தாளர்களை அடையாளம் கண்டு ஊக்குவிப்பதில் இவர் முன்னணியில் இருந்தார். கேரள சாகித்ய அகாதமி விருது, கேரள திரைப்பட விருது, கே.பாலகிருஷ்ணன் நினைவு விருது, கே.சி. செபாஸ்டியன் விருது, கே.விஜயராகவன் நினைவு விருது, எம்.வி.பைலி இதழியல் விருது, சி.ஹெச். முகமதுகோயா இதழியல் விருது, சிறந்த திரைப்பட நூலுக்கான தேசிய விருது ஆகிய சிறப்புகள் பெற்றவர். நாவல், கட்டுரைத் தொகுப்புகள், வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு ஆகிய வகைமைகளில் நிறைய நூல்கள் எழுதியுள்ளார்.

**மேதைகளை இனங்காணவும் அவர்களைக் கண்டடையவும் அவர்கள் வாழும் 'காலத்தால்' பெரும்பாலும் முடிவதில்லை. ஆனால், வின்சென்ட்டிடம் காலம் கொடூரமாக நடந்துகொண்டது. சிறிதே அன்புக்காகவும் அது தரும் கதகதப்புக்காகவும் அவர் என்னவெல்லாம் வதைபட்டார்.**

## வெந்து கருகிப்போன ஒரு பெருவாழ்வு

வருடத்திற்கொருமுறை பூத்து ஒரு இரவில் வாடிவிடும் பிரம்ம கமலத்தின் போதையூட்டும் மணம் பரவும் அறை. சுவர்கள் நிறைய ஓவியங்கள். பேசிக்கொண்டிருக்கும்போது கே.பி.பத்மநாபன் தம்பி நான் அமர்ந்திருந்த பச்சை நிறம் பூசிய பிரம்பு நாற்காலியைச் சுட்டிக்காட்டிச் சொன்னார்:

"முன்பு ஒருமுறை இங்கே வந்த சாமர்செட்மாம் அமர்ந்த நாற்காலியில்தான் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அன்றும் பிரம்ம கமலம் பூத்திருந்தது. அதன் வாசனையில் லாகிரி கொண்ட அவர், அந்த சந்திப்பின் நினைவுக்காக பிரம்ம கமலத்தின் வாடிய சில இதழ்களை எடுத்துச் சென்றார்."

பத்மநாபன் தம்பி அறியப்பட்டதொரு ஓவிய விமர்சகர். அவரது ஆசிரியத்துவத்தில் கல்கத்தாவிலிருந்து வந்த ஓவிய மாத இதழ், நவீன தலைமுறையைச் சேர்ந்த ஓவியர்களுக்கு ஊக்கமூட்டுவதில் பேரார்வம் கொண்டிருந்தது. ரவீந்திரநாத் தாகூரையும் ஜாமினி ராயையும் ராம்கிங்கரையும் விட்டுவிட்டால் இந்தியாவின் ஓவிய வரைபடம் வெற்றாக இருக்கும் என்று நம்பிய வங்கத்தினரிடையில், நவீன ஓவியத்துறையில் நம்பிக்கைகளுக்கு இடம் உருவாக்கிக் கொடுப்பதற்காக தம்பி கடுமையாகப் பாடுபட்டார். கல்கத்தாவிலிருந்து வந்த பத்திரிகை அதற்கு ஒரு உதாரணம். அந்த ஓவிய மாதப் பத்திரிகையின் பழைய இதழ்களைப் பார்க்கவும் இந்திய ஓவியர்களைப் பற்றிப் பேசவும்தான், புகழ் பெற்ற நாவலாசிரியர் சாமர்செட்மாம் அங்கே வந்தார். 'ஆஃப் ஹ்யூமன் பாண்டேஜ்' *(Of human bondage)*, 'ரேஸர்ஸ் எட்ஜ்' *(The razor's edge)*, 'மூன் அன்ட் சிக்ஸ் பென்ஸ்' *(The moon and sixpence)* ஆகிய முதல்தர நூல்களின் மூலம், பிரிட்டிஷ்காரரான அந்த நாவலாசிரியரை நான் முன்பே அறிந்திருந்தேன். சிறந்த பத்து நாவல்கள் *(Ten best novels of world)* எனும் நூலும் அவருடையது. அவர் எழுதிய, 'எ ரைட்டர்ஸ் நோட்புக்' *(A writer's notbook)* என்பது சுயசரிதைப் பாங்கான நூல். அதில், அவர் திருவனந்தபுரத்துக்கு வந்தபோது திவான் சி.பி. ராமசாமி ஐயரின் அதிகாரப்பூர்வ வீடான பக்திவிலாசத்தில் தனக்காக நிகழ்த்திய வீணைக் கச்சேரியில் கலந்து கொண்டதை - மகாராஜா ஸ்ரீசித்திரைத் திருநாளின் அம்மாதான் வீணை வாசித்தார் - அவர் நினைவுகூர்ந்திருந்தார்.

ஓவியர் பால் காகின் *(Paul gauguin)*, தாகிதி தீவுகளின் மக்களுடன் வசிப்பதற்கு பாரீசிலிருந்து புறப்படும்போது, பங்குச்சந்தையில் சம்பாதித்த பொருளாதாரப் பாதுகாப்புடைய வாழ்க்கையையும் ஐந்து குழந்தைகள் கொண்ட குடும்பத்தையும் கைவிட்டார். அந்த நாற்பத்தைந்து வயதுக்காரர், "இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளிடம் உரையாடுபவர்களுடன் வாழ்ந்து ஓவியம் தீட்டுவதன் ஆன்மிகத் தளங்களைத் தேடத்தான் நவீன வாழ்க்கையிலிருந்து என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவித்துக்கொண்டு பிரயத்தனம் செய்கிறேன்” என்று சொன்னார். அவர் வரைந்த ஓவியங்களில் ஒன்றான 'ஸ்பிரிட் ஆஃப் தி டெட் வாட்சிங்' அதற்கு ஒரு சாட்சி. இறந்தவர்களின் ஆன்மாக்கள்தான் இரவு நேரங்களில் ஆகாயத்தில் தெரியும் சாம்பல் நிற வெளிச்சம் என்பது பாலினேசியர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையால் தூண்டப்பட்டுத்தான் பால் காகின் அந்த ஓவியத்தை வரைந்தார். விவாதங்கள் நிறைந்த அந்த வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வதுதான் மாம் எழுதிய, 'மூன் அன்ட் சிக்ஸ் பென்ஸ்' எனும் நாவல். இந்த நூல்தான் எனக்கு பிரெஞ்சு ஓவியர்களை நோக்கிய வழித்திறப்பாயிருந்தது.

ஓவியர்கள் மோனேவும் *(Claude monet)* தெகாஸூம் *(Edgar degas)* பிஸ்ஸாரோவும் *(Camille pissarro)* ஸீரட்டும் *(Georges seurat)* ரென்வாரும் *(Auguste renoir)* ஏற்றிய சுடர் முனையிலிருந்து பற்றவைத்த தீபத்தால் ஒளிவெள்ளமானது இம்ப்ரனிஸ்டுக்குப் பிறகான *(Post - impressionism)* காலகட்டம். இந்தக் காலகட்டத்தில் முக்கியமானவர்களாக இருந்தனர் காகினுக்குப் பிறகு ஓவியர்கள் லோட்ரக்கும் *(Henri de toulouse - lautrec)* வான்காவும் *(Vincent van gogh)*.

திருடனான லோட்ரக்கின் வாழ்க்கை, பாரீஸ், மோன்ட்மார்ட்டிலில் உள்ள 'முலான் ரூஷ்' *(Moulin rouge)* எனும் இரவுவிடுதியுடன் தொடர்புடையதாயிருந்தது. பகலையும் இரவையும் அங்கே செலவிட்ட லோட்ரக் தன் ஓவியங்களின் மூலம், அந்த விடுதியின் இரவு வாழ்க்கையை ஒளிமயமாக்கிய நர்த்தகிகளின் வாழ்க்கைகளை மறக்க முடியாதவையாக்கினார். 'முலான் ரூஷ்' எனும் தலைப்பில் எழுதப்பட்ட நாவல் லோட்ரக்கின் வாழ்க்கையை விவரித்தது. 'முலான் ரூஷ்' எனும் இதே பெயரில், புகழ்பெற்ற ஹாலிவுட் இயக்குநர் ஜான் ஹ்யூஸ்டன் *(John huston)* உருவாக்கிய திரைப்படத்தின் கடைசிக் காட்சியை, வெகுகாலமாகியும் என்னால் மறக்க முடியவில்லை. மரணத்தை நோக்கிப் பயணிக்கும் லோட்ரக்கின் ஒரு கனவைத்தான் அந்தக் காட்சியில் சித்திரித்திருந்தார். லோட்ரக்கின் வாழ்க்கையுடன் தொடர்புடையவர்கள் ஒவ்வொருவராக அமைதியாக வந்து பயணத்துக்கு விடைகொடுக்கும் அந்தக் காட்சி பெருந்துக்கமாக, இதயத்தைத் தகர்ப்பதாயிருந்தது.

அவரின் நண்பர்தான், டச்சுக்காரரான வின்சென்ட். முப்பத்து ஏழாம் வயதில் மரணமுற்ற வின்சென்ட், வாழ்ந்திருந்தபோது அனுபவித்த வதைகள் கற்பனைக்கும் அப்பாற்பட்டவை. இர்விங் ஸ்டோன் எழுதிய 'லஸ்ட் ஃபார் லைஃப்' எனும் நாவல், வின்சென்ட் வான்காவின் துயர வாழ்க்கையினுடைய நேரடிக் காட்சியாகும். நான்கு வயது இளையவரான தம்பி தியோவைத் தவிர அனைவருமே அவரை நிராகரித்தார்கள். இது ஏற்படுத்திய ரணங்கள், அனுபவித்த வேதனைகள், பட்ட அடிகள் எல்லாம் வின்சென்ட்டை அடியற்ற பேராழத்தில் வீழ்த்தின.

மேதைகளை இனங்காணவும் அவர்களைக் கண்டடையவும் அவர்கள் வாழும் 'காலத்தால்' பெரும்பாலும் முடிவதில்லை. ஆனால், வின்சென்ட்டிடம் காலம் கொடூரமாக நடந்துகொண்டது. சிறிதே அன்புக்காகவும் அது தரும் கதகதப்புக்காகவும் அவர் என்னவெல்லாம் வதைபட்டார். இந்த வாழ்க்கையை வாசிக்கும் எவராக இருந்தாலும், 'இப்படிப்பட்ட வாழ்க்கை எவருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாதே' என்று மௌனமாகப் பிரார்த்திப்பார்கள். அந்தளவு அதிகொடூர அனுபவங்கள் அவருக்கு ஏற்பட்டன. இவைதான் தொடரும் பக்கங்களில் விவரிக்கப்படுகின்றன.

*1*

**காய்ச்சலில் விழுந்த வாழ்க்கை**

“திரும்பிச் செல்ல என்னை அனுமதியுங்கள்...” சோர்ந்திருந்த வின்சென்ட்டின் குரல், துயரத்தாலும் ஏமாற்றத்தாலும் விம்முவதாக பாதிரியார் ஸாலீஸுக்குத் தோன்றியது.

நம்பிக்கையற்று அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவரிடம் வின்சென்ட் மீண்டும் சொன்னார்: “ஒரு வீட்டில் தனியாக இருக்கவோ பிறர் உதவி இல்லாமல் பயணம் செய்யவோ என்னால் முடியாது...” இப்படிச் சொல்லிவிட்டு அவர் பட்டென்று அசைவற்றுப்போனார். மௌனத்தில் ஆழ்ந்த அந்த முப்பத்து ஆறு வயதுக்காரரின் முகத்தில் உணர்ச்சிகள் கொந்தளித்தன. அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஸாலீஸை, காரணமற்ற அச்சம் விழுங்கியது.

அவர்களுக்கிடையில் அமைதியின் இடைவெளி அதிகரித்தது. அப்போது வின்சென்ட், தொடர்ந்து அடிபட்டுச் சிதைந்திருந்தாலும் அவற்றை வெல்ல அசாதாரணத் திறனை வெளிப்படுத்திய ஒருவராக இல்லை. தான் ஒரு நோயாளியாக இருக்கிறோம் என்று அந்த மேதை உணர்ந்திருந்தார். 'செம்முடிப் பித்தன்' என்று முரட்டுப் பிள்ளைகள் கேலி செய்ததை அவர் ஒருபோதும் மறக்கவில்லை. எல்லோரும், நண்பர்கள் என்று கருதியிருந்த பால் காகின் உள்ளிட்டவர்கள் தன்னை நிராகரித்தது மட்டுமல்ல, எழுத்து மூலமாகவும் ஒதுக்கியதாக வேதனையுடன் அவர் நினைத்துப் பார்த்தார். “என் நிலைமை முன்புபோல இல்லை. என்னை திரும்ப அழைத்துச் செல்லுங்கள்...”

மருத்துவமனையில் இருக்கும்போது வின்சென்ட், இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பத் தொடங்கியதாக ஸாலீஸ் அறிந்திருந்தார். அதன் அடிப்படையில் அவர் மருத்துவர்களுக்கு உறுதியளித்திருந்தார். வின்சென்ட்டை 'சுதந்திரத்துக்கு' அழைத்துச் செல்ல அவருக்கு அனுமதி கிடைத்தது. மீண்டும் 'மஞ்சள் வீடு' செல்லாமல், வின்சென்ட் தங்குவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு அறைகளுள்ள ஒரு வீட்டை அவர் கண்டுபிடித்தார். அதைப் பொறுப்பெடுத்துக் கொண்டு வாடகைப் பத்திரம் எழுதுவதற்காகத்தான் வின்சென்ட்டுடன் அவர் பயணம் புறப்பட்டார். அது நடக்கவில்லை. வின்சென்ட் மீண்டும் சொன்னார்: “முடியவில்லை, திரும்பிப் போய்விடலாம்...”

எதிர்பாராவகையில்தான் வின்சென்ட்டின் வலிப்பு வாழ்க்கையில் கருணையின் ஈரத்துடன் பாதிரியார் ஸாலீஸ் வந்தார். அவர் ரிஃபோர்மிஸ்ட் புரோட்டஸ்டன்ட் *(Reformist protestant)* தேவாலயத்தின் மதகுரு. தான் ஈடுபட்டிருந்த ஜீவகாருண்யச் செயல்பாடுகளின் பகுதியாக மருத்துவமனைக்கு வந்து வின்சென்ட்டைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பேற்றிருந்தார். மிக விரைவிலேயே அவர்களுக்கிடையில் நெருக்கம் ஏற்பட்டது. தன்னைத்தானே வெறுத்து ஏமாற்றங்களின் பாதாளங்களில் வீழ்ந்து உழன்றுகொண்டிருக்கும்போது, பாதிரியார் ஸாலீஸ் தன்னை நோக்கி நீட்டிய அன்பின் கரங்களைப் பற்றிக்கொண்டார் வின்சென்ட். இதை அவர் ஒரு உயிர்த்தெழலாக உணர்ந்தார்.

**உடைந்து சிதறிய மனநிலை**

ஸாலீஸின் பராமரிப்பு கிடைப்பதற்கு முன்பு வின்சென்ட்டுக்கு அடைக்கலமும் கொழுகொம்புமாயிருந்தவர் மருத்துவர் ஃபெலிக்ஸ் ரே. மருத்துவப் பட்டத்திற்கான பயிற்சியின் பகுதியாக மருத்துவமனை சேவைக்கு வந்தவர். இருபத்து மூன்று வயதுடைய அவருக்கு மனநோய் சிகிச்சையுடன் தொடர்பு ஏதும் இல்லை என்றாலும் நோயாளிகளிடம் கனிவுடன் நடந்துகொள்பவர். வின்சென்ட்டுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்களின் முடிவுகளுடன் அவர் உடன்படவில்லை. மனப்பிறழ்வின், வலிப்பின் கூர்முனையில் நடந்துகொண்டிருக்கும் வின்சென்ட்டைக் காப்பாற்றுவது கடினம் என்பது அவர்கள் கருத்து. காற்றும் வெளிச்சமும் வராத ஒரு அறையில் இருளோடு வசிப்பதற்கு விதிக்கப்பட்டவரா, வின்சென்ட்? மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவராக நிலைகொண்ட ஃபெலிக்ஸ் இப்படி முடிவு செய்தார்:

‘தீவிரமான உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க அதைவிடத் தீவிரமான நிறங்களைப் பயன்படுத்தி அதிசயங்களின் பிரபஞ்சத்தை உருவாக்கும்போது ஏற்பட்ட ‘உணர்வழுத்தம்’தான் வின்சென்ட்டின் வாழ்க்கைப் போக்கைக் குலைத்தது.’

பெண்களின் கருப்பை நோய்களைப் பற்றிய ஆய்வுப் படிப்பில் ஈடுபட்டிருந்த அந்த மருத்துவருக்கு மனநோய் சிகிச்சையைப் பற்றி எதுவும் தெரியாது. கலை இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்த அவருக்கு சராசரிகளுக்கு அப்பால் காண முடிந்தது; அதனால்தான், வின்சென்ட்டின் மனநிலையில் ஏற்பட்ட மாறுபாட்டை மனப்பிறழ்வாக முத்திரை குத்திய மருத்துவர் டெலோனின் அவதானத்தை மறுக்க இயன்றது.

வின்சென்ட்டின் தம்பி தியோ, ஜோ எனும் பெண்ணைக் காதலித்து வந்தார். அவர்களுக்கிடையில் நீண்டகால கடிதத் தொடர்பு உண்டு. நேர் சந்திப்புகளும் நிகழ்ந்தன. ஜோ, இடையில் அகன்றுபோயிருந்தார் என்றாலும் கடைசியில் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்தார். இதன் பிறகுதான், தியோவை மனோரீதியாகத் தகர்த்த அந்தத் தந்தி ஆர்லிஸிருந்து வந்தது. சிதைந்து சிதறத் தொடங்கிய தன் வாழ்க்கை ஜோ வந்தவுடன் மகிழ்ச்சி நிறைந்ததாகும் எனும் கனவை அது உடைத்துப் போட்டது. என்றாலும், முன்பும் இதுபோன்ற நெருக்கடிகள் எதிர்பாராமல் வெடித்துக் கிளம்பியிருக்கின்றன, அவற்றை வெல்லவும் முடிந்திருக்கிறது. இந்த அனுபவங்கள் புதிய சூழ்நிலையை எதிர்கொள்ள தியோவுக்குச் சக்தியளித்தன. வின்சென்ட் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் இருக்கிறார் என்பதைத் தவிர, அவரது நோய் நிலை பற்றி தந்தியில் குறிப்பு ஏதும் இல்லை.

கிறிஸ்துமஸுக்கு முதல்நாள் இரவு. பாரீஸ் நகரம் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் மூழ்கத் தொடங்கியிருந்தது. ஆபத்து வந்துவிட்டது எனும் துயரத்துடன் நானூற்று ஐம்பது மைல் தூரத்தில் உள்ள அர்லிஸுக்கு ரயில் ஏறினார் தியோ. அப்போது அவருக்கு ஒரே ஒரு பிரார்த்தனை மட்டும்தான் இருந்தது. வின்சென்ட்டின் நோயின் காரணத்தால் ஜோவுடனான திருமணம் தடைப்பட்டுவிடக் கூடாது என்பது மட்டும்தான். தியோ அதிகாலையில் அர்லிஸுக்கு வந்து சேர்ந்தார். அன்று கிறிஸ்துமஸ். வழிபாட்டுக்காக எல்லோரும் தேவாலயத்துக்குச் சென்றிருந்ததால் மருத்துவமனை வெறிச்சோடியிருந்தது. சில நோயாளிகள் மட்டுமே இருந்தனர். கருங்கற்கள் கொண்டு ஒரு குகைபோலக் கட்டப்பட்ட அந்த மருத்துவமனையில் மனநிலை பாதித்தவர்களைத் தங்கவைத்திருந்தார்கள்.

‘கடவுளின் வீடு’ *(Hotel dieu)* எனும் பெயருடைய அந்த மருத்துவமனையின் நீண்ட வராந்தாக்களிலும் பெரிய கூடங்களிலும் சுவர்களில் சிலுவைகள் வைத்திருந்தார்கள். மஸ்லின் திரைச்சீலைகளால் பிரிக்கப்பட்ட படுக்கைகள் வரிசையாக அமைந்த வார்டுகளில் தியோ தேடினார்; வின்சென்ட்டைப் பார்க்க முடியவில்லை.

கன்னத்தில் ரத்தம் வழிந்துகொண்டிருந்த நிலையில் வின்சென்ட்டை மருத்துவமனைக்குக் கொண்டு வந்தபோது அவருக்குப் பிரக்ஞையில்லை. ஓசையைத் தடுப்பதற்காக சுவர்களில் பேடுகள் பொருத்தியிருந்த சிறியதொரு இருட்டறை அது. அங்கே, கையிலும் காலிலும் சங்கிலிகள் பிணைக்கப்பட்ட நிலையில் வார்டிலிருந்து வின்சென்ட்டைக் கொண்டு வந்து கிடத்தியிருந்தார்கள். சற்று நேரத்துக்குப் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியடைந்த வின்சென்ட்டை மீண்டும் வார்டுக்கு மாற்றும்போதுதான் தியோ அங்கே வந்தார்.

தம்பியின் வருகை வின்சென்ட்டுக்கு மகிழ்ச்சியளித்தது. இருட்டிலிருந்து வெளிச்சத்துக்குத் திரும்பி வந்ததுபோலிருந்தது. அவர்கள் இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டார்கள். தங்கள் குழந்தைப் பருவத்தைப் பற்றி... ஒன்றாகக் கனவுகளைப் பகிர்ந்துகொண்ட நாட்களைப் பற்றி... பேசிக்கொண்டிருக்கும்போது, ஜோவுடனான திருமணம் நெருங்கிக்கொண்டிருப்பதைப் பற்றி தியோ குறிப்பிட்டார். அப்போது, 'வாழ்வின் ஒரே ஒரு நோக்கமாக தாம்பத்தியத்தைப் பார்க்கக் கூடாது' என்று தியோ அறிவுரைத்ததை பிற்காலத்தில் தியோ நினைவுகூர்ந்தார். "மனச் சமநிலைக்கு மீண்டுவிட்டார் என்று தோன்றும்போதுதான் வின்சென்ட் திடீரென்று மீண்டும் 'பேய் பிசாசுகளின்' பிடியிலகப்பட்டார். அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. தாங்க முடியாத துயரத்திலிருந்து கரையேற நான் பெரும்பாடு பட வேண்டியிருந்தது" என்று, ஜோவுக்கு எழுதிய கடிதத்தில் தியோ குறிப்பிட்டார்.

மருத்துவமனையில் சில மணி நேரங்கள் இருந்த பிறகு இரவு ஏழரை மணிக்கு தியோ பாரீசுக்குப் புறப்பட்டார். அதற்கு முன்பு, சீனியர் மருத்துவர்கள் இல்லாததால் ஜூனியரான ஃபெலிக்ஸ் ரேவுடன் பேசினார். மற்றவர்கள் சொன்னதுபோல பைத்தியமல்ல, தீவிரமான உணர்ச்சிக் கொந்தளிப்புதான் வின்சென்ட்டை ஆக்கிரமித்தது என்று அறிந்து தியோ நிம்மதியடைந்தார். வின்சென்ட்டுடன் பேசியபோது அதைத் தெரிந்துகொள்ளவும் முடிந்தது. இடையிடையே மௌனத்தில் மூழ்குவதும், தாக்கிவிடப்போகிறாரோ என்று தோன்றும்படியான செய்கைகளும் வின்சென்ட்டின் குணச்சிறப்புகளாக மாறியிருந்தன. இந்த நிலைமை ஏறத்தாழ ஐந்து வருடம் தொடர்ந்தது. அறியாததும் புலனாகாததுமான ஏதோ சக்தியின் பிடியில் அகப்பட்டிருக்கிறோம் எனும் அச்சம் வின்சென்ட்டை வேட்டையாட மற்றொரு காரணமும் இருந்தது. மாப்பசானின் ஒரு கதாபாத்திரமான ஹோர்ளயைப்போன்று பைசாசம் பீடித்த நிலை.

**நினைவின் கசிவு**

"நான் என்ன சொன்னேன் என்றோ, என்ன செய்தேன் என்றோ, என்ன விரும்புகிறேன் என்றோ என்னால் நினைவுகூர முடியவில்லை" என்று, தியோவுக்கு எழுதிய கடிதத்தில் அந்த நாட்களை வின்சென்ட் குறிப்பிட்டார். மனம் நிறைய இருட்டு; எங்கோ எடுத்து எறியப்பட்டதுபோல.

போர்வையால் தலைமூடிப் போர்த்திக்கொண்டு அஞ்சி நடுங்கி கட்டிலுக்குப் பக்கத்தில் வின்சென்ட் அமர்ந்திருப்பதைக் கண்டதாக, அந்த மருத்துவமனையின் ஊழியர் ஒருவர் பிற்பாடு நினைவுகூர்ந்தார். யாருடனும் பேசாமல் துயருற்றிருக்கும், ஓசையற்று அழுதுகொண்டிருக்கும், சாப்பிடாத, ஏதும் கேள்வி கேட்டால் வெறித்துப் பார்க்கும் வின்சென்ட். இருளில் வீழும்போது உருவமற்ற பேய்கள் பின்தொடர்ந்து அச்சுறுத்துகின்றன. பரிதாபமாக உடைந்துபோன ஒரு மனிதர். துயரப் பெருங்கடலில் மூழ்கிய விதிக்கப்பட்ட நிராதரவாளி. நினைவுகள் அலைத் தொடர்கள்போல வின்சென்ட்டை தாக்கித் தாக்கிக் கலங்கடித்துக்கொண்டிருந்தன. "துயரம் எனும் கசப்பு நீரைக் குடிப்பதற்குத்தானா இந்த பூமிக்கு வந்தேன்? தூக்கத்தைக் கிழித்துப்போடும் துர்க்கனவுகளை எதிர்கொள்ள முடியாமல் ஓசையின்றி அழுவது மட்டுமே என்னால் இயலக்கூடியதாயிருந்தது."

மனம் பிறழ்ந்த மற்ற நோயாளிகளுடன் படுக்கையில் ஏறி நின்று, சிகிச்சையளிக்க வரும் செவிலிகளைத் திட்டித் துரத்துவது வின்சென்ட்டின் வழக்கமானது. அப்போதுதான், இது தனிப்பட்ட பராமரிப்பு தேவைப்படும் நோய் என்றும் மார்ஸெயிலுள்ள மனநோய் மருத்துவமனையில் வின்சென்ட்டை சேர்ப்பதுதான் நல்லது என்றும் மருத்துவர்கள் சொன்னார்கள். அப்போதுதான் மருத்துவர் ஃபெலிக்ஸ் ரே ரட்சகனாக வந்தார். அவர் சிகிச்சையளிக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஆரம்பத்தில் வின்சென்ட் ஒத்துழைக்கவில்லை. ஃபெலிக்ஸ் ரேவைப் பார்த்து வின்சென்ட், "நான் உங்களைப் பார்க்கக்கூட விரும்பவில்லை" என்று கத்துவார். அப்போதெல்லாம் ஃபெலிக்ஸ், 'வின்சென்ட் ஒரு பைத்தியம்' என்று முத்திரை குத்த முற்படவில்லை. புகழ் பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் ப்ளாபேர் குறிப்பிட்டதுபோல, 'நினைவுகளின் கசிவு'தான் வின்சென்ட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி அந்த இளம் மருத்துவர் சமாதானப்படுத்தினார்.

மெல்ல மெல்ல வின்சென்ட் அமைதியடைந்தார். அப்போது உதவிக்கு நண்பர்களோ, அண்டை அயலார்களோ இல்லாத நிலை. கொஞ்சம் நாட்களில் மருத்துவமனையை விட்டுச் செல்லும் வாய்ப்பு வரும் எனும் யோசனையில், என்ன செய்வதென்று தெரியாது குழம்பிக்கொண்டிருந்தார். அப்போதுதான் முற்றிலும் எதிர்பாராத வகையில், வின்சென்ட்டைப் பார்த்துக்கொள்ள அஞ்சல்காரர் ரூலன் வந்தார். அர்லிஸில் தெரிந்தவர்களிடையே ரூலன் மட்டும்தான் வின்சென்ட்டின் தனிப்பட்ட குணங்களைப் புரிந்துகொண்டு அனுதாபம் காட்டிவந்தார். அதற்கான கைம்மாறாக, அஞ்சலரின் அலுவல் உடையணிந்த ரூலனின் உருவப்படத்தை வின்சென்ட் வரைந்தார்.

தியோ கேட்டுக்கொண்டபடி, மருத்துவர்களைச் சந்தித்து வின்சென்ட்டை தன் பாதுகாப்பில் விட்டுக்கொடுக்கும்படி ரூலன் வேண்டினார். ஆனால் மருத்துவர்கள் அதற்குச் செவி கொடுக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராக இல்லை. அதுமட்டுமல்ல, மனநோய் சிகிச்சை மையம்தான் வின்சென்ட்டுக்கு ஏற்றது எனும் நிலைப்பாட்டில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதற்கு அவர்களுக்குக் காரணங்கள் இருந்தன. வின்சென்ட் இயல்பு நிலைக்கு வந்துவிட்டார் என்று தோன்றும்போதே, திடீரென்று தாக்கத் துணிவது அவரது குண இயல்பின் பகுதியாக இருக்கிறது எனும் முடிவில் அவர்கள் இருந்தார்கள். அதன் செல்வாக்கு பிறகு ஃபெலிக்ஸ் ரேயின் நிலைப்பாட்டிலும் பிரதிபலித்தது. இதனால்தான் அவர், "பாரீசுக்குப் பக்கத்தில் உள்ள மனநோய் மருத்துவமனையில் வின்சென்ட்டை சேர்த்து சிகிச்சையளிப்பதற்கான பொருளாதார வசதி உண்டா?" என்று தியோவுக்குக் கடிதம் எழுதிக் கேட்டார்.

தியோ, ஜோவுக்கான கடிதத்தில், அண்ணன் மரணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறாரோ எனும் அச்சத்தைத் தெரிவித்ததுடன், அப்படியொரு ஆபத்து ஏற்பட்டால் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டியிருக்கிறது என்று எழுதியிருந்தார். ஜோ, தியோவுக்கு எழுதிய பதில் கடிதத்தில், அப்படிப்பட்ட எண்ணங்களை விட்டுவிடும்படி அறிவுறுத்தினார். திருமண நாள் நெருங்கும்போது தியோ மேலும் கலவரத்துக்கு ஆட்பட்டார். ஆபத்தின் முனையில் தான் இருப்பதான எண்ணம் அவரை ஊணிலும் உறக்கத்திலும் தொடர்வதாக, அந்தக் காலத்தில் ஜோவுக்கு எழுதிய கடிதங்கள் சொல்கின்றன. ஆனால் ஜோ, தியோவின் சந்தேகங்களுடன் உடன்படவில்லை. வின்சென்ட்டின் உயிர் ஆபத்திலிருக்கிறது என்பது ஒரு ஊகம்தான் என்றும் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலையை அவர் கடந்து வருவார் என்றும் அவர் நம்பினார். இப்படிச் சொல்லி தியோவை சமாதானப்படுத்துவது ஜோவின் வழக்கமானது.

இந்தச் சூழ்நிலையில்தான் வின்சென்ட்டின் பாதுகாப்பை ஏற்றுக்கொள்வதாக ரூலன் அறிவித்தார். எதிர்பாராதது என்றாலும் அது தியோவுக்கு ஆசுவாசமளித்தது. ஆனால் இது அதிக நாட்கள் நீடிக்கவில்லை. தான் எழுதிய கடிதத்தில் ரூலன் இப்படிச் சொல்லியிருந்தார்: "உங்கள் அண்ணனின் ஆரோக்கியம் மேம்பட்டிருக்கும் மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல வேண்டும் என்று நினைக்கும்போதுதான், அதற்கு வாய்ப்பற்றுப்போயிருக்கிறது. திடீரென்று ஒருநாள் வின்சென்ட்டின் உடல்நிலை நன்றாக இருக்கும்; அடுத்த நாளே மரணத்தின் விளிம்பை அடைந்ததுபோல ஆபத்தாகிவிடும். இந்த சூழ்நிலையில் வின்சென்ட்டை ஒரு மனநோய் மருத்துவமனையில் சேர்ப்பது மிக முக்கியமாக இருக்கிறது." ரூலனின் அறிவிப்பு தியோவைத் துவண்டுபோகச் செய்தது.

அந்தச் சூழ்நிலையில், என்ன செய்வது என்று தெரியால் தியோ உருகிக்கொண்டிருந்தபோதுதான், பாதிரியார் பிரடெரிக் ஸாலீஸை சந்திக்க முயற்சித்தார். வின்செண்ட்டுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளுக்கு ஆறுதலளிக்கும் செயலின் பகுதியாக தன் அண்ணனுக்கு உதவ வேண்டும் என்று தியோ கேட்டுக்கொண்டார். அதற்குப் பதிலாக, "உடல்ரீதியான பிரச்சினைகளைச் சரிசெய்து உங்கள் அண்ணனை இயல்பு நிலைக்குக் கொண்டுவர என்னால் முடிந்த உதவிகளையெல்லாம் செய்கிறேன்" என்று 47 வயதுடைய அந்தப் பாதிரியார் உறுதியளித்தார். ரூலனின் அபாய அறிவிப்புகளுக்கிடையில் ஸாலீஸின் இந்த உறுதியை, காற்றும் மழையும் நிறைந்த இருட்டில் அணையாது எரிந்துகொண்டிருக்கும் தீபம்போல தியோ உணர்ந்தார். மனப்பிறழ்வுக்கு ஆட்பட்ட வின்சென்ட்டை மீட்டுவிடலாம் எனும் மெல்லிய நம்பிக்கை ஸாலீஸின் அறிவிப்பின் மூலம் தியோவுக்கு ஏற்பட்டது. ஆயினும் அந்த நம்பிக்கை எந்த நொடியிலும் கைவிட்டுப் போய்விடுமோ எனும் எண்ணம் அவரை அச்சுறுத்தியது.

"அருகிலிருந்தாலும் தூரத்திலிருந்தாலும் வின்சென்ட்டின் இருத்தல் எனக்குத் தேவை. அவர், சகோதரன் என்பதுபோல என் வழிகாட்டியுமாவார். நீங்கள் கெட்ட எண்ணங்களை விட்டுவிடுங்கள்" என்று சொல்லி தியோவை ஜோ சமாதானப்படுத்துவார். ஆனால் வின்சென்ட்டின் அம்மா மற்றும் சகோதரிகளின் எண்ணம் ஜோவின் கருத்துபோன்று இல்லை. "அவன் ஒரு பைத்தியம் என்று என்றும் நான் நினைத்திருந்தேன்" என்று வான்காவின் அம்மா அன்னா தியோடரஸ் எழுதியதை தியோ நினைவுகூர்ந்தார். "இப்போதைய அவனது கடுந்துன்பங்களும் நாம் எதிர்கொள்ளும் துயரங்களும் அதிலிருந்து ஏற்பட்டவைதான்." இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் வின்சென்ட் முற்றிலும் குணமடைய முடியாது என்று தியோவும் கருதினார். "வின்சென்ட்டின் வேதனை நீடிக்கக் கூடாது என்பதுதான் என் பிரார்த்தனை."

இந்த நெருக்கடியில் அர்லிஸில் இருக்கும் மருத்துவமனையிலிருந்து எதிர்பாராமல் நம்பிக்கையளிக்கும் தகவல்கள் வரத் தொடங்கின. பேராபத்து தவிர்க்க முடியாதது எனும் ரூலனின் முன்னறிவிப்புகளை நீர்க்கச் செய்து, எதிர்பார்த்ததைவிட விரைவாக வின்சென்ட்டின் ஆரோக்கியம் மேம்பட்டிருக்கிறது என்று தியோவுக்குத் தெரிவித்தார் ஸாலீஸ் அதனுடன் ஃபெலிக்ஸும் அறிவித்தார்: "எல்லாம் கலங்கிக் குழம்பித் தெளிந்திருக்கிறது." அவர் தொடர்ந்து இப்படி எழுதினார்: "வசந்தகாலம் வந்தவுடன் வின்சென்ட் வெளியே சென்று ஓவியம் வரைவதில் மூழ்க முடியும். அப்படி இயற்கையுடனான அனுபவத்தை மீட்டெடுக்க அவரால் முடியும்போது பழையதெல்லாம் வெறும் நினைவாகும். எல்லாவற்றையும் மறைந்துபோகச் செய்யும் இயற்கையின் புனித சக்தி வின்சென்ட்டைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றும்." இந்தக் கடிதங்கள் தியோவுக்கு மனோதிடம் அளிப்பவையாக இருந்தன. இவை கொடுத்த நம்பிக்கையுடன் ஜோவைக் காண்பதற்காக அவர் ஆம்ஸ்டர்டாமுக்கு புறப்படுவதற்கு முதல் நாள், ஜனவரி ஆறாம் தேதி வின்சென்ட் மஞ்சள் வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

"குணமடைந்த வின்சென்ட்டின் விஷயத்தில் என் விருப்பப்படி செயல்படலாம் என்று மருத்துவர்கள் என்னிடம் சொன்னார்கள்" என்று ஸாலீஸ் எழுதினார் என்றாலும், மருத்துவமனையை விட முடிந்ததற்குப் பின்னால் வின்சென்ட்டின் பிரக்ஞைப்பூர்வமான முயற்சிகள்தான் மிக முக்கியப் பங்காற்றின என்று யாரும் அறிந்திருக்கவில்லை. "அன்பான தியோ" என்று விளித்து வின்சென்ட் இப்படி எழுதினார்: "என்னைப் பற்றிய கவலைகளை நீ விட்டுவிட வேண்டும் என்பதற்காகத்தான் நான் எழுதுகிறேன். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீ துயருறுகிறாய் என்று அறியும்போது நான் கலக்கமடைகிறேன். இரண்டு மூன்று நாட்களுக்குள் நான் மருத்துவமனையிலிருந்து வந்துவிடுவேன்." அப்படி எழுதும்போது, தன் கருத்துகளுக்கு மருத்துவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு மருத்துவர் ஃபெலிக்ஸ் ரேவுடனான நட்பைத்தான் முக்கியமாகக் கருதினார்.

மருத்துவமனை வாசலிலும் வெளியிலும் ஃபெலிக்ஸுடன் உலவுவதை வின்சென்ட் வழக்கமாக்கிக்கொண்டார். அப்படி நடக்கும்போது, ஓவியம் வரைவதற்கான தன் மோகத்தைப் பற்றியும் நிறக்கலவைகளின் இந்திரஜாலத்தைக் குறித்தும் வின்சென்ட் நிறையப் பேசுவார். ரெம்பிரண்டின் பின்பற்ற முடியாத ஓவிய பாணியைப் பற்றி நினைவூட்டும் வின்சென்ட், மருத்துவர்களும் ஓவியர்களும் பகிரும் உயர்வான மதிப்பீடுகளைப் பற்றிப் பேசினார். "ஒரு மருத்துவராக ஆக முடியாததன் துயரத்தை நான் ஃபெலிக்ஸிடம் சொல்லியிருந்தேன்." ஓவியம் படைப்பதில் உள்ள தன் விருப்பங்களை ஃபெலிக்ஸ் மனம் திறந்து வெளிப்படுத்தினார். அப்போது, ஓவியராக ஆவதற்குப் பிரயத்தனம் செய்யாமல் ஓவியப் படைப்புகளைப் பாதுகாப்பவராக ஆகும்படி அறிவுறுத்திய வின்சென்ட், அதற்கு தியோவின் உதவியைப் பெறலாம் என்று சொன்னார்.

மருத்துவர்களில் ஒருவர், புகழ்பெற்ற ஓவியரான டெலக்ரோயியுடன் பழக்கம் கொண்டிருந்த பாரீஸ்காரர். அவர் உட்பட சில மருத்துவர்களை மஞ்சள் வீட்டுக்கு அழைத்து ஓவியங்களைக் காட்டினார் வின்சென்ட். அப்போதுதான் ஃபெலிக்ஸ் ரேயின் உருவப் படத்தை வரைந்தார். இவ்வகையில் மன அமைதியை மீட்டெடுத்ததாக மருத்துவர்களுக்கு உணர்த்துவதில் தான் வெற்றி பெற்றதான வின்சென்ட்டின் கணக்கீடுகளை ஃபெலிக்ஸும் பகிர்ந்துகொண்டார்: "வின்சென்ட்டுக்கு ஏற்பட்ட தீவிரமான உணர்வழுத்தம் தற்காலிகமானதாக இருந்தது. விரைவிலேயே அவர் முன்புபோல ஆகிவிடுவார்."

"ரூலனுடன் மஞ்சள் வீட்டில் அதிக நேரம் செலவிட வின்சென்ட்டை அனுமதிப்பதற்குக் காரணம், அது சரிதானா என்று தெரிந்துகொள்வதற்காகத்தான்" வழக்கமாக அந்த வீட்டை துப்புரவு செய்ய வரும் பணிப்பெண்ணிடம் ஃபெலிக்ஸ் அப்போது சொன்னார்.

மருத்துவமனையிலிருந்து வெளியேறும் மகிழ்ச்சியை வின்சென்ட் ஒரு கடிதத்தில் தியோவுடன் பகிர்ந்துகொண்டார். "என் அன்பான குழந்தையே" என்று விளித்து எழுதிய அந்தக் கடிதத்தில், உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருப்பதை அறிந்தவுடன் தியோ ஓடி வந்ததற்கு நன்றி சொன்னார்; அப்படி தொந்தரவு செய்ததற்கு தம்பியிடம் அவர் மன்னிப்பும் கேட்டார். அந்தக் கடிதத்தில், பால் காகினுடன் செலவிட்ட நாட்களை வின்சென்ட் நினைத்துப்பார்த்தார்: "அந்த நல்ல நண்பனை தொந்தரவு செய்ததற்காக நான் இப்போது வருந்துகிறேன்" என்று அவர் எழுதினார். காகின் மஞ்சள் வீட்டில் கைவிட்ட பொருட்களை அவருக்கு அனுப்ப அப்போது வின்சென்ட் ஏற்பாடு செய்தார். 'சூரியகாந்திகளின் ஓவியன்' என்று காகின் தன்னைக் கேலி செய்தார் என்று வின்சென்ட் நினைவுகூர்ந்தார். சூரியகாந்தி ஓவியங்கள் இரண்டை காகின் கொண்டுசென்றிருந்ததால், அதற்குப் பதிலாக மேலும் சில சூரியகாந்தி ஓவியங்களைத் தீட்ட அவர் முடிவு செய்தார். (வின்சென்ட் பதினொரு சூரியகாந்தி ஓவியங்களை வரைந்தார்.) அந்த இடைவேளையில்தான் தன் சுய உருவ ஓவியங்கள் இரண்டை (அவற்றில் ஒன்று வெட்டுப்பட்ட காதுப் பகுதியில் போட்டிருக்கும் கட்டு தெரியும்படி உள்ளது) வின்சென்ட் வரைந்தார். அன்பைக் குறிப்பதாக வின்சென்ட் சூரியகாந்திகள் வரையும் ஒரு ஓவியத்தை காகின் வரைந்திருந்தார்.

இயல்பு நிலைக்கு வந்து ஓவியங்கள் வரைவதில் மூழ்கியபோது, வின்சென்ட் மஞ்சள் வீட்டுக்குத் திரும்புவதை தியோ தடுக்கவில்லை. ஜோவுடனான திருமண வாழ்க்கை தொடங்குவதற்கான ஆயத்தமாக, நெடிய தேடலின் கடைசியில் ஒரு நல்ல வீட்டைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியிலிருந்தார் தியோ. "கேலரியிலிருந்து சாப்பாட்டுக்கு நடந்து வரக்கூடிய தூரம்தான் வீடு. அதன் முன்னால் நல்லதொரு பூந்தோட்டம். நிறைய பூ மரங்கள்." தியோ, ஜோவுக்குத் தெரிவித்தார். ●

**தொடரும்**

கட்டுரையாளர்:
மொழிபெயர்ப்பாளர், ஓவியர், எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை | லோகேஷ் ரகுராமன்

# வானவில்லின் வானவில்

ஒருமுறை நண்பர்களுடன் குடித்துக் கொண்டு சலம்பிக் கொண்டிருந்தபோது எனக்கு விக்கல் எடுத்தது.

"என்னடா சனியன் இத குடிக்கும் போதுலாம் இப்படி விக்குது எனக்கு? நிம்மதியா கெடந்து சலம்பக் கூட முடியல" என்றேன்.

அதற்கு ஒரு நண்பன் சொன்னான். "அதுக்கு ஏன்டா சரக்கப் போய் திட்டுற? இது நீ உங்கம்மா வயித்துக்குள்ள இருந்த போது உன்னச் சுத்தி இருந்த இறுக்கம். அதனால தான் விக்குது. கண்ணுக்கு தெரியாத ஒரு தொப்புள் கொடி இன்னும் இறுக்கிக்கிட்டு இருக்கு"

நான் ஒரு கணம் கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டேன்.

"நீ இன்னும் அம்மா வயித்துக்குள்ள தான் இருக்கன்னு இந்தச் சரக்கு ஒனக்கு காட்டிக்குடுக்குது. அதப் போய் சனியன் கினியனுக்கிட்டு"


"போதையில இவன் இப்படி தான் எதையாவது ஒளறுவான் " என்றான் மற்றொருவன்.

"பேசாம இந்த லெமன நாக்குல புழிஞ்சு விட்டுக்கோ" என்றான் அவன்.

நேற்று எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. நான் லேபர் வார்டின் வாசலில் காத்திருந்தேன். பனிக்குடம் உடைந்து வெளிவந்ததும் அதன் அழுகுரல் அந்த அறையையும் தாண்டிக் கேட்கத் துவங்கியது. நான் கொந்தளித்தபடி வெளியே நின்றுகொண்டிருந்தேன்.

சிறிது நேரத்திற்குள்ளாகவே தாதிகள் பிறந்த குழந்தையை தூய்மைப் படுத்திக் கொண்டு வந்துவிட்டனர். முதல்முதலாக என் குழந்தையைப் பார்த்தேன். அதன் அழுகை இன்னும் நின்றபாடில்லை. எனக்கும் துளிர்த்துக் கொண்டு வந்தது.

அதற்குள் மகப்பேறு ஆலோசகர் வந்தார். குழந்தையைப் பார்த்துவிட்டு, "*Baby was under distress. It has a breathing difficulty.* அதனால சரியா மூச்சு விட முடியல. இதோ அழுகைல தெரியுது பாருங்க" என்றார். அப்போது தான் அதன் குறைபட்ட அழுகை புரிந்தது.



"எதனால இப்படி வந்துருக்கும் சார் இதுக்கு?"

"*May be* கொடி சுத்தியிருக்குன்னு நேத்து எடுத்த ஸ்கேன்ல தெரிஞ்சுது இல்லையா? அது கூட காரணமா இருக்கலாம். பட் ஷ்யூரா சொல்லிட முடியாது. அதோட நுரையீரல்ல சில சமயம் *amniotic fluid* உள்ள போயிருக்கும். அதும் காரணமா இருக்கலாம்."

"மதர, இன்னும் கொஞ்ச நேரத்துல அவங்க ரூமுக்கு ஷிப்ட் பண்ணிடுவாங்க. அவங்க பக்கத்துல கொழந்தைய வச்சு அப்சர்வ் பண்ணிப் பாக்கலாம்"

"கொழந்த அப்பயும் இப்படி திணறித் திணறி அழுதா அதை NICUல சேக்க வேண்டியிருக்கும். ரெண்டு நாளுக்கு அத அங்க வென்டிலேட்டர்ல வச்சு பாத்துப்போம்" என்றார்.

எனக்கு இன்னும் அழுகையாக வந்தது. துளிர்த்த போதிருந்த அழுகைக் காரணம் கன்னத் தளத்தில் இருந்து விழுந்துச்சிதறும் போது நொடிப்பொழுதில் மாறிவிட்டதே இப்படி?

நான் எங்கள் அறையில் காத்திருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை தொட்டிலில் போட்டிருந்தார்கள். அம்மா கட்டிலில் கிடத்திய படி அழைத்து வரப்பட்டாள். அவள் மயக்க நிலையில் இருந்தாள். நான் என்ன செய்வதென்று அறியாது இருந்தேன். அறையின் அது வரை மூடியிருந்த கண்ணாடிச் சாளரத்தை திறந்துவிட்டேன். சாளரம் வழியாக வெளிச்சம் ஊடுருவியது. நான் வெளியே பார்த்துக்கொண்டு நின்றேன். நாங்கள் இருந்தது பத்தாவது அடுக்கில். அங்கிருந்து அடிவானம் தெரிந்தது. தூரத்தில் குத்திட்டு நின்றுகொண்டிருந்த சில அடுக்குமாடிக் கட்டிடங்கள் தென்பட்டன. ராட்சச கிரேன்கள் எடை கட்டியிருக்கும் அதன் நீளக் கரங்களை நீட்டி காற்றில் அளைந்துக் கொண்டிருந்தன. ஒரு மெட்ரோ ரயில் மரவட்டையென ஊர்ந்து பாலத்தின் மீது சென்றுகொண்டிருந்தது. மேற்குப் பக்கமாக இருட்டிக் கொண்டு வந்தது. கிழக்கில் நன்றாகவே வெயிலடித்துக்கொண்டு இருந்தது. மனைவி இன்னும் கண் திறக்க வில்லை. ஒரு மணி நேரம் கழித்து மகப்பேறு மருத்துவரும் செவிலிகளும் பார்க்க வந்தார்கள். குழந்தை இன்னும் அப்படியே தான் விக்கி விக்கி அழுதபடி இருந்தது.

"இதுக்கு மேல வெயிட் பண்ண வேணாம். உங்களுக்கு ஓக்கே தானே. *NICU* ல அட்மிட் பண்ணிடலாம்"

நான் வேறு வழியில்லாமல் தலையாட்டினேன்.

"சிஸ்டர், அந்த *NICU* அட்மிஷன் ஃபார்ம எடுத்துட்டு வந்து இவர்கிட்ட கன்செண்ட் வாங்கிருங்க"

"அங்க வச்சு மானிட்டர் பண்ணி பாக்கலாம் சார். நோ நீட் டு வொரி. ரெண்டு நாள்ல சரியாகிடும். இவங்க ஒரு ஃபார்ம் தருவாங்க. ஜஸ்ட் சைன் இட். ஃபார்மாலிட்டுக்காக" என்றார்.

அந்தச் செவிலி எங்கிருந்தோ ஒரு ஃபார்மை கொண்டு வந்து கொடுத்தாள். நான் அதனை படித்துப் பார்த்துவிட்டேன். கையெழுத்திட முடிவெடுத்திருந்தேன். சட்டென குழந்தையின் அழுகை நின்று போனது. குழந்தையின் முகம் எதற்கோ தயாரானது. அதன் கண்கள் சூழ்ந்திருந்த கன்னக் கதுப்புகளால் குழிக்குள் மேலும் புதையுண்டு போனது. அதன் விழிகளே வெளிதெரியவில்லை. புருவங்கள் இரண்டும் புருவத்து மத்தியில் சுருங்கிச் சுருங்கி விரிந்து கொண்டிருந்தது. அப்போதெனப் பார்த்து எழுந்தது முதல் விக்கல். குழந்தையை ஒரு உலுக்கு உலுக்கித் தூக்கிப் போட்டது. அப்படியே சில இடைவெளிகள் விட்டு மேலும் மேலும் தொடர்ந்தது. முதல் மூன்று நான்கு நிமிடங்களுக்குள் ஏழு முறை குழந்தை விக்கிவிட்டது. விக்கல் நின்ற பின்னர் அதன் அழுகை முன்பு போல தொடர்ந்தது.

நான் விக்கலுக்கு வழிவிட்டு நின்ற அழுகையை பார்த்துக் கொண்டிருந்தேன். அருகில் மருத்துவர் இருந்தார். அவரும் குழந்தையை கவனித்தபடி இருந்தார். நான் அருகில் இருந்த மேஜையில் வைத்து அந்த ஃபார்மில் கையெழுத்திடப் போனேன். டாக்டர், *"Sir, no need to sign. Baby is fine now"* என்றார். நான் புரியாமல் விழித்தேன்.

"இப்போ பாருங்க அதோட அழுகை சீரா இருக்கு. முன்ன இருந்த திணறல் இல்ல கவனிச்சீங்களா? விக்கல் *is such an involuntary reflex. Nature knows how to recoup the baby on its own. Nothing to worry about it now"* என்றார்.

நான் அமைதியானவனாகக் கேட்டுக்கொண்டேன். என் மனைவியை கைகாட்டி *"she will be unconcious for next few hours.* இவங்க கண் முழிச்ச பிறகு பேபிக்கு ஃபீட் பண்ண சொல்லலாம். சிஸ்டர்ஸ் அப்பப்ப வந்து கைட் பண்ணுவாங்க. டூ டேஸ்ல மதரோட சேர்ந்து பேபியும் டிஸ்சார்ஜ் ஆகிடலாம்"

மருத்துவரும் செவிலிகளும் சென்றுவிட்டார்கள். நான் வெளியே சாளரத்தின் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். மனைவி பிள்ளையாண்டிருந்த போது தன் வயிற்றில் சிசு அடிக்கடி இப்படி சேர்ந்தா மாதிரி சில சமயங்களில் முண்டுவதாகச் சொல்லுவாள். அப்போதெல்லாம் குழந்தைக்கு விக்கியிருக்கிறது போல. நாங்கள் அது உதைக்கிறது என்று நினைத்திருந்தோம்.

வெளியே தூரத்து வானில் கிழக்குப் பக்கமாக ஊர்ந்து செல்லும் கருமேகங்களுக்கு கீழாக எதுவோ பூத்துக்கொண்டிருந்தது. இங்கு குழந்தைக்கு மீண்டும் விக்கலெடுத்தது. குழந்தையின் ஒவ்வொரு விக்கலுக்கும் ஒவ்வொரு நிறமாக என் கண் முன் பூத்துக்கொண்டிருந்தது அந்த வில்.

அதில் மொத்தம் ஏழு வண்ணம்.

என் மனைவி கண் விழித்துவிட்டு, "என்னங்க" என்று அழைத்ததும் தான் திரும்பிப் பார்த்தேன். குழந்தை இருந்த தொட்டிலை அவள் கைக்கு எட்டிய தூரத்தில் தள்ளி வைத்தேன். அவளைப் பார்த்துச் சிரித்தேன். தாதியிடம் அவர்களைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு என் மனைவி அருந்த கஞ்சி கொண்டு வர வீட்டுக்கு வண்டியில் சென்று வந்தேன். வரும் வழியில் அந்த முதல் வானவில் கூடவே ஒரு மூலையில் தெரிந்தும் தெரியாமலும், போர்த்தப்பட்டு உறங்க வைக்கப் பட்டிருக்கும் சிறு மகவாக ஒரு குட்டி வானவில் தோன்றியிருந்தது. அதில் நிறங்கள் பின்வரிசையில் அடுக்கியிருந்தது. அந்த நேரத்தில் அவ்வளவு பெரிய திறந்த வெளியில் அந்தக் குட்டி வானவில்லை நான் மட்டுமே கண்டுகொண்ட ரகசியமாக நினைத்து நெஞ்சில்பூட்டிக்கொண்டேன்.

●

***குறுங்கதையாளர்: எழுத்தாளர்***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை| பிரதிஷ்தா பாண்டியா | தமிழில்: நிழல்வண்ணன்

## வஜேசிங் பார்கி

# குஜராத்தி பழங்குடி கவிஞர்



எனது வாழ்க்கை முழுதும்
இரவும் பகலுமாய் இந்தப் படகினை
நான் வலித்துவருகிறேன்
கண்ணுக்கெட்டிய தூரத்தில் கரையேதும் இல்லை
இப்படித்தான் இருக்கிறது இப்பரந்த கடல்
பின்னர் வரும் புயல்கள்
மறுகரையை நான் அடைவேன் என்று சொல்வதற்கு
இங்கு ஏதுமில்லை
ஆனால் இந்தத் துடுப்புக்களை நான்
இப்படியே விட்டுவிட முடியாது

அவர் அப்படி விடவில்லை. நுரையீரல் புற்றுநோயுடனான அவரது தோல்வியுற்ற போராட்டத்தில் அவரது உயிர்வாழ்தலின் கடைசி நொடியில் கூட அவர் அப்படி விட்டுவிடவில்லை. அது வலியும் வேதனையும் மிக்கதாக இருந்தது. பலநேரங்களில் அவரால் மூச்சுவிடவும் முடியாமல் இருந்தது. மூட்டுக்கள் வலித்தன. இரத்தசோகை, எடையிழப்பு, இன்னும் பல பிரச்சனைகளும் இருந்தன. முற்றாகச் சோர்ந்துவிட்ட உணர்வின்றி அவரால் நீண்டநேரம் அமர்ந்திருக்க முடியாது. ஆனால் அவரது வாழ்க்கை பற்றியும் கவிதை பற்றியும் பேசுவதற்கு வஜேசிங் பார்கி அவரது மருத்துவமனை அறையில் எங்களைச் சந்திக்க ஒப்புக்கொண்டார்.

அவர் பிறந்ததிலிருந்தே வாழ்க்கை அவரிடம் ஒருபோதும் கருணை காட்டியதில்லை. அவருடைய ஆதார் அட்டையின்படி அவருடைய பிறந்த ஆண்டு 1963. தஹோடின் இடாவா கிராமத்தில் ஏழ்மையான பில் பழங்குடி சமூகத்தில் அவர் பிறந்தார். சிஸ்கா பாய் மற்றும் சதுரா பென் ஆகியோரின் மூத்த மகனாகப் பிறந்து தான் வளர்ந்த அனுபவங்களை விவரித்தபோது அவர் வறுமை ... வறுமை... என்று ஒரே சொல்லைத் திரும்பத்திரும்பக் கூறுகிறார். சிறிது இடைவெளி விட்டு, முகத்தை அப்புறமாகத் திருப்பிக்கொண்டு, விழிநீரைத் துடைத்துக்கொண்டு, குழந்தைப் பருவத்தின் அந்தத் துயர நினைவுகளை மறக்க முயன்றவராகக் கூறினார், “அப்போது வீட்டில் உணவுக்காகப் போதுமான பணம் ஒருபோதும் இருந்ததில்லை.”

வாழ்க்கை முடிவுக்கு வந்துவிடும்
ஆனால் இந்த அன்றாட வாழ்க்கை நிலை
முடிவுக்கு வராது
ரொட்டியின் சுற்றுவட்டம் இந்தப் பூமியை விடவும்
பெரிது
பட்டினியில் வாழ்வோரைத் தவிர
ஒருவருக்கும் தெரியாது
ரொட்டி என்பது என்ன
அது உங்களை எங்கு கொண்டுசெல்லும் என்பது

“நான் அதைச் சொல்லக் கூடாது, ஆனால் எங்களுடைய பெற்றோரைக் குறித்து நாங்கள் பெருமைப்பட்டுக்கொள்ள முடியவில்லை” என்று விஜேசிங் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார். ஏற்கெனவே நலிவுற்றிருந்த அவருடைய உடல் ஆழ்ந்த வேதனையும் அவமானமும் தாங்காமல் இன்னும் சுருங்கிப் போனது. “அப்படிப்பட்ட விடயங்களைச் சொல்லக்கூடாது என்று எனக்குத் தெரியும், இருந்தாலும் தானாகவே அது வந்துவிட்டது.” எண்பத்தைந்து வயது முதியவரான அவருடைய தாயார் தஹோடின் கைஜர் மருத்துவமனையில் சிறிய அறை ஒன்றின் ஒரு மூலையில் ஒரு தகரப் பெட்டி மீது காது கேளாதவராக அமர்ந்திருந்தார். “எனது பெற்றோர் துன்புற்றதைத்தான் நான் கண்டிருக்கிறேன். தாயும் தந்தையும் விவசாயத் தொழிலாளர்களாக வேலை செய்தார்கள்.” அவரது பெற்றோருடன் அவரது இரண்டு சகோதரிகளும் நான்கு சகோதரர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் செங்கல்லும் மண்ணும் கொண்டு கட்டப்பட்ட சிறிய ஒற்றை அறை வீட்டில் வாழ்ந்தார்கள். விஜேசிங் இடாவாவை விட்டு வேலை தேடி அகமதாபாத் வந்தபோதும் அவர் தல்டெஜ் தொழிலாளர் குடியிருப்பில் ஒரு பொந்தில் வசித்தார். அந்த இடத்திற்கு அவருடைய நெருங்கிய நண்பர்கள் கூட அரிதாகவே சென்றனர்.

**நான் நின்றால் கூரை இடிக்கும்**
**நீட்டினால் சுவர் இடிக்கும்**
**எப்படியோ இங்கு அடைபட்டு**
**வாழ்நாளைக் கழித்தேன்**
**எனது உதவிக்கு வந்தது என்னவென்றால்**
**என் தாயின் கருவறைக்குள்**
**சுருண்டு கிடந்தது தான்.**

இந்த அவலநிலை வஜேசிங்குக்கு மட்டுமே உரித்தானதல்ல, கவிஞரின் குடும்பம் வசிக்கிற பகுதியில் இது இயல்பானதும் நீண்ட காலமாக இருந்துவரும் நிலை ஆகும். தஹோட் மாவட்டத்தின் மக்கள்தொகையில் 74 விழுக்காட்டினர் பட்டியல் பழங்குடி மக்கள் ஆவர். அவர்களில் 90 விழுக்காட்டினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் நிலத்தின் அளவு மிகவும் சிறிதாகவும் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாகவும் இருக்கும். பெருமளவுக்கு வறண்ட, வறட்சி பாதிக்கப்பட்ட நிலம் போதுமான வருமானத்துக்கு உத்தரவாதம் அளிப்பதில்லை. அண்மை பன்முக வறுமை ஆய்வின்படி அந்தப் பகுதியின் வறுமை விகிதம் மாநிலத்தில் மிக உயர்ந்த அளவுக்கு 38.27 ஆக இருந்துவருகிறது.

"நான் கடினமாக உழைத்திருக்கிறேன். வீட்டிலும் வேலை செய்தேன். மற்றவர்களின் வீட்டிலும் வேலை செய்தேன். எப்படியாவது ஓரளவுக்காவது உணவளிக்கவேண்டும்" என்று வஜேசிங்கின் தாயார் கூறினார். அவர்கள் சில நேரங்களில் சோளக் கஞ்சியை மட்டுமே அருந்தி வாழ்ந்தனர். பள்ளிக்குப் பட்டினியுடன் தான் சென்றனர். குழந்தைகளை வளர்ப்பது ஒருபோதும் எளிதாக இருந்ததில்லை என்று அவர் கூறினார்.

குஜராத்தின் நலிந்த சமூகங்களின் குரல்களுக்காக அர்ப்பணித்துக்கொண்ட நிர்தார் என்ற இதழின் 2009 வெளியீட்டில் இரண்டு பகுதிகளாக தனது நினைவலைகளை வஜேசிங் எழுதியுள்ளார். அதில் பரந்த இதயம் கொண்ட ஓர் ஆதிவாசிக் குடும்பத்தின் கதையை விவரிக்கிறார். ஜோகோ தமோரும் அவரது குடும்பமும் அன்று மாலை வரவிருந்த விருந்தாளிக் குழந்தைகளுக்கு உணவளிப்பதற்காகப் பட்டினி கிடக்கின்றனர். பள்ளியிலிருந்து வரும் வழியில் ஐந்து குழந்தைகள் ஜோகோவின் வீட்டில் மழைக்கு ஒதுங்குகின்றனர். இந்த நிகழ்வைப் பற்றிப் பேசும்போது வஜேசிங் "பதர்வோ எப்போதும் எங்களுக்கு பட்டினி கிடக்கும் மாதமாகவே இருந்தது" என்கிறார். பதர்வோ மாதம் குஜராத் இந்து விக்ரம் சம்வாட் நாட்காட்டிப் படி வழக்கமாக கிரிகோரியன் நாட்காட்டியில் செப்டம்பர் மாதத்துக்கு இணையாக வரும்.

"வீட்டில் சேமித்து வைத்திருந்த உணவுத் தானியம் தீர்ந்துவிட்டிருக்கும், வயல்களில் இன்னும் அறுவடைக்கு ஆயத்தமாக ஆகியிருக்காது, எனவே வயல்கள் பசுமையாக இருந்தபோது பட்டினியில் வாழ்வது எங்கள் விதியாக இருந்தது. அந்த மாதங்களில் அரிதாக சில வீடுகளில் மட்டுமே இரண்டு வேளை அடுப்பு எரிந்தது. முந்தைய ஆண்டு வறட்சியைக் கண்டிருக்குமானால் பல குடும்பங்கள் வேகவைத்த அல்லது வறுத்த இலுப்பை விதையை உண்டு பிழைத்திருக்கும். எங்கள் சமூகம் கடுமையான வறுமைக்குச் சபிக்கப்பட்டது."

ஆனால் இன்றைய தலைமுறையைப் போல அல்லாமல், அந்த நாட்களில் மக்கள் தங்கள் வீடுகளைவிட்டு, தங்கள் கிராமங்களை விட்டு கேடாவுக்கோ, பரோடாவுக்கோ, அகமதாபாத்துக்கோ வேலை தேடிச் செல்வதை விட பட்டினியில் நலிவுற்று இறந்து போவார்கள் என்று வஜேசிங் கூறுகிறார். அந்தச் சமூகத்தில் கல்வி பெரிதாக மதிக்கப்படவில்லை. "கால்நடைகளை மேய்க்கச் செல்வதானாலும் பள்ளிக்குச் செல்வதானாலும் எங்களுக்கு இரண்டும் ஒன்றுதான். எங்கள் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கூட ஒரே ஒரு விடயத்தைத்தான் விரும்பினார் - குழந்தைகள் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளட்டும். அதுபோதும். அதற்கு மேல் படித்து இங்கு யார் உலகத்தை ஆளப்போகிறார்!"

வஜேசிங்குக்கும் கனவுகள் இருந்தன - மரங்களுடன் பறப்பது, பறவைகளுடன் அரட்டை அடிப்பது, தேவதைகளின் சிறகுகள் மீதேறிக் கடல்களுக்கு அப்பால் பறந்து செல்வது, தெய்வங்கள் அவரைத் தொல்லைகளிலிருந்து மீட்பது, உண்மையின் வெற்றியையும் பொய்யின் தோல்வியையும் கண்ணாரக் காண்பது, தாத்தாக்கள் சொல்லும் கதைகளில் கடவுள் நலிந்தவர் பக்கம் நிற்கக் காண்பது போன்ற கனவுகள் இருந்தன. ஆனால் அந்தக் கற்பனைக் கதைக்கு நேரெதிராகவே வாழ்க்கை அமைந்தது.

**ஏதாவது ஒரு விந்தை நிகழும் என்று**
**தாத்தா எனது குழந்தைப்பருவத்தில் விதைத்த நம்பிக்கை**
**உறுதியாக இருந்துவந்தது**
**இந்தத் தாங்கிக்கொள்ள முடியாத வாழ்க்கையை**
**வாழ்வதற்கு அதுதான் காரணம்**
**இன்றும் கூட, ஒவ்வொரு நாளும்**
**ஏதோ ஓர் அற்புதம் நிகழப்போகிறது என்பதும்**

இந்த நம்பிக்கை தான் தனது கல்விக்காக அவரை வாழ்க்கை முழுவதும் போராடச் செய்தது. ஒருமுறை கல்விக்கான பாதையை, ஏறத்தாழத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்செயலாகத்தான், அடைந்தபோது அதைப் பேரார்வத்துடன் தொடர்ந்தார். பள்ளியை அடைவதற்கு ஆறிலிருந்து ஏழு கிலோமீட்டர்கள் வரை நடக்க வேண்டியிருந்தும், அல்லது விடுதியில் தங்கவேண்டியிருந்தும், அல்லது பட்டினியுடன் படுக்கைக்குச் செல்ல வேண்டியிருந்தும், அல்லது உணவு கேட்டு வீடு வீடாக அலைய வேண்டியிருந்தும், அல்லது பள்ளி முதல்வருக்கு ஒரு மதுப் பாட்டில் வாங்கித்தர வேண்டியிருந்தும் கூட அதை எவ்வாறேனும் தொடர்வதில் உறுதியாக இருந்தார். அந்தக் கிராமத்தில் மேல்நிலைப் பள்ளி இல்லாதபோதும், தஹோட் சென்றுவரப் போக்குவரத்து வசதி இல்லாதபோதும், தஹோடில் வாடகைக்கு இடம் பிடித்துத் தங்குவதற்கு பணம் இல்லாதபோதும் அவர் கல்வியைத் தொடரவே விரும்பினார். செலவுகளைச் சமாளிப்பதற்குக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டார், இரவுகளைத் தொடர்வண்டி மேடையில் கழித்தார், பசியுடன் தூங்கவும் நடக்கவும் செய்தார், பொதுத் தேர்வுகளுக்குச் செல்வதற்குப் பொதுக் குளியல் அறைகளைப் பயன்படுத்தித் தயாரானார்.

வஜேசிங் வாழ்க்கையிடம் தோற்றுவிடக் கூடாது என்பதில் தீர்மானகரமாக இருந்தார்.

**வாழ்வில் பலநேரங்களில்**
**நான் மயக்கமாக உணர்ந்திருக்கிறேன்**
**இதயம் துடிப்பினை விட்டுவிட்டு ஒலித்திருக்கிறது**
**சரிந்து வீழ்ந்திருக்கிறேன்'**
**இருப்பினும் ஒவ்வொரு முறையும்**
**உயிரை விட்டுவிடக் கூடாது என்ற**
**தீர்மானம் என்னுள் உயர்ந்து எழுந்திருக்கிறது**
**வாழ்வதற்காக மீண்டும் மீண்டும் ஆயத்தமாகி**
**எழுந்து நின்றிருக்கிறேன்**

மெய்யான கல்வி, அவர் மிகவும் மகிழ்ந்து அனுபவித்த பகுதி, அவர் குஜராத்தி மொழியில் இளங்கலைப் பட்டப் படிப்பிற்காக நவ்ஜீவன் கலை மற்றும் வணிகக் கல்லூரியில் சேர்ந்தபோது தொடங்கியது. தனது இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்து, முதுகலைப் பட்டப்படிப்புக்காகப் பதிவு செய்தார். இருப்பினும், முதுகலை முதலாண்டுக்குப் பிறகு அதைக் கைவிட்டு, அதற்குப் பதிலாக கல்வியியல் இளங்கலை பயில முடிவுசெய்தார். அவருக்குப் பணம் தேவைப்பட்டது. அவர் ஓர் ஆசிரியராக விரும்பினார். அவரது கல்வியியல் பட்டப்படிப்பை முடித்த உடனே ஒரு சண்டையில் நடுவில் சிக்கிக்கொண்டார். துப்பாக்கிக் குண்டு அவரது தாடையையும் கழுத்தின் வழியே துளைத்துக்கொண்டு சென்றது. அந்த விபத்தில் காயமடைந்த வஜேசிங்கின் குரல் பாதிக்கப்பட்டது, ஏழு ஆண்டுகள் சிகிச்சை 14 அறுவைச் சிகிச்சைகள். அதிலிருந்து அவர் இறுதிவரை குணமடையவில்லை,

அது இரட்டைத் தாக்குதலாக இருந்தது. முதலாவதாக அவர் குரலற்ற ஒரு சமூகத்தில் பிறந்திருந்தார். அவருக்கு வாய்த்த உடலோ இப்போது தீவிர இழப்புக்கு உள்ளாகியிருந்தது. ஆசிரியராகும் கனவை அவர் கைவிட வேண்டியதாயிற்று. சர்தார் பட்டேல் பொருளாதார மற்றும் சமூக ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒப்பந்தப் பணியாளராகத் தொழிலாளராக மாறினார். பின்னர் பிழைதிருத்துநராக ஆனார். அவரது பிழைதிருத்தும் பணியில்தான் அவரது முதலாவது காதலுடன் -- மொழியுடன் -- இணைந்தார். இரண்டு தசாப்தங்களாக எழுதப்பட்டவற்றை அவர் வாசிக்க வேண்டியிருந்தது.

அவரது அவதானிப்புக்கள் என்னவாக இருந்தன?


“மொழியைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதை மிகவும் வெளிப்படையாகவே சொல்கிறேன்”. இதைச் சொல்லும்போது அதை நயமாகக் கூறுகிறார். “குஜராத்தி எழுத்தாளர்கள் மொழியைப் பற்றி முற்றிலும் அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள். கவிஞர்கள் சொற்களைப் பயன்படுத்துவதில் எந்த கூருணர்ச்சியையும் காட்டுவதில்லை, அவர்களில் பெரும்பாலானவர்கள் கஜல்களை மட்டுமே எழுதுகின்றனர். அதிலும் அவர்கள் மனவெழுச்சியில் மட்டும் அக்கறை காட்டுகிறார்கள், அதுதான் முக்கியம் என்று நினைக்கிறார்கள். சொற்கள் சரிதான், அவை அங்கே இருக்கத்தான் செய்கின்றன.” சொற்கள் குறித்த இந்த நுட்பமான புரிதல், அவற்றின் ஒழுங்கமைப்புகள், சில அனுபவங்களை வெளிப்படுத்துவதில் அவற்றின் ஆற்றல் ஆகியவற்றைத்தான் வஜேசிங் இரண்டு தொகுதிகளில் தொகுக்கப்பட்டுள்ள தனது சொந்தக் கவிதைகளில் கொண்டுவந்துள்ளார். அவை முதன்மைப் போக்கு இலக்கியத்தால் பாராட்டப்படாமலும் அங்கீகரிக்கப்படாமலும் இருந்துவந்தன.

“நீங்கள் இன்னும் உறுதியாக எழுதவேண்டும் என்று ஊக்கிக்கிறேன்.” அவர் ஏன் இன்னும் ஒரு கவிஞராக கருதப்படவில்லை என்பதற்கான காரணத்தைக் கூறுகிறார். “நான் ஒன்றிரண்டு கவிதைகளை எழுதினால் யார் கவனத்தில் எடுத்துக்கொள்ளப் போகிறர்கள்? இவை அண்மைக் காலத்தில் வெளிவந்த இரண்டு தொகுதிகள். நான் புகழுக்காக எழுதவில்லை. என்னால் தொடர்ச்சியாகவும் எழுதமுடியாது. நான் மிகவும் தீவிரமாகவெல்லாம் எழுதவில்லை. நான் உணர்கிறேன். பசி எங்கள் வாழ்வில் பின்னிப் பிணைந்திருக்கிறது, எனவே அதைப்பற்றி நான் எழுதினேன். அது இயல்பானதோர் வெளிப்பாடு.” எங்கள் உரையாடல் நெடுகவும் தன்னை மறந்தவராக இருந்தார். குற்றத்தை யாருடன் பங்கீடு செய்ய விரும்பாதவராக, பழைய காயங்களைக் கிளற விரும்பாதவராக, ஒளியில் தனது பங்கினைக் கோர விரும்பாதவராக இருந்தார். ஆனால் அவர் அதை முழுவதுமாக அறிந்திருந்தார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒளியின் எங்கள் பங்கினை உறுதியாக**
**யாரோ ஒருவர் விழுங்கியிருந்தார்**
**ஏனென்றால் நாங்கள் வாழுங்காலம் முழுதும்**
**சூரியனுடன் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கிறோம்**
**இன்னும் எதுவும் ஒளியூட்டப்படவில்லை**



பிழைதிருத்தத் தொழில்முறையாளராக, தப்பெண்ணம், அவரது திறனைக் குறைத்து மதிப்பிடுவது, மாறுபட்ட முறையில் நடத்தப்படுவது ஆகியவற்றுக்கு அவர் உள்ளாகியிருந்தார். ஓர் ஊடக நிறுவனத்தில் முதல் தரத்துடன் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தும், தேர்வில் மூன்றாம் தரமாகத் தேர்ச்சி பெற்றவருக்குக் கொடுக்கப்படும் வேலைக்குக் கிடைக்கும் ஊதியத்தைவிடக் குறைவான ஊதியம் கிடைக்கும் வேலையில்தான் சேர்த்துக்கொள்ள முடியும் என்று கூறப்பட்டது. வஜேசிங் மனத்தொல்லைக்கு உள்ளானார். அப்படிப்பட்ட முடிவுக்குப் பின்னுள்ள கொள்கையைக் கேள்விக்கு உள்ளாக்கினார். முடிவில் அந்த வேலையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

அகமதாபாத்தில் சொற்ப ஊதியத்துக்குப் பல்வேறு ஊடக நிறுவனங்களில் சிறிய ஒப்பந்தங்களின் அடிப்படையில் வேலை பார்த்தார். வஜேசிங்கை முதலில் சந்தித்தபோது கிரிட் பர்மர் அபியானுக்காக எழுதிக்கொண்டிருந்தார். அவர் கூறினார்: 2008 இல் நான் அபியானில் சேர்ந்தபோது வஜேசிங் சம்பவ் ஊடகத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். அதிகாரப்பூர்வமாக அவர் பிழைதிருத்தியாக இருந்தார். ஆனால் நாங்கள் அவரிடம் ஒரு கட்டுரையைக் கொடுத்தபோது, அவர் அதைப் பதிப்புக்கு ஏற்றவாறு தயார் செய்திருந்தார். அந்தக் கட்டுரையின் உள்ளடக்கத்தில் வேலை செய்து அதற்குரிய கட்டமைப்பையும் வடிவத்தையும் கொடுத்திருந்தார். மொழியில் அவருக்கு வியத்தகு தேர்ச்சி இருந்தது. ஆனால் அந்த மனிதருக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை. அவருடைய தகுதிக்கு உரிய வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை.

சம்பவில் அவருக்கு மாதம் ரூ.6000 மட்டும் ஊதியமாக அளிக்கப்பட்டது. அந்தப் பணம் அவருடைய குடும்பத்தைப் பராமரிக்கவும் சகோதர சகோதரிகளின் கல்விக்கும் அகமதாபாத்தில் வாழ்க்கையை நீடிக்கவும் போதுமானதாக இல்லை. அவர் நீண்ட நேரம் அலுவலகத்தில் வேலை செய்த பிறகு இமேஜ் பப்ளிகேசன்ஸ் நிறுவனத்திற்கு சுதந்திர எழுத்தாளராக வீட்டிலும் வேலை செய்தார்.

"நாங்கள் எங்கள் தந்தையை இழந்தபிறகு அவர் எங்களுக்குச் சகோதரராக அல்லாமல் தந்தையாகவே இருந்தார். மிகவும் கடினமான காலங்களில் கூட எனது கல்விச் செலவை அவரே ஏற்றுக்கொண்டார். அவர் தட்லெஜில் சிதிலமடைந்த சிறிய அறை ஒன்றில் தங்கியிருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவரது அறைக்கு மேலே தகரக் கூரை. இரவெல்லாம் நாய்கள் குரைத்துக்கொண்டும் ஓடிக்கொண்டும் இருக்கும். அவர் ஈட்டிய 5000—6000 ரூபாயில் அவரையே கூட சரியாகக் கவனித்துக்கொள்ள முடியாது, ஆனால் அவர் வேறு வேலைகள் செய்து எங்கள் கல்விக்குச் செலவழித்தார். என்னால் அதை மறக்க முடியது" என்று அவருடைய இளம் சகோதரர் 37 வயது முகேஷ் பார்கி கூறுகிறார்.

கடைசி ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் வஜேசிங் அகமதாபாத்தில், பிழைதிருத்தும் வேலையளித்த ஒரு தனியார் நிறுவனத்தில் சேர்ந்தார். "எனது வாழ்க்கையின் பெரும்பகுதி ஒப்பந்த வேலையே செய்தேன். மிகவும் அண்மையில் சிக்னெட் இன்ஃபோடெக் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். காந்தியின் நவ்ஜீவன் அச்சகம் அவர்களுடன் ஒப்பந்தத்தில் இருந்தது. எனவே அவர்கள் வெளியிட்ட புத்தகங்களில் அவர் வேலை செய்ய முடிந்தது. நவ்ஜீவனுக்கு முன்பு வேறு வெளியீட்டகங்களில் வேலை செய்தேன். ஆனால் குஜராத்தில் எந்த வெளியீட்டாளரும் பிழைதிருத்துநருக்கு நிரந்தரமாக வேலையிடம் வைத்திருந்ததில்லை."

ஒரு நண்பரும் எழுத்தாளருமான கிரிட் பார்மருடனான ஓர் உரையாடலில் அவர் கூறுகிறார்: "குஜராத்தில் நல்ல பிழைதிருத்துநரைக் கண்டறிவது மிகவும் கடினமாக இருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிகவும் குறைவு. பிழைதிருத்துநர் என்பவர் மொழியின் பாதுகாவலரும் வழக்கறிஞரும் ஆவார். அவர்களை மதிக்காமலும் உரிய ஊதியத்தை வழங்காமலும் போனது எப்படி நிகழ்கிறது? நாங்கள் அழிந்துவரும் உயிரினமாக இருக்கிறோம். இது குஜராத்தி மொழியைத்தவிர வேறு யாருக்கு இழப்பு." வஜேசிங் குஜராத் ஊடக நிறுவனங்களின் வருந்தத்தக்க நிலையைக் கண்டார். அவர்கள் மொழியை மதிக்கவில்லை, மேலும் வாசிப்பிலும் எழுத்திலும் சிறந்தவராக இருக்கக்கூடிய எவரும் நல்ல பிழைதிருத்துநராக இருக்க முடியும்..

"ஒரு பிழைதிருத்துநருக்கு அறிவும் திறமை அல்லது படைப்புத் திறன் இருப்பதில்லை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநீதியும், சுரண்டலும், பாகுபாடும், கையறுநிலையும் நிறைந்த அவருடைய வாழ்வின் இறுதியில் அவருடைய கவிதைகளில் வெறுப்பையோ கோபத்தையோ குறிக்கும் எந்த அடையாள்மும் இல்லை. எந்த முறையீடுகளும் இல்லை. "நான் யாரிடம் முறையிடுவது? சமுதாயத்திடமா? சமுதாயத்திடம் நம்மால்-முறையிட முடியாது; "அவர்கள் நமது கழுத்துக்களை நெறிப்பார்கள்".**

இலக்கிய உலகில் நிலவும் தவறான கருத்தாகும்" என்கிறார் வஜேசிங். அவர் குஜராத்தி மொழியின் பாதுகாவலராக இருந்துவந்தார். "குஜ்ராத் வித்யா பீடம் சர்த் ஜோதானி கோஷில் [பெயர்பெற்ற அகராதி] 5000 புதிய சொற்களை சேர்த்துக்கொள்வதற்காக, அதற்குத் துணை வெளியீடு ஒன்றை வெளியிட்டது. அதில் பயங்கரமான பிழைகள் இருந்தன—வெறுமனே எழுத்துப் பிழைகள் மட்டுமல்ல பொருண்மைகள் மற்றும் விவரங்கள் குறித்த பிழைகளும் இருந்தன. வஜேசிங் இப்பிழைகள் அனைத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் குறிப்பிட்டு, பொறுப்புடைமைக்காக வாதிட்டார். வஜேசிங் செய்த அளவுக்கு இன்று குஜராத்தில் வேறு எவரையும் பார்க்கவில்லை. அவர் மாநில அரசின் 6, 7, 8 ஆம் வகுப்புப் பாடப் புத்தகங்களில் இருந்த தவறுகளைக் குறித்தும் எழுதினார்." என்று கிரிட் பாய் நினைவுகூர்கிறார்.

இத்தனை திறமைகள் மற்றும் தகுதிப்பாடுகள் அனைத்தும் இருந்தும் வஜேசிங் வாழ்வதற்கு உகந்ததாக இந்த உலகம் இல்லை. இருப்பினும் அவர் நம்பிக்கை குறித்தும் மீண்டெழுதல் குறித்தும் எழுதினார். அவர் தனது சொந்த வருவாயைக்கொண்டு வாழவேண்டியிருந்ததை அறிந்திருந்தார். அவர் கடவுளை எப்போதோ கைவிட்டிருந்தார்.

**ஒருகரத்தில் பசியுடனும் மறுகரத்தில் உழைப்புடனும்**
**நான் பிறந்தேன்.**
**சொல், உன்னை வழிபட மூன்றாவது கரத்தை**
**எங்கிருந்து பெறுவேன்**
**ஓ, கடவுளே?**

கவிதை எப்போதும் வஜேசிங்கின் வாழ்வில் கடவுளுக்குப் பதிலியாகவே வந்தது. அவர் தனது கவிதைகளை இரண்டு தொகுதிகளில் வெளியிட்டார். ஆகியானு அஜ்வாலுன் (மின்மினிப் பூச்சிகளின் ஒளி) 2019 இலும் ஜகல்னா மோட்டி (பனித்துளிகளின் முத்துக்கள்) 2022 இலும் வெளியிடப்பட்டன. மேலும் அவருடைய தாய்மொழியான பஞ்சமாஹலி பிலியிலும் ஒரு சில கவிதைகள் எழுதியுள்ளார்.

அநீதியும், சுரண்டலும், பாகுபாடும், கையறுநிலையும் நிறைந்த அவருடைய வாழ்வின் இறுதியில் அவருடைய கவிதைகளில் வெறுப்பையோ கோபத்தையோ குறிக்கும் எந்த அடையாளமும் இல்லை. எந்த முறையீடுகளும் இல்லை. "நான் யாரிடம் முறையிடுவது? சமுதாயத்திடமா? சமுதாயத்திடம் நம்மால் முறையிட முடியாது; அவர்கள் நமது கழுத்துக்களை நெறிப்பார்கள்" என்கிறார் அவர்.

தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு அப்பால் எழுவதற்கும் மனித நிலைமை குறித்த மெய்யான உண்மையுடன் இணைத்துக்கொள்வதற்குமான சாத்தியத்தை கவிதையின் மூலம் வஜேசிங் கண்டார். அவரைப் பொருத்தவரை, தற்காலத்தில் பழங்குடி மற்றும் தலித் இலக்கியத்தின் தோல்விக்கு அதன் விரிந்த பார்வையின்மைதான் காரணம். "நான் தலித் இலக்கியங்கள் சிலவற்றை வாசித்தேன், அவற்றில் விரிந்த மானுட இணைப்பு இல்லாமையைக் கண்டேன். அனைத்தும் நமக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகள் பற்றி முறையிடுபவையாக இருந்தன. ஆனால் நாம் இங்கிருந்து எங்கே செல்வது? ஆதிவாசிகளின் குரல்கள் இப்போதுதான் வெளிவருகின்றன. அவையும் கூட அவர்களுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றன. பெரிய பிரச்சனைகள் ஒருபோதும் எழுப்பப்படவில்லை" என்கிறார் அவர்.

தஹோட்டைச் சேர்ந்த ஒரு கவிஞரும் எழுத்தாளருமான பிரவின் பாய் ஜாதவ் கூறுகிறார்: "வளர்ந்துகொண்டிருக்கும் ஓர் இளம் சிறுவனைப் போல நான் புத்தகங்களை வாசிப்பது வழக்கம். எமது சமூகத்தில், எமது பகுதியில் ஏன் எந்தக் கவிஞர்களும் இல்லை. 2008 இல் தான் நான் முதல்முதலாக வஜேசிங்கின் பெயரை ஒரு தொகுப்பில் கண்டேன். இறுதியாக அந்த மனிதரைக் கண்டுபிடிக்க எனக்கு நான்கு ஆண்டுகள் ஆயிற்று. அவரைச் சந்திக்கவும் சிறிதுகாலம் பிடித்தது. அவர் முஷைராக்களின் கவிஞராக இல்லை. அவருடைய கவிதை எங்கள் வழியையும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட மனிதர்களின் வாழ்வையும் பேசியது."

வஜேசிங் கல்லூரியில் படித்தபோது கவிதை அவரிடம் வந்து சேர்ந்தது. எந்தத் தீவிரமான பின்பற்றுதலுக்கோ பயிற்சிக்கோ நேரம் இல்லை. "கவிதைகள் நாள் முழுதும் எனது மனதில் ஊற்றெடுத்துக்கொண்டே இருக்கின்றன. அவை அமைதியற்ற எனது இருத்தலை வெளிப்படுத்துபவையாக இருந்தன. சில நேரங்களில் வெளிப்படுகின்றன, சிலநேரங்களில் தப்பித்து விடுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை வெளிப்படுத்தப்படாமலேயே இருந்துவருகின்றன. நீண்ட ஒரு நிகழ்ச்சிப்போக்கை மனதில் என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்திக்கொள்ள முடியாது. அதனால்தான் நான் செய்துள்ள இந்த வடிவத்தைத் தேர்ந்தெடுத்தேன். இன்னும் ஏராளமான கவிதைகள் எழுதப்படாமலே இருக்கின்றன."

கடைசி இரண்டு ஆண்டுகளில் அவரது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய நோய், நுரையீரல் புற்று அது எழுதப்படாத கவிதைகள் குவியச் செய்தன. துன்பத்தை எதிர்கொண்ட வஜேசிங்கின் வாழ்க்கையையும் அவரது சாதனைகளையும் எழுதப்படாமல் இருந்து வருவனவற்றைக் கொண்டு ஒருவரால் உணர்ந்துகொள்ள முடியும். 'மினிமினிப் பூச்சிக்களின் மினுமினுக்கும் ஒளி'யை அவர் தனக்காக மட்டும் ஏந்திப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை, தனது சமூகத்துக்ககாவும் ஏந்திக் கொண்டிருந்தார். அவரது கரத்தில் பாதுகாக்கும் சிப்பி இல்லாமல் மலர்ந்த அவரது 'பனித்துளி முத்துக்கள்' எழுதப்படாமல் இருந்து வருகின்றன. கொடூரமான, இரக்கமற்ற ஓர் உலகில் கருணையையும் பிறருடன் ஒன்றும் உணர்ச்சியையும் தக்கவைத்துக்கொண்டிருந்த ஒரு குரலின் அற்புதமான குணாம்சங்கள் எழுதப்படாமலே இருக்கின்றன். எமது மொழியில் நேர்த்திமிக்க கவிஞர்களின் பட்டியலில் வஜேசிங் பார்கியின் பெயர் எழுதப்படாமலே இருந்துவருகிறது.

ஆனால் வஜேசிங் ஒருபோதும் புரட்சிக் கவிஞராக இருந்ததில்லை. அவரைப் பொருத்தவரை, சொற்கள் தீப்பொறிகள் அல்ல.

நான் இங்கு காத்துக் கிடக்கிறேன்.
காற்றின் அந்த ஒரு சீற்றத்துக்காக

நான் சாம்பல் குவியலாக இருந்தாலென்ன
நான் நெருப்பல்ல
ஒரு புல்லின் இதழைக்கூட என்னால்
எரிக்க முடியாது
ஆனால் உறுதியாக அவர்களுடைய
கண்ககளுக்குள் சென்று எரிச்சலூட்ட முடியும்
குறைந்தபட்சம் அவற்றில் ஒன்றையாவது
தேய்த்துச் சிவக்க வைக்க முடியும்

இப்போது வெளியிடப்படாத அவருடைய 70 கவிதைகள் நம்மிடம் இருக்கின்றன. நமது கண்களுக்கும் நமது மனசாட்சிக்கும் எரிச்சலூட்டக் கூடிய அளவுக்கு அவை மிகவும் சக்திவாய்ந்தவை. நாமும் கூட காற்றின் அந்தச் சீற்றத்துக்காகக் காத்துக் கிடக்கிறோம்.

**ஜூலாடி***

நான் குழந்தையாக இருந்தபோது
அப்பா எனக்கொரு ஜூலாடி வாங்கித் தந்தார்
தோய்த்த முதல் முறையே சுருங்கிவிட்டது
நிறமும் வெளுத்துவிட்டது
நூல் உருவிக்கொண்டு வந்துவிட்டது
அதற்குமேல் அது எனக்குப் பிடிக்காமல் போனது
எனக்குப் பெருங்கோபம் வந்தது
இந்த ஜூலாடியை அணிந்துகொள்ள
விரும்பவில்லை
அம்மா தலையைக் கோதிவிட்டு நைச்சியமாக
இணங்கச் செய்தார்
"இது கிழிந்துபோகும் வரை அணிந்துகொள்
செல்லமே
பின்னர் புதிதாக வாங்கிக் கொள்ளலாம், சரியா?"

இன்று இந்த உடல் தொங்கிக்கொண்டிருக்கிறது
நான் வெறுத்த ஜூலாடியைப் போல.
உடலெல்லாம் சுருக்கங்கள்
மூட்டுக்கள் உருகிக்கொண்டிருக்கின்றன
மூச்சுவிடக் கூட நடுங்குகிறேன்
எனது மனம் பெருங்கொபம் கொள்கிறது
இதற்கு மேலும் இந்த உடல் எனக்கு வேண்டாம்
இந்தச் சட்டகத்தை கழட்டியெறிய முயற்சி
செய்தபோது
அம்மாவும் அவரது இனிய பேச்சும்
நினைவுக்கு வருகிறது –
"அது கிழிந்துபோகும் வரை அணிந்துகொள்
செல்லமே"
அது போனபிறகு ...

அவரது வெளியிடப்படாத குஜராத்திக் கவிதையின் மொழிபெயர்ப்பு.

*ஜூலாடி என்பது பழங்குடி குழந்தைகள் அணிந்துகொள்ளும் பின்னல் வேலை செய்யப்பட்ட பாரம்பரியமான மேலாடை

வஜேசிங் பார்கி இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பாக தன்னிடம் பேசியதற்காக வஜேசிங்குக்கு இந்தக் கட்டுரையாளர் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். மேலும் இக்கட்டுரையைச் சாத்தியமாக்கியதற்கு முகேஷ் பார்கி, சமூகச் செயல்வீரர் காஞ்சி பட்டேல் மற்றும் கலாலியவாட் தொடக்கப்பள்ளி ஆசிரியர் சதிஷ் பார்மர் ஆகியோருக்கும் நன்றி.

இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள கவிதைகள் அனைத்தும் வஜேசிங்கால் குஜராத்தி மொழியில் எழுதப்பட்டவை. அவை பிரதிஷ்தா பாண்டியா வால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இக்கட்டுரை மற்றும் கவிதைகளை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தவர் நிழல்வண்ணன்.

நன்றி: ruralindiaonline.org மற்றும்
People's Archieve of rural India (PARI)

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சச்சிதானந்தன் சுகிர்தராஜா

# வேதாகமத்தை ஆயுதமாக்குதல்

**வரலாறு வாடகை சூடியவர்களால் எழுதப்படுகிறது என்பது வழக்கத்தில் நைந்துபோன ஒரு சொற்றொடர். வரலாறு மட்டுமல்ல வேதாகம்மங்களும் திருமறைகளும் ஆதிக்க, ஆண்டகை செய்கின்ற ஆண்வழிச் சமுதாயத்தினரால் எழுதப்பட்டவை. இன்றைய மத, இனவெறிக்குச் சான்று கோள் காட்டும் நூல்களான மனுஸ்மிர்தி, மகாவம்சம் எல்லாம் ஆண்டகைகளால், ஆண்களால் எழுதப்பட்டவை. ஒடுக்கப்பட்டவர்களுக்குப் பொதுவாகவே எதிரானவை.**

போருக்கு இரண்டு ஆயுதங்கள் தேவை. ஒன்று இராணுவ வலிமை, மற்றொன்று அதை உந்தும் சக்தியான கருத்தியல். காசாவில் உள்ள கட்டிடங்களை இஸ்ரேல் ராணுவம் தகர்க்கும்போதும் அந்த மக்களைச் சிதறடித்தபோதும் அவர்களின் படை பலம் தொலைகாட்சிகளில் தெரிந்தன. ஆனால் இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் இருக்கும் சித்தாந்தம், முக்கியமாக எபிரேய வேதாகம் சார்ந்த இறையியல் சித்தாந்தம் அதிகமாகக் கண்காணிக்கப்படவில்லை. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய இந்தக் கட்டுரை முயல்கிறது. இதையும் சொல்ல வேண்டும். இப் பத்தியில் வேதவாக்கியங்கள் நிறைய வரும். படப்பிடிப்பின் போது பறவைகளும் மிருகங்களும் கொல்லப்படவில்லை என்று உரிமை கைதுறப்பு செயவதுபோல் வேத வசனங்கள் இங்கே திரிக்கப்படவில்லை.

வேதாகமத்தில் காணபப்படும் "தெய்வீக உரிமைகள்," "தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்", "கடவுளின் ஜனம்", "பரிசுத்த மக்கள்", "நில வாக்குறுதி," "யூதேயா," "சமாறியா" போன்ற சொற்கள் பலஸ்தீனத்தின் காலனித்துவத்தை எபிரேய ஆகமத்தின் அடிப்படையில் சட்டப்பூர்வமாகவும், அரசியல் நியாயத்தன்மை வழங்குவதற்காகவும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுகின்றன. இவை திருச்சபை வட்டாரங்களில் மட்டுமல்ல உயர்ந்த அரசியல் மட்டங்கள் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு அமர்வுகளில் இந்த வாக்கியங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்திய உதாரணம் ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேலிய பிரதிநிதி டேனி டானன் டிசம்பர் 23, 2016 இல் ஆற்றிய உரை: "இந்தப் புனித நூலான எபிரேயே ஆகமம் 3,000 வருட வரலாற்றைக்



கொண்டுள்ளது. இஸ்ரேல் தேசத யூத மக்களின் வரலாறு. இந்த வரலாற்றை யாராலும் மாற்ற முடியாது. "அத்துடன் நிறுத்தி விடவில்லை. எபிரேய ஆகமத்தைத் திறந்து அதன் முதல் புத்தகமான ஆதியாகமத்திலிருந்து ஒரு வசனத்தை வாசித்தார்: அந்த வாக்கியம் : "அன்றியும், அன்னிய நாடாகிய இந்தக் கானான் நாடு முழுவதையும் உனக்கும் உன் சந்ததியாருக்கும் நித்திய உரிமையாகக் கொடுப்பேன்" (17.7). "இதுதான் எங்கள் நிலத்தின் பத்திரம்" என்று எதிரே இருந்த பலஸ்தீனப் பிரதிநிதிகளின் கண்களை நேராகப் பார்த்து டானன் கூறினார்.

இதே மாதிரியான நிகழ்வு 1937 ஆம் ஆண்டு நடந்தது. இஸ்ரேலை நிறுவிய முக்கியமானவர்களில் ஒருவரும் நாட்டின் முதல் பிரதம மந்திரி டேவிட் பென்-குரியனுக்கும் பலஸ்தீனத்தின் பிரிவினை பற்றிய விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழுவுக்குத் தலைமைதாங்கிய லார்ட் பீல் இடையேயான ஓர் உரையாடல். கதையின்படி, லார்ட் பீல் பென்-குரியனிடம் நீங்கள் எங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இப்போதும் நீ போய், அமலேக்கை முறியடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக் கடவாய் என்கிறார் என்று சொன்னான்" (1 சாமுவேல் 15.3.).**

பிறந்தீர்கள் என்று கேட்டார். பென்-குரியன் அவர் போலந்தின் ப்லோன்ஸ்க் நகரைச் சேர்ந்தவர் என்று பதிலளித்தார். தான் சந்தித்த அரபுத் தலைவர்கள் அனைவரும் பலஸ்தீனத்தில் பிறந்தவர்கள் என்றும் பெரும்பாலான யூதத் தலைவர்கள் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் என்றும் லார்ட் பீல் சொன்னார். அத்துடன் இந்தத் தகவலையும் தெரிவித்தார். அரேபிய மக்களிடம் ஒட்டமான் இராஜியம் கொடுத்த மானிய நிலப் பத்திரம் இருக்கிறது. இந்தப் பத்திரம் அவர்களுக்கு நிலத்தின் உரிமையைக் கொடுத்திருக்கிறது. அதுபோல் இந்த நிலம் உங்களுக்குச் சொந்தமானது என்பதை நிரூபிக்கும் ஆவணம் உங்களிடம் உள்ளதா? என்று பென்-குரியனிடம் பீல் கேட்டார். அந்த நேரத்தில், பென்-குரியன் எபிரேய வேதாகமத்தை எடுத்துக் காட்டி "இதோ இதுதான் எங்கள் நிலப் பத்திரம். இது உலகின் மிகவும் மதிக்கப்படும் புத்தகம். ஆங்கிலேயர்களான நீங்களும் இதை மிகவும் மரியாதையுடன் கருதுகிறீர்கள். இந்த நூலின் சான்றுப் படி. இந்த நிலம் எங்களிடம் இருக்க வேண்டும்!"

புனைவியல்வாதிகளின் பாணிகளுக்கு ஏற்ப, பென்-குரியன் பழைய ஏற்பாட்டை யூத மக்களின் "தேசிய இதிகாசம்" என்று கருதினார். இவரின் எண்ணப்படி இந்த நூல் அவர்களை ஒரு புகழ்பெற்ற பண்டைய கடந்த காலத்துடன் இணைக்கிறது மட்டுமல்ல நிலத்தின் சமகால இஸ்ரவேலரின் குடியேற்றத்தை நியாயப்படுத்துகிறது.

காலனித்துவ சாகசத்தை மேற்கொள்ள மக்களையும் நாடுகளையும் அபகரிக்க சக்திவாய்ந்த கூறுகள் எபிரேய ஆகமத்தில் நிறைய உண்டு.. ஒன்று, யூதர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நிலம்: "உங்கள் காலடிபடும் இடங்கள் எல்லாம் உங்களுடையவை ஆகும். பாலை நிலமும், லெபனோனும், யூப்பிரத்திசு ஆறும், மேற்குக் கடற்கரையும் உங்கள் எல்லையாயிருக்கும். எவனாலும் உங்களை எதிர்த்து நிற்க இயலாது. ஏனெனில், கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் செல்லும் நாடுகள் அனைத்திலும் உங்களைப்பற்றி அச்சத்தையும் திகிலையும் உண்டாக்குவார்" (உபாகமம் 11.24). காலனிய உச்சக்கட்ட நாட்களில் ஐரோப்பிய காலனிவாதிகள் அமெரிக்காவையும் ஆபிரிக்காவையும் ஆஸ்திரேலியாவையும் ஆசிய நாடுகளையும் அபகரித்தபோது மிக மூர்க்கத்தனமாக நேர் பத அர்த்தத்தில் இந்த வசனத்தைப் பயன்படுத்தினார்கள். உலகில் பெரும் அழிவை ஏற்படுத்தியதற்கு இந்த வசனம் ஒரு முக்கிய காரணம். வசைமொழிகளுக்கு என்று ஒலம்பிக்ஸ் போட்டி நடத்தினால் இந்த வாக்கியம் தங்கப் பதக்கம் பெறும்.


தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்ற யோசனையும் பழைய ஏற்பாட்டின் ஒருங்கிணைந்துள்ள செய்தியாகும். "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனம், பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும் மேலாக, கர்த்தர் உங்களைத் தமக்கென்று ஒரு விசேஷமான ஜனமாகத் தேர்ந்துகொண்டார்" (உபாகமம்.14.2). இத்தகைய கருத்துகள் வேதப் புத்தங்களில் குறியிடப்படும் வரை ஆதிக்கச் சாதி இன்னுமொரு பலவீன சமுதாயத்தை நசித்துக்கொண்டே இருக்கும்; காலனிய முயற்சிகளும் தொடரும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், தெரிவுநிலை என்ற கருத்து ஓர் ஆபத்தான சித்தாந்தமாக மாற்றப்பட்டிருக்கிறது. இது மத அடிப்படையிலான தேசியவாதம், குடியேற்றக் காலனித்துவம் மற்றும் ஓர் இனத்தின் பேரழிவு இறையியல் சம்மதத்தைத் தருகிறது.

இன்று இஸ்ரேயில் என்று அழைக்கப்படும் இந்த நிலத்துக்கு வரலாற்றில் பல பெயர்கள் இருந்திருக்கின்றன. மிகத் தொன்மையானது கானான். இது இன்றைய பலஸ்தீனம், லெபனான் மற்றும் ஜோர்டானின் மேற்குப் பகுதியையும் கடலோர சிரியாவையும் உள்ளடக்கியது. இந்தப் பிரதேசத்தைத்தான் எபிரேய வேதம் பாலும் தேனும் வழிந்தோடும் நாடு என்று வர்ணித்திருக்கிறது. இந்திய மென்பொருள் பொறியாளர்கள் கனவு காண்பதுபோல் அமெரிக்காவை அல்ல. கானான் மறைந்தாலும், கானானியர்கள் கரைந்துவிடவில்லை. அவர்கள் வெவ்வேறு அடையாளங்களுடன் பலஸ்தீனத்தில் வசிக்கும் மக்களாகத் தொடர்ந்தனர். புதிய ஏற்பாட்டு நற்செய்தி நூல்களில் இவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

பின்னர் இடப்பட்ட பெயர் பலஸ்தீனம், கிட்டத்தட்ட 2,500 ஆண்டுகளாக, இன்றுவரை இப்பெயர் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது" இவர்களின் தொடக்கம் சற்று குழப்பமானது. இடியாப்பம் போல் பல அடுக்குகள் கொண்டது வெண்கல யுகத்தின் பிற்பகுதியில் தெற்குக் கடலோர கானானில் குடியேறிய கடல் மக்களில் *(Sea People)* ஒரு குழுவாகயிருந்த ஜனங்களில் ஒருவர் என்ற புனைவுகோள் உண்டு. பெல்ஸ்ட் *Pelas* என்று அழைக்கப்பட்டவர்கள் பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெலிஸ்தியர்கள் என்று பெயர் மாற்றப்பட்டார்கள். கிரேக்க வரலாற்றாசிரியரும் வரைபடவியலாளருமான ஹெரோடோடஸ் (புது யூகத்துக்கு முன் 484-425) தான் டிரான்ஸ்ஜோர்டான் உட்பட முழு நிலத்தையும் குறிப்பிட்டுப் பலஸ்தீனமாக மாற்றினார். கிரேக்கர்கள் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பது போல் பிற நாடுகளுக்கும் நாமம் சூட்டுவது கிரேக்கர்களுக்கு ஒரு தேசிய பொழுதுபோக்கு. இவர்கள் இலங்கைக்கு வைத்த பெயர் தப்ராபேன் *(Taprobane)*.

முதலாம் இரும்பு யுகத்தில் வந்த இன்னொரு பெயர் இஸ்ரேல். எபிரேய ஆகமம் எகிப்திலிருந்து அடிமையான யூதர்கள் ஜெகோவினால் விடுதலை ஆக்கப்பட்டவர்கள் என்று வர்ணிக்கிறது. யூதர்களின் எகிப்திய மீட்புச் சரித்திர உண்மை என்று ஏற்றுக்கொள்ள மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டுள்ள குருக்ஷேத்திரப் போர் வரலாறில் நிகழ்ந்த சம்பவம் என்று நம்பும் மரபணுவுடன் பிறந்திருக்க வேண்டும். இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் இந்த ஆகம வரலாற்றை ஏற்றுக்கொள்வதில்லை. நாடோடிப் பழங்குடியினரான இவர்கள் கானானில் இருந்து எகிப்தியர்கள் வெளியேறியதன் ஒருங்கிணைக்கப்பட்ட ஜனமாக யெகோவா மையமாகக் கொண்ட புதிய மத அடையாளத்துடன் ஒரு புதிய இராச்சியத்தையும் நிறுவினார்கள். ஆபிரகாமுக்கு வாக்குறுதியளித்ததற்காக மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிலம் தங்களுக்கு வழங்கப்பட்டதாகப் பெரும்பாலான யூதர்கள் நம்புகிறார்கள். அவர்கள் கானானைக் கைப்பற்றியதன் மூலம் நிலத்தை ஆக்கிரமித்தனர். இரண்டு ராஜ்யங்களை ஒன்று வடக்கிலும் இன்னும் ஒன்று தெற்கிலும் உருவாக்கினார்கள். வடக்கு மாநிலம் கிமு 722 அசீரியர்களால் மற்றும் தெற்கில் 587 இல் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டது.

விவிலியக் கதை இஸ்ரேல் இராச்சியத்தை ஓர் அரசியல் அமைப்பாக தாவீது ராசாவும் அவரது மகன் சாலமனும் மாற்றினார்கள் என்று விவரிக்கிறது. இந்தக் கதை தாவீது மற்றும் சாலொமோன் காலத்தை இஸ்ரேலின் உச்சக்கட்டமாகப் பின்னோக்கி, நடந்து போன காரியங்களை மகிமைப்படுத்தியது. பழைய ஏற்பாட்டுக் கதை இஸ்ரேலிய குடியேற்றத்தாருக்கு *(settler colonialists)* ஆதரவானதான ஆவணமாக, வரலாற்றாகப் பயன்படுத்தப்படுகிறது.

இஸ்ரேல் என்ற பெயர் இருபதாம் நூற்றாண்டில் ஒரு நவீன அரசியல் கட்டமைப்பு. இப்போது தற்போதைய இஸ்ரேலிய அரசாங்கத்தால் நிலம் காலனித்துவத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இது வேதாகமத்தினால் ஆதரிக்கப்பட்டு ஒரு பிரத்யேக இன மற்றும் மத அரசுக்கு அங்கீகரம் தருகின்றது.

இதற்கு நேர்மாறாக, பலஸ்தீனம் என்ற பெயர் மட்டுமே "வரலாற்று ரீதியாக உள்ளடக்கிய தன்மையைக் கொண்டுள்ளது" என்று மீட்ரி ராஹேப் என்ற பலஸ்தீன விவிலிய அறிஞர் எழுதுகிறார். இந்த அர்த்தத்தில் பலஸ்தீனம் என்பது ஒரு அரசியல், மத அல்லது இன அமைப்பைக் குறிக்கவில்லை, மாறாக அதன் எல்லைக்குள் பலதரப்பட்ட அடையாளங்களையும் மக்களையும் உள்ளடக்கிய பல இன, பல-கலாச்சார மற்றும் பன்மடங்கு மண்டலத்தைக் குறிக்கிறது. பல நூற்றாண்டுகளாக, யூதர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் பலஸ்தீன தேசத்தில் அருகருகே வாழ்ந்ததை ரஹேப் வாசகருக்கு நினைவூட்டுகிறார் *(பார்க: Mitri Raheb, Decolonizing Palestine, 2023)*.

இஸ்ரவேல் தேசம் என்ற சொற்றொடர் யூதர்களின் ராஜாக்களான தாவீதும் அவருடைய மகன் சாலோமனும் இறந்த பின் எழுதப்பட்ட 1 சாமுவேல் நூலில்தான் முதல்முதலாகக் காணப்படுகிறது. எபிரேய ஆகமத்தில் ஆறு முறை மட்டுமே இடம் பெறுகிறது. இதற்குக் காரணம் நிலம் யூதர்களின் இறையில்படி நிலம் கடவுளுக்குச் சொந்தமானது. நிலத்தின் தெய்வீக உரிமை மிகவும் வலுவானது, இஸ்ரவேலர்கள் பரதேசிகளாக கருதப்படுகிறார்கள். கர்த்தர் சொன்னாதாக வரும் இந்த வேதவாக்கினைப் பாருங்கள்: "நிலம் என்னுடையது. நீங்களோ என்னைப் பொறுத்தவரையில் அந்நியரும் இரவற்குடிகளுமே" *(லேவியராகமம் 25.2)*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று இஸ்ரவேல் இராணுவம் பலஸ்தீன மக்களுக்குச் செய்வது ஒரு கூட்டுத் தண்டனை. ஓர் எதிரியின் முழுச் சமூகமீதான வஞ்சத்தீர்வு. எபிரேய வேதத்தில் இந்தத் தண்டனை வேரூன்றியிருக்கிறது. பழிக்குப்பழி ஆழமாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.**

வரலாறு வாடகை சூடியவர்களால் எழுதப்படுகிறது என்பது வழக்கத்தில் நைந்துபோன ஒரு சொற்றொடர். வரலாறு மட்டுமல்ல வேதாகமங்களும் திருமறைகளும் ஆதிக்க, ஆண்டகை செய்கின்ற ஆண்வழிச் சமுதாயத்தினரால் எழுதப்பட்டவை. இன்றைய மத, இனவெறிக்குச் சான்று கோள் காட்டும் நூல்களான மனுஸ்மிர்தி, மகாவம்சம் எல்லாம் ஆண்டகைகளால், ஆண்களால் எழுதப்பட்டவை. ஒடுக்கப்பட்டவர்களுக்குப் போதுவாகவே எதிரானவை.

ஜோர்டானைக் கடந்து கானானுக்குச் செல்லும் இஸ்ரேலியர்கள் நிலத்தின் மீது தெய்வீக உரிமை பெற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். கடவுளினால் தங்களுக்காகப் புனிதப்படுத்தப்பட்ட நாடு என்று கருதுகிறார்கள். அவர்கள் நிலத்தைச் சேர்ந்தவர்களாகவும், முறையான வாரிசுகளாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள், அதே சமயம் பூர்வீகவாசிகள் பொல்லாதவர்களாகவும், சீரழிந்தவர்களாகவும் விவரிக்கப்படுகிறார்கள் (ஆதியாகமம் 9:35). அவர்கள் அந்த நிலத்திலிருந்து அகற்றப்படவேண்டும், ' இடம்பெயர்ந்து, அழிக்கப்பட வேண்டும் கர்த்தர் இஸ்ரவேலருக்குக் கொடுத்த அச்சம் தரும் முரட்டுக் குணமுடைய வாக்கியங்களை இங்கே தருகிறேன். "நீ சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி, உன்னைப் பார்க்கிலும் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர் பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை உனக்கு முன்பாகத் துரத்தி உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறிய அடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய்; அவர்களோடே உடன்படிக்கைபண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம். அவர்களோடே சம்பந்தம் கலவாயாக" (உபாகமம் 7.1-3). யூதர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட நிலம், பலஸ்தீனர்களுக்குக் காலனித்துவ நிலமாகத் தெரிகிறது.

இன்றைய யூதர்களுக்கும் வேதாகம யூதர்களுக்கும் என்ன தொடர்புண்டு. இந்த இணைப்பு சற்று மெல்லியது. ஆடுகள் மற்றும் குதிரைகள் உள்ளிட்ட விலங்குகளைத் தங்கள் தெய்வங்களுக்குப் பலியிட்ட வேத கால ஆரியர்களும் இன்றைய ஆரியர்களும் ஒரே மாதிரியான ஆட்கள் என்று சொல்வது போன்றது. இன்றையவர்கள் அந்தப் பழைய காலத்தவர்களை மச்சி என்று சொந்தம் கொண்டாடுவது கொஞ்சம் கஸ்டம். இதை நீடித்துப் பார்த்தால் ராஜபக்சே சகோதர்கள் துட்ட கைமூனுவின் வம்சாவழியினர் என்று சொல்லக்கூடும்.

யூதர்களில் இரண்டு பிரிவுகள் உண்டு. அஷ்கெனாசி மற்றும் செபார்டிக் யூதர்கள் இவர்களின் வரலாறுகளைச் சிறுமைப்படுத்தாமல் எளிமைப்படுத்தப்பட்ட வடிவில் சொன்னால் அஷ்கெனாசிகள் மேற்கில் முக்கியமாக ஜெர்மனியில் வாழ்ந்தவர்கள். செபார்டிக் யூதர்களுடன் தொடர்புடைய முக்கிய நிலங்கள் ஸ்பெயின், வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஐரோப்பாவின் சில பகுதிகள். இன்று 80% யூதர்கள் அஷ்கெனாசிகள். இவர்கள் பழங்கால வரலாற்று இஸ்ரேலியர்களிடமிருந்து வந்தவர்கள் அல்ல, மாறாக இவர்களின் குல முதல்வர்கள் துருக்கிய மக்களான காசார்களாக *(Khazar)* இருக்கக்கூடும் என்கிறார் ஆர்தர் கொஸ்லர் *(பார்க்க Arthur Koestler , The Thirteenth Tribe,1976).*

கிறிஸ்தவம், இஸ்லாம் என்ற இரண்டு பெரும் மதங்களிடையே மாட்டிக்கொண்ட காசர்கள் 8 ஆம் நூற்றாண்டில் யூத மதத்திற்கு மாறியிருக்கலாம். மற்றும் 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் காஸார் பேரரசு வீழ்ச்சியடைந்த போது மேற்கு நோக்கி கிழக்கு ஐரோப்பாவிற்கு இவர்கள் குடிபெயர்ந்ததார்கள் என்பது கோஸ்ட்லரின் அனுமானம். வேதகால 12 யூத கொத்திரங்களுடன் இவர்கள் நவீனகால பதின்மூன்றாவது கொத்திரம்.

19 ஆம் நூறாண்டில் உருவாகிய பெரும்பாலான ஒரு சுதந்திர யூத அரசின் நாட்டம் கொண்ட யூத இனவாதிகளான சியோனிஸ்டுகள் *(Zionists)* ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள். பலஸ்தீனர்கள் போல் செமிடிக்கள் அல்ல. இந்த செமிடியர்கள் அரேபியர்கள், யூதர்கள், அக்காடியர்கள் மற்றும் ஃபீனீசியர்கள் உட்பட மத்திய கிழக்கு மக்களுடன் தொடர்புடைய கலாச்சார இனக்குழு. இந்த சியோனிஸ்டுகள் அநேகமாக விவிலிய யூதர்களுடன் இரத்த பரம்பரையைப் பகிர்ந்து கொள்ளுகிறவர்கள் அல்ல. இந்தத் தொடர்பு நரேந்திர மோடியும் சந்திரகுப்த மவுரிய மன்னர்களின் இரத்தம் ஒன்றே என்று சொல்வது போன்றது.

இந்த ஐரோப்பிய சியோனிஸ்டுகளை விட செமிடிக் அரேபியர்களுக்குத்தான் நிலத்திற்கு அதிக உரிமை உண்டு, பலஸ்தீனியப் பார்வையில் இந்த சியோனிஸ்டுகள் ஐரோப்பிய காலனித்துவவாதிகளாகக் கருதப்படுகிறார்கள்.

சியோனிசம் ஒரு பண்டைய கடந்த காலத்தின் மகிமைகளைக் கவனிக்கும் படிச் செய்கிறது. இனவாத, காலனிய வார்த்தைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொடர்களையும் பேசும் எபிரேய ஆகமம் இஸ்ரேல் அரசின் மொழியியல் ஆதாரமாகவும் இலக்கிய முன்வடிவாகவும் (template) செயல்பட்டது.

இன்று இஸ்ரவேல் இராணுவம் பலஸ்தீன மக்களுக்குச் செய்வது ஒரு கூட்டுத் தண்டனை. ஓர் எதிரியின் முழுச் சமூகமீதான வஞ்சத்தீர்வு. எபிரேய வேதத்தில் இந்தத் தண்டனை வேரூன்றியிருக்கிறது. பழிக்குப்பழி ஆழமாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. மூன்று உதாரணங்கள்:

பழைய ஏற்பாட்டில் பைபிளில் உள்ள கூட்டுத் தண்டனையின் மிகவும் அறியப்பட்ட முன்னோடி நிகழ்வு பெரும் வெள்ளம் (ஆதியாகமம் 7:11-24).: மனிதனின் அக்கிரமத்தையும் ஊழலையும் கண்டு கடவுள் கோபமடைந்து உலகத்தையே அழித்து விடுகிறார் (ஆதியாகமம் 6:5-8).

பழிவாங்கலுக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டு: இஸ்ரவேலர்களை அவர்களது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்குமாறு பார்வோனிடம் மோசே மன்றாடுகிறார், எகிப்திய அரசன் தன் மனதைக் கடினமாக்கிக்கொண்டு மறுத்துவிடுகிறார். எகிப்து முழுவதும் மீண்டும் மீண்டும் தண்டிக்கப்படுகிறது. பத்து உபாதைகளை அந்த நாட்டு மக்கள் அனுபவிக்கவேண்டியிருந்தது. "நள்ளிரவில் அரசனாக இருந்த பார்வோனின் தலைமகன் தொடங்கி சிறையில் கிடந்த கைதியின் தலைமகன்வரை எகிப்து நாட்டின் எல்லா ஆண்பால் தலைப்பிறப்பையும் மற்றும் விலங்குகளின் அனைத்து ஆண்பால் தலையீற்றுகளையும் ஆண்டவர் சாகடித்தார்" (யாத்திரகாமம் 12.29).

இன்றைய பலஸ்தீனர்களை எதிர்க்க உபயோகிக்கப்படும் மூன்றாவது வேதாகம பழிக்குப் பழி சான்று முதலாம் சாமுவேல் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. தீர்க்கதரிசி சாமுவேல் ராஜாவான சவுல்லுக்குச் சொன்னது: "இப்போதும் நீ போய், அமலேக்கை முறியடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக் கடவாய் என்கிறார் என்று சொன்னான்" (1 சாமுவேல் 15.3). யார் இந்த அமலெக்கியர்கள்? எபிரேய வேதத்தில் அமலேக்கியர்கள் இஸ்ரேலின் பரம எதிரியாகக் கருதப்படுகிறார்கள். யாத்திராகமத்தில், எகிப்திலிருந்து தப்பித்தபோது இஸ்ரேலியர்களை இவர்கள் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இஸ்ரவேல் அமலேக்கியர்களைத் தோற்கடித்தாலும், அமலேக்கிய சந்ததியினர் மீது தெய்வீக சாபம் இடப்பட்டது. அமலேக்கிய தேசம் இப்போது இல்லை என்றாலும், யூத மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அனைத்து வகையான யூத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஒரு வஞ்சகமான எதிரியின் நினைவாக இந்த மக்கள் வாழ்கிறார்கள். நெத்தன்யாகு சமீபத்திய செய்தியாளர் சந்திப்பில் காசாவை அழிப்பதற்காக ஒரு முதலாம் சாமுவேல் தரும் விவிலிய ஆதிகார ஆணை மூலம் நியாப்படுத்தினார்.

பலரையும் இரட்சிப்புக்கு வழிகாட்டிய கிறிஸ்தவ வேதாகமம் எவ்வாறு தன்னை இரட்சித்து மீட்டுக்கொள்ள முடியும்? அதன் பக்கங்களில் உட்பொதிக்கப்பட்ட எதிர்க் கதைகள் உண்டு. இந்தப் புனித நூலுக்கு நிவாரணம்.. அவற்றில் ஒன்று நாபோத்தின் திராட்சைத் தோட்டம்.

முதலாம் ராஜாக்கள் புத்தகத்தில் இப்படி ஒரு கதை உண்டு. என்னுடைய சுருக்க வடிவாக்கதில் தருகிறேன். நாபோத் என்ற ஒரு சாதாரண ஆளிடம் ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. அது இஸ்ரவேலின் அரசனான ஆகாபின் அரண்மனைக்கு அருகில் இருந்தது. ஆகாப் நாபோத்திடம் திராட்சைத் தோட்டத்தை விற்க முடியுமா என்று கேட்டார், நிலம் பரம்பரைச் சொத்து என்பதால் நாபோத் மறுத்துவிட்டார். இதனால் அரசர் மனம் தளர்ந்து போனார். அவரின் மனைவி யேசபேல் திரட்சைத் தோட்டத்தைப் பெற ஒரு சூழ்ச்சி செய்தார். யேசபேலுக்கு முன்னால் தமிழ்த் தொலைக்காட்சித் தொடர் வில்லிகள் ஆவின் பால் அருந்தும் அப்பாவிக் குழந்தைகள் போல் தெரிவார்கள். நாட்டின் பெரியவர்களுக்கும் பிரபுக்களுக்கும் ஆகாபின் பெயரில் ஒரு கடிதம் எழுதி பிரச்சினையை யேசபேல் தீர்க்க முயல்கிறாள். அந்தக் கடிதத்தில், நாபோத் கடவுளையும் ராஜாவையும் சபித்ததாகப் பொய்யாகக் குற்றம் சாட்ட இரண்டு சாட்சிகளை முன்வைக்க நாட்டின் பெருமகான்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் நகருக்கு வெளியே நாபோத்தைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும். அப்படியே நாபோத் கொலை செய்யப்பட்டான். இதை அறிந்த கடவுள் தீர்கதரிசி எலியாவை ஒரு செய்தியுடன் ஆகாப்புக்கு அனுப்புகிறார். வேதாகமத்தை மேற்கோள் காட்டுகிற பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு ஆறுதல் தரும் வசனம் அல்ல : "நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்தது, கொள்ளையடித்திருக்கிறாய் இல்லையா? நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார். நாபோத்தின் கதை இன்று பலஸ்தீனியர்களின் கதையாகும், அவர்களின் நிலங்கள் மேற்குக் கரையில் யூதக் காலனிகளை விரிவுபடுத்துவதற்காக அபகரிக்கப்படுகின்றன. இதே அதிகாரத்தில் இப்படி ஒரு வசனம் உண்டு. ஆகாபைப்போல் உலகில் கெட்டவன் எவனும் இருந்ததில்லை. ஆகாபை நெதன்யாகுவுடன் பொருத்திப் பார்த்தால் அது ஒரு தற்செயலான நிகழ்வுப் பொருத்தம் என்று எடுத்துக்கொள்ளுங்கள். ●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் மதிப்புரை | ஆ. நளினி சுந்தரி




# மறு வாசிப்பில் பா. விசாலத்தின் 'மெல்லக் கனவாய் பழங்கதையாய்' நாவல்

**இ**லக்கியப் படைப்பாக்கத்தில் மனித வாழ்வியலை உயிர்த்திடச் செய்திடும் நாவல், மனிதனின் சமூக நடத்தைகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் நுட்பமாக விசாரணைக்குட்படுத்துகிறது. வெறுமனே யதார்த்த வாழ்க்கையில் தொடங்கிடும் நாவலாசிரியரின் தேடல், கதையாடலுக்குப் பின்னர் பொதிந்திருக்கிற இருப்பைப் பதிவாக்கிட முயலுகிறது. பொதுவாகப் பெண் படைப்பாளர் எழுதிடும் நாவல்கள், குடும்பச் சூழலுடன் சமூகத்தையும் கேள்விக்குள்ளாக்குகின்றன. நாவலாசிரியை பா.விசாலம் எழுதி, 1994 ஆம் ஆண்டு வெளியான 'மெல்லக் கனவாய் பழங்கனவாய்' நாவல், குமரி மாவட்டப் பின்புலத்தில் தன்வரலாற்றுக் கதையாடாலாக விரிந்துள்ளது. அன்றைய சமூகத்தில் நிலவிய சாதி, பழக்கவழக்கங்கள், அரசியல், வறுமை ஒழிப்பு, மனித உறவுகள், பெண்நிலை, கல்வி போன்றவற்றைத் தன் அனுபவங்களின் சாரத்துடன் பா.விசாலம் நாவலாகப் படைத்திருக்கிறார்.

ப. விசாலம் நாவலை எழுதுவதுபோல அல்லாமல் தனது வாழ்க்கையை 'நனவோடை' உத்தியில் குறிப்புகளாக எழுதியிருக்கும் முறை, வாசிப்பில் ஈர்ப்பதாக உள்ளது. விசாலம் நாவலைப் பற்றிப் பேசும்போது "அனுபவங்களினூடாகப் பெற்ற உணர்வுகளின் வெளிப்பாடுதான் எனது நாவல். குடும்பத் தகராறுகள், வறுமை, உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகள், கட்சியில் செயல்பட்டபோது ஏற்பட்ட அனுபவங்கள் அனைத்தும் நடந்த உண்மைகள். இவை கற்பனை விரிவாக்கத்தோடு நாவலில் சொல்லப்பட்டுள்ளன. என்னுடைய வாழ்க்கையையும் அனுபவத்தையும் தேர்ந்தெடுக்கக் காரணம் மற்றவர்களுடைய அனுபவத்தைவிட சொந்த அனுபவங்களைப் படைப்பாக மாற்றும்போது அதற்கே உரிய வீச்சோடு வெளிவரும் என்பதால்தான்" என்று சொல்கிறார்.

"மெல்லக் கனவாய் பழங்கதையாய்" என்ற நாவல் தலைப்பு சொல்லும் பொருள் என்ன? உட்குறிப்பு என்ன? அதன் நேரடிப்பொருள் என்ன? என்று நோக்கும்போது அவலத்தின் குறியீடாக எண்ணத் தோன்றுகிறது. கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளின் ஊடாகக் கதைசொல்லி வெறுமைக்குள் பயணிக்கிறாரா? யோசிக்க வேண்டியுள்ளது. கதையின் தொடக்கத்திலிருந்து கதையைச் சொல்லுகிற சிறுமிக்கு ஏற்படும் இது ஏன்? எதற்கு? எப்படி? என வெளிப்படும் தர்க்க மனம் வாசிப்போருக்கும் ஏற்படுகிறது.

நாவலாசிரியை விசாலம் இளம் பருவத்திலேயே பொதுவுடைமை இயக்கத்தாலும் அதன் போராட்டக் கருத்துக்களாலும் ஈர்க்கப்பட்டார். 1952இல் பொதுவுடைக் கட்சியில் உறுப்பினர் ஆனார். அவர், தொடக்கத்தில் காலத்தில் கட்சியின் அலுவலகப் பணிகளில் ஈடுபட்டுச் சுற்றறிக்கைகள் தயாரித்தல், நகல்கள் எடுத்தல், கூட்ட நடவடிக்கைகளைக் குறிப்பெடுத்தல் போன்ற பணிகளைச் செய்தார்; பின்னர் இயக்கம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றார்; புரட்சிகரமான இயக்க அனுபவங்களும், இயல்பான எழுத்தாற்றலும் காரணமாகச் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய விசாலம் நாளடைவில் நாவல் எழுதினார்; இயக்கத் தோழர் மைக்கேல் ராஜுவைக் காதலித்து 1964ஆம் ஆண்டு மணம்செய்துகொண்டார்; திருமணத்திற்குப் பிறகும் கணவருடன் சேர்ந்தும் தனியாகவும் இயக்கப்பணிகளில் ஈடுபட்டார்; 'தலைக்கோல்' என்ற நாடகக்குழுவின் தலைவராகப் பணியாற்றி, நாடகங்கள்மூலம் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்திட முயன்றார். இலங்கை, கொழும்பில் நடந்த பெண்கள் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் பிரதிநிதியாகப் பங்கேற்றார். பொதுவுடைமைக் கட்சி இரண்டாகப் பிளவுண்டபோது அதிலிருந்து விலகினார். என்றாலும் கடைசிவரையிலும் பொதுவுடைமை இயக்க ஆதரவாளராகவே இருந்தார்.

மெல்லக் கனவாய் பழங்கனவாய் நாவல் வலுவான அரசியல் களத்தைக் காட்சிப்படுத்தியுள்ளது. இந்திய அரசியல் வரலாற்றில் மார்க்சிய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதை வரலாற்றின் வழியாக நாவல் சித்திரிக்க முயலுகிறது. நாவல், பொதுவுடைமை அரசியலில் பெண் நிலைப்பாடுகளையும் அதனூடே காணப்படும் நுண்ணரசியலையும் பதிவாக்கியுள்ளது. 1935 முதல் 1975 வரை சராசரிக் குடும்பத்தில் வாழ்ந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுக்குள் ஏற்பட்ட சமூக அக்கறை, துணிச்சல், அரசியல் ஈடுபாடு ஆகியவற்றைக் குறித்து நாவல் விவாதிக்கிறது. அரசியல் அனுபவங்கள் எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிவிடத் துடிக்கும் மனம் கொண்டவளாக நாயகியை விசாலம் எழுதியுள்ளார். ஆனால், எல்லாவற்றையும் இலைமறைகாயாகச் சொல்லியிருக்கிறார்.

நாவலின் கதைக்களம் நாகர்கோயில், ஆரல்வாய்மொழி, காயன்குளம், கோட்டாறு, திருவனந்தபுரம், திருவிதாங்கூர், சாலக்குடி, வேப்பமூட்டு, தக்கலை, இடலாக்குடி, பாலக்காடு, திட்டுவிளை போன்ற ஊர்களின் பின்புலத்தில் விரிந்துள்ளது. நாவலில் இடம்பெறும் முக்கியமான சம்பவங்கள், நிகழ்வுகள் 1935 ஆம் ஆண்டு தொடங்கி 1974 வரை நடைபெறுகின்றன். பர்மா பிரிந்தது, அகதிகளின் அவல வாழ்வு, எம்டன் குண்டுவீச்சுக்குப் பயந்து மக்கள் சென்னையைவிட்டு வெளியேறியது, பொட்டி ஸ்ரீராமுலு நாயுடு உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தது, காந்தி சுடப்பட்டு இறந்தது, பெரியார் - மணியம்மை திருமணம், திராவிட இயக்கங்களின் தோற்றம் போன்ற வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் நாவலில் பதிவாகியுள்ளன.

1935களில் இந்திய அரசியல் சூழலில், நாடெங்கும் விடுதலைப் போராட்டங்கள் வலுவடைந்துகொண்டிருந்தன. காந்தியச் சிந்தனைகள் பரலாகியதால் மக்கள் தேசிய உணர்வினால் ஈர்க்கப்பட்டனர். பொதுவுடைமைக் கருத்தியல்கள் பரவலாக்கப்பட்டு வெளிப்படையான கம்யூனிஸ்ட் அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறப் போராடின. இன்னொருபுறம் வைதிக சநாதனத்தின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த பெரியாரின் சுயமரியாதை இயக்கம், தமிழர் வாழ்க்கையில் ஆழமாக ஊடுருவியிருந்தது. பிறப்பின் அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவான குரல்கள் ஆழமாக ஒலித்தன. பால் அடிப்படையில் இரண்டாம் நிலையில் ஒடுக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாக முத்துலட்சுமி ரெட்டி போன்றோர் எழுப்பிய கலகக்குரல்கள், முக்கியமானவை. இத்தகைய சூழலில் விசாலத்தின் எதிர்க்குரல் நாவலின்மூலம் வெளிப்பட்டுள்ளது. அது, தனக்குள் தானே வினாக்களை எழுப்பி, விடைகளைத் தேடியலைந்து சமூகத்தை அவதானித்த சிறுமியின் குரலாய் ஒலித்தது.

நாவலின் கதை, சிறுமியின் பார்வையில் இருந்து தொடங்கிப் பதின்பருவப் பெண் பார்வையில் முடிகிறது. சிறுமி வளர்ந்து பருவப் பெண்ணாகிறாள்; திருமணத்திற்கு தயாராகிறாள். அனைத்து ஞானமும் பெற்றவளான கதைச்சொல்லியின் "நான்" தான் அவ்வப்போது படர்க்கைத் தன்மைக்கு மாறி, கதைநாயகியின் புலன்கள், செயல்பாடுகள்மூலம் உலகை அறிமுகம் செய்கிறாள். தொடக்கம் முதல் முடிவு வரை நாயகியின் அகமனவோட்டங்களும் கேள்விகளும் தர்க்கங்களும் அவள் மனதின் பேச்சாகின்றன.சிறுமியின் உலகம் இயற்கை, தான் வாழும் குடும்பம், விளையாடும் இடங்கள், சென்று வரும் ஊர்ப் பயணங்கள், வீட்டு விசேஷங்கள், அப்பாவின் அரவணைப்பும் அறிவுரையும், அம்மாவின் கதைகளும் அன்பும், அக்கா அண்ணன்களின் வழிகாட்டல்களும் என விரிகின்றது. சிறுமி கண்ட உலகம் தனித்துவமானது. எதிர்கொண்ட கற்பிதங்களினூடே சூழலை ரசிக்கும் சிறுமிதான் கதையின் நாயகி.

சிறுமியின் உள்ளத்தில் தோன்றும் குழந்தைக்கே உரித்தான கேள்விகளுக்கு விடைதேடும் முயற்சிகளில் சில தோல்வியடைகின்றன. வெவ்வேறு ஊர்களில் வாழ்ந்த அனுபவங்களின் மனப்பதிவுகள், சிறுமியின் உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றன. அவள் அணிலை ரசிக்கிறாள், அன்னத்தை ரசிக்கிறாள், நடந்து செல்லும் பாதைகளில் காலுக்கு அடியில் பூத்துக்கிடக்கும் பூக்களையும் ரசிக்கிறாள். எல்லா நிலைகளிலும் தர்க்கத்தை முன்வைத்தவளாய் வளரும் சிறுமியின் உலகம் ஒருவகையில் அவளுடைய வீடுதான்.

அப்பாவை எப்போதும் வியக்கும் சிறுமி, அம்மாவின் உழைப்பைக் கண்டு வியப்படைகிறாள். அவளுடைய உடன்பிறந்தோரால் விளையாட்டிற்கு நிராகரிக்கப்படுவதைக்கூட பொறுக்கமுடியாத மனம் கொண்டவள், அண்ணனின் மரணத்தால் உடைந்துவிடும் பெற்றோரின் நிலை கண்டு தவிக்கிறாள். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட அப்பாவின் உடல்நிலை, உடல் சோர்வுகள் ஒருபுறம் எனில் திடீரென வேலையில் இருந்து அப்பா விலகியதால் வருமானம் இன்றித் தவிக்கும் தடுமாற்றம் இன்னொருபுறம் நெருக்கடியைத் தருகிறது. அக்காமார்களின் கணவன்கள் தந்த நெருக்கடிகள், அண்ணன்களின் பொறுப்பற்ற செயல்கள் காரணமாக பலவீனப்பட்ட அப்பா மரணமடைந்தார்.சிறுமிக்கு அப்பாவின் மரணம் பெரும் அழுத்தத்தை தந்தது. உடன்பிறந்தோரின் அலட்சியமும் செயல்களும் அவர்கள் அம்மாவை நடத்திய முறைகளும் அம்மாவின் கைம்பெண் தோற்றமும் அவளைத் துயரத்திற்குள்ளாக்கின.

அண்ணனின் உதவியால் அவளுக்குக் கிடைத்த நூல்களும் மார்க்சியக் கருத்துகளும் வளரிளம் பெண்ணின் மனதிற்கு உரமூட்டின. அவள், அம்மாவையும் துணைக்குக் அழைத்துக்கொண்டு உலகை மாற்றிடப் புறப்படும் பெண்ணாகிறாள். தொடர்ந்து எதிர்கொண்ட சம்பவங்களும் பிரச்சினைகளும் அவளைத் துணிச்சல் மிகுந்தவளாக மாற்றுகின்றன. எல்லாவற்றிலும் பக்குவமுடன் செயல்படும் மனம் அவளுக்கு இயல்பிலேயே இருந்திருக்க வேண்டும். இதனால்தான் கம்யூனிஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் சித்தாந்தங்களை வாசித்துத் தன் வாழ்வை மாற்ற முயலுகிறாள்; கட்சிப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துகிறாள். கட்சித் தோழர்களின் உதவியால் அம்மாவின் புரிதலுக்கு உட்பட்டு மகிழ்கிறாள். கட்சிக் கூட்டங்களில் பேசுதல், அரசியல் ஈடுபாடு, தோழர் நந்தனின் நட்பு காதலாக மாறுதல், கட்சியின் பிளவுகளால் கட்சியில் இருந்து விலகி ஆதரவு தரும் தொண்டராகி அம்மாவின் சம்மதத்துடன் நந்தனைத் திருமணம் செய்தல் என்பதாகக் கதையாடல் முடிகிறது.

வரலாறுப் பாட வகுப்பில் ஆசிரியர் சொன்ன பரசுராமன் கதை, அம்மாளாத்தாளின் மரணச்சடங்கும் அதைத் தொடர்ந்த பாம்படச் சண்டைகளும், அக்காவின் மகப்பேறு, அக்காக்களின் கணவன்மார்களின் செயல்பாடுகள், அம்மாவின் கைம்பெண் தோற்றம், பெற்றோரின் உறவைக் கொச்சைப்படுத்தும் அக்காள் போன்றவை சிறுமியைப் பெண்ணாக மாற்றுகின்றன. அவள் தாவணி அணிந்து, தன் அழகை யாரும் அறியாமை ரசிக்கிறாள். அம்மாவின் சலிப்பில்லாத வேலை செய்யும் காட்சிகள், அண்ணனின் நண்பர்கள், அண்ணனின் மார்க்சிய நூல் அறிமுகம், முதன்முதலில் அண்ணனுடன் திரைப்படம் செல்லுதல், முதன்முதலில் அம்மாவை எதிர்த்துப் பேசுதல், அம்மாவின் மனமாற்றம், பொதுவுடைமைக் கட்சியில் சேர்தல், புதிய தோழர்களின் நட்பு வட்டம், மேடைப் பேச்சு, தேர்தலில் போட்டியிடுதல், திவான் ஒழிக ஊர்வலம், நிலப்பிரச்சினையால் அவர்கள் வயல் தேடிச்செல்லும் பொழுதுகள், பாட்டுக்காரன் வீடு கண்டுபிடித்தல், தோழர் பாண்டியனின் வீட்டில் உணவு சாப்பிடுதல், நிலச்சீர்த்திருத்தம் பற்றிப் பேசுதல், மருமக்கத்தாயம் முறையில் சிக்கிய நிகழ்வுகளால் வருந்துதல், வீடு இழந்த சம்பவம், மாதர் சங்கக் கூட்டம், வாலிபர் சங்கக் கூட்டம், பலவிதமான கட்சித் தொடர்புடைய கூட்டங்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள் கூட்டம், காங்கிரஸ், தி.மு.க கட்சிகள் பற்றிய செய்திகள், மலையாளம் பேசிப் பழகுதல், நந்தன்மீது காதல், கட்சியிலிருந்து விலகுதல், உறவினர்களுக்கு நந்தனை அறிமுகம் செய்யும்போது ஏற்பட்ட அவமானம்; உளவியல் நெருடல்கள், நந்தனுடன் பதிவுத் திருமணம். போன்ற சம்பவங்கள் நாவலின் கதைப்போக்கில் முக்கிய இடம் பெறுகின்றன.

நாவலில் இடம்பெறும் முதன்மைக் கதைமாந்தரான சிறுமி கதையின் தொடக்கம் முதலே தன்மையில் பேசப்படும் மாந்தராக இடம் பெற்றுள்ளாள். அவளுக்குப் பெயர் சுட்டப்படவில்லை. நாயகியின் கணவன் நந்தன். கதையாடலில் எல்லா மாந்தர்களும் உறவின் பெயர்களாலே அழைக்கப்படுகின்றனர். பெயர் சொல்லி அழைக்கப்படவில்லை. கதையாடலின் திருப்புமுனைக்குப் பின்னர் ஏராளமானவர்கள் இடம் பெறுகின்றனர். தோழர்கள், கட்சித் தலைவர்கள் என வரும் ஆட்கள் ஏராளம். நாவலின் கதைசொல்லலில் உறவின் பெயர்களால்

**அண்ணன் அவளுக்கு தந்த மிகப்பெரிய சீதனம், கம்யூனிசச் சித்தாந்தம்தான். அவள் அப்பா அவளுக்கு தந்துவிட்டுப்போன சீதனம், அவர் கற்பித்த துணிச்சல்தான். இந்த இரண்டும் இவளுக்குப் புதிய பாதையை ஏற்படுத்த உதவின.**

அழைக்கப்படுவதால் குழப்பம் ஏற்படுகிறது.நாவல் வாசிப்பின் தொடக்கம் சிறுமியின் மனநிலையை வாசகருக்கு ஏற்படுத்துகிறது. சிலசமயம் சிறுமியாகவே மாறிப்போகும் தன்மையும் அதிலிருந்து விலகித் தேர்ந்த வாசிப்பாளனாக மாறுகையில் இவர் எப்போது கதையைத் தொடங்குவார்? என்று எண்ணவும் தோன்றுகிறது.

குடும்பம்தான் உன்னதம், கூட்டுக் குடும்பமான தனது குடும்பம் ஒரு முன்னுதாரணம் என்றும், உடன் பிறந்தோரும் அன்னையும் அன்புக்குக் கட்டுப்பட்டு சுயநலமற்று, மனிதாபிமானத்தோடுதான் இருப்பார்கள் என்றும் நினைக்கும் சிறுமி, பெரியவளாகும்பொழுது அதே கற்பனையில் வாழ்கிறாள். ஆனால், வெறும் பணத்திற்காக, சொத்துக்காக அனைவரும் சண்டையிட்டுக்கொள்வதையும், இருப்பதைப் பறித்துக்கொள்ளவும் தனதாக்கிக்கொள்ளவும், போட்டியிடும் அக்காக்களின் கணவர்களையும் பார்க்கும்பொழுது, வாழ்க்கை, குடும்பம் என அனைத்தின் மீதும் எதிர்க்கேள்வி எழுகின்றது. அண்ணன் அவளுக்கு தந்த மிகப்பெரிய சீதனம், கம்யூனிசச் சித்தாந்தம்தான். அவள் அப்பா அவளுக்கு தந்துவிட்டுப்போன சீதனம், அவர் கற்பித்த துணிச்சல்தான். இந்த இரண்டும் இவளுக்குப் புதிய பாதையை ஏற்படுத்த உதவின. மனவுறுதி இழந்த அம்மாதான் இவளை புரிந்துகொள்கிறாள். தோழர்களின் உதவியுடன், தங்கள் வயலை விசாரித்துப் பொருள் ஈட்டும் துணிச்சல் இருவருக்கும் வருகிறது. அரசியல் கூட்டங்களுக்கு அவள் செல்வது அன்றையக் கால கட்டத்தில் பெரும் சவால்தான். பொருளியல் வாழ்க்கையில் வெற்றிபெறத் துடிக்கும் மனநிலையிலிருந்து விலகிச் சமுகமே மாற்றம் பெறவேண்டும் எனப் போராடுவது அன்றையச் சூழலில் சராசரிக் குடும்பப் பெண்ணுக்கு ஏற்படுவது அசாத்தியம்.

விசாலத்தின் மொழி, கலகக்குரல்தான். ஆனால் அது மெல்லிய குரலில்தான் பேசப்படுகிறது. நாவல் இயல்பானமொழிநடையில்சொல்லப்பட்டிருக்கிறது. நேரடியான நடை. நாவலாசிரியர் சொல்ல வந்த விஷயத்தில் எந்தவிதத்திலும் புதிர் இல்லை. நேரடியான விவரணை; விவரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய அபிப்பிராயங்கள் வழி நிகழ்த்தப்படும் உரையாடல்கள் என்றாலும் வலிந்து கூறப்படவில்லை. அம்மாவின் மொழி சகிப்புத்தன்மையுடையது, அன்பால் பேசப்படுவது, அக்காமார்களின் மொழி எப்போதும் தேவைக்குரியதை மட்டும் முன்மொழிகிறது. விசாலத்தால் உருவாக்கப்பட்ட நாவலின் மொழி மெல்லிய உணர்வலைகளை ஏற்படுத்தும் மௌன மொழி. ஆண்களைக் குறித்த இவரது மொழி பொதுத்தன்மையுடையதாய் இருக்கிறது.

பெண் எப்போதும் சமுதாயத்தில் இரண்டாம் இடத்தில் இருப்பவளாகவே இருக்கிறாள் என்ற ஆதங்கம் கொண்டுள்ள நாவல் நாயகி, தனது இயக்கத்துத் தோழர் ஒருவரும்கூட, தனிமையில் சந்திக்க நேரும்போது அவரது முரண்பட்ட ஒழுங்கால் அதிர்வடைகிறாள். அங்கும் தான் ஒரு வெறும் பெண்ணுடல் மட்டுமே என்று பார்க்கப்படும்பொழுது அதிர்ச்சி அடைகிறாள்.

கம்யூனிஸ இயக்கத்திலும் முழு மனதோடும், சுயலமற்றும், நேர்மையோடும் தன் கடைமையைச் செய்கிறாள். ஆனால், அப்பெண்ணின் வளர்ச்சி எல்லோராலும் கொண்டாடப்பட இயலாததாகிவிட்டது. தோழர்கள் மத்தியில் மகிழ்ச்சியை மட்டுமே ஏற்படுத்தவில்லை, துயரங்களையும் சேர்த்துதான். எனவேதான், அவள் வசிக்கும் ஊரில் நடைபெறும் கூட்டத்தைக் கூட அப்பெண்ணுக்கு அறிவிக்கப்படாததாக்கி விடுகின்றனர்,. தோழர்கள். தனது வளர்ச்சி சிலருக்குப் பொறாமையை உண்டாக்கி இருக்கிறதோ என்ற எண்ணம், அப்போதுதான் அவளுக்குத் தோன்றுகிறது.

நாவலின் நாயகி, குடும்பம், திருமணம் போன்ற உறவுகளிலிருந்து விலகி முற்றிலுமாக அவற்றை எதிர்த்துப் பேசும் பெண்ணியவாதி அல்ல. மெல்லிய காதலும், குடும்ப எதிர்பார்ப்பும், திருமணப் உறவில் தன்னை இணைத்துக்கொள்ளும் பெண்ணாகத்தான் விவரிக்கப்பட்டுள்ளாள். அன்றாட வாழ்வில் அவளுக்குத் தோன்றும் பின்வரும் கேள்விகள் கவந்த்திற்குரியன.

அம்மாளாத்தா ஏன் செத்துப் போனா? இறந்தவர்களைப் புகழ்கிறார்களே? அதற்காகவே சாகலாமோ?

பெரியக்காவின் தாவணி சற்றே விலகினாலே ஆத்தா, 'பொம்பளே புள்ளக்கி சேல விலகலாமா?' எனக் கண்டிக்கிறாள். வீட்டு வேலைக்காரப் பெண்கள் ஜம்பருடன் மட்டுமே உலவி வருவது ஏன்? அக்கா மட்டும்தான் பொம்பளயா? அல்லது சேலை விலகுவது அக்காவிற்கு மட்டுமே மாபெரும் குற்றமா?

பர்மா பிரிந்தது ஏன்? சிங்கப்பூரில் என்ன நடக்கிறது? அகதிகளாக இந்தியா வருவோரின் துன்பங்கள் என்ன? காந்தி சுடப்பட்டது ஏன்?

அக்கா ஏன் அம்மாவின் தாம்பத்தியத்தைக் கொச்சைப்படுத்துகிறாள்?

சொல்வதொன்றும், செய்வதொன்றுமாய் இருக்கும் எல்லாமே கேள்வியாய் எழுகின்றன. சமகால வாழ்க்கையில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளையும், குடும்ப மாறுதல்களையும் காதலையும் இணைத்துச் சிறுமி கேள்விக்குட்படுத்துகிறாள். இவைபோன்ற கேள்விகள் முக்கியமானவை. இந்த எதிர்க் கேள்வி கேட்கும் மனம்தான், பின்னாளில் நாயகியைக் கம்யூனிஸ இயக்கத்தில் இணைய வைக்கிறது. அதே எதிர்க் கேள்வி மனம்தான் இயக்கத்திலுள்ள சுயநலப் போக்கை கண்டு பொங்கவும் செய்கிறது; சுயநலவாதிகள் மத்தியில் தன்னால் தொடர்ந்து இயங்க முடியாது என்பதை அறிந்து அமைப்பிலிருந்து விலகிப் போகவும் செய்கிறது. 'மெல்லக் கனவாய்ப் பழங்கதையாய்' நாவலின் தொடக்கமே அதன் கடைசிப் பகுதிதான்.

நாவலின் துவக்கம் முதல் இறுதி வரை வாசகரோடு பயணிக்கும் மற்றுமொரு பெண் சிறுமியின் அம்மா. அரசியல், இலக்கியம், கட்சி கூட்டங்கள், தேர்தல் பங்கெடுப்புகள், தோழர்களோடு வெளியில் செல்லுதல், வெளியூர் செல்லுதல், முடிந்த நேரத்திற்கு வீடு திரும்புகிறாள். தோழர்கள் நாட்கணக்கில், மாதக்கணக்கில் வீட்டில் தங்குகிறார்கள். கூட்டம்கூட்டமாக வீட்டிற்கு வருகின்றனர்; உரிமை கொண்டாடுகின்றனர். எல்லாவற்றுக்கும் எந்தவிதமான முகச்சுளிப்போ, கேள்விகளோ இல்லாமல், உணவும், சிற்றுண்டியும், தேநீரும் செய்து தருகிறார், அம்மா.. எப்போதும் அன்பு ஒன்றே நிறைந்திருக்கும் அம்மாதான் நாவலின் கனத்தை அதிகரிக்கச் செய்கிறார். தன் மகள் நேர்மையானவள், சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவள் என்ற எண்ணம் கொண்டிருந்தாலும்கூட பெண்ணின் எதிர்காலம் தனக்குப் பிறகு என்ன? என்ற கவலைப்பட மட்டுமே அவரால் முடிந்தது. அவருக்கு மகள், நந்தனைத் திருமணம் செய்யப்போகிறாள் எனத் தெரியும் . அவர் மகளுக்கு விடை கொடுத்து அனுப்புகிறார். அவள் எங்கு செல்கிறாள்? அவருக்குத் தெரியாது.

'பொய்யாய் மெல்லப் பழங்தையாய்ப் போனதுவே' என்ற பட்டினத்தாரின் பாடலில் இருந்து கடைசிவரியைத் தன் சுயசரிதையின் ஆரம்பத்தில் எழுதியிருந்த பாரதியைப் போல, பா.விசாலமும் 'மெல்லக் கனவாய் பழங்கதையாய்' எனும் தலைப்பில் இன்பமும் துன்பமும் கலந்த அனுபவங்களைக் கதைகளாக நாவலின் வழி ஆவணப்படுத்தி இருக்கிறார். அவை, கலைந்துபோன கனவுகளாய்க் காற்றில் மிதக்கின்றன.

**மூல நூல்**

**விசாலம்.பா. மெல்லக் கனவாய் பழங்கனவாய். சென்னை. எனி இந்தியன் பதிப்பகம், 2007.**


**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பு கதை | தமிழாக்கம்: சை.கிங்ஸ்லி கோமஸ்

மூலக்கதை காமினி விஜயரத்ன பொக்காவல
ஊடகம் 2017.05.30 லங்காதீப
மொழி சிங்களம்
துய்சென்ட நும்ப லங்கய் දුයිසන්ට කුඹි ළඟයි



# நீ துய்சென்னுக்கு அருகில்

தூக்கத்தில் பாதியாக நான் விழித்திருந்து வேலை தொலைபேசியின் சத்தம் கேட்டு நான் பூரணமாக விழித்துக் கொண்டேன்.

"குலே நான் உப்பாலி"

"ஹலோ உபாலி இனி இனி......"

"தொடம் பற்றி புதிய தகவல் ஏதும் கிடைத்ததா"

"இல்லையே தொடம் இற்கு என்ன"

எனது பல்கலைக்கழக நண்பன் உ பாலியின் குரலைக் கேட்டதும் தாங்க முடியாத சந்தோஷம் ஆனாலும் அவன் கேட்ட கேள்வியால் சற்று தடுமாறிப்போனேன்.

"ம் ம் இல்லை தொடம் இற்கு என்ன நடந்தது"

"தொடம் மரணமடைந்து விட்டானாம் சுதத் தான் எனக்கு சொன்னான்".

அதன்பிறகு உப்பாலி கூறிய எதுவும் எனது காதுகளுக்கு கேட்கவில்லை அருகில் இருந்த கதிரையில் என்னை அறியாமலேயே நான் சாய்ந்து அமர்ந்தேன்.

என்ன தொடம் மரணித்து விட்டானா?

அது நடக்கவே முடியாது அவனுக்கு இப்போது தான் நாற்பது வயது ஆரம்பித்தது அது மரணிப்பதற்கான வயதா? இல்லை அப்படி நடந்து இருக்காது தொடம் அவனது பெரு விரலையும் ஆள் காட்டி விரலையும் சேர்த்து தனது கீழ் உதட்டை தடவியவாறு என்னோடு கடைசியாக பேசிய வார்த்தைகள் எனது ஞாபகத்தில் வந்தது.

"குலே நான் அந்த பின்தங்கிய பாடசாலையில் இருந்து வந்துவிட்டேன். அந்த ஏழை பாமர மாணவர்களை விட்டு வரும்போது அதிக வேதனை ஏற்பட்டது. ஆனாலும் என்ன செய்ய. இந்த புதிய பாடசாலையில் நாங்கள் பிரமாண்டமான சாகித்திய விழா ஒன்றினை செய்ய தயாராகி வருகிறோம். சிறப்புமலர் ஒன்றினையும் வெளியிட ஏற்பாடு செய்கிறோம் அதற்கு உனது சிறுகதை ஒன்றினையும் தரமுடியுமா என்று கேட்கவே வந்தேன். கடந்த ஞாயிறு அன்று உனது 'வன்னியின் பாடசாலை' என்னும் கவிதையை நான் வாசித்தேன். எனது பாடசாலையின் வகுப்பு மாணவர்களுக்கும் வாசித்து காட்டினேன். உன்னைப் பற்றி எனது மாணவர்களுக்கும் கூறினேன். இந்த வருடம் சர்வதேச புத்தகக் கண்காட்சி கண்டியில் நடைபெறும் அப்போது நான் அங்கு வருவேன். உனது வீட்டுக்கு வருவேன்".

எனது பல்கலைக்கழக தோழனான

தொடம் கமவின் இல்லத்திற்கு செல்ல கிடைத்தது. ஒரே ஒரு முறைதான் அவனது தாயின் மரணத்தின்போது.

"குலே எனக்கு எனது அம்மாவை நினைக்கும்போது தாங்க முடியவில்லை. எங்கள் அம்மா பட்ட கஷ்டங்களை போல் கஷ்டப்பட்ட வேறு ஒரு தாயை காண முடியாது. எனது தந்தை புகையிரத திணைக்களத்தின் சிறு தொழில் செய்தாலும் எம்மை அதிகம் கவனிக்கவில்லை. வேறு ஒரு பெண் ஒருவருடன் ஏற்பட்ட தொடர்பு காரணத்தால்.

அம்மா என்னையும் எனது அக்காவையும் வளர்க்கப்படாத கஷ்டங்கள் இல்லை. எனது வீட்டிற்குப் பின்னால் ஒரு குளம் இருக்கிறது. அம்மா அக்கம் பக்கத்தில் இருக்கும் தென்னை மரங்களில் இருந்து கீழே விழும் காய்ந்த தென்னை ஓலைகளைக் கொண்டு வந்து அந்த குளத்தில் ஊற வைத்து அவை நன்றாக ஊறி கீற்றுக்கள் இலைகளில் இருந்து விரிந்தவுடன் அவற்றை தென்னை ஓலை கிடுகுகளாகப் பின்னுவார். அக்காவும் நானும் அம்மாவுக்குத் துணையாக முற்றத்திலே இருப்போம். மிக இருட்டான நாட்களில் அம்மா கிடுகு பின்னுவது குப்பி விளக்கு வெளிச்சத்தில். நிலவு இருக்கும் நாட்களில் அவர் நிலவின் வெளிச்சத்தில் பின்னுவார். நிலவு வெளிச்சத்தில் குலமும் அந்த கிராமத்து சூழலும் மிகவும் அழகு. அக்காவையும் என்னையும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப எனது தாயாரால் முடிந்தது." மரணவீட்டு காரியங்கள் முடிந்து பல்கலைக்கழகத்திற்கு வந்தபோது கண்ணீர் மல்கிய கண்களுடன் அவன் கூறிய வார்த்தைகள் எனது ஞாபகத்தில் வந்து சென்றது.

யாருடனாவது கவலைகளை வார்த்தையாக கொட்டித் தீர்த்தாள். இதயத்தின் சுமையை குறைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்றால் எவ்வளவு சுகமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. திரும்பிப் பார்த்தேன். எனது மனைவியும் எனது பிஞ்சுக் குழந்தையும் கதகதப்பாக கட்டியணைத்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

தொடம் இன் தாயார் இதற்கு முன்னேயே இறந்துவிட்டார். தொடம் இன்று இறந்து விட்டான். தொடம்மை அவனது தாய் இவ்வாறு கதகதப்பாக கட்டி அணைத்து தூங்கி இருப்பார். பௌர்ணமி நிலவு இன்னும் அவர்களின் வீட்டு முற்றத்தில் அழகாக வந்து போய்க்கொண்டிருக்கும்.

தொலைப்பேசி மீண்டும் அழைத்தது உபாலியின் இரண்டாவது அழைப்பு

"குலே தெரிந்தவர்கள் அனைவருக்கும் தொடமின் இன் மரணம் பற்றி கூறினேன் நீ குருநா கலைக்கு நாளை காலை வந்து விடு".

விடியற்காலையிலேயே புறப்பட்டு விட்டேன். அப்போது உப்பாலி அங்கு வந்து விட்டான். அவன் கொண்டு வந்திருந்த மேலதிக தலைக்கவசத்தை அணிந்து கொண்டு மிகவும் அமைதியாக மோட்டார்சைக்கிளில் அமர்ந்தேன். எனது மௌனத்தை உடைப்பதற்காக உபாலி கதைக்க துவங்கினான்.

தொடமிற்கும் எனக்கும் நியமனம் ஒரு கல்வி வலயத்தில் கிடைத்தது. தொடம்மிற்கு அதி பின்தங்கிய பாடசாலை ஒன்றுக்கு நியமனம் கிடைத்தது. அவ்வாறு பின்தங்கிய பாடசாலைகளுக்கு நியமனம் கிடைக்கப் பெற்ற பலர் சென்று அன்மித்த பாடசாலைகளுக்கு மாற்றங்களை செய்து கொண்டனர். ஆனாலும் தொடம் அவ்வாறு செய்து கொள்ளவில்லை. கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் அவன் அந்தப் பாடசாலையில் கடமையாற்றினான். பல மைல் தூரம் அவன் நடை பயணமாகவே பாடசாலைக்கு சென்று வந்தான். உப்பாலி பேசிக்கொண்டே வந்தான்.

தொடம் உண்மையிலேயே மிக ஆழமான அமைதியான ஒரு கதாபாத்திரம் பல்கலைக்கழக தோழர்கள் மத்தியில் நடந்த விவாதங்களில் மிக உத்வேகமாக கருத்துக்களை முன்வைத்து அந்த நாட்களில் அவனது சாதுரியமான வாதங்கள் பற்றி எனது நினைவுகளில் வந்து ஓடியது.

"நாங்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் புரட்சியை வெற்றி கொண்டால் நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பது அந்த புகழ் வெற்றியின் பங்குதாரர்களாக ஆகுவதற்கு மாத்திரமே"

பல்கலைக்கழக வாழ்க்கைக்கு விடை கொடுத்த பின்பும் அவன் இடதுசாரி அரசியலை விடவில்லை. ஆனாலும் இடதுசாரி அரசியல் தொடர்பாக விரக்தியுற்று அவன் பேசியதும் எனது எண்ணங்களில் வந்து ஓடியது.

"நாங்கள் கூறுவது தலைவர்களுக்கு விளங்காது அவர்கள் கூறுவது எங்களுக்கு ஒரு சில நேரங்களில் விளங்காது. அடிமட்ட எங்களுக்கு அவர்கள் கூறுவது இன்னும் தியாகத்துடன் கட்சிக்காக வேலை செய் என்று."

ஆனாலும் தொடம் இடதுசாரி வாழ்வியலில் இருந்து வெளியே வரவில்லை. அவன் வறுமைக்கு மத்தியிலும் தான் பெற்ற கல்வியையும் அறிவையும் கொண்டு ஏழை பாமர கிராமத்து பிள்ளைகளுக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் சேவை செய்தான். இதனூடாக அவன் எந்த பிரதி உபகாரமும் எதிர்பார்க்கவில்லை. திருமணம் பற்றிய எந்தவிதமான சிந்தனையையும் கொண்டிராத அவன் வேலை செய்த பாடசாலையின் தொண்டர் ஆசிரியையாக சேவை செய்து வந்த பெண்ணுடன் காதல் வயப்பட்டு விட்டான் என்ற செய்தி கேட்டு நான் வியப்படைந்தேன்.

"குலே எனது பாடசாலையின் தொண்டர் ஆசிரியையாக வேலை செய்யும் ஒரு பெண்ணுடன் காதல் கொண்டேன். இன்னும் திருமணமாகாத எனது அக்கா அதனை கடுமையாக எதிர்த்தாள். அப்பாவையும் அவளின் வார்த்தைகளுக்கு அடிபணியச் செய்து குடும்பத்தில் இருந்தும் வீட்டில் இருந்தும் என்னை வெளியேற்றி விட்டனர். என்னைவிட அந்தப் பெண் பிள்ளை வயதில் மிக சிறியவள். அவள் என்னை கடவுளைப் போல் கவனித்துக் கொள்கிறாள். அவள் என்னை நம்பியே இருக்கின்றாள். நான் இப்போது அவளின் வீட்டில்தான் வசிக்கிறேன்."

உறவினர்களும் குடும்பத்தார்களும் அவனை துரத்திய போதும் அவனுக்கென்று ஒரு மனை கிடைத்திருப்பதனையிட்டு நான் மகிழ்கின்றேன்.

"அப்படியானால் சீக்கிரம் பிள்ளைகளை கொஞ்சுவது காணலாம்" என்று நான் கூறினேன்.

"குலே நான் சற்று நோய்வாய்ப்பட்டு உள்ளேன். என்னை நீ பார்த்தால் ஆச்சரியப்படுவாய். எனக்கு சர்க்கரை நோய் இருக்கிறது. கண்பார்வையும் சிறிது குறைந்துள்ளது. சிங்கள தேசிய வைத்தியர் ஒருவரிடம் கண்களுக்கு மருந்து எடுக்கின்றேன். காலில் பெருவிரலுக்கும் மருந்து எடுக்கின்றேன். இப்போது சற்று குணமாகி உள்ளது. நாங்கள் இருவரும் ஒரு நாளைக்கு உன் வீட்டிற்கு வருகிறோம்" அது தொடம் என்னுடன் கதைத்த கடைசி தொலைப்பேசி சம்பாசனை.

உபாலி மோட்டார் சைக்கிளின் வேகத்தை சற்று குறைத்தான். பிரதான பாதையின் இடது பக்கத்தில் மதில் சுவர்களால் மூடப்பட்டிருந்த பிரதேசத்தைக் காட்டி "இது தொடம் கடைசியாக வேலை செய்த பாடசாலை. அவனது தியாகம் பற்றியும் கடமையுணர்வு பற்றியும் பலரும் கதை ஆடுகின்றார்கள்" என்றான்.

மோட்டார் சைக்கிளை நிறுத்தும்படி உபாலியிடம் நான் கூறினேன். தொடம்மின் பாதங்கள்பட்ட அந்த நிலத்தை மிக உன்னிப்பாக அவதானித்தேன். அவனின் மாசுபடாத நட்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகந்தத்தை அந்த நிமிடத்தில் ஒரு சொட்டு அனுபவிக்க கிடைக்கின்றதா என்று ஏங்கினேன். அப்படிக் கிடைத்தால் அது எவ்வளவு இன்பமாய் இருக்கும் என்று எண்ணினேன். மாணவர் சமூகத்திற்கு அளவற்ற சேவையை செய்த ஆசான் ஒருவன் மரணித்துள்ளான். ஆனாலும் வழமையான பண்புகளுடன் மற்றுமொரு நாளை அந்தப் பாடசாலை கடத்திக்கொண்டிருந்தது. தொடம் என்னும் ஆசிரியனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒரு பதாகையாவது அங்கே காட்சி தருகின்றதா என்று இன்னும் உன்னிப்பாகத் தேடுகிறேன்.

போலீசாரின் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாகி மரணிக்கும் பாதாள உலகத் தலைவர்களின் மரணத்தில்கூட உயர்ந்த மனிதன், சிறந்த மனிதன், சமூக செயற்பாட்டாளன் என்று பதாகைகளை வைக்கும் இந்த நாட்டில் ஒரு நல்ல ஆசிரியனுக்கு அஞ்சலி இல்லையே என்று நான் உபாலியிடம் கூறினேன்.

"தொடம் ரெடிகல் தானே. அதனால் பாடசாலை நிர்வாகத்துடன் சற்று மனக்கசப்பாம். ஸ்டாஃப் மீட்டிங்கிற்கும் செல்ல மாட்டானாம் அந்த நேரத்தில்கூட மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பானாம்."

பலரிடம் விசாரித்து இன்னும் பல மைல் தூரம் மோட்டார் சைக்கிளில் ஒரு குறுக்குப் பாதையை அண்மித்த போது வெள்ளை கொடி ஒன்று பறக்க விடப்பட்டு இருந்தது. அந்த இடத்தில் இரண்டு சக்கர வண்டியை நிறுத்தி பரந்த நிலப்பரப்பு ஒன்றின் மத்தியில் காணப்பட்ட பழமையான வீட்டு முற்றத்தில் சில கதிரைகள் போடப்பட்டிருந்தது. ஒரு சில மனிதர்களும் நின்று கொண்டிருந்தனர் அது மரண வீடாகத் தான் இருக்கும் என்று ஊகித்த நானும் உபாலியும் அங்கு சென்றோம். நாங்கள் மரண வீட்டிற்குச் சென்று உயிர் பிரிந்த தொடமின் பூதவுடலுக்கு அருகில் நியாயமான நேரம் விரையப்படுத்தியும் எவரும் என்னைக் கண்டுகொண்டதாக இல்லை. கடந்த காலங்களில் பலவாறான மோதல்கள் சச்சரவுகள் போராட்டங்கள் காரணமாகவும் நோய்வாய்ப்பட்டும் வாழ்ந்திருந்த தொடமின் முகத்தில் அதிகமான மாற்றங்கள் வித்தியாசங்கள் எதுவுமேயில்லை. அவன் விரல்களால் அவனது மேவாயை தடவுவது போல எனக்கு பிரமை ஏற்பட்டது.

அண்மித்த கதவு ஒன்றின் ஒதுக்கப்பட்ட திரைச்சீலைகள் இருந்து அழகிய முகம் ஒன்று தென்பட்டது. விறாந்தாவிற்கு வந்த இளம்பெண் ஒருத்தி எனக்கு மரியாதை செலுத்தினாள். இதற்கு முன் அறிமுகமாகாத அவளிடம் நாங்கள் எம்மை சுருக்கமாக அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

"உங்களின் பெயர்களை அவர் அடிக்கடி உச்சரித்துள்ளார். அவர் உயிரோடு இருக்கும்போது நீங்கள் வந்து இருந்தீர்கள் என்றால், எவ்வளவு சந்தோஷப்பட்டு இருப்பார். அவர் எனக்குக் கிடைத்த தெய்வம். எனது போதாத காலம் இவர் எனக்கு இல்லாமல் போய்விட்டார். நான் எனது வாழ்நாளில் இவருக்காகத் தியாகம் செய்வேன்" என்றாள்.

"தொடம் அவனது நோய் தொடர்பாக கவனம் செலுத்தவில்லையா" உப்பாலி வினவினான்.

"அவர் அவரது நோயைப் பற்றி யோசிக்கவில்லை. தன்னிடம் கல்வி கற்ற பிள்ளைகளைப் பற்றித்தான் யோசித்தார். சிறுநீரக நிவாரப்ண பிரிவு அவரது பாடசாலைக்கு முன்புறமமாகவே உள்ளது கிளினிக் சென்றபோதெல்லாம் அடிக்கடி கூறினார்கள். அங்கு சென்று சோதனை செய்யுமாறு. ஆனால் எவ்வளவு நோய்வாய்ப்பட்டு இருந்தாலும் அவர் பாடசாலைக்கு செல்லத் தவறியதில்லை. கடைசி நாட்களில் கால்கள் வீங்கி காணப்பட்டது. சப்பாத்து அணியகூட முடியாத நிலையிலும் அவர் செருப்பை போட்டுக் கொண்டு பாடசாலைக்குச் செல்வார். சிலநேரம் செருப்புகளை கூட பை ஒன்றில் எடுத்துக் கொண்டு வெறும் கால்களுடன் செல்வார். அவரை இருசக்கர மோட்டார் சைக்கிளில் அமர வைத்து நான் பைக்கை ஸ்டார்ட் செய்து விடுவேன். பின்பு அவர் செல்வார். பாடசாலையிலும் யாராவது அமரவைத்து பைக்கை ஸ்டார்ட் செய்து விடுவார்களாம். வகுப்புகளுக்கு செல்லும்போது சுவரைப் பிடித்துபிடித்துதான் செல்வாராம். வாரத்தில் 40 பீரியட்டும் வகுப்புகளில் கற்பிப்பார். எவ்வளவு நோய்வாய்ப்பட்டு இருந்தாலும் கதிரையில் அமர்ந்து பாடம் நடத்த மாட்டார். முடியாதபட்சத்தில் ஆசிரியர் மேசையில் சாய்ந்துகொண்டு கற்பிப்பார். ஏழை பிள்ளைகளுக்காக அதிகமதிகமாய் செலவு செய்வார். ஆனாலும் பிள்ளைகளிடம் பரிசாக 5 சதம் கூட வாங்கியது இல்லை." தொடம் இன் மனைவி அவனது பூத உடலையும் எம்மையும் மாறி மாறி பார்த்தபடி கூறினாள். அவளுக்கு மிகுதியாக இருப்பது அவனின் கௌரவமான நல்ல பண்புகளை எடுத்தியம்புவது மாத்திரமே. அவளுக்கு அது நிம்மதியையும் தந்தது.

உயர்தர மாணவர்கள் என்று மதிக்கத்தக்க மாணவர்கள் சிலரும் ஆசிரியர்கள் சிலரும் சிறியரக பஸ் வண்டி ஒன்றில் வந்திறங்கினர்.

வந்த மாணவர்களில் சிலர் சுற்றுப்புற சூழலையும் முற்றத்தையும் துப்புரவு செய்யத் துவங்கினர். அதேநேரம் பழைய மாணவ மாணவிகள் சிலர் உபசரிப்பு வேலைகள் உடனான ஏனைய வேலைகளை செய்யத் துவங்கினர். கடைசி காலங்களில் என்னை விட்டு வெகு தொலைவில் இருந்த தொடம் பற்றி கதைகளைக் கேட்க மிக ஆவலுடன் இருந்தேன்.

இளைய ஆசிரியர்கள் இருவர் இடையேயான சம்பாஷணையை நான் மிக கவனமாக செவிமடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாடசாலையின் ஒத்துழைப்பு போதாது போல் இருக்கின்றது அல்லவா. நலன்புரி சங்க பெயர் ஒன்றுகூட போடவில்லை" என்று ஒருவன் சொன்னான். மற்றைய ஆசிரியனின் கவனமோ வேறு எங்கோ இருந்தது. அவன் கேட்டான் "நாளை *funeral* இங்கு வருவாய்தானே" என்று.

மற்றைய ஆசிரியன் சொன்னான் "நாளை சனிக்கிழமை எப்படி வருவது. டியூஷன் கட்டாகினால் பெரிய நஷ்டம் ஏற்படும்." மற்றவனும் அதனை ஆமோதித்தான்.

அந்த இடத்திலிருந்து மாணவர்கள் இருந்த இடம் நோக்கி எனது அவதானத்தை நகர்த்தினேன்.

"நானும் ஒரு பொடியனாக இருந்தால் சேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்த போது அவருடன் ஒரு நாளைக்காவது தங்கி இருந்து இருப்பேன்" என்று ஒரு மாணவி கூறினாள்.

"செய்ய வேண்டிய கடமைகள் நிறையவே இருக்கின்றது அவற்றை பூரணமாக செய்து முடிக்காமல் மரணிப்பதுதான் கவலையாக இருக்கின்றது' என்று கூறினாராம். எனக்கு சேரின் சிரித்த முகம் இன்னும் ஞாபகத்தில் இருக்கின்றது" என்று மற்றுமொரு மாணவி அந்த சம்பாஷணையில் இணைந்து கொண்டாள்.

"நான் இறந்திருந்தால் அந்த கழக காலத்தில் (1980 காலகட்ட இளைஞர் எழுச்சி) இறந்திருப்பேன் என்று அடிக்கடி சேர் கூறுவார்" என்றும் மற்றுமொரு மாணவி கூறினாள்.

"நமது சேர் மரணத்திற்கு பயமில்லை இறக்கப் போகிறேன் என்று தெரிந்தும் பூமியில் கால் பதித்து வாழ்ந்தவர். எங்களின் சார் எங்களுக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் சகலவிதமான வித்தைகளையும் நுணுக்கங்களையும் கற்றுத்தந்தார். மனிதாபிமானம் தொடர்பாகவும் வாழ்க்கை தொடர்பாகவும் சாரிடம் இருந்து நாங்கள் அதிகமாக கற்றுக்கொண்டோம்." வாயாடி மாணவி ஒருத்தி கூறிய வார்த்தைகள் எனது காதுகளை எட்டியது.

தொடம் தனது குறுகிய கால வாழ்நாளில் மிகப் பெறுமதியானவற்றை சமூகத்திற்கு செய்துள்ளான் என்பது புலப்பட்டது. அவனது இந்த அவசர மரணத்தின் காரணமாக நான் அடைந்திருந்த கவலை சற்று குறைந்தது. எனது கண்களில் சற்று தெளிவும் ஏற்பட்டிருந்தது.

"உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா சார். நமக்கு வாசிக்கக் கொடுத்த சிங்கின் அய்ட்மடோ(*Chinghiz Aitmato*) எழுதிய 'முதல் ஆசிரியன்' என்னும் புத்தகம். அந்த புத்தகத்தில் வரும் கதாபாத்திரமான துய்சென் என்னும் ஆசிரியரை போன்றவர் எமது ஆசிரியரும்" என்று கூறிய மாணவி ஒருத்தியின் வார்த்தைகள் என் காதுகளை எட்டியது.

தொடங்கொட என்பது சிங்களப் பெயர் ஒன்று அதன் சுருக்கமே தொடங் அல்லது தொடம் ஆகும்.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

# மடல் திறப்பு

**த**மிழராக நாம் செய்யும் அனைத்து செயல்களிலும் பெண்ணுக்கே முன்னுரிமை தருகிறார்களேயென்று ஆண் பிள்ளைகளை மட்டுமே பெற்ற பெற்றோர்களெல்லாம் நினைப்பதுண்டு சில நேரங்களில். ஆனால் அது நம்மிடம் எஞ்சியிருக்கும் தாய் வழி சமூகத்தின் எச்சம் என்பதை அறிந்த போது ஆண்தான் உயர்ந்தவனென்ற கர்வம் சுக்குநூறாய் உடைந்தது. அத்தோடு உயிர் உருவாக்க சக்தியானவளை எவ்வாறெல்லாம் புறந்தள்ளியிருக்கிறோமென்ற குற்ற உணர்வும் தோன்றுகிறது.

தமிழின் தொல்இலக்கியங்கள் எவ்வாறு செவ்விலக்கியமானது என்பதை எடுத்துரைப்பியல் கட்டுரை விரிவாக எடுத்துரைத்தது. ஒரு மொழி செம்மொழியாய் இருப்பதால் மட்டும் அது தொடர்ந்து நிலைத்திருக்க முடியாது அறிவியல் மொழியாக மாறும் சமயத்தில்தான் தொடர்ந்து நிலைத்திருக்குமென்பதை செம்மொழி கட்டுரை உணர்த்திச் செல்கிறது. பெரும்பாலும் நம்முடையதாக இருக்கும் எதுவும் பெரிதாக தெரிவதில்லை மற்றதோடு ஒப்பிடும் வரை அது மொழியாக, பண்பாடாக, கலாச்சாரமாக இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். தமிழை மற்ற மொழிகளோடு ஒப்பிட்டு உச்சரிப்பிலும் புதுச் சொற்களை உருவாக்குவதிலும் எவ்வகையில் செம்மொழி என்பதை விளங்கவைத்த விதம் அருமை.

கிராமங்களில் நடந்த இசை நிகழ்ச்சிகளைப் பற்றியும் அக்கலைஞர்களைப் பற்றிப் படித்த போது நம்மை நம் இளமைப்பருவத்துக்கு அழைத்துச் சென்று நினைவுகளை அசைபோட வைத்தது.. அவர்களைப் பற்றி நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விசயங்களையும் அறிந்து கொள்ள முடிந்தது. இது நாள் வரையில் அவர்களைப் பற்றி நாம் நினைக்கவில்லையே என்ற குற்றவுணர்வு தோன்றுவதை தவிர்க்க முடியவில்லை. எதையும் இலவசமாக பெறாமல் யாசிப்பதற்கும்கூட திறமையை வளர்த்துக்கொண்டிருந்த சமூகம் இன்று எடுத்ததெற்கெல்லாம் இலவசத்தை எதிர்பார்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டது ஆராயப்பட வேண்டிய விசயமாகப் படுகிறது. இலக்கிய உலகில் முன்னிலைப்படுத்தப்படும் வரிசையானது பகுத்தறிவுக் கருத்துகளை உணர்த்தியவர்களுக்கு இல்லையென்பது இலக்கிய உலகமும் சார்புடன்தான் இயங்குகிறதென்பதை வெட்ட வெளிச்சமாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாமல் திராவிட/மார்க்சிய/தலித்திய இலக்கியலாளர்கள் ஏன் இப்படியொரு வரிசையை உருவாக்க முன்வரவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. இன்றைய காலகட்டத்தில் காங்கிரசு கட்சியின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு (இலக்கியம், சினிமா மற்றும் இதர வழிமுறைகளின் மூலமாக) பின்னாளிருந்த ஆளுமைச் சமூகத்தையும் எண்ணிப்பார்க்க வேண்டுமென்பது மறக்க(மறுக்க)கூடாத விசயமாகும்.

இந்நிலை இன்றளவும் மாறவில்லையென்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விசயமாகும். அகழாய்வுகள் தமிழர்களை மதமற்றவர்களாகவும், ஆதிக்குடிகளாகவும் தெளிவாக வரையறுத்துச் செல்கிறது ஆனால் இன்றைய நடைமுறையில் இவையிரண்டுக்கும் எதிரான நிலையில் தள்ளுவதற்கான வலைப்பின்னப்படுவது மிகுந்த பயத்தைத் தருகிறது. பொதுவுடைமை சித்தாந்தங்கள் வலுப்பெற்ற இக்காலத்திலும் கூட பணக்காரர்களே தொடர்ந்து பணக்காரர்களாகி வருகிறார்களென்பது பெருத்த கவலையையும் கூடுதல் விழிப்புணர்வோடு இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. அத்துடன் பொதுவுடைமை சித்தாந்தங்கள் ஏட்டுச்சுரைக்காய்தானா? என்ற சந்தேகமும் எழுகிறது. எத்தனைமுறை இயற்கை பேரிடர்கள் வந்தாலும் அப்போதைக்கு அதைப்பற்றி காதும் வாயும் வலிக்குமளவு பேசிவிட்டு அதையே தொடர்ந்து செய்கிறோமோ என்ற எண்ணமே தொன்றுகிறது. சமூக வலைத்தளத்தை எவ்வளவு வீரியமாக உபயோகப்படுத்தமுடியுமென்பதை விசம் தோய்ந்த பிரச்சார கட்டுரை விரிவாக விளக்கியது. வலைத்தளத்தை உருவாக்கியவர்கள் கூட இப்படி உபயோகப்படுத்தமுடியுமென யோசித்திருக்கமாட்டார்கள். விதவிதமாய் தேர்வுகள் வைத்து மாணவச்செல்வங்களை வடிகட்டும் யுக்தி ஒருபுறமென்றால் அதையும் தாண்டி வருவோரை சிந்திக்க விடாமல் செய்யவும் ஒரு கல்விமுறை உண்டென்பதை இன்னுமொருமுறை படிக்கட்டுமா கட்டுரை சுட்டிக்காட்டியது. பதிமூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் காக்கைக்கு உளம் கனிந்த வாழ்த்துகள்.

**– சி சு ஜெகன்நாதன், பெங்களூரு**

**கா**க்கைச் சிறகினிலே தமிழர் திருநாள் சிறப்பிதழைப் பார்த்தேன். முதுமைக் களைப்பு நீங்க மகிழ்ந்தேன். திராவிடநாடு, பொன்னி, முரசொலி, தென்றல், முல்லை போன்ற இதழ்களின் பொங்கல் மலர்களைப் படித்து மகிழந்த அந்தக் காலத்திற்கு நான் சென்று விட்டேன். மீண்டும் இளமையாகிப் போனேன். 'காக்கை' சிறந்து வாழ்க.

**– க. திருநாவுக்கரசு, சென்னை.**

**த**மிழன் தொடர்ந்து நான்கு நாட்கள் கொண்டாடும் ஒரே பண்டிகை. நன்றி தெரிவித்து இயற்கையை வழிபடும் ஒரே சடங்கு, சம்பிரதாயம் .கலைஞர், எம்.ஜி.ஆர் என தமிழக தலைவர்கள்கூட தீபாவளியை தவிர்த்து கொண்டாடும் ஒரே திருநாள். பத்திரிகைகளும்கூட தமிழ், தமிழன், தமிழ்நாடு என நம் பாரம்பரிய பண்பாடுகள் குறித்து மலர் வெளியிடும் ஒரே நன்னாள் என ஏக பெருமை பெற்றது பொங்கல். அந்த தமிழர் திருநாளுக்கு மிக நீண்ட இடைவேளைக்குப் பிறகு அற்புதமானதொரு மலரை வாசித்த திருப்தியளித்தது, 2024ன் தொடக்க 'காக்கைச் சிறகினிலே' இதழ். 13வது ஆண்டு விழா மலர் என்ற இரட்டிப்பு சந்தோஷமும் கூடியதால் இதழும் கனமாகவே இருந்தது-கட்டுரைகளிலும்.

**– அ. யாழினிபர்வதம், சென்னை-78**

**ஜ**னவரி 2024 இதழ் முழுவதும் படித்து, இன்புற்றேன். பல கட்டுரைகள், பேராசிரியர்களால் எழுதப்பட்டிருந்தன. அவ்வளவும் தீவிரமான அறிவுச் செல்வம் நிறைந்தவை. மேலும் அவை ஏராளமான, விரிவான ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் நிறைந்து இருந்தன. ஒரே மூச்சில் படித்துத்தள்ள முடியாதவை. அதில் குறிப்பிடத்தகுந்தவையாக ச.விமலா எழுதிய 'தமிழின் தனிச்சிறப்புகள்', சு. இராமசுப்ரமணியத்தின் 'புதுப்பெண்ணும்... மற்றும் கோலப்பன் எழுதிய 'நாட்டுப்புறக் கலைகளின் டிசம்பர் சீசன்' போன்ற கட்டுரைகள் பெரிதும் பாராட்டத்தக்கவை. அவைகளின் பொருட்செறிவும், விரிவாய்ந்த ஆராய்ச்சிக் குறிப்புகளும் படிக்கப் படிக்க மனதை ஈர்த்தன. இந்த இதழில் பிரசுரமான இரண்டு சிறுகதைகளும் நன்று. சிறந்த கட்டுரைகளை தேர்ந்தெடுத்து வெளியிட்ட ஆசிரியர் குழுவிற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்!

**– பி.ஆர். ராஜாராம்**

**பொ**ங்கல் விழாவைத் தமிழ் பேசும் மக்களின் திருவிழாவாக முன்வைக்கும் கட்டுரைகள் கொண்ட சிறப்புமலராக வந்துள்ளது.விரிவும் ஆழமும் கொண்ட கட்டுரைகள். பெரும்பாலான ஆய்வாளர்கள் வைதீக சமயத்தின் சடங்குகள் இடம்பெறாத விழாவாக முன்வைக்கின்றன.அதற்கான தரவுகளைத் தத்தம் துறைசார்ந்து தொகுத்தளித்துள்ளனர். பண்பாட்டாய்வாளர்களின் முறையியலோடு கட்டுரைகள் அமைந்துள்ளன. நான் இதில் எழுதவில்லை. முன்பு எழுதியதின் வலைப்பூ இணைப்பு பின்னூட்டத்தில்

**அ. ராமசாமி**

**கா**க்கைச் சிறகினிலே சனவரி 2024 இதழ் தமிழர் திருநாள் சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. தமிழர் மெய்யியல், அறவியல், அறிவியல், பண்பாட்டியல், வாழ்வியல், தொழில் நுட்பவியல், இலக்கியவியல் சார்ந்த ஆளுமைகளின் அரிய கட்டுகைகள் இடம்பெற்றுள்ளன. சிறந்த சிறுகதைகள், கவிதைகளும் உள்ளன. உண்மையிலேயே தமிழர் திருநாள் பெருந்தொகுப்பாக இது அமைகிறது. 'காக்கை' தொடர்ந்து நடுவிய இதழாகத் தன்னைத் தக்க வைத்துக் கொள்வது சிறப்பு. பங்களிப்புச் செய்தோருக்கும், ஆசிரியருக்கும் ஒருங்கிணைப்புக் குழுவினருக்கும் வாழ்த்துக்கள்.

**இரா.காமராசு,மன்னார்குடி**

**எ**ல்லாம் அடர்த்தியான கட்டுரைகள் அவசரமாக நகர முடியவில்லை. மீனா சுந்தர் அவர்களின் கட்டுரை உண்மை நிலையை படம்பிடித்துக் காட்டுகிறது. மேலும் மேலும் ஏமாற்றப்படும் பட்டியல் இன மக்களின் விருப்பங்கள் நிறைவேற மாற்றுத்திட்டமே வழி.

**M. ஜீவானந்தம் பதிவு**

Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street,Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிட்னியில் பழங்குடி அபரோஜின மக்களுடன் பொங்கல் விழா!

தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழா அவுஸ்திரேலிய பழங்குடி அபரோஜின மக்களுடன் இணைந்து சிறப்புற சிட்னியில் நடைபெற்றது.

நியு சவுத்வேல்ஸ் மாநில தமிழ் மக்கள் சார்பாக, அனைத்து தமிழ் வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், பன்னாட்டு தமிழ் மக்களின் ஆதரவோடு "பொங்கல் திருவிழா" நிகழ்வு சிறப்புற இன்று *Holroyd Gardens, Merrylands,* எனும் பூந்தோட்டத்தில் நடைபெற்றது.

இப்பொங்கல் நிகழ்வானது, உலகெங்கும் பரவி வாழும் புலம்பெயர்த் தமிழர்கள் தமிழ் மொழியால், தமிழ் இன உணர்வால், தமிழ்ப் பண்பாட்டால் தன்னார்வமாக ஒன்றுகூடும் நிகழ்வாக மிகச்சிறப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

இன்றைய கூட்டுப் பொங்கல் நிகழ்வில் கோலப் போட்டி, வீட்டு விலங்குகள் காட்சிப்படுத்தல் *(Animal Farm)* மற்றும் சிறுவர் பொழுதுபோக்கு நிகழ்வு *(Jumping Castle),* தமிழ்க் கலை நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

அத்துடன் தமிழர் விளையாட்டுகள், பழம் பொறுக்குதல், இசை நாற்காலி, தடை ஓட்டம், உரி அடித்தல் (முட்டி உடைத்தல்), சாக்கு ஓட்டம், தேசிக்காய் ஓட்டம் , கிளித்தட்டு, கயிறு இழுத்தல், கபடி போன்றவை, சிறிய அளவிலான மத்தாப்புக் காட்சி *(Miniature Fireworks)* போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந் நிகழ்வில் இளையோர்கள் மற்றும் பெரியவர்கள் பங்குகொண்ட பொங்கல் நடனங்கள் உட்பட விசேட கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அத்துடன் இந்நிகழ்ச்சியில் நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தில் **2023** இல், தமிழ் மொழியில் சித்தியடைந்த உயர்தர *(HSC)* மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. ■


**- ஐங்கரன் விக்கினேஷ்வரா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM/2012/43921
Postal Registration No. TN/CCN/588/2023-2025 WPP No. TN/PMG (CCR)/ WPP-354/2023-2025
ISSN 2348-4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel, Egmore. between 29th-4th of every month






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org